
இரும்புக்குதிரைகள்
பாலகுமாரன்

# என்னுரை

என் சூழ்நிலையை, எனக்கு நேர்ந்தவற்றை, என் அநுபவத்தை மட்டும்தான் எழுதுவேன் என்பதை நான் கட்டளைக் கல்லாகவோ, சுமையாகவோ, சங்கல்பமாகவோ கொள்ளவில்லை.

ஆயினும் அவ்விதம் எழுதுவதில் ஒரு சந்தோஷம் இருக்கிறது. இயல்பு தெரிகிறது. இதைவிட என் சூழ்நிலையில், என் அநுபவங்களில் எழுத இன்னும் விஷயம் இருக்கிறது. பகிர்ந்து கொள்ள செய்தி இருக்கிறது.

எனக்கு சென்னையிலுள்ள டிராக்டர் கம்பெனியில் உத்தியோகம். பர்ச்சேஸ் உத்தியோகம், மனிதர்களை இங்கே சந்தித்த வண்ணமாகவே இருக்க வேண்டும்.

உத்யோகம் வயிற்றுப் பிழைப்பு என்றாலும், கவிதைபோல இதுவும் எனக்கு சுவாரஸ்யம். கழுத்துப்பட்டியும், பிளாஸ்டிக் பெட்டியுமாய் வரும் புதிய சேல்ஸ் இளைஞன், என்னவானாலும் சிரிப்பே காட்டாத வியாபாரிகள், இடைத் தரகர்கள், களைப்பும் சிவப்புமாய் வருகிற லாரி டிரைவர்கள் அல்லது

க்ளினர்கள், உன்னை மாதிரி எத்தனை பேரைப் பார்த்திருக்கேன் என்று முதல் த்வனிலேயே காட்டிவிடும் பெரிய மனிதர்கள் சகலரையும் தினசரி சந்திக்க வேண்டும்.

இவர்களின் பகல் வேஷம் தாண்டி இவர்களை உற்றுப் பார்ப்பது எனக்குப் பிடித்த விஷயம்.

அப்படி ஒவ்வொரு நெஞ்சாய் துருவஆரம்பித்தபோது உருவானது இரும்பு குதிரை.

என்னோடு உத்தியோகமாய் பேசின டிரைவரையும் கிளீனரையும் நேசிக்கத் துவங்கி, நானும் லாரிகளை நேசிக்கத் துவங்கினேன்.

போக்குவரத்து ஒருதனி உலகம். சேகரித்த தகவல்களில் நாற்பது சதவிகிதம்தான் நாவலில் வைக்க முடிந்தது, அவ்வளவுதான் முடியும். பொழுது போக்கு இலக்கியம் என்று கட்டம் கட்டி இலக்கியத்தை ஜாலியான விஷயமாக மாற்றி விட்ட இந்த காலகட்டத்தில் இப்படி ஒரு எண்ணெய் பிசுக்கும் டீஸல் நெடியும் கலந்த ஒரு நாவல் மையத்தைச் சொன்னதும், சந்தோஷமாய் தொடர் எழுத அனுமதித்த கல்கி ஆசிரியர் திரு கி. ராஜேந்திரன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாற்பத்திரண்டு அத்தியாயம் எழுதத் தந்ததற்கு மறுபடி நன்றி சொல்கிறேன்.

இதைக் காட்டிலும் கடினமான விஷயங்களை, தொடராய், வெகுஜனப் பத்திரிகைகளில் சொல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.

ஏனெனில் வாசகர் தரம் நாளுக்கு நாள் வளர்ந்து திடப்பட்டு வருவதைக் காண்கிறேன்.



புரிந்து கொள்ளும் ஆவலோடு அவர்கள் முன் வருவதை அறிகிறேன். தமிழ் நாவல் இலக்கியம் நல்ல உச்சிகளைத் தொடும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

என் நண்பர் திரு. மாலன் மிகச்சிறந்த முன்னுரை... இல்லை... உரை எழுதிக் கொடுத்திருக்கிறார். அவரின் அரசியல் கட்டுரைத் தெளிவுகளும் பத்திரிகை நடத்திய வித்தையும் உற்சாகமும் ஊரறிந்த விஷயம். அவருக்கு என் அன்பு.

என்றும் அன்புடன்,
பாலகுமாரன்

# 1

# இரும்பு குதிரைகள்

அமீதியா ஹோட்டலுக்கு எதிரே நின்று நடேச நாயக்கர் காலணிகளைக் கழற்றினார். கைகளைக் கூப்பினார். ''பிள்ளையாரே பிள்ளையாரே'' என்று தலையில் குட்டிக் கொண்டார். ''எல்லாம் உன் செயல்'' என்றார்.

தெருவில் போகிறவர்களுக்கு நாயக்கர், ஹோட்டல் அமீதியாவைத் தொழுவது போலத்தான் தெரியும். ஹோட்டலுக்கு இடப்புறம் சின்னதாய்ச் சித்திவிநாயகர் கோவில் இருந்தது. அந்தக் கோவிலுக்குப் பிறகு சாலை வளைந்து பெரிய தியேட்டர் ஆரம்பமாயிற்று.

கோவில் வடக்குப் பார்த்து இருந்தது. அமீதியா மேற்குப் பார்த்து இருந்தது. நாயக்கர் கிழக்கு நோக்கிப் போக வேண்டியிருந்தது. தெற்குப் பார்த்து வணங்கக் கூடாது. வடக்கே பார்த்தால் பிள்ளையாருக்கு முதுகு காட்ட வேண்டி நேரிடும். நடந்து கோவில் தாண்டி மேற்குப் பக்கம் பார்ப்பது அனாவசியம். எனவே தினமும் அமீதியாவுக்கு எதிரே நின்று வணங்குவதுதான் நாயக்கர் வழக்கம்.

நாயக்கரின் கடவுள் வணக்கம் அதுதான். அவ்வளவுதான். பிள்ளையாரே எல்லாம் உன் செயல் என்பது சத்தியமான வார்த்தை.

இந்த உலகத்தில் எவனும் எந்தக் கொம்பனும் எல்லாம் நான்தான் என்று மார்தட்டிக் கொள்ள முடியாது.

சகலமும் தெரியும் என்று அலட்டிக் கொள்ளக் கூடாது. அப்படி அலட்டிய நிறைய பேரை நாயக்கருக்குத் தெரியும். அவர்கள் மண்ணோடு மண்ணாய் போயிருப்பதும் தெரியும். நல்லதோ, கெட்டதோ நம் கையில் இல்லை. உயர்வோ தாழ்வோ நாம் தீர்மானிப்பதில்லை. அல்பம் என்று ஒரு பொருளும் இல்லை· நேற்றைய அல்பம். இன்றைய அற்புதம். இன்றைய அற்புதம் நாளைய அல்பம். ஆனால் எல்லாவற்றிற்கும் உலகில் விலை உண்டு. எச்சில் இலைக்கு விலை போட்டு எடுத்துப் போகிறவர்கள் உண்டு. சாம்பல் காசு கொடுத்து வாங்குபவர் உண்டு.

'மனுஷன் தலைமுடிக்குக்கூட விலை போடற துண்டுங்க. உசிருன்னு சொல்றாங்களே அதுதாங்க வாங்கவும் முடியலை. விக்கவும் முடியலை. அப்படி அது எங்கேயாவது விக்கிற மாதிரி ஆயிட்டா கொண்டாந்து இந்தப் பாகல் தோட்டத்துல சரம் சரமா தொங்கவிட்டுருவானுங்க. விலை கேக்குற ஆளுக்கேத்த மாதிரி வித்துச் சம்பாதிப்பானுங்க.

'அட. இந்த இடம் இந்தப் பாகல் தோட்டம் முப்பத்திரெண்டுல புறம் போக்கு. தூறல் போட்டா முழங்கால் சேறு. அடிச்சுப் பேஞ்சா நடுமார் ஆழம். நான் இங்கே கைநீட்டி நீச்சப் போட்டிருக்கேன்னா நம்புவியா? சிரிப்பே!அப்போ பட்டணத்துல தென்னை மரம் சிரிப்பா சிரிக்கும். குலை அறுத்துப்போட்டு வண்டி பாரம் தாங்காத ஏத்தின காயைத் தள்ளிவுட்டுக்கினே போவானுங்க. கோவணம் கட்டின பசங்க எல்லாம் தேங்கா வாரிக்குவம். கல்லு வச்சு நெருப்பு மூட்டி, மரத்துல காயை நெத்தி ஓட்டை போட்டுக்குவம். ஒரு கை நாட்டுச் சர்க்கரை கடையிலே சும்மா குடுப்பான். ஓட்டை வழியா தேங்கா உள்ள போட்டுட்டு நெருப்புல சட்டிமாதிரி வச்சுடுவோம். பச்சை மட்டை நாறச் சொல்ல எடுத்துக் கையாலே பொளந்து ஒடச்சித் துண்ணுவோம். மூணு தேங்கா துண்ணா



பொம்முன்னு பூடும். என்னா ருசி...என்னா ருசி... நாக்க அறுக்க அப்படி ஒரு ருசி.

முதல் வார் வந்தது. எல்லாம் பூட்சி. எல்லாத்துக்கும் துட்டு வெள்ளிப் பணம், ஆம்பளை வாங்கினான். பொம்பளை வாங்கினான். துணி வாங்கினான். துடப்பம் வாங்கினான். மந்தார இலை வாங்கினான்ய்யா துட்டுக் குடுத்து வெள்ளைக்காரன். கட்டுக்கட்டாப் போவும் கோட்டைக்கு. பட்டாளக்காரன், துண்ண துடைக்க எல்லாம் அதுதான் அப்போ புரண்டது இந்த இடம் இராயப்பேட்டை முதலியாருங்க இங்கே குடிசை போட்டுக்கிட்டுச் சீமெண்ணெய் வித்தாங்க. கம்பெனியிலே எண்ணெய் வாங்கி கவர்மெண்டுக்கு வித்தாங்க. கவர்மெண்டுக்கு துட்டு குடுக்க முடியலை. குதிரையை எடுத்துக்க, கோச்சு வண்டியை எடுத்துக்கன்னான். கோட்டையிலேருந்து குதிரை வண்டி வாங்கி மயிலாப்பூர் ஐயருக்கு வித்தாங்க. அன்னிக்குப் புடிச்சுது வண்டி வியாபாரம். கீலு, சட்டம் கதவு ஆணின்னு வியாபாரம் புடிச்சுது. வார் முடிஞ்சு மிலிட்டிரி லாரி வித்தான் வெள்ளைக்காரன். அதுவும் வாங்கினான். ஒடச்சி வித்தாங்க. அன்னிலேர்ந்து இன்னி வரை பாகல் தோட்டத்துல ஒடசல் வியாபாரம் தான். காயல் பட்டணத்துத் துலுக்கருங்க இங்கே வந்து தெற்குப் பக்கத்துக்கு வாங்கிப் போவாங்க. மதுரை, திருநெல்வேலி வரை வியாபாரம். அப்புறம் காயல் பட்டணத்து ஆளே கடை போட்டான். காயலான் கடைன்னு பேரு வந்தது.

ஒண்ணு நினைப்புல வச்சிக்க. துலுக்கரு பூந்த வியாபாரம் தோற்றதே கிடையாது. ஏன் சொல்லு, கட்டுமானம் துட்டு வூட்டு உள்ளாற சுத்தும். வெளியே போவாது. அப்பாகிட்ட புள்ளை கடன் வாங்கும். தேதி சொல்லித் திருப்பிக் கொடுக்கும். பொண்ணு கட்ட சம்பாதிக்கணும். சம்பாதிக்கிற புள்ளைக்குத்தான் பொண்ணு கெடைக்கும்.

காயல் பட்டணக்காரன் வந்தப்புறம் நெருப்புப் புடிச்ச மாதிரி பாகல் தோட்டம், சிந்தாதிரிப் பேட்டை, கூவங்கரை ஓரமா இந்தக் கடைங்கதான்.

பென்ஸ¬ வண்டி வாங்கிப் பிரிச்சுத்தான் விப்பாங்க இங்க. பிசிறு பிசிறா வியாபாரம். மூணு வண்டி விலை போகும். பறந்து பறந்து விலை கேட்டியா பத்து ரூபா ஒரு போல்ட். பறக்காத கேட்டியா ஒரு ரூபாய் அதே போல்ட். கேட்கறதைப் பொறுத்து விலை. பேசறதைப் பொறுத்து வியாபாரம். சிரிச்ச மூஞ்சியா ஒரு ஆளைப் பார்த்துட முடியுமா? இங்க சிரிக்க மாட்டான். காக்கா இறக்கைல இடுப்பு மூட்டினாக்கூடச் சிரிக்க மாட்டான். சரிதான் போடான்னுதான் மூஞ்சி நிக்கும்.

நடேச நாயக்கருக்கு அறுபது வயது தாண்டி விட்டது. அவர் சிரித்தும் யாரும் பார்த்ததில்லை. முகத்தில் ஒரு நிரந்தர சோகம். பொத பொத உடம்பு வெளிறிய பின்னி நீலச்சட்டை. கரைவேட்டி. தோளில் துண்டு. குடை, மடித்த கரை வேட்டி தாண்டிக் காக்கி அரை நிக்கர்.

சென்னையைச் சுற்றியுள்ள தொழிற் பேட்டை களில் நாயக்கரை எல்லோருக்கும் தெரியும். எல்லா தொழிற்சாலைகளிலும் இரும்புக்கழிவு இருக்கும். உடைந்த, உடைக்கப்பட்ட உதிரி பாகங்கள் இருக்கும். மாதம் ஒரு முறை அவைகளை இருந்த இடத்தில் கிடந்த நிலையில் விலை பேசி நாயக்கர் வாங்கி வருவார். ''எசமானே'' என்று விற்பனை அதிகாரியைக் கால் தொட்டு வணங்குவார். அறுபது வயசுக் கிழவனை அதட்ட யாருக்கும் மனசு வராது. அதட்டினாலும் நாயக்கரை அனுப்பிவிட முடியாது.

அதே நாயக்கர் கடையில் வேறு முகம் காட்டுவார்.

''நாயக்கரே, பென்ஸ¬ பம்பர் இருக்கா?''

''எத்தினி வேணும்?



''ஒண்ணுதான்.''

''இல்லே.''

''இருக்கா, பாரேன்.''

''இல்லே. நாளைக்கு வா.''

''இன்னைக்கு இல்லைங்கற. நாளைக்கு மட்டும் எப்படி கிடைக்கும்?''

''எங்கனா பீராஞ்சு வைக்கிறேன் போ.'' நாயக்கரிடம் பென்ஸ் பம்பர் இருக்கும். மறுநாள் அவன் பாகல் தோட்டத்துக்கு வந்தால் விலை சொல்லப்படும். அவனுக்கு பம்பர் மிக அவசியம் என்பது நாயக்கருக்குத் தெரிந்துவிடும்.

நாயக்கரிடம் தற்சமயம் பென்ஸ் லாரியின் சக்கரங்கள் இருந்தன. டயர் இல்லாத இரும்புச் சக்கரம் மட்டுமாய் இருந்தன. அவைகளில் மூன்று மோசமானவை, மெல்லிய விரிசல் உடையவை. நாயக்கர் அதைப் பற்ற வைத்துத்தேய்த்து பெயிண்ட் அடித்து வைத்திருந்தார். எடைக்கு வாங்கியவை. தட்டிக்கொட்டிப் பற்றவைத்து பெயிண்ட் அடித்தபிறகு மோசம் எது, நல்லது எது என்று நாயக்கருக்கே தெரியாது. அமீதியா ஓட்டலுக்கு அருகே உள்ள பிள்ளையாருக்குத் தெரியும். அவர்தான் இன்று வியாபாரத்துக்கு உதவ வேண்டும்.

பத்து மணிக்குப் பாகல் தோட்டம் களை கட்டியது. கொத்துக் கொத்தாய் டீ தம்ளர்கள் இடதும் வலதுமாய் நடந்தன. பீங்கான் தட்டில் இலை மூடி ஏதோ ஒரு கடைக்கு ஆப்பம் குருமா போயிற்று. எங்கேயோ பெரிய வியாபாரம் படிந்திருக்க வேண்டும். எந்தக் கடை என்று தெரியவில்லை. நாயக்கர் கடைக்கு வெளியே வந்து ஆப்பம் போகும் திசையைப் பார்த்தார். ஆப்பம் கூட்டத்தோடு கலந்துவிட்டது.

''நாயக்கரே, வீல் வச்சிருக்கியாமே ..''

மெக்கானிக் கண்ணப்பன் உள்ளே வந்து பொத் என்று பெஞ்சில் அமர்ந்தான். கண்ணப்பன் கண்கள் சிவந்திருந்தன.

நாயக்கர் அவனுக்குப் பதில் சொல்லாது வெளியே நின்றபடி தெருவை பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஆறு வீல்...பென்ஸு வச்சிருக்கிறதாகச் சொன்னாங்க. எடுத்துப் போடு பார்க்கலாம்.''

''யாரு சொன்னது?''

''டிங்கர் ஷாப்புல.''

''சாராயம் வாங்கிக் குடுத்தியா?''

''சாப்புட்டுத்தான் வரேன். எங்க வச்சிருக்கே... கூரை மேலயா உள்ளியா...?''

''பூமில பொதைச்சு வச்சிருக்கேன். வாங்கறவனாட்டமா பேசற நீ.''

''நான் வாங்காத...அடிச்ச வண்டியிதா கழட்டினதா?''

''மிலிட்டிரி வண்டி. உனக்குக் கட்டாது. கிளம்பு.''

''அடிறா சக்கை, பாகல் தோட்டத்துல அத்தினி நாளும் மிலிட்டிரி ஆளுங்கதான். எடுப்பா வீலு.''

''எத்தினி வேணும்?''

''நாலு டஜன். எடு முதல்ல.''

நாயக்கர் பின்பக்கம் போய் ஒரு சக்கரம் உருட்டி வந்தார். கண்ணப்பன் அதை இரும்புத் துண்டால் தட்டி ஒலியைக் கேட்டான். உதட்டைப் பிதுக்கினான். ''தேறாது. வேற எடு.''

''இல்லே.''

''எடுப்பா.''

''இல்லே.''

''இது மிலிட்டரிதான். பாத்துட்டேன். எடு!மிச்சம்.''



நாயக்கர் இன்னொன்று உருட்டி வந்தார். மறுபடி கண்ணப்பன் வீலைத் தட்டிப் பார்த்தான்.

''என்ன சொல்றே?''

''இரண்டரை.''

''இருநூத்தியம்பதா? அடாவடியா இருக்கே. பாத்துச் சொல்லு.''

''இரண்டு.''

''அப்பறம்?''

''கையை எடு.''

''என்ன.''

''எடு சொல்றேன்,'' நாயக்கர் அவன் கையை விலக்கி விட்டு வீலை உள்ளே உருட்டிப் போனார். வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

''அப்புறம் என்னதான் சொல்ற?''

''ஒண்ணும் சொல்லலை.''

''விலை சொல்லுப்பா.''

''சொல்லிட்டேன்.''

''ஒண்ணரைக்குத் தருவியா?''

''ஒண்ணு தொண்ணூறுக்குக் குறையாது.''

''ஒண்ணு அறுபது.''

''வேற கடை பாருப்பா பேஜார் பண்ணாதே.''

''சரி ஒண்ணு எழுபது.''

''எண்பது போடு.''

''எல்லாத்தியும் எடு.''

நாயக்கர் அவனைப் பின்பக்கம் கூட்டிப்போனார், கண்ணப்பன் தடுமாறினான். இரும்புக் குவியல்களை இடறியபடி போனான். சக்கரங்களைத் தட்டிப் பார்த்தான்.

சக்கரங்கள் நின்ற இடத்தில் இரும்புப் பலகை போடப்பட்டிருந்தது. கண்ணப்பன் தட்டியது இரும்புப்

பலகையைத் தாக்கி ஒலி அதிர்வைக்கூட்டியது. விரிசல் தெரியாது போயிற்று. கண்ணப்பன் வாங்கிய இரண்டு வீல்களும் விரிசல் உள்ளவை.

ராவுத்தர் வண்டிக்குத் தேவையானவை.

"ஏ கிளாஸ் மிலிட்டரி வண்டியிது, சாய்பு. இரு நூற்றுக்குக் குறையமாட்டேன்னுட்டான். மன்றாடி எடுத்தாந்து மாட்டியிருக்கேன்."

எடை போட்டு எழுபதுக்கு எடுத்த வீல்! நூற்று எண்பதுக்கு விற்கப்பட்டது. இருநூறு என்று சொல்லப் பட்டது. பதின்மூன்று டன் கோதுமையோடு அன்றிரவு நெல்லூர் நோக்கிப் புறப்பட்டது.

ராவுத்தர் லாரி டிரைவர் வரதன் புழலேரி தாண்டியதும் வண்டி அலைவதை உணர்ந்தான். இறங்கித் துணிக் கந்தையை டீஸலில் தோய்த்துக் கொளுத்திப் பந்தம் எரியும் வெளிச்சத்தில் சக்கரங்களைப் பார்த்தான். ஏதும் தவறு தெரியவில்லை.

பெரியபாளையம் பிரிவில் லாரி விநோதமாய்க் குலுங்கிற்று. மாட்டு வண்டித் தொடர்களைக் கடக்க ஒடித்த போது மீண்டும் அலை பாய்ந்தது, திடீரென்று பின்பக்கம் சத்தம் கேட்டது. பின்பக்கம் அமுங்குவது தெரிந்தது. காற்றுத் தடை போடுவதற்குள் இடது பக்கம் சாய்ந்து நெளிந்து கரகரவென்று இழுக்கப்பட்டு சாலை ஓர சரிவில் இறங்கி வயல்வெளியில் தேய்ந்து ஒரு கிணற்று விளிம்பில் மோதிச் சுவரை உடைத்து நின்றது. வரதன் குனிந்து பார்த்தான். தண்ணீர் தெரிந்தது. மெல்ல இறங்கிச் சுவரில் கால் வைத்துத் தரையில் குதித்தான். வண்டிக் கதவைத் திறந்து சீட்டுக் கடியில் உள்ள தன் பையை எடுத்தான். டிரைவர் லைசென்ஸ் இருக்கிறதா என்று பார்த்தான். வண்டியை விட்டுவிட்டு நெல்லூர் பஸ் ஏறிக் காணாமல் போனான்.

# 2

விஸ்வநாதனை யாரோ உப்பால் கட்டிப் போட்டிருந்தார்கள். கடல் உப்பு. ஸ்படிகம் ஸ்படிகமாய் உறுத்தும் உப்பு. அவனை மல்லாக்க மணலில் தள்ளி இரண்டு இரண்டு கையாய் உப்பு எடுத்து அதில் கோலக்கோடு மாதிரி குறுக்கும் நெடுக்குமாய் அவனைக் கட்டியிருந்தார்கள்.

விஸ்வநாதன் கைகால்களை விரித்து வானம் பார்க்கக் கிடந்தான். அவன் உள்ளங்கைகளிலும் கால்களிலும் உப்பு வைத்து மணலோடு அறையப்பட்டிருந்தது. விஸ்வநாதனால் எழுந்திருக்க முடியவில்லை. தலையை மட்டுமே சிறிது உயர்த்த முடிந்தது. ஒவ்வொரு முறையும் தலையை உயர்த்தும்போது யாரோ பலமாய் அழுத்தி அவன் எழுந்திருக்கவொட்டாமல் செய்தார்கள்...உப்புதான், உப்பு சக்திதான் தன்னை இப்படி எழவொட்டாமல் செய்கிறது என்று விஸ்வநாதன் கண்டு கொண்டான் விடுபட பலமுறை முயற்சி செய்தும் தடுக்கப்பட்டான். உப்புக்கு எதிராகப் போராட முடியாது. போராடுவது வீண். காற்று தலையைக் கலைத்தது. நாக்கில் உப்புக் கரித்தது.

பேசாமல் இப்படியே கிடந்தால் என்ன? கிடப்பதும் ஒரு சுகம்தானே! எழுந்து என்ன இப்போது? எழும்பினால் தானே தள்ளுகிறார்கள். பேசாமல் இப்படியே இருந்தால், யார் என்ன செய்ய முடியும்? காற்று வீசுகிறது. மணல் மிருதுவாய் இருக்கிறது. மௌனமாய் தூங்கிவிடுவோம். கண்ணை இறுகமூடி என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று விட்டு விடுவோம்.

விஸ்வநாதனால் தூங்க முடியவில்லை. கட்டப்பட்டிருக்கிறோம் என்கிற நினைவே சிரமமாய் இருந்தது

கட்டு வலிக்கவில்லை. ஆயினும் ஒரு வேதனை படர்ந்தது.

முடியாதுன்னு ஒன்று உண்டா? முயன்று முழு வலி வோடு எழுந்து உடைத்துவிட வேண்டும். விஸ்வநாதன் மனத்தைக் கூர்மையாக்கி மூச்சை இழுத்து ஓவென்று கத்திக் கொண்டு எழுந்தான். காற்று பலமாய் அடித்தது. மேலே போடப்பட்டிருந்த உப்புக் கோடுகள் உடைந்தன. கைகளை உதற முடிந்தது. காற்றுபலமாகி விஸ்வநாதனை அழுத்திற்று. "ஏய்ய்" என்று கூவிக்கொண்டு எழுந்தான்.

கனவு கலைந்து விட்டது.

விஸ்வநாதனின் கழுத்தைச் சுற்றித் தாரிணி கையைப் போட்டிருந்தாள். கனவு வேகத்தோடு எழுந்தபோது அவள் கை கழுத்தைவிட்டு அகன்று மடியில் கிடந்தது. விஸ்வநாதன் அவள் கையை அப்புறப்படுத்தினான். எழுந்து வேஷ்டியைத் தேடினான். கால் பக்கம் சுருண்டு கொண்டிருந்த வேஷ்டியை உதறி உடுத்திக் கொண்டான். பின்பக்கம் போய் வந்தான். ஜிலீர் என்று குழாய் ஜலம் காலைத் தாக்கிற்று. தூக்கம் சுத்தமாய் போய்விட்டது.

என்ன கனவு இது? உப்புக்கனவு, உப்புக் கோடாய்க் கட்டியிருக்கிற கனவு. அமைதியாய் நாற்காலியில் உட்கார்ந்து யோசிக்க மறுபடி கனவு முழுவதும் நினைவுக்கு வந்தது.

கழுத்தைச் சுற்றித் தாரிணி கையைப் போட்டிருக்கிறாள் புரள முடியாமல் கனமாய் அழுத்தியிருக்கிறாள். தலையை மட்டும் கனவில் தூக்க முடிந்ததே தவிர சுலபமாய் அசைய முடியவில்லை. உப்புக் கயிற்றில் கட்டப்பட்டுக் கிடந்திருக்கிறேன். உப்பு தாரிணியா? இவளிடமிருந்து விடுபடத்தான் கனவில் அத்தனை தவிப்பா?



விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டுவிட்டு விடுபடப் பறப்பது என்ன நியாயம்? எல்லா ஆண்களும் கல்யாணம் சிறை என்று சொல்கிறார்களே அது போலவா நானும்? ஹாப்பி பேச்சிலர் லைஃப் என்று ஏங்குகின்ற கும்பல்தானா என் மனசும்? இங்கே பிரம்மச்சாரி வாழ்க்கையும் நரகம் தானே? மதிப்பில்லாத நிலைதானே?

"யப்பா, காதலுக்கும் கல்யாணத்துக்கும் எப்படிப் பேயாய் பறந்தோம், இவளைச் சுற்றிச்சுற்றித் திரிந்து இவள் சம்மதம் பெற எப்படித் தவித்தோம்.

காதலிப்பதை இப்போது செய்திருக்க வேண்டும். முப்பத்து மூன்று வயதில் பதற்றம் அடங்கிய நேரத்தில் காதல் வாழ்க்கை துவங்கியிருக்க வேண்டும். சராசரி தென்னிந்தியனுக்கு அனுபவ வளர்ச்சி குறைவுதான். பத்து வயசு மைனஸ்தான்.

விஸ்வநாதன் விடிவிளக்கு வெளிச்சத்தில் தூங்கும் தாரிணியை உற்றுப் பார்த்தான். வெறும் பாவாடையும் பிரித்துவிட்ட ரவிக்கையுமாய், தாரிணி கலைந்து கிடந்தாள். இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிறகும் மார்பும் இடுப்பும் திண்ணென்றுதான் இருக்கின்றன. உதடுகளும் கன்னமேடும் உறுதியான முகவாயும் மனத்தைக் கிளறிவிடுகின்றன.

கனவு நனவு எல்லாம் மறந்து மறுபடி படுக்கையில் விழுந்து தாரணியை இறுக்க கட்டிக்கொண்டு தூங்கலாமா?

ஆனால் இந்தப் படுக்கை ஆட்டத்தில்கூட ஈடுபாடில்லாமல் போய்விட்டது. தூங்குவதற்காகத்தான் முயக்கம் என்று ஆகிவிட்டது. உடம்பில் இரண்டு பேருக்குமே அடக்கம் போய்விட்டது. பல் தேய்க்கிற பழக்கம் மாதிரி இருட்டில் கைபட்டதும் முயக்கத் தவிப்பு வந்துவிடுகிறது.

கடன்போல நாள் தவறாது இரவில் மனைவியை அணைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வேண்டிய சமயம் எது, வேண்டாத சமயம் எது என்று தனக்கே பிடிபடாமல் இருக்கிறது. இவளுக்குத் தேவையோ என்ற அச்சத்தில் தன்னை இழக்க வேண்டியிருக்கிறது. இவளும் கடமையாய்ச் செய்கிறாளோ என்கிற கவலை வருகிறது. இதைக் கேட்டுக்கூடப் பார்த்தாகி விட்டது.

தாரிணி பொய்யானவள், நிறையப் பெண்கள் பொய்யானவர்கள்.

''உங்களுக்குச் சிரமமா இருந்தா தூங்குங்கோ'' என்று மனசை நசுக்கிவிட்டு நகர்ந்து கொள்வாள்.

''எனக்கா, சிரமமா?'' உள்ளே ஈகோ பொத்துக் கொண்டு கரை உடைக்கும். மனசுள் பேய் ஆடும்.

''ஆமாம், கொஞ்சம் தலையை வலிக்கிறது'' என்று அடங்கியும் இருக்கிறான்.

''தலைவலியா ஏன் ரொம்ப வேலையா?'' இழுத்துத் தலையை, உடம்பை அழுத்திப் பிடித்துவிட்டுத் தாரிணி வெறியேற்றியிருக்கிறாள்.

ஒரு வேளை ஹாப்பி பேச்சிலர் லைஃப் என்பது இதுதானே? அதை மனதில் குறித்துக்கொண்டு தானோ.''

கற்பனைக் கனவில், சினிமாவில் காதல் பாட்டுக்களில் உண்டான சுகம் நிஜத்தில் இல்லாததால் தானோ?

தேவையெனில் கனவு காணலாம். வேண்டாமெனில் அழித்துவிடலாம். மனசுக்குப் பிடித்தவளை மனசுக்குப் பிடித்த விதத்தில் மனசுக்குள்ளேயே முயங்கலாம். வேண்டாமெனில் தூங்கலாம். கல்யாணம் என்பது ஒரு கௌரவம். சமூகக் கௌரவம். அரை நிக்கர் சௌகர்யமென்றாலும் ஆபீசுக்குப் போட்டுக்கொண்டு போக



முடியாது. முழுபேண்ட்தான் கௌரவம். ஆபீஸ் கௌரவம், பேண்டும் பூட்ஸும் வெறுப்பாகிவிட்டன. கல்யாணம் மாதிரி கடனே என்கிற விதமாகிவிட்டன.

ஆனால் பூட்ஸ்கூட வாங்கின புதிதில் எத்தனை கர்வமாய் இருந்தது. நடக்கும்போதே ஒரு விச்சு என்னமாய் வந்தது.

இப்போது பூட்ஸ், ஆபீஸ், கல்யாணம் எல்லாம் அலுப்பாய் இருக்கிறது. இவ்வளவுதானா? இதோடு வாழ்க்கை இவ்வளவுதானா என்கிற ஏக்கம் வந்திருக்கிறது.

இப்போது முப்பத்து நாலு வயசு. இன்னும் இருபத்து இரண்டு வருஷம் வேலைக்குப் போக வேண்டும். மோட்டார் சைக்கிளை உதைத்து எட்டுப் பத்துக்குக் கிளம்பி எட்டு முப்பத்து அஞ்சுக்கு ஆபீஸ் போக வேண்டும். வியாழக்கிழமை இரவே ஞாயிறு விடுதலை பற்றி ஏக்கம் கொள்ள வேண்டும். ஞாயிறு உபரி வேலை ஏதும் வராது இருக்க வேண்டுமே என்கிற கவலையோடு இருக்க வேண்டும்.

ஒருவேளை இதுதான் உப்புக் கயிறோ? ஆபீஸ் வேலையும் நேரத்துக்குக் கட்டுப்பட்ட வாழ்க்கையும் தான் உப்புப் பிணையலோ? பேண்ட்டும் பூட்ஸும் காகித ஃபைலும்தான் கட்டிப் போட்டிருக்கிறதோ?

ஆபீஸை உதறினால் வீடு உடைந்துபோகும். வீடு உடையாமல் இருக்க ஆபீஸை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும் நிறைய பேண்ட் வாங்கி ஜதை ஜதையாய் பூட்ஸ் வாங்கிக் கத்தைக்கத்தையாய் பைல் சுமந்து செத்துப் போக வேண்டும்.

ஆனால், கனவில் உப்புக்கயிறு அறுந்து பொடிப் பொடியாயிற்று. அறுக்க முடியுமா என்னால்? இல்லை அறுக்க வேண்டும் என்கிற ஆசைதான் கனவாயிற்றா? கனவில் மட்டும்தான் அறுத்தல் சாத்தியமா?

அறுத்துவிட்டு என்ன செய்ய,

மனசுக்குப் பிடிச்ச வேலையா செய்யணும். மனசுக்குப் பிடித்த வேலை என்ன?

பெட்டிக் கடை வைத்தல்.

சினிமா தியேட்டரில் டிக்கெட் கிழித்தல்.

இப்போதெல்லாம் அதிகம் சினிமா பார்க்கும் ஆசை வந்துவிட்டது. வேலைப் பளுவை, தலைவலியை சினிமா பல நேரம் குறைத்து விடுகிறது. ஆங்கிலம், இந்தி, தமிழ் என்று தென்பட்ட படத்துக்குப்போய் உட்கார்ந்து விடுவது சுகமாய் இருக்கிறது. ஒரே படத்தை இரண்டு மூன்று முறைகூடப் பார்க்க முடிகிறது.

பனிவிழும் மலர் வனம் – உன்
பார்வை ஒருவரம்

இந்தப் பாட்டு சிக்கென்று மனசில் பிஜி எம்மோடு பதிந்துவிட்டது. படம் பார்த்துவிட்டு வருகையில் வேறு கதாநாயகனைப் போட்டு இந்தப் பாட்டை தனக்குள் ஒளிப்பதிவு செய்தாகிவிட்டது. படத்தில் வரும் காதல் அசைவுகளைவிடத் தன் ஒளிப்பதிவு திறமையாய் இருப்பதைப் போல் பட்டது. கதாநாயகனே இல்லாமல் வெறும் பெண்ணை மட்டும் வைத்து இதைப் படமாக்க வேண்டும் என்று தோன்றிற்று.

தனக்குப் பிடித்த சினிமா பாட்டுகளைப் போட்டு மனசுக்குள்ளேயே ஒரு படம் தயாரித்தான். மோட்டார் சைக்கிளில் போகும்போதெல்லாம் சினிமா படம் எடுத்தான். யார்யாரோ செய்யறாங்க, என்னால் முடியாதா? முதல்ல சின்னதா ஒரு பிலிம் ஆர்ட் பிலிம்—ஒரு ரீல்பிலிம் பண்ணிப் பார்க்கணும். பத்துப் பேர் பிலிம் பண்ணி ஒரே டைட்டில்ல ஓடணும். அப்புறம் முழுசா ஒரு பிலிம் பண்ணணும்.



இப்போ பிலிம் இண்டஸ்டிரில நுழைய முடியுமா? இருபது வயசுல நுழைஞ்சிருக்கணும். இன்னிக்கு இருக்கிற முதிர்ச்சி இருபது வயசுல இருந்திருந்தா நுழைஞ்சிருப்போம். இன்னி தேதிக்குக் கொடிகட்டிப் பறந்திருக்கும்.

இனிவரும் முனிவரும்
தடுமாறும் கனிமரம்

இரண்டு கைகளை விரித்து, புறங்கைகள் முகத்துக்கெதிரே வைத்து, விரித்த வலது இடது கட்டை விரல்களை இணைத்துக் கைகளுக்கு நடுவே தென்பட்ட சதுரத்தில் தாரிணியைப் பார்த்தான்.

யப்பா...தாரிணி இப்போது எழுந்து நின்றால்? வெள்ளைப் பாவாடையும் பிரித்த சட்டையுமாய் எழுந்து நின்றால்?

இனிவரும் முனிவரும்
தடுமாறும் கனிமரம்

"டைட் க்ளோசப் பிறகு மெல்ல ஸூம்பேக், தாரிணி வெட்கப்பட்டு சிரி, சட்டென்று அசால்டா தலையை உயர்த்து, வெல் தேர் யூ ஆர், டு இட் அகெய்ன்." தாரிணி குனிந்து நிமிர்ந்து குழல் பறக்க மார்பு குலுங்கச் சிரித்தாள். தாரிணி மறுபடி சிரிக்க விஸ்வநாதன் வாய்விட்டு பேசினான். 'ஒடுங்காத தாரிணி' புரண்டு மல்லாந்தாள். சட்டென்று சிலிர்த்துக் கொண்டாள் இவனுக்காய்த் துழாவினாள். "ஏன்னா, பால் வந்துடுத்தா?" என்று விழி பிரிக்காமல் கேட்டாள்.

"இல்லே"

"எங்க இருக்கேள்? நாற்காலியா? இங்க வாங்கோ, முகம் பார்க்கணும்."

அவன் எழுந்து தாரிணி அருகில் போனான். கை நீட்டி அவனைத் தடவி முகத்துக்கெதிரே விழிகளை விரித்தாள்.

''மணி என்ன?''

''நாலு பத்து.''

''ச்சே போ. இப்ப எழுந்து என்ன செய்றேள்? கட்டிக்கோங்க.''

விஸ்வநாதன் பணிந்தான்.

''தூக்கம் வரலையா? அசதியா? விடிகார்த்தால எழுந்துட்டேள். உலுக்கி உலுக்கி எழுப்பணுமே உங்களை.''

விஸ்வநாதன் பதில் பேசாது இருந்தான்.

''ஆபீஸ் ஞாபகமா?''

விடுவித்துக்கொள்ள முயன்றான். இன்னும் சற்று நேரம் நிம்மதியாய் டைரக்ட் செய்து கொண்டிருக்கலாம். கெட்டுப் போயிற்று.

''என்ன நகர்ந்து நகர்ந்து போறது... என்ன கஷ்டம்? ஆபீஸ் கவலையா?''

இவள் ஆபீஸ் ஆபீஸ் என்கிறபோதெல்லாம் விஸ்வநாதனுக்கு வயிறு கலவரப்பட்டது. ஐயோ என்று கத்த வேண்டும் போல இருந்தது.

''விடு, எனக்குத் தூக்கம் வரது.''

''என் தூக்கத்தைக் கலைச்சுட்டு நீங்க தூங்கினா என்ன அர்த்தம்?'' தாரிணி திரும்பி விஸ்வநாதனை இறுக்கிக்கொண்டாள். மார்பை வருடினாள் கன்னத்தை கடித்தாள். விஸ்வநாதன் மனசை மறுபடி கூட்டிப் 'பனி விழும் மலர் வனம்... உன் பார்வை ஒரு வரம்' என்ற வரிக்கு படம் பிடிக்க ஆரம்பித்தான்.

''இது வைரமுத்துவா? ரொம்ப நன்னா இருக்குல்ல கேக்கறதுக்கு.''

''என்னது?''

''இப்ப நீங்க பாடின பாட்டு.''



''உனக்குக் கேட்டுடுத்தா?''

''சத்தமாகத்தானே பாடினேள்.''

விஸ்வநாதன் வாயை இறுக மூடிக்கொண்டான்.

''குளிரலை உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

குளிர்ந்தது. குளிருக்கு இதமாய் உடம்பு தேவைப்பட்டது. விஸ்வநாதன் சட்டென்று மனசுக் கேமிராவை க்ரேனோடு அறை மூலைக்கு அனுப்பினான். தன்னையும் தாரிணியையும் வைத்துப் படமெடுக்க ஆரம்பித்தான்.

''பனிவிழும் மலர்வனம்—உன்
பார்வை ஒருவரம்''

என்று பாடினான். தாரிணி கிறங்கினாள்.

விஸ்வநாதன் கேமிரா, அறை முழுக்க நகர்ந்தது. ஸூம்...ஸூம் பேக் எல்லாம் செய்தது. அவர்கள் முயக்கத்தைப் பல கோணங்களில் படமெடுத்தது.

''அப்பா...கொள்ளை ஆசை எம்மேல. சும்மாவானாலும் விடு... நகர்ந்து போன்னு டீப் அடிக்கிறது. பால் வந்தா எழுப்புங்கோ, எட்டு மணிக்கு ஆபீஸ் போகணுமில்லை?''

விஸ்வநாதனுக்குத் தன் ஆசைகள் எதுவும் உறுதியாய் இல்லை என்பது நினைக்க நினைக்க வலித்தது. தூக்கமும் அலுப்புமாய் கண் சொருகிற்று.

டெலிபோன் கலைத்தது.

''குட்மார்னிங். ஒன் செகண்ட், இதோ கூப்பிடறேன்''—தாரிணி குரல் கேட்டது.

இது ஆபீஸ் போன் கால், யார்? இந்த ஆறு மணி காலையில் யார்?

''புத்தூர்கிட்ட உங்க ஆபீஸுக்கு வரவேண்டிய ஒரு லாரி மாட்டிடுத்தாம். உங்க மானேஜர் கூப்பிட

றார். என் குரல் கேட்டவுடனே குட்மார்னிங் மேடம் கிறார். ஆபீஸ்ல வேலை பண்றவா மரியாதையே தனி.''

தள்ளாடியபடியே விஸ்வநாதன் டெலிபோனுக்கு அருகே போய், ''குட்மார்னிங்'' என்றான்.

அது அன்றைய முதல் குட்மார்னிங். அன்று முழுக்க அவன் நிறைய குட்மார்னிங். சொல்ல வேண்டியிருந்தது.

# 3

நடேச முதலி நடைபாதையின் நடுவே வலது கன்னத்தை தரையில் வைத்தபடி சுருண்டு படுத்திருந்தார். காலிலிருந்து தலைவரை மக்கிய கித்தானை இழுத்துப் போர்த்தியிருந்தார். மெர்க்குரி வெளிச்சமும் விடிகாலைப் புனியும் பின்னிப் பிணைந்து கனமாய்ச் சாலையில் இறங்கிப் புரண்டன. நடேச முதலியின் புத்தி முதலில் விழித்து விட்டது. உடம்பு மட்டும் அசந்து கிடந்தது. மண்டைக்குள் ஸ்விட்ச் போட்டது போல் இந்த விடியல் நேரம் சரியாய் விழிப்பு வந்து விடுகிறது. புத்தி விழித்துக் கொண்ட சில நிமிடங்களுக்கெல்லாம் நடேச முதலி எழுந்து விடுவார். அசதி எத்தனை இருந்தாலும் தன்னிச்சையாய் எழுந்து உட்கார்ந்து விடுவார். சோம்பல் முறித்து அடங்கின பிறகு எழுந்து விடுவார்.

விழித்திருப்பதைவிட உறங்குவதைவிட, இப்படி இரண்டுங்கெட்டானாய்க் கிடக்கிற சில நிமிடங்கள் தான் உலகத்தில் பெரியசுகம். புத்தியும் உடம்பும் பொருத்திக் கொள்கிற நேரந்தான், பெரிய இதம், அப்படிப் புத்தி விழிப்புத் தட்டியதும் நடேச முதலி கண்களைத் திறக்க மாட்டார்.

''காதார் குழையாடப்
பைம்பூண் கலனாடக்



கோதை குழலாட
வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச்
சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி
அப்பொருளுமாபாடி''

மனசு பாட ஆரம்பிக்கும்- திருவாதிரையன்று தில்லையில் சுவாமி புறப்பாடும் தீவட்டியும் குளிரும் விபூதி பூசும்போது வரும் நெற்றி சூடும் கருஞ்சாந்தும் நினைவுக்கு வரும். நடேச முதலியார் தாத்தாவும் அப்பாவும் சிதம்பரம் கோயிலில் பல்லக்குத் தூக்கிகள். ஒண்ணரை ஜான் பெரிய சன்னதி மான்யக்காரர்கள். தண்டு போட்டு நாலு வீதியும் சுற்றி வலம் வர வேண் டும். வெறுமே புடிபுடி என்கிற ஓட்டம் இல்லை. முன் னும் பின்னும் நடை போட்டு ஒயிலாய் வர வேண்டும். ஒரு கையை முன் ஆளுடன் பின்னி மறு கையைத் தட்டில் சுற்றிக்கொண்டு நிலம் பார்த்துக் கணக்கோடு கால் வைக்க வேண்டும். தண்டு தூக்கியபடி முகம் சற்று நிமிர்த்தி விழி உயர்த்திச் சுற்றியுள்ள ஜனம் பார்க்கிறபோது—ஜனத்திரளின் பரவசம் பார்க்கிற போது சுவாமி பார்த்த மாதிரி இருக்கும். இந்தப் பாட்டும் நடையுமே இன்று விழித்தவுடன் புத்தியில் ஓடும் விஷயமாய் இருக்கிறது.

பாட்டு முடிந்த பிறகு நடேசமுதலி கண்களைத் திறக்கமாட்டார். உடம்பை விறைத்து நீட்டி இடுப் பைத் தொட்டு வேட்டி முடிச்சுப் பார்த்துக் கொள்வார், வேட்டி இறுக்கம் தெரிந்து பிறகு மறுபடி சுருண்டு கொள்வார். தண்ணித் தொட்டித் தெரு அமைப்பும் முகங்களும் மனதில் எழும், மனசு அவசரப்படுத்தும், எழுந்து நிற்கக் கட்டளை போடும்.

இன்றும் புத்தி கட்டளை போட்டது. போதும் ஐயா எழுந்திருங்க நடேச முதலி எழுந்திருங்க என்று பேசிற்று. நடேச முதலி தன்னை வாடா போடா என்று

அழைத்துக் கொள்வதில்லை. "ஐயா என்ன தூக்கம் எந்திரிங்க எந்திரிங்க'' என்று மரியாதையாய் அழைத்துக் கொள்வார். இது சின்ன வயசில் ராவுத்தர் சொல்லிக் கொடுத்த விஷயம். ''தன் தலையைத் தானே அடிச்சுக்கிறது நாறப் பொழப்புன்னு சொல்லிக்கிறது, தன்னை மட்டமாக்கிப் பேசறது தப்பு. நாம வந்தோம் நாம சொன்னோம்னு எங்க ஜாதில பேறது தமிழ் தெரியாத பேசறதில்லே. நானும் எனக்குள்ள இருக்கிற இறை உணர்வும்னு அர்த்தம். நம்ம மனசு, புத்தி, கடவுள் இருக்கிற இடம். நாம் மனுசர்கள் மட்டுமே இல்லை. நம்மை நாம மதிச்சா பிறத்தியாரை அவதூறு பண்ணத் தோணாது. கெட்ட வாசகம் வாயிலேர்ந்து வராது.''

ராவுத்தர் இதுமாதிரி நடேச முதலிக்கு நிறையச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். இருபது வயசில் சிதம்பரம் பல்லக்கைவிட்டுத் தண்ணித் தொட்டித் தெருவில் மூட்டை தூக்க வந்தபோது அந்த இளைஞனை அழைத்து உயர்வான விஷயங்களைப் போதித்திருக்கிறார். வயிற்றுக்குச் சோறும் உடுக்கத் துணியும் படுக்க இடமும் தேவையறிந்து உதவியும் செய்திருக்கிறார்.

''சோதித் திறம்பாடிச்
சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி
அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை
வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி
ஆடேலோ ரெம்பாவாய்''

அடடா...முதலியாரே. உங்களுது கூட உருவ வழிபாடே இல்லிங்க. ஆதித்திறம்பாடி அந்தமா மாபாடின்னா சின்ன விஷயமா? எவ்வளவு பெரிய விஷயம். இதைப் பல்லக்கு தூக்கிட்டுப் போக முடியுமா?



பேதித்து நம்மை வளர்த்தெடுத்த...யா அல்லா... பாடுங்க முதலியாரே பாடுங்க.''—கடை சாத்துகிம் நேரம், கிடங்கு பூட்டின பிறகு முதலியும் ராவுத்தருற பேசிப் பேசி மாய்வார்கள். இனம் புரியாத ஸ்நேகத்தில் திளைப்பார்கள்.

ராவுத்தர் சொத்து நடேச முதலி சொத்து. நடேச முதலி ராவுத்தர் சொத்து.

போர்வையோடு விடிகாலைக் குளிரை உதறி முதலி எழுந்து நின்றார். தெருமுனையில் வெளிச்சம் படர்ந்தது. வெளிச்சம் குலுங்கிச் சுவர் ஏறி நிழல்கள் நகரப் படர்ந்து படர்ந்து பளீரென்று தெரு முழுவதையும் தாக்கிற்று.

''அடடே தொண்ணூத்தெட்டு அம்பத்தியாறு ராவுத்தர் வண்டி. கரீம்பாய் ஓட்ற லாரி, நெல்லூர் சரக்கு. அட்றா சக்கை. இன்னிக்கு எழுந்தவுடனே அரிசி வண்டியா. என்ன இவ்வளவு சுருக்கத் தெருவுல நுழையுது. எப்பவும் பிரிட்ஜ் மேலப் போட்டுட்டு வெளிச்சம் பார்த்துட்டுத்தானே வருவான். என்ன ஆச்சு கரீம் பாய்க்கு...''

ரும் ரும் ரும் என்று என்ஜின் தன் வலிவு அடக்கிக் கொண்டு வருகிற சிரமம் காட்டிற்று. லகான் இழுப்பில் திமிருகிற குதிரை மாதிரி இப்படி ஊர்ந்து வருவது தனக்கு இஷ்டமே இல்லை என்கிற மாதிரி ஒலி காட்டிற்று.

ஒலியும் ஒளியும் முதலியை நெருங்கிக் கடந்து பின் சிவப்பு வெளிச்சம் தரையைத் தேய்த்தபடி நடந்தது. முன்பக்க காபின் கதவு பாதி திறந்தபடி க்ளீனர் செல்லத்தம்பி வழி சொல்லிக் கொண்டிருந்தான். பத்து கஜம் லாரி கடந்ததும் தம் தம் என்று சைட் கதவில் அடித்தான். வண்டி நின்று குலுங்கியது. பட்டென்று எஞ்சின் சப்தம் அணைந்தது. ஒளிக்கற்றை துவண்டு சுருண்டு உள்ளடங்குவதை இங்கிருந்தே முதலி பார்க்க முடிந்தது.

தண்ணி தொட்டித்தெருவில் அன்றைய முதல் லாரி உள்ளே நுழைந்து பத்துப்பேருக்கு வேலை தர இருபது பேருக்குச் சோறு போடத் தயாராய்க் கர்ப்பிணிப் பெண்ணாய்க் காத்திருந்தது.

நடேச முதலி எழுந்து நின்று கித்தானை மடித்து வைத்தார். வேட்டியை நீக்கி உடம்பு முழுவதும் துடைத்துக்கொண்டார். சில்லென்று குளிர் தாக்கிற்று. தோள் வரை வேட்டியை போர்த்திக்கொண்டு நாயர் கடையை நோக்கி நடந்தார்.

மொச்சென்று தெரு விளக்குகள் அணைந்தன. இருட்டு தண்ணித் தொட்டித் தெருவை மார்போடு அணைத்துக் கொண்டது.

''என்னாத்துக்குப்பா இத்தினி சுருக்க அணைக்கிறீங்க. காலவரு போவக்கூடாதா?''—கரீம்பாய் வண்டியின் உள் விளக்கு மட்டுமே பேட்டரி துணையில் எரிந்து கொண்டிருந்தது.

''என்னா மேஸ்திரி டீ போடப் போறியா?''—தலைப் பாகையும் மேல் வேட்டியுமாய்த் துணிப்பந்தாக நின்றாலும் முதலியைச் செல்லத்தம்பி அடையாளம் கண்டு கொண்டான்.

''என்ன செல்லததம்பி...சுருக்க வந்துட்ட... தாடிக்காரன் வண்டியோன்னு பார்த்தேன், கரீம்பாய் எங்க, படுத்துட்டாரா?''

''கக்கூஸுக்குப் போயிருக்காரு.''

''மைதானம் பக்கம் எங்கேயாவது நிறுத்தி முடிச்சுட்டு வரவேண்டியதுதானே. இங்கே வந்து இருட்டுலே கால் வச்சு லோல்படுவானேன்.''

''வழில ஆள் அடிச்சுட்டாரு, அதான் நேர உள்ள வந்துட்டம்.''

''எங்கடா?''—நடேச முதலி குரல் உயர்த்திப் பதறினார்.

''புத்தூர் தாண்டி.''

''ஆணா பெண்ணா?''



''தெரியலை. நிறுத்தாத வந்துட்டாரு.''

''மேலல ஏத்திட்டிங்களா?''

''வண்டி அச்சுத் தூக்கிப் போட்டிருச்சு''

''பூட்ருக்குமா?''

''தெரியலை, எழுபது எண்பதுல வந்துக்கிட்டிருந்தாரு. திருப்பத்துல வண்டி அலைபாஞ்சது''

''ஆரும் பாக்கலியா? ஊரா! மைதானமா?''

''தெரியலே. மைதானமாத்தான் இருந்திச்சு... ஆடுங்களா நின்னுச்சு. மேய்க்கிற ஆளோ இல்லை, தனியாப் போற ஆளோ, நொச்சுன்னு லெப்ட் சைட் பம்பர்ல தட்டித் தூக்கிப் போட்டுப் புல்லுல வுழுவுறத பார்த்தேன். அவ்ளோதான்.''

''கரீம்பாய் பயந்துடுச்சா?''

''கக்கூஸ் போயிருக்கு. நான் சொன்னேன்னு கண்டுக்காதே.''

''ராவுத்தர்கிட்டே சொல்லிட்டீங்களா?''

''விடிஞ்சதும் சொல்லணும்''

''வண்டில காயமா?''

''தெரியலை விடிஞ்சதும் பார்க்கணும். நானும் வராட்டா. டீ வாங்கித் தரியா?''

நாயர் கடையில் பால் வட்டிலுக்குக் கீழே கெரஸின் ஸ்டவ் கோபமாய்ச் சீறிக்கொண்டிருந்தது—சூடான டீ கிளாஸை முகத்தில் செல்லத்தம்பி அழுத்திக்கொண்டான். விளக்கு வெளிச்சத்தில் தலைகலைந்து சோர்வும் தூக்கமுமாய்ச் செல்லத்தம்பி காணப்பட்டான்.

''நீயும் பயந்திட்டப்போல. ராவுத்தர் இருக்கச் சொல்ல என்னா பயம். வண்டிய நிக்கவுடமாட்டாரு. ஆளு அனுப்பிச்சா சமாதானமாயிடும். ஒரு நா வண்டி நின்னாக்கூட தாங்கமாட்டாரு''—முதலி வெறும் தண்ணீர் டம்ளரில் வாங்கி வாய் கொப்பளித்தார்.

''அதுக்கில்லை.''

''அடிச்சுட்டுச் சும்மா வந்துட்டமேன்னு பாக்க றியா? வண்டின்னு ரோட்ல ஓட்டினம்னா இப்படித் தான் ஏதாவது வந்து படும். தானா வந்து வுழும்''

''கரீம்பாய்க்கு போன மாசம் இரண்டாவதாக ஒரு பொண்ணைக் கட்டினாரு.''

''அதுக்கென்ன, லாரிக்காரனுக்கு நிறுத்தின இட மெல்லாம் கல்யாணம்தான்.''

''அதுக்கில்ல. அப்படி அவரு மாட்டினா. நான்தான் உள்ளாரப் போகும்படி இருக்கும்''

''ஏன் தொரை?''

''அப்படிச் சொல்லித்தான் வண்டி ஓட்டச்சொல்லிக் குடுத்தாரு.''

''இப்ப ஆளு அடிச்சதும் கரீம் இதை சொல்லி லிச்சா.''

''சொல்லலை. சொன்னாலும் சரின்னு ஒத்துக்க வேண்டியதுதான்.''

முதலி மௌனமாய் இருந்தார். அனேகமாய் இது அங்கே மரபு. கிட்டத்தட்ட குரு காணிக்கை. துடைக்கச் சொல்லி, கழுவச் சொல்லி, டயர் மாத்தச் சொல்லி, ஸ்டியரிங் பிடிக்கக் கற்றுக்கொடுத்து, எஞ்ஜின் வேலை கள் விவரித்து எதுவுமே தெரியாத க்ளீனர்ப் பையனை டிரைவராய், வண்டிக்கு முழுப் பொறுப்பாய், வேலை தெரிந்த ஆளாய், ஆண் பிள்ளையாய் மாற்றுகிற செயலுக்குக் காணிக்கை இது.

செல்லத்தம்பியால் மறுக்க முடியாது. மறுத்தால் மரியாதை இருக்காது. நாளைக்கு டிரைவராய் வண்டி எடுக்கறபோது இந்தக் கதையை ஒரு க்ளீனர் பையனிடம் சொல்லி அதட்ட முடியாது. அவனிடமும் இதை எதிர்பார்க்க முடியாது.



'டிரைவரை மாட்டவுட்டுட்டு க்ளீனர் பையன் ஓடிட் டாம்பா' என்பது கேவலம். நன்றி கொன்ற செயல். குருத்துரோகம். தண்ணித் தொட்டித் தெரு கூடி நின்று செல்லத் தம்பி மீது எச்சில் துப்பும். ஆனால் செல்லத் தம்பிக்கு வயதான அம்மா இருந்தாள்.

செல்லத்தம்பி டம்ளரை வைத்துவிட்டு மெல்ல வண்டி நோக்கிப் போனான். சட்டென்று திரும்பி முதலியை அணுகி, ''கௌசல்யா இருக்கிறதா?'' என்று கேட்டான்.

முதலி அவனை நிமிர்ந்து பார்த்தார். பையன் பயந்துதான் போயிருக்கிறான். இன்றோ நாளையோ கைதாகி விடுவான்.

''நம்ப மணியோட பார்த்தேன். பம்பாய்க்காரன் ஷெட்ல இருக்கும். மணி சாயந்திரம் குடிச்சிட்டு வந் தான். போய்ப் பாரு.''

''மணி எதானும் சொல்வானா?''

''அவன் சொல்றது என்னா? எருக்கந் தோட்டத் துக்குக் காவல்காரன் வேறயா? குரல் கொடுத்துப் பாரு.''

செல்லத்தம்பி சற்று நின்று யோசித்தான். பிறகு மட மடவென்று பம்பாய் கோடவுன் நோக்கிப் போனான். இரண்டு கிடங்குகளுக்கு நடுவே சாக்கடை வாருவதற்கான சந்து இருந்தது. உள்ளே வெகு தூரம் நடந்து திரும்பியதும் கட்டடம் முடிந்து பளிச்சென்று வெட்டவெளி தெரிந்தது. இரும்புப் பலகைகளும் நீண்ட உருளைகளும் கிடந்தன. ஆளுயர மரப்பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

சுவர் ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெட்டி களுக்கு நடுவே நான்கு அடி இடைவெளியில் மேலே கித்தான் மூடி முன் பக்கம் புடைவை போட்டு மறைத் திருந்தது. கிடங்கு பின்புறம் ஒற்றை பல்பு வெளிச்சம் காட்டிற்று.

செல்லத்தம்பி புடைவையை விலக்கி உள்ளே இரும்பை நோக்கி, ''கௌசல்யா என்று கூப்பிட்டான்.

உள்ளே ஆள் அசையும் சப்தம் கேட்டது.

''யார் அது?''—கரகரப்பாய் ஒரு பெண் குரல் கேட்டது.

# 4

' கரீம்பாய் க்ளீனர் செல்லத்தம்பி.''

''கரீம்பாயா?''—உள்ளே பரபரப்புக் கூடிற்று.

''இல்லே கரீம்பாய் க்ளீனரு.''

''சின்னப் பையனா?''

''ஆமாம்.''—கரீம்பாய், செல்லத்தம்பியை சின்னப் பையன் என்றுதான் கூப்பிடுவார். நிறையப் பேர் அவனைத் தண்ணித்தொட்டித் தெருவில் அப்படித்தான் கூப்பிடுவார்கள். மார் முழுக்க ரோமம் வளர்ந்த பின்னும் அவன் நிறையப்பேருக்குச் சின்னப்பையன்தான். சுயமாய் வண்டி பிடிக்கிறவரையில் இப்படித்தான் கூப்பிடுவார்கள். சுயமாய் வண்டி பிடிக்கிற காலம் வந்து விட்டது.

ஆள் அடித்தது நான்தான் என்று ஏற்றுக்கொண்டு உள்ளே போய் ஆறு மாசமோ எட்டு மாசமோ இருந்து விட்டு வந்தால் தனியே ஓட்ட வண்டி கிடைக்கும். கரீம் பாயே இதற்கு ஏற்பாடு செய்தாலும் செய்யலாம். டிரைவர் செல்லத்தம்பி என்று மாறிவிடலாம்.

''என்னா கண்ணு, கரீம்பாய் கூப்டுச்சா?''

''இல்லே... நான்தான்''—செல்லத்தம்பி மெல்லிய குரலில் பேசினான்.



''என்னா காலங்கார்த்தாலே... அரிசி லோட் எடுத்தாந்தியா?''

''ஆமா.''

''போய்த் தூங்கறதுதானே, தண்ணி போட்டிருக்கியா?'' —கௌசல்யா வெளியே வந்து புடைவையைப் பல்லால் கடித்து மறைத்தபடி ரவிக்கை அணிந்து கொண்டாள்.

''அதெல்லாமில்லை.''

''ராவிக்கா வாயேன். பேஜாரா இருக்குது.''

''மணி இருக்கானா?''

''ஆரும் இல்லே. ராவிக்கு வா. நான் கொஞ்சம் தூங்கணும்.''

''கூடப் போட்டுத் தரேன்.''

''என்னடா இது. வழில இருக்கிறதெல்லாம் வுட்டுட்டு என் தாலிய வந்து அறுக்கற. எல்லாத்தையும் முடிச்சிட்டு வர்றதுதானே.''

''வழில ஆள் அடிச்சிட்டம். பாய் நிக்காத வந்துட்டாரு.

''எங்கித்து ஆளு, பூட்சா?''

''புத்தூர் பக்கம், பூட்சான்னு தெரியலை.''

''அப்புறம்?''

''பாய் நான் அடிச்சதா சொல்லிடுவாரு.''

''போலீஸ் தேடறாங்களா?''

''தெரியலை.''-செல்லத்தம்பி சோர்ந்தபடி பெட்டியின் ஓரம் சரிந்து உட்கார்ந்து கொண்டான்.

கௌசல்யா அவனை இரக்கத்துடன் பார்த்தாள். இதன் முடிவு அவளுக்கும் தெரியும். தண்ணீர்த் தொட்டித் தெருவின் விதிமுறைகள் அவளுக்கும்

அத்துப்படி. அந்தத் தெருவுக்கு அவள் பதினோரு வயதில் வந்தாள். கடந்த பதினான்கு வருடங்களில் அவளுக்கு நிறைய டிரைவர்களை, க்ளீனர்களை, ஏஜெண்டுகளை, முதலாளிகளைத் தெரியும். இவன் நிலைமை இப்போது என்ன என்று கௌசல்யாவுக்குத் துல்லியமாய்ப் புரிந்தது.

"சரி.. சரி இதுக்குப் போய் ஏன் அழுவற?"

"நான் அழுவலை."

"கொஞ்சம் பிராந்தி இருக்கு. சாப்டிறியா?"

"வாணாம். நான்அதெல்லாம் சாப்புடறதில்லை."

"நான் ஒரு டீ குடிச்சிட்டு வந்துரட்டா தொண்டை எரியுது."

செல்லத்தம்பி நிமிர்ந்து பார்த்தான். எழுந்து மெல்லச் சாக்கடைச் சந்து நோக்கித் திரும்பினான்.

"த்தே என்னா கோச்சுக்கினு போற, கொஞ்சம் இரு, வந்துட்ரேன்."

'கோபம் என்ன... நீ போய் டீ சாப்டு."

"உனக்கு?"

"இப்பத்தான் சாப்பிட்டேன். மேஸ்திரி வாங்கிக் குடுத்தாரு. நான் போய்த் தூங்குறேன்."

"இங்கதான் படுத்துக்கயேன்."

"வாணாம்."

"த்தே... உக்காரு. போய்க்கினே இருக்கற..."

"வாணாம் வுடு."

"கூப்டுட்டு வாணாம்னா வுட்ருவாங்களா?"

"சரி, இந்தா."—செல்லத்தம்பி அரை நிக்கரில் கை விட்டு ரூபாய் நோட்டுகளைப் பிரித்தான்.



"ச்சீ... துட்டா கேட்டேன் உன்கிட்டே. உள்ளே வா. தங்கிட்டுப் போ."

"வாணாம்."

"அட வான்றேன். பார வண்டி கட்டறதுக்குள்ள நாலாபக்கமும் சாமான்களும். ரோட்டோரமாப் போற றன் கால்ல படும், தள்ளினவனைச் சொல்றதா இஸ்த வனைச் சொல்றதா? நேரம்தான். தெகிரியமா இரு?"

செல்லத்தம்பியின் கைகள் நடுங்கின. முதுகு வியர்த்தது. நெற்றியில் பொடித்தது.

"எங்க வீடு உனக்கு?"

"அச்சரப்பாக்கம்."

"பெத்தவங்க உசிரோடு இருக்காங்களா?"

"அம்மா இருக்குது."

"சொல்லி அனுப்பிச்சிடு."

"அனுப்பணும்"

"சரி வா."

"எனக்கு வாணாம்."

"ஏன் இப்படி பதறது உனக்கு?"

"எங்கம்மா எங்கம்மா—எங்கம்மாவை நெனச்சுத் தான்."-செல்லத்தம்பி மறுபடி சரிந்து உட்கார்ந்தான். விசித்து அழத் துவங்கினான். கௌசல்யா அவன் எதிரே நெருக்கமாய் உட்கார்ந்து அவன் தோளில் கை வைத்துக் கொண்டாள். கொஞ்சம் அழுது ஓயட்டும் என்று காத்திருந்தாள். புடவைத் தலைப்பால் அவன் முதுகு வியர்வையைத் துடைத்தாள்.

"வாணாம் கௌசல்யா." —செல்லத்தம்பி அவள் உபசரணையையே லேசாய் மறுத்தான்.

'சரி நான் ஒண்ணும் செய்யல. நீயும் பயம் காட்டாதே. தெகிரியமா இரு. ராவுத்தர் இருக்கச் சொல்ல என்னா பயம்? தெருக்கோடி முனீஸ்வரனுக்கு ஒருரூபா குடுத்துட்டுப்போ. எந்தக் கஷ்டமும் பாரம் காட்டாத பூடும். இங்கித்திப் போலீஸ் எல்லாம் எனக்குத் தெரியும். போ. உம் மேலே கை வைக்காத நான் பார்த்துக்கறேன்.'

''மத்தியானமே ரிப்போர்ட்டு ஆயிடும். ராவுத்தர் போய்ச் சொல்லிடுவாரு. ஒருதபா ஊருக்குப்போயிட்டு வரக்கூட முடியாது.''

''அம்மா கிழவிக்கிட்டப் போய் என்னா பண்ணப் போறே. அது வவுத்துல அடிச்சிக்கிணு அழுவும். சொல்லாத வுட்ரு.''

''அப்படித்தான் செய்யணும் கௌசல்யா. எனக்கு ஒரு உதவி செய்துடு. மாசத்துக்கு ஒரு தபா வந்து உள்ளார என்னைப்பாரு. உனக்கு ஆனதை நான் கொடுத்துடறேன். என்னாண்டை நூத்தி நாப்பது ரூபா இருக்கு. வச்சுக்க-யாரும் பார்க்க வராட்டி பைத்தியம் புடிச்சிடும் எனக்கு.''

''அதுக்கென்ன இப்போ-நம்ம தெரு ஆளு மாட்டிக்கினா பாக்கறதுதான் வழக்கமாச்சே. உன்னை மட்டும் வுட்டுருவமா.''

ஆனால் மாதம் ஒருமுறை சிறையில் வந்து பார்ப்பது எளிதில்லை. அதற்கு மெனக்கெட வேண்டும். சிறை வாசலில் காலையிலிருந்தே காத்திருக்க வேண்டும். மனைவி என்கிற உறவு சொன்னால்தான் எடுபடும். கௌசல்யா தண்ணித் தொட்டித் தெருவில் நிறைய பேருக்கு மனைவி என்பதாய் மனுப் போட்டுப் பார்த்து வருவாள்.

''துட்டு வாணாம். சின்னப்பையா, நான் வரேன். என்னாண்ட விடு அதை. இதுக்கோசரமா காலங்



காலைல முட்டிக்குனு மோதிக்கினு அழுதே. டமாஸுதான் போ நீ. உள்ளே போனா ராவுத்தரே துட்டுக் குடுத்து அனுப்புவாரு.''

''நான் வரேன்.''—செல்லத்தம்பி எழுந்தான். பாக்கெட்டில் கைவிட்டுப் பத்து ரூபாயை வைத்துக்கொண்டு மீதியைக் கௌசல்யாவிடம் கொடுத்தான். நகர்ந்தவனைக் கௌசல்யா பிடித்திழுத்தாள்.

''உள்ளே வந்துட்டுப் போ.''—கையோடு இழுத்துக் கொண்டு கித்தான் துணிக்குள் நுழைந்தாள். உள்ளே சணல் நெடி அடித்தது. நசுங்கிப் பழுப்பேறிய தலையணை கிடந்தது. கௌசல்யா அவனை மல்லாக்கச் சாய்த்துக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

செல்லத்தம்பி செயலற்று இருந்தான். சற்று நேரம் தன்னை மறந்து விட்டுக் கூடலுக்குத் தயாராகும் கௌசல்யாவை வியப்புடன் கவனித்தான். நெல்லூரில் புத்தூர் சந்திப்பில், தொழுப்பேடு தங்கலில் பார்த்த நிறைய பெண்கள் மனசில் முட்டினார்கள்.

''உனக்கு என்னா வயசாவுது கௌசல்யா?''

''அட்றா சக்கை, வயசு கேக்கத் தோணுதோ? நேத்துதான் சமைஞ்சேன், என்னா இப்பே அதுக்கு?''

''அதில்லை எத்தினி நாளைக்கு இப்படி பொரளப் போறே.''

''என் மம்முத ராசா கம்பி எண்ணிட்டு வெளியே வந்து தாலி கட்ற வரைக்கும்.''

''என்னைக் கட்டிக்கிறியா?''

''பைத்தியமா உனக்கு. கூப்டத்துக்குச் சரின்னுட்டேனே.''

''உன்னாண்ட படுத்துக்கறத்துக்கோசரம் சொல்லலை கௌசல்யா. இந்தத் தெருவுல நானும் பெரிய மனுஷன் ஆவணும், லாரி புடிக்கணும், போர்டு போடணும்.''

"போடலாம், போடலாம்."

மேலே விழுந்தவளைச் செல்லத்தம்பி திடமாய் விலக்கினான். மிரண்டு எழுந்தவளை மார்போடு அணைத்துக் கொண்டான்.

"உன்னாண்டே ஒண்ணு சொல்றேன். இந்தக் தெருவுல போர்டு கட்டத்தான் போறேன். லாரி ஓட்டத்தான் போறேன். போர்டு போட்ட அன்னிக்கு உன்னை மயித்தைப் பிடிச்சு இழுத்து உதட்டோட வைக்கத்தான் போறேன். ஆம்பளை நினைச்சா முடியாத காரியமில்லை. நீ சொன்ன சொல்லு மறக்காத. உள்ளே வந்து பாரு அது போதும்."

எழுந்து திரையை விலக்கி வெளியே நடந்தான். சாக்கடைச் சந்துப் பக்கமாய் நடந்து தெருவுக்கு வந்தான்.

வங்கக் கடலில் கீழ்வானம் வெளுக்கத் துவங்கியது.

கரீம்பாய் வண்டி அடியில் தட்டிப்போட்ட படுக்கையிலிருந்து எழுந்து வந்து வெளிறிய வெளிச்சத்தில் வண்டியின் முன்புறம் தொட்டுப் பார்த்தார். பம்பருக்கு மேலே வளைந்திருந்தது. ஹெட் லைட் ரிம் நசுங்கியிருந்தது. பெயிண்ட் பூச்சு சிதறியிருந்தது. தடவிப் பார்க்க கையில் ரேடியேட்டர் கிரில்லில் ஏதோ தட்டுப்பட அதை எடுத்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்தார். பதறி, எடுத்ததைக் கீழே போட்டார்.

தண்ணித் தொட்டித் தெரு ஓரமாய் நகப்பூச்சுடன் கூடிய சுண்டு விரல் தனியே கிடந்தது.

கரிம்பாய் முகத்தை வேதனையுடன் துடைத்துக் கொண்டார். அருகில் வந்த செல்லத்தம்பியிடம் கீழே விழுந்ததைச் சுட்டிக் காட்டினார். செல்லத்தம்பி குனிந்து பார்த்துவிட்டு அருகே கிடந்த காகிதத்தில் அதைச் சுற்றிக் கொண்டான்.



கௌசல்யா மடியில் சுருட்டிக் கிடந்த ரூபாய்களைப் பிரித்து எண்ணினாள். நூற்று நாற்பத்தேழு இருந்தது. சில நோட்டுகள் பிரிப்பதுகூடச் சிரமமாயிருந்தது.

"சம்பாதிச்சது அத்தனையும் போட்டுப்புட்டான் போலிருக்குது. இருந்துட்டுனாப் போகக்கூடாது. உஸ்ஸுக்குன்னு எழுந்துப் பூட்டான். ஜெயிலுன்னாப் பதறிப் பூடறானுங்கப்பா. நாலு ஊரு நிக்காத சுத்தறவனை, பத்துக்கடைல மாறிமாறித் துண்றவனைப் புட்சிஜெயில்ல போட்டாபேஜாருதான். மாட்னாதானே உள்ளே போவான். மாட்டாத பூட்டா... அடிச்சது யாருன்னு தெரியாத பூட்டா... டேய் சின்னப் பையா, அதுக்குள்ளே என்னண்ட துட்டைப் போட்டுட்டு..."

கௌசல்யா வெளியே தெருவுக்கு வந்தபோது ராவுத்தர் லாரியைச் சுற்றி நிறையப் பேர் நின்றிருந்தார்கள்.

"அரை அவர் வேலை, கரீம்பாய். டிங்கர் வேலைதான், படபடன்னு தட்டி நிமித்திடறேன். அடி வாங்கினதே தெரியாத பூடும். மஞ்சப் பெயிண்ட் புகை புடிச்சா மாதிரி காட்னா போதும். வேலை பார்த்த வண்டின்னு சத்தியம் பண்ணாக்கூட நம்பமாட்டான்."- கண்ணப்பன் சத்தம் போட்டுப் பேசினான்.

"ராவுத்தரை ஒரு வார்த்தை கேட்டுருவம் கண்ணப்பா."

"மசூதி போயிட்டு பத்து மணிக்கு வருவாரு. அது வரைக்கும் அப்படியே நாலு ஆளுங்க பார்க்க நிக்கணுமா? வண்டியை எடு. வாணாம். எடுக்ககூட வாணாம். இங்கியே பிரிச்சுத் தட்டிர்றேன். என்னா சொல்றே?"

கரீம்பாய் தவித்தான். மறைத்துவிடலாமா? அடிபட்டது இல்லை என்று சொல்லிவிடலாமா? ராவுத்தரிடம் மறைக்க வேண்டாம். போலீஸில் மறைத்து விடலாம்.

"சரி கடை தொறக்கறதுக்குள்ள தட்டிரு."

கண்ணப்பன் நெளிந்திருந்த பம்பரில் காலைவைத்து அதன் நுனியை பலம்கொண்ட மட்டும் இழுத்தான். இரும்பு லேசில் நிமிர்வதாய் இல்லை. லாரி டயருக்கு அடியில் கொடுக்கும் கட்டையை இடைவெளியில் கொடுத்து மீண்டும் தூக்கினான். இப்போது இன்னும் இரண்டுபேர் கூட உதவி செய்தார்கள். நெளிவை நேராக்க, முழு பலமும் பிரயோகித்தார்கள். பம்பர் நெளிந்து நிமிர்ந்தது. 'தூக்கு கொஞ்சம்' என்று கண்ணப்பன் குரல் கொடுக்க மேலும் பலம் காட்டினார்கள். பளீரென்று பம்பர் இரண்டாய் உடைந்தது.

"ஐயோ" என்று செல்லத்தம்பி கத்தினான்.

அவனுக்குச் சிறைவாசம் உறுதியாகிவிட்டது.

"லொக்கை வண்டிப்பா"... கண்ணப்பன் ஆத்திரத்துடன் வண்டியை எட்டி உதைத்தான்.

நடேச முதலி மெல்ல நடந்து ராவுத்தர் வீடு நோக்கிப் போனார். அவர் போவதை இரண்டு மூன்று பேர் அர்த்தம் நிறைந்த பார்வையோடு பார்த்தார்கள்.

கௌசல்யா செல்லத்தம்பியை நெருங்கி, "முதலியாரை நிறுத்து, முதலியாரை நிறுத்து" என்று அடிக் குரலில் எச்சரித்தாள்.

செல்லத்தம்பி மாட்டேன் என்று தலையாட்டிவிட்டு நடைபாதையில் குத்துக்காலிட்டு உட்கார்ந்து கொண்டான்.

வெயில் உறைக்க ஆரம்பித்தது.

# 5

வெய்யில் உறைக்கின்றபோது விஸ்வநாதன் பல் தேய்க்க ஆரம்பித்தான். அடிவயிறு கனத்துக்கொண்டு புரண்டது. அவசர அவசரமாய் வாய் கொப்பளித்து விட்டுப் பின் பக்கம் போனான். தூக்கம் இன்னும் கண்ணுக்குள்ளேயே முட்டிக் கொண்டு நின்றது. ஜில்லென்று தலையில் ஜலம் படுகிறவரை இப்படித் தூக்கம் முட்டி முட்டிச் சாய்க்கும்; அப்பா...வயிறு எக்கிச் சுருண்டது நெகிழ்ந்தது.

"எப்பப் பார்த்தாலும் கண்ணுல எப்படித் தூக்கம் நிக்கும், படுத்துண்டா பான்னு தூங்கிப் போயிடணுமா? எனக்குத்தான் அந்தக் கொடுப்பினையே இல்ல. புரண்டு புரண்டு படுத்தாலும் தூக்கம் வரமாட்டேங்கிறது. நேத்து இரண்டு மணி ரயில் போற வரைக்கும் தூக்கமே இல்லை."—தாரிணி எழுப்புகிறபோதெல்லாம் சொல்லுவாள்.

"உழைக்கிறவனுக்குத்தான் தூக்கம் வரும். உனக்கென்ன... நாள் பூரா உட்கார்ந்தபடியே இருக்கே. இது தவிர பகல்ல ஒரு குட்டி தூக்கம் எப்படி. ராத்தூக்கம் வரும்?"

பதில் சொல்லத் தோன்றும், சொல்லமாட்டான்.

"நானா... உழைக்கிறதில்லையா... சொல்வேள் இதுவும் சொல்வேள். இதுக்கு மேலயும் சொல்வேள். அஞ்சு வயசும் மூணு வயசுமா ரெண்டு குழந்தைகளை வீட்டோட வச்சுண்டு ஒருநாள் நில்லுங்களேன். ஒரே ஒருநாள் கவனிச்சுக்கோங்களேன் பார்க்கலாம். மூணு ஆள் வேணும் இதுகளை மேய்க்கறதுக்கு. ஒருத்திக்கு அலம்பி விட்டு நிமிருவேன். இன்னொன்று உடம்புபூரா ஆக்கிண்டு நிக்கும். அலம்பிவிட்டே பாதி பிராணன் போறது."

''அப்போ ஏன் தூக்கம் வரலை''—விஸ்வநாதன் கேட்கவே வேண்டாம். தாரிணியே தொடர்ந்து பேசுவாள். ''அதென்னமோ தெரியலை. தூங்கினா சின்னச் சின்னதாக் கனா வரும். முழிச்சிப்பேன், தூக்கம் போய்விடும். உங்களுக்கு கனாவே வராதா? ஒரு கனாக்கூடச் சொல்றதில்லையே எங்கிட்ட.''

தாரிணி தினம் ஏதாவது கனா சொல்லுவாள். கதை சொல்வதுமாதிரி கனா சொல்லுவாள். நீள நீளமாய் முடிவில்லாத நந்தவனம், கட்டிக்கொள்ளவே முடியாத கூறைப்புடவை, அடையவே முடியாத மலைஉச்சி. சாப்பிடவே முடியாத தோசை என்று கனா சொல்லுவாள்.

விஸ்வநாதனுக்கு ஆச்சரியமாய் இருக்கும். இது அத்தனைக்கும் காரணம் இவள் பகல்பொழுது நீண்டதாய் இருப்பதுதானோ என்று தோன்றும். ''அஞ்சு மணிக்கு வந்து கூட்டிண்டு போறேன்னு சொன்னேள். இரண்டு மணிக்கு எழுந்து பால் காய்ச்சிக் காப்பி குடிச்சு தோசை வாத்துட்டு மூணுமணிக்கு இதுகள் ரெண்டையும் கிளப்பி, தலை பின்னி பவுடர் போட்டு நாலு மணிலேர்ந்து காத்திண்டிருக்கேன். எட்டு மணிக்குச் சாவகாசமா வரேள். என்னத்தைச் சொல்ல. சேன்னு போயிடுத்து.''

வேறு காரியமற்று இவன் வருகை மட்டுமே குறித்து இதற்கெனவே திட்டமிட்டு ஒவ்வொரு மணி நேரத்தையும் ஒவ்வொரு நிமிடத்தையும் முள்மேல் நின்ற வண்ணம் கடந்திருக்கிறாள். இவள் வேறு எப்படிக் கனவு காண முடியும்? முடிவே இல்லாத நந்தவனம், அடையவே முடியாத மலை உச்சி. சாப்பிடவே முடியாத தோசை. விஸ்வநாதனுக்குச் சிரிப்பு வரும். பாவமாயும் இருக்கும். அந்த உள் மன நொடிகளும் அலுப்பு ஊட்டும் நெடிய பொழுதாய்ப் போகின்றன.



தனக்கு வரும் கனவுகளோ தன மனம் போலவே பரபரப்பாய்த் தலைதெறிக்கிற ஓட்டமாய் குதிரை துள்ளலாய்...ஆங்... நேற்று ஒரு கனவு வந்ததே. குதிரைக் கனவு. பழுப்பு நிற—குதிரை பிடரி சிலிர்த் தது. நடுஹாலில் நிற்கிறது. யாரோ அதைச் சுட்டிக் காட்டி இதுதான் நீ என்கிறார்கள். ரொம்பப் பிடித் திருக்கிறது. தான் குதிரையாய் இருப்பது, தானே குதிரை வடிவில் தனக்கு முன் தோன்றுவது எல்லாம் வியப்பாய் பரவசமாய் இருக்கிறது. சடாரென்று குதிரை வீட்டுக்கு வெளியே தாவி தோட்டம் முழுவதும் ஓடி திட்டி வாசல் வழியே புகுந்து ரயில்வே லைனைத் தாண்டி ஓடுகிறது. இல்லை விசு ஓடுகிறான். குதிரை யின் ஓட்டம் சினிமாவில் வருவது மாதிரி புறமுதுகு சிலிர்க்க டாப் ஆங்கிள் ஷாட்டில் தெரிகிறது. சட் டென்று ஏரியல் வ்யூ. எய்டின் லென்ஸ்...பெரிய மைதானத்தில் குதிரை ஓடிக் களைப்புடன் நிற்கிறது. சட்டென்று கட் பண்ணிக் குதிரையின் நுரைபொங்கும் முகம் க்ளோஸப்

''குதிரைகள் கடவுள் ஜாதி—அதைக்
கும்பிடுதல் உலக நீதி.''

—யாருடைய கனத்த குரலோ தெளிவாய்க் கேட்டது.

''புணர்ந்த பின் குதிரைகள்
ஒரு நாளும் தூங்கிய தில்லை
பிடரியைச் சிலிர்க்க ஓடும்
பின்னங்கால் வயிற்றில் மோத
மனிதரில் உயர்ந்தவர்கள்
மறுபடி குதிரையாவார்
மறுபடி குதிரையாகி
மனிதரைக் காண வருவார்.''

குதிரை முகத்துக்கு அருகே யாரோ கவிதை சொன்னார்கள். அடுத்த பகுதி இவனைச் சொல்லு சொல்லு என்றார்கள். குதிரை மிரண்டது. எகிறி எகிறிக்

குதித்தது. சீக்கிரம் சொல்லு. குதிரை நகர்ந்துவிடும். சட்டென்று சொல்லு-மகத்தான வாய்ப்பு என்பதாய் விஸ்வநாதனுக்குப் பட்டது. 'குதிரைகள்' பசுக்களல்ல என்று ஒரு வரி மின்னிற்று.

குதிரைகள் பசுக்கள் போல
வாய்விட்டுக் கதறுவதில்லை
வலியில்லை என்பதல்ல
வலிமையே குதிரை ரூபம்
தொட்டதும் சிலிர்க்கும் குதிரை
சவுக்குக்காகப் பணிந்து போகும்—இது
குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் முதலாம் பாடம்.''

யாரோ சபாஷ் என்றார்கள். நிறைப் பேர் கை தட்டினார்கள். விஸ்வநாதன் வணக்கத்துடன் குனிந்தான். நிமிர்ந்த போது குதிரை இல்லை. கனவு கலைந்து விட்டது.

கனவில் கூட கவிதை எழுதியது ஆச்சரியமாய் இருந்தது. ஒன்று இவனுடைய கவிதை. இன்னொன்று யாரோ சொன்ன கவிதை. கனவில் வேறு யார் வந்து கவிதை எழுத முடியும்? அதுவும் இவனுடைய கனவில் வந்து. அதுவும் இவனுடைய கவிதைதான். இவனுடைய கவிதையையே வேறு யாரோ தன்னுடையது போல் வாசித்திருக்கிறார்கள். இவன் கனவில் வந்த கவிதை இவனுக்குத்தான் சொந்தம்.

''குதிரைகள் கடவுள் ஜாதி—அதைக்
கும்பிடுதல் உலக நீதி''

விஸ்வநாதன் விரைவாய்ப் பக்கெட் ஜலத்தைச் சரித்துக் கொண்டான். மறந்து விடுவதற்குள் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். பாத்ரூமிலிருந்து செடிகள் மிகுந்த ஒற்றையடி வழியே வீடுநோக்கி வந்தான்.



மடமடவென குறித்துக் கொள்ள வேண்டும் என்று பரபரத்தான்.

''ஏன்னா கொஞ்சம் இவளைப் பிடிங்கோ, வெளிக்குப் போயிருக்கா. உடம்பு முழுக்கப் பண்ணிருக்கு''—தாரிணி குழந்தையை நீட்டினாள்.

''கொஞ்சம் நீயே பார்த்துகோயேன். எனக்கு அவசரமா வேலை இருக்கு.''

''ஷேவ் பண்ணிக்கணும். அவ்ளோதானே. ஒரே நிமிஷம் பார்த்துக்கோங்கோ'' —தாரிணி குழந்தையைத் தூக்கிக் கொடுத்துவிட்டு உள்ளே ஓடினாள்.

குழந்தை தலையைச் சரித்து இவனைப் பார்த்தது.

''அட்ரூவ்... பட்டுக்குட்டி...'' —விஸ்வநாதன் குழந்தையைக் கொஞ்சினான். விலக்கியபடியே வைத்திருந்தான்.

குழந்தை சிணுங்கிற்று தூக்கக் கலக்கத்தில் தலை சாய்த்தது. ''இங்க பார், அப்பா பார்'' என்று உலுக்கினான். 'ஹுக் நாக் ஹுக் நாக் ஹுக் நாக்' என்று நாக்கு நுனியால் குதிரை ஓட்டம் காட்டினான். குழந்தை விழித்துப் பார்த்துவிட்டு மறுபடி கண்களை மூடிக் கொண்டது. விஸ்வநாதன் மனசுள் தொடர்ந்து குளம்பொலி கேட்டது.

''குளம்படி ஓசைக் கவிதை
குதிரையின் கனைப்புக் கீதம்
வீசிடும் வாலே கொடிகள்
பொங்கிடும் நுரையே கடல்கள்
பிடரியின் வரைவே வயல்கள்
உருண்டிடும் விழியே சக்தி
குதிரையின் உடம்பே பூமி
சிலிர்த்திடும் துடிப்பே உயிர்ப்பு—இது
குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் இரண்டாம் பாடம்.''

விஸ்வநாதன் குழந்தையை மண்ணில் உட்கார வைத்தான். குழந்தை பேசாமல் உட்கார்ந்து கொண்டது. ''கொஞ்சம் இருடா. சமர்த்தோன்னோ...''—பரபரவென்று நடந்து உள்ளே ஹாலுக்குள் நுழைந்து இடப்பக்க அறைக்குள் போய் மேஜை டிராயரைத் திறந்து நினைவில் வந்த கவிதையை எழுதத் துவங்கினான். குழந்தை வீலென்று கத்துவது கேட்டது. தாரிணி தடதடவென்று வெளியே ஓடினாள்.

''இரண்டு நிமிஷம் சுகுழந்தையை வச்சக முடியலை. என்ன அப்பன். எதுக்கு உங்களுக்குக் குழந்தை, பெண்டாட்டி. குடித்தனம். சின்ன வயசுல பொழுது போகாம கவிதை எழுதுவேள், சரி இன்னுமா? பொறுப்பு வேணாம்? காலங் கார்த்தாலே பேனாவாலே கிறுக்கிண்டு. யார் படிக்கப் போறா இந்த குப்பயை. பொத்துன்னு குழந்தையைப் போட்டுட்டு வந்துட்டேளே. ஒரு பாம்பு தேளு வந்து கடிச்சுதுன்னா. போறும். என் ஆயுசுக்கும் நான் லவ் பண்ணதும் போறும். கல்யாணம் பண்ணிண்டதும் போறும். என் தப்புத்தான். நெஜமாகவே நீங்க சொல்ற மாதிரி நான் உங்களுக்கு லாயக்கே இல்லை. தர்ப்பக்கட்டை சாஸ்திரியையோ பஞ்சாங்கமோ, பாஷாண்டியையோ பண்ணிண்டிருக்கலாம். பொங்கிப்போட்டதை நக்கித் திங்கறவனா இருந்தாதான் பொண்டாட்டி புருஷன் ஒட்டுதல் இருக்கும். நீங்க ஒருவேளை சோறு வீட்ல திங்கறதே அதிகம். எப்படி பிடிப்பு... பாசம் வர—என்னவோ உங்க இஷ்டமாப் போறதும் வர்றதும்... எல்லாரும்தான் ஆபீஸ் போயிண்டிருக்கா நாலு காசு சம்பாதிக்கறா. ஆனா இப்படியா பொத்துன்னு குழந்தையைச் சேத்துல போட்டுட்டுப் பறக்கறா? போய் ஆபீஸ்ல உட்கார்ந்துண்டு எழுதுங்களேன் கதையோ கவிதையோ''—சுளீர் சுளீர் என்று விஸ்வநாதனுடைய குதிரை சவுக்கடிகளை மௌனமாய் வாங்கிக்கொண்டு நின்றது.



விஸ்வநாதன் ஆபீஸில் கவிதை எழுதமுடியாது. கதை எழுத முடியாது. இதுபற்றிப் பேசக்கூட வாய்ப்பிருக்காது. முத்தி அறியாத மூர்க்கரோடு முயல்வேனை என்று பழம் பாட்டுத்தான் மனசுக்குள் பாடமுடியும். மூர்க்கக் கும்பல் அது. காசுக்குப் பறக்கிற கும்பல். குசுகுசுப்பும் சிரிப்பும் எள்ளலும்...சுயமுகமே இல்லாது வெவ்வேறு முகமூடிகளை அணிந்து உலாவரும்கும்பல். குட்மார்னிங் என்று பவ்யமும் பாசமுமாய்ச் சொல்லுகிறதிலிருந்து 'ஸீ யூ டுமாரோ' என்று கைகுலுக்கி விடை கொடுக்கிறவரை அத்தனையும் முகமூடிகள்.

நாளைக்கு யார் வந்தால் என்ன? யார் செத்தால் என்ன?—அவரவர் இருப்பு முக்கியம் என்கிற ஒரு விஷயம்தான் சகல செயல்களிலும் வெளிப்படும்.

விஸ்வநாதனுக்கு குட்மார்னிங் சொல்வதே பிடிப்பதில்லை. நல்ல காலை என்பது என்ன... அனுபவித்தவன்தான் வாழ்த்த முடியும்.

பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்கிறவன்தான் குட்மார்னிங் என்று வாயாரச்சொல்ல முடியும். இருளகன்றது. புட்கள் பேசத் துவங்கின, மலர்கள் மலர ஆரம்பித்தன. பனித்துளி வழியத் துவங்கிற்று என்று பார்த்துப் பார்த்து வியந்தபொழுதுதான் அர்த்தமுள்ளதாகும்.

''கீசுகீசென்று ஆனைச்சாத்தான்
பேசின பேச்சரவம் கேட்டிலையோ
பேய்ப் பெண்ணே.''

ஆனைச்சாத்தானை இங்கே யாரும் பார்த்ததில்லை. அந்தப்பெண் ஆத்திரம் தாங்காமல் பேய்ப் பெண்ணே என்கிறாள். பேய் மாதிரி தூங்குகிறது. பின்னிரவில் தூங்கும் பேய் பின்னிரவில் விழிப்பு வரவேண்டுமாயின் ஆனைச்சாத்தான்; கூவும்போது எழுந்து கொள்ள வேண்டுமாயின் எப்போது தூங்கப்போக

வேண்டும். ஒளியடங்கு முன் சோறு. ஒளியடங்கியதும் தூக்கம். ஏழு மணிக்கு படுத்துக்கொண்டால் மூணு மணிக்கு எழுந்திருக்கலாம். ஆனைச்சாத்தானைக் கேட்கலாம். வீட்டுக்கு வரவே எட்டாகிவிடுகிறது. பிறகு கொஞ்சம் பேச்சு. சோறு, படிப்பு, எழுத்து, பத்தரை பதினொன்றுக்குப் படுத்தால் பொசபொசவென்று விடிந்தபின் விழித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. வாழ்க்கைத் தடமே மாறிவிட்டிருக்கிறது.

இதோ குளித்துவிட்டு ஆபீஸ் போய் குட்மார்னிங் சொல்ல வேண்டும். 'அவசரமா ஒரு வேலை இருக்கு. வெளியே போகவேண்டியிருக்கும் சீக்கிரம் வா'-கட்டளை ,காலையிலேயே டெலிபோன் மூலம் வந்துவிட்டது. ,எங்கே போகவேண்டும், எதற்குப் போக வேண்டும் என்று தெரியவில்லை. போய்என்ன செய்யப் போகிறேன்... அதுவும் தெரியவில்லை. சதா ஒரு பயம்... எதிர்பார்ப்பு, என்ன மேற்கொண்டு என்கிற தடுமாற்றம் இருந்து கொண்டே இருக்கிறது.

''குளிச்சுட்டு வாங்களேன். போக வேண்டாமா ஆபீசுக்கு?''

''போகணும்.''

ஜிலீரென்று ஜலம் தலையைத் தொடுகையில் சகல சிந்தனைகளும் அழிந்தன. துவட்டிக் கொள்கையில் குழந்தையைப் பார்க்கவேண்டும் போலிருந்தது. ஒரு நிமிடம் ஸ்வாமி படத்தின் முன் கண்மூடி நிற்கையில் இந்த என் ஓட்டமும் ஆட்டமும் எனக்குப் பயன் உள்ளதோ இல்லையோ, இந்தக் குடும்பத்திற்குப் பயனுள்ளதாய் மாற்று என்ற வேண்டுதல் வந்தது. பேண்டும் பனியனும் உடுத்திக்கொண்டு டைனிங் டேபிள் முன் உட்காருகையில் தாரிணி நெருக்கமாய் நின்றபடி தட்டில் இட்லிகளைப் போட்டாள்.

''என்ன கோவமா என் மேலே?''

விஸ்வநாதன் திடுக்கிட்டுத் திரும்பினான்.



''இல்லையே'' என்றான்.

''பொய் என் பேர்ல கோவம்தான். கோவத்துல தானே உம்மென்று தட்டெதிர்க்க உட்கார்ந்திருக்கிறது.''

''ஒரு கோபமுமில்லை தாரிணி''

''ஒரு குரல் கூப்டா குழந்தையை வந்து வாங்கிக்க மாட்டேனா?''

''தப்புதான். என்னவோ யோசனை.''

''கதை கவிதை எழுதுங்கோ. வேண்டாம்னா சொன்னேன். கொஞ்சம் ஒட்டுதலா அதுகள்கிட்ட இருக்கணுமோன்னோ! காத்தாலேபோய் ராத்திரி வரேள். ஏங்கிப் போறதுகள். ஆசையாய்ப் பேசட்டுமேன்னுதான் கொடுத்தேன்.''

''குழந்தைங்கிட்ட ஆசையா இல்லேன்னா சொல்றே?''

''சே சே. இன்னும் ஒட்டுதலா இருந்தா நல்லது. நீங்க படற சிரமம் தெரியறது. லோலோன்னு அலையறேள். நான் என்னதான் பார்த்துப் பார்த்துச் செஞ்சாலும் அப்பாமாதிரி வருமா அதுகளுக்கு? பொம்மையும் சாக்லேட்டும் நானே வாங்கிடுவேன். நீங்க கொண்டு வந்தா அது வேற மாதிரிதான்.''

விஸ்வநாதனுக்கு அவளோடு சற்றுப்பேசவேண்டும் போலிருந்தது. குதிரை கவிதை சொல்லலாமா? வேண்டாம். நேரங்கெட்ட நேரத்தில் வேறெதாவது பேசுவோம்.

''ஆர்கண்டினா என்ன?''

''எதுக்குக் கேக்கறேள்?''

''சரிகை போட்டு ஆர்கண்டி உண்டா?''

''உண்டே.''

''உன்கிட்ட இருக்கோ? ஆபீஸ்ல ஒருத்தன் கொண்டு வந்தான். சிலீர்னு சரிகை இழை இழையா நடுவே போறது. உனக்கு வேணுமா?''

''என்ன விலையாம்?''

''விலையை விடு.''

''கொண்டாங்கோ பார்க்கலாம்.''

''என்ன கலர் வேணும்?''

''நாலைஞ்சு கொண்டாந்தா பிடிச்சது எடுத்துக் கலாமே.''

''அது முடியாது. அங்கேயே செலக்ட் பண்ணி அங்கேயே கேஷ். பிடிக்கலேன்னா மாத்திக்கலாம்.''

''ப்ரவுன் இருக்கா?''

''இருக்குன்னு நினைக்கிறேன், உனக்கு ப்ரவுன் நன்னா இருக்கும்.''

''நெஜமாவா?''

இல்லை. அப்பட்டமான பொய். ஏதோ பேசணு மேன்னு தோணித்து, சொன்னேன். விஸ்வநாதன் எதுவும் சொல்லாமல் அவளை உற்றுப் பார்த்தான். அலட்சியமாய் இடப்பக்கத் தலைப்பு தழைய அருகே உட்கார்ந்து கொண்டிருக்கிறவளைப் பார்க்கிறபோது பிடித்துத்தான் இருக்கிறது. பேசுகிறபோது வெளிறிவிடு கிறது. தாரிணி ஒரு கணம் அவனை அணைத்துக் கொண்டாள்.

கிளம்பும்போது குழந்தைகளை வாசலுக்கு கொண்டு வந்தாள். இரண்டும் அப்பாவுக்கு முத்தம் கொடுத்தன. முத்தம் பெற்றன.

''வரட்டுமா!''

''சீக்கிரம் வந்துடுவேளா?''

''தெரியலை. போன் பண்றேன்.''

''மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளம்பினான். நிமிர்ந்து தாரிணியைப் பார்த்தான். கண்ணில் மயக்கம் சூழ தாரிணி நிலைப்படியில் சாய்ந்திருந்தாள். புருஷன்



என்பது சகல நேரத்திலும் பெண்களுக்குப் போதை யானவன்தான். இங்கு பெண் சொத்து என்பது சரி யில்லை. புருஷன்தான் சொத்து, பிரிக்க முடியாத சொத்து. பெருஞ்செல்வம். எந்நேரமும் அவன் அருகே இருப்பதுதான் அழகு, சுகம், சௌகரியம்.

தாரிணி பாவம். இன்று மாலை சீக்கிரம் வந்துவிட வேண்டும்.

விஸ்வநாதன் ஆபீசுக்குள் நுழைந்ததும் நிறையப் பேருக்கு குட்மார்னிங் சொனனான். ஆபீஸர் அறைக் குள் நுழைந்ததும் குட்மார்னிங் சொன்னான். அவன் கம்பெனிக்கு வரவேண்டிய பம்பாய் சரக்கு இன்னும்வர வில்லை. அது வந்தால்தான் உற்பத்தி முடங்காது இருக்கும். புத்தூர் போகிற வழியில் ஒரு வண்டி கவிழ்ந்து கிடக்கிறதாய் லாரி கம்பெனிக்குச் சேதி வந்திருக்கிறது. ஒருவேளை இந்த லாரியாக இருக்க லாம் இல்லாமலும் இருக்கலாம் நிச்சயம். புத்தூர் செக்போஸ்டுக்குக் கால் வந்திருக்கும். ஆள் அனுப்பி விசாரிப்பதாய் லாரி கம்பெனி சொல்லிற்று.

''யூ டு ஒன் திங், டிரைவரோட கார் எடுத்துண்டு போல இதுதான் லாரி நம்பர். லாரிகம்பெனிஆள் ஒருத் தனையும்கூட ஏத்திக்கோ. ட்ரை டு லொகேட் த வெஹிக்கிள். உடனே பாக்டரிக்கு அதை அனுப்ப முயற்சி செய். வண்டியைப் புடிச்சதும் எங்கேர்ந்தாவது போன் பண்ணு. எவ்வளவு காசு வேணுமோ எடுத் துக்கோ. காரியம்முக்கியம். ட்ரை டு லொகேட் த லாரி. சரக்கு வந்தே ஆகணும். என்ன வேணுமானாலும் செய் உடனே செய்.''

விஸ்வநாதன் அடுத்த அரைமணியில் நெல்லூர் சாலையில் விரைந்து கொண்டிருந்தான்.

அடடே தாரிணிக்குப் போன்பண்ணியிருக்கலாமே. மறந்துவிட்டது. கார் நெல்லூர் நெடுஞ்சாலையில்

வயல்களுக்கு நடுவே சீறிப் பறந்தது. நெற்றி மயிர் பறக்க பின் ஸீட்டில்விஸ்வநாதன்ஜீ உட்கார்ந்திருந்தான். மனசுக்குள் கவிதை பொங்கிற்று.

குதிரைகள் பயணம் செய்யா
கூட்டமாய்ப் பறவை போல
இலக்குகள் குதிரைகளில்லை
முன்பின்னாய் அலைதல் தவிர
குதிரையை மடக்கிக் கேளு
போவது எங்கே என்று
புறம் திரும்பி அழகு காட்டும்
கேள்வியே அபத்தம் என்று
இலக்கில்லா மனிதர் பெரியோர்
உள்ளவர் அடைய மாட்டார்—இது
குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் மூன்றாம் பாடம்

# 6

வரதன் வெகு தூரம்போய் விட்டிருந்தான். ராவுத்தர் லாரி அசையாமல் நின்றிருந்தது. இரவின் குளுமை லாரியின் மீது படிந்து பனித் துளிகளாய்ப் பூத்து கோடு கோடாய் வழியத் துவங்கியிருந்தது. முன்பக்கம் நொறுங்கி அடிபட்ட வேகம் ஆக்ஸில் ஷாப்டைத் தாக்கி பின்பக்க ஆக்ஸில் சிதிலம் அடைந்திருந்தது. ரேடியேட்டர் உருத் தெரியாமல் போயிற்று. வண்டியின் முன் சக்கரங்கள் கிணற்றுக்குள்ளும் பின் சக்கரங்கள் சிதிலமான சுவரில் முட்டியபடியும் இருந்தன. மேல் பலகையில் நஸீர் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. பிறை நிலவும் சுடரும் வரைந்திருந்தன. பின் பக்கம் இரண்டு கண்கள் வரைந்து, ''என் கண்களை பார். சிரி'' என்று எழுதியிருந்தது.



விடிந்ததும் நிறையப் பேர் சிரித்தார்கள்.

''தண்ணி குடிக்கப் போயிடுச்சுடா லாரி. இடிச்சுச் சொருகியிருக்கறதைப் பாரேன்.''

''ஓட்னவன் தண்ணி போட்டிருப்பான். உனக்கு மட்டும்தானா தண்ணி, நானும் போட்டுக்கினு வரேன்னு இறங்கிடுச்சு.''

''ஆளு காணமே.''

''கெணத்துல விழுந்துட்டானா?''

''மொதக்காது.''

''உடனயா, மொள்ள மொதக்கும்.''

''அதுவரைக்கும் என்ன செய்ய?''

''ரெட்டியாரு கெணறு தூரு எடுக்கணுமின்னு சொன்னாரு. லாரிக்காரனையே செவுரு கட்டித் தூரு எடுத்துறச் சொல்லலாம்.''

''நல்லா செய்வானே லாரிக்காரன்.''

''செய்யணுமய்யா, செய்யாட்டி லாரி எடுக்க வுட்டுருவமா. கழுத்துல துண்டு போட்டு துட்டு வாங்க மாட்டம். பொதுச் சொத்து நாசம். வுட்ற முடியுமா?''

''எவன் சொத்தோ, மாட்டிக்கினு லோல்படப் போறான்.''

''லாரி வச்சுருக்கான்னா சாதாரண ஆளா. இருக்கப்பட்டவன்தான, குடுத்தா என்ன?''

''அடி வேற பலமா இருக்கு. லாரி தேறுமான்னே தெரியலை.''

''தேறாதா என்ன, ரெண்டாப் பொளந்த வண்டியெல்லாம் பத்தவச்சு ஓட்டறான்.''

''இன்ஷூரன்ஸ் குடுக்குமில்லே.''

''கட்டியிருந்தாக் குடுக்கும்.''

ராவுத்தர் இன்ஷூர் செய்திருந்தார், அது தேர்ட் பார்ட்டி இன்ஷூரன்ஸ். எதிர்வண்டிகள், கால்நடைகள், மனிதர்கள், சிறகற்ற பறவைகள், ஸ்தாவர சங்கம சொத்துக்கள் அடிபட்டு நாசமானால் மட்டுமே ஒட்டுபவர், உதவியாளர் மட்டுமே இதில் பயன்பெற முடியும். வண்டிக்குச் சேதமெனில் கொடுக்கப்படமாட்டாது.

''மேல என்னா லோடு. ஆளு யாரும் தென்படலை.''

''ஏறிப் பாரேன்.''

''கோதுமை போல இருக்குது. மக்கின வாசனை வருதே.''

''உருவிப் போடு பார்ப்போம்.''

''போதுமா.''

''இன்னும் உருவுடா. நம்ம ஊர்க் கெணத்தை நாசம் பண்ணலை. உருவு. நெறைய.''

''த்தே... சின்னப் பொண்ணு. ஊட்டுக்குப் போய் ரெண்டு கூடை கொண்டா.''

உருவினார்கள். யார் யாரோ ஏறி மூட்டைகளை உதைத்து நாசம்பண்ணி உருட்டிவிட்டார்கள். கூடையில், முறத்தில், முந்தானையில், வேஷ்டியில் விரித்துப் பிடித்துக் கொண்டார்கள்.

வெயில் சூடேறுவதற்குள் பின் பக்க மூட்டைகள் திருடு போயின.

லாரி ஆள் பாரம் தாங்காமல் ஆடியது. ஒற்றைக் கல் தடுப்பில் ஒட்டிக் கொண்டு நின்றது.

எந்த தேசத்தில் ஓர் இளம்பெண் பூரண அலங்காரியாய் இரவு நேரம் பயமின்றி, ஆபத்தின்றி நடமாட முடிகிறதா அதுவே சுபிட்சமானதேசம். அதுவே ராமராஜ்யம்.



இந்த தேசத்தில் சுபிட்சம் இல்லை. சகலரும் திருடர்கள், வாய்ப்புக் கிடைக்குமானால் அனைவரும் கொள்ளைக்காரர்கள். பிறன்மனை சுகிப்பவர்கள். பிறர் பொருள் கவர்பவர்கள். 'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே' வேரில் பழுத்த பலா.'' நெஞ்சில் ஈரத்தோடு பாடிய பாடலுக்கு வேறு அர்த்தம் கற்பிப்பவர்கள். ''ஆள் இல்லாத சொத்து. ஆளுக்குப் பாதி எடுத்துக்குவம். கேட்டா எனக்குத் தெரியாதுன்னுடுவம்.''

''கெடந்துச்சு, பொறுக்கினேன். எவன் சொல்றது. கன்னம் வச்சமா, கதவு பேத்தமா? உருவுடா இன்னொரு மூட்டை.''—பின் பாரம் குறைய லாரி மேலும் கிணற்றுக்குள் சரிந்தது.

விஸ்வநாதன் கார் அந்த இடத்தை வேகமாகக் கடந்தது. சட்டென்று விசு திரும்பினான்.

''கபூர் கொஞ்சம் நிறுத்து.''—கார் நூறடி கடந்து நின்றது. வட்டமிட்டு விபத்து நடந்த இடத்துக்கு வந்தது.

ஜனங்கள் சிதறினார்கள். முடிந்து கொண்டார்கள். உதறினார்கள். உயரே ஏறியவன் குதித்துத் தெருவோடு ஓடினான். முன்னமேயே வந்து வாரிக் கொண்டவன் வெறுமே வேடிக்கை பார்ப்பதுபோல் வெகுளியாய் முகம் மாற்றினான்.

விஸ்வநாதன் லாரி நம்பரைப் பார்த்தான். இவன் தேடுகிற வண்டி இல்லை. எவனுடையதோ எவன் சொத்தோ கொள்ளை போகத் துவங்கிவிட்டது பாவம்.

''டிரைவர் எங்கய்யா?'' கூட்டத்தை நோக்கி அதட்டினான்.

''யாரும் தெம்படலீங்க. போலீஸுக்குப் போயிருக்கானோ என்னவோ?''

''முட்டையைப் பிரிச்சது யாரு?''

''ஜனங்கதான். யார் கேக்கறது இவங்களை. எல்லாம் இவங்க ராஜ்யம்.''

''பொறுப்பற்ற பொதுஜனம், தனி மனிதனாய் இருக்கிறபோது உண்டான பொறுப்பு, பயம், பொது ஜனமாய் கூடுகையில் சிதறிவிடுகிறது.''

''ஏங்க உங்களுதா லாரி?''

''என்னா அதுக்கு?''

''ரெட்டியார் கெணறு, சுத்தமா நாசமாயிடுச்சு. ஊருக்கு உபயோகப்பட்ற எடம். நஞ்சை இடம், நஷ்டம் நெறைய.''

''நீ ரெட்டியாரா?''

''இல்லே.''

''பின்னே—போய்யா அன்னாண்ட.''

''த்தே...சின்னப் பொண்ணு, போய் ரெட்டியாரைக் கையோட இட்டா. இடிச்சதையும் இடிச்சுப்புட்டு ரேங்கிக் காட்றானுங்க, லாரி நவுறாது...ஆமா......''

''முதல்ல இந்த எடத்த வுட்டு எவனும் நகரக் கூடாது. முட்டையைத் தொட்டவன் அத்தினிபேரும் நிக்கணும். கபூர், போய் போலீஸைக் கூட்டியா.''

கல்லெறிய ஒதுங்கும் நாய் மாதிரி ஜனக்கூட்டம் ஒதுங்கிற்று. எட்டி நின்று வேடிக்கை பார்த்தது.

லாரியின் பின்புக்கம் பலகையில் அப்துல் ரஹ்மான் ராவுத்தர் டிரான்ஸ்போர்ட், தண்ணித் தொட்டித் தெரு, சென்னை, போன் நம்பர் எழுதப்பட்டிருந்தது.

பெரியபாளையம் ரைஸ் மில்லிலிருந்து போன் செய்தான்.



ராவுத்தர் போனை எடுத்தார்.

தன் பெயரைச் சொன்னான். தன் உத்தியோகம். கம்பெனிப் பெயர் சொன்னான். விபத்து விபரம் தெரிவித்தான். தான் லாரி தேடுகிற விஷயம் சொல்லி, மேற்கொண்டு பயணம் செய்ய வேண்டியிருப்பதாய் தெரிவித்து போலீஸ் புகார் பற்றிக் கேட்டான். போலீஸுக்கு தெரிவித்து காவல் போடும்படி ராவுத்தர் கேட்டுக் கொண்டார். ஆபத்து நேரத்தில உதவிய தன்மைக்கு எல்லையற்ற பரம்பொருளும் பேரருளாளனும் இனியவனுமான ஆண்டவன் நாமத்தை உச்சரித்து நன்றி சொன்னார். விஸ்வநாதன் பெயரையும் போன் நம்பரையும் குறித்துக் கொண்டார் போலீஸ் ஸ்டேஷனில் காவல் சொல்லிய பிறகு மறுபடி கார் கிளம்பிற்று.

விபத்து இடத்தில் காரை மறித்துக்கொண்டார்கள்.

''என்னா நீ பாட்டுக்குப் பூட்டா...கெணத்துச் சொவுருக்கு யார் பதில் சொல்றது?''

''நாம கோதுமை திருடுனமாம், என்னா தெகிரியம் பாத்தியா.''

''திருடனவன் எந்த பேமானியோ? எங்களை வந்து மிரட்டினா வுட்ருவமா?''

விஸ்வநாதனுக்கு மாஸ் சைக்காலஜி அத்துப்படி. அவன் கம்பெனியில் சொல்லிக் கொடுக்கப்பட்ட பால பாடம். எதற்கும் எந்த நேரமும் பதட்டப்படாமல் இருக்கச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குரல் உயர்த்தவும், குழைந்து பேசவும், திசை மாற்றவும் விசேஷமாய்ப் போதிக்கப் பட்டிருக்கிறது. பிரச்னைகளைச் சந்திக்கும் போதும் கூர்மையடையக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விஸ்வநாதன் தீவிரமாய் யோசிப்பது போல உட்கார்ந்திருந்தான். சட்டென்று நிமிர்ந்து, "ஒனக்கு என்னா வேணும்?கோதுமைதானே. எடுத்துக்க போ."

"யார் கேட்டா ஒன் கோதுமை. இடிச்சதுக்கு மொதல்ல பதில் சொல்லுய்யா."

"போலிஸ்ஸுக்குப் போய் எழுதிக் குடு."

"போலிஸ் என்னா பெரிய போலீஸு. துட்டக் குடுத்து மடக்கிடுவ. பஞ்சாயத்துக்கு வா."

"ஒனக்குப் படிக்கத் தெரியுமா?"— விஸ்வநாதன் தன் பெயரிட்ட கார்டை எடுத்தான்.

"தந்திப் பேப்பர் படிப்பேன்."

"படிச்சவன் கிட்டப்போய் இதக் குடு. இங்க வந்து பார்க்கச் சொல்லு."

"பஞ்சாயத்தில் பத்திரம் கையெழுத்துப் போடாத லாரி நவுராது."

"லாரிய நீயே வச்சுக்க. திருடு போன மூட்டைக்கும் பஞ்சாயத்துப் பதில் சொல்லுமில்ல?"

"ரெட்டியாரு வண்ட்டாரு...ரெட்டியாரு வண்ட்டாரு."

வந்தவர் கலங்கிப் போயிருந்தார்.

"என்னாங்க இது. சுத்தமா இடிச்சுட்டிருக்குதே."

"உள்ளே வந்து உட்காருங்க" விஸ்வநாதன் நகர்ந்து இடம் கொடுத்தான். "கெணத்துக்குச் சொந்தக்காரர் வந்தாச்சில்ல. அப்புறம் என்னய்யா கூட்டம், கபூர் வண்டி எடு."

"நகருங்கய்யா ...பஞ்சாயத்துக்குப் போறாங்க போலிருக்குது"

வண்டி சறுக்கென்று கிளம்பியது. வழி விட்டார்கள் ஊர் தாண்டிப் போய் நின்றது.



விஸ்வநாதன், தன் வண்டிச் சொந்தக்காரருக்குப் போன் செய்திருப்பதை, போலீஸ் புகாரைச் சொன்னான். தனக்கும் அந்த லாரிக்கும் சம்பந்தமில்லையென்றான். வண்டியிலிருந்த மூட்டை களவு போகாமல் இருந்தால்தான் ரெட்டியார் பக்கம் நஷ்டஈடு சீக்கிரம் வரும் என்றான்.

ரெட்டியார் முகத்தைத் துடைத்துக் கொண்டு வண்டியை விட்டுக் கீழிறங்கிப் போனார்.

வண்டி மேலே நகர்ந்தது.

"நாம பாட்டுக்குப் போயிருக்கலாம். ஒரு மணி நேரம் வேஸ்ட், ஏன் சார் மாட்டிக்கின?"

"காரணமாகத்தான் கபூர். ஊர் குழந்தையை ஊட்டி வளர்த்தா தன் குழந்தை தானே வளரும்;என்ன சொல்றே."

"நம்ம குழந்தை எங்கேயிருக்குதோ? எப்பப் பார்க்கப் போறமோ?"

"பார்க்காத திரும்பறதில்லை. திரும்பக்கூடாது."

"பார்த்துடலாம் சார். லாரின்னா ரோடு மேலே தானே போகணும். கடலா வானமா... வழிலயே கண்டு புடிச்சிடலாம்."

பயணம் நீண்டதாய் இருந்தது; வெயில் ஏற ஏறக் களைப்பு அதிகரித்தது. செக்போஸ்ட் செக்போஸ்ட்டாய் விசாரிக்க வேண்டியதாயிற்று. எல்லா செக்போஸ்ட்டிலும் புன்சிரிப்பிலும் குட்மார்னிங் சொல்ல வேண்டியிருந்தது. ஏதோ ஒரு ஹோட்டலில் சாப்பிட்டார்கள். மர நிழலில் நின்று வெற்றிலை போட்டார்கள். புத்தூர் செக்போஸ்ட்டில் ஓய்வெடுத்தார்கள்.

"கொஞ்சம் தூங்கறியா சார்."

"வேணாம் கபூர்?"

"கொஞ்சம் படுத்துக்க சார்? வெயிலாடுச்சே"

"எதுக்குப்பா?"

"எனக்குக் கண்ணு சொருகுது சார். ஓட்டறதுக்குப் பயமா இருக்கு."

"அடடே... படுத்துக்குப்பா"

"சார் படுக்கலையா?"

"வேணாம் கபூர். நீ தூங்கு."

"ஒரு மணி நேரம் சார். சாப்ட களைப்பு அப்புறம் ராத்திரி பூரா ஓட்டலாம்."

"தூங்குப்பா."

கபூர் கதவைப் பிரித்துக் கால் நீட்டி முன்பக்க சீட்டில் சரிந்தான், தூங்கிப் போனான்.

விஸ்வநாதனால் தூங்க முடியவில்லை. களைப்பு கண்ணை குத்தியது. ஆனாலும் உறக்கம் வரவில்லை. பின்சீட்டில் கண்கள் மூடி உட்கார்ந்திருந்தான். குதிரை முகம் தெரிந்தது. கொட்டிலில் உள்ளே பின் வலக் காலைச் சற்று தூக்கியபடி அசையாது இருந்த குதிரை தெரிந்தது. வால் மட்டும் விசிறி விசிறி ஆடிற்று.

குதிரைகள் தூங்குவதில்லை—
ஏனைய உயிர்கள் போல

—மனசுக்குள் வரிகள் ஓடின.

விஸ்வநாதன் கண்களைத் திறந்தான். வலப்பக்க வயலை வெறித்துப் பார்த்தான். முன்பக்கம் எட்டிக் கால் நீட்டித் தூங்கும் கபூரைப் பார்த்தான்.

நிலம் பரவி கால்கள் நீட்டி
கன்னத்துப் பக்கம் அழுந்த
குதிரைகள் தூங்குவதில்லை
ஏனைய உயிர்கள் போல
நிற்கையில் கண்கள் மூடி



களைப்பினைப் போக்கும் குதிரை
தொட்டதும் விழித்துக் கொள்ளும்
தொடுதலைப் புரிந்து கொள்ளும்
தூங்குதல் பெரிய பாவம்.
தூங்கவா பிறந்தீர் இங்கு?
வாழ்வதோ சிறிது நாட்கள்
அதில் சாவினை நிகர்த்த தூக்கம்
புரிபவர் பெரியோர் அல்லர்.
வாழ்பவர் தூங்க மாட்டார்.
குதிரைகள் கண்கள் மூடி
குறி விறைத்து நிற்கும் காட்சி
யோகத்தின் உச்சகட்டம்
நெற்றிக்குள் சந்திரபிம்பம்—இது
குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் நான்காம் பாடம்.

அப்துல் ரஹ்மான் ராவுத்தர் விபத்து நடந்த இடத்துக்கு வந்திருக்கக்கூடும். இன்று ராத்திரி அவருக்கும் தூக்கம் இருக்காது. தாரிணி இப்போது தூங்கிக் கொண்டிருப்பாள். இதனாலேயே அவளுக்கு ராத்தூக்கம் வராது. மேலும் இன்று நான் எப்போது வீடு திரும்பப் போகிறேனோ? இதுபோதும் அவள் தூக்கம் குலைய. தாரிணிக்கும் ரைஸ் மில்லிலிருந்து போன் பண்ணியிருக்கலாம். பாவம் தாரிணி. அவளை அதிகம் வதைக்கிறேனோ? தெரியவில்லை. எதிர்பார்ப்பின்றி இரு என்று எப்படிச் சொல்வது? சொல்லி எப்படி அவளுக்குப் புரிய வைப்பது? நானும் ஏதோ எதிர்பார்க்கிறேன். எதை எவரிடமிருந்து என்ன என்று தெரியாமல் தவிக்கிறேன். இது இன்றைய நிலைமை. போதவில்லை என்று மட்டும் தெரிகிறது. இன்னும் ஏதேதோ செய்ய ஆசை இருக்கிறது. என் இருப்பைப் பத்திரப்படுத்திக் கொள்ளுகிற மாதிரி பெரிசு பெரிசாய் ஏதும் செதுக்கி விட்டுப்போக ஏக்கம் வருகிறது.

உயரம் உயரமாய் கல் கோபுரமும், கோவிலும் கட்டி விட்டுப்போன மனிதகுணம், அரசகுணம்? ஃப்யூடல் புத்தி எனக்குள்ளும் இருக்கிறது. கோபுரம் செதுக்கின காரியம் மாதிரிதான் சினிமா எடுப்பதும். இது இன்றைக்குப் பெரிய காரியம். அசுர வேலை, பிரம்மாண்டம் தெளிவும் நாசூக்கும், வர்ண உணர்வும், மொழிவளமும், ரசனை மனமும், காசும் குழுவும், கையாளும் கம்பீரமும், நல்ல நேரமும் வேண்டும்.

காடு சூழ வாழ்ந்த மனிதனுக்குக் கட்டிடம் கலையாயிற்று. கட்டி சாதாரணமாக வாழும் இன்றைய மனிதனுக்குக் கனவு கலையாயிற்று. வாழ்வில் இல்லாத ரம்மியத்தை சொகுசாய் இருப்பதாய்க் கனவு காண வைக்கிறது. நானும் கனவு காண்கிறேனோ? உள்ளே ஆசைகள் தீராது கனவில் தீர்க்கும் காரியம் தான் சினிமா ஆசையோ?

சேலை மூடும் இளஞ்சோலை
மாலை போடும் மலர் மாலை
இருபது நிலவுகள்
நகரமெங்கும் ஒளி விடும்

இந்தப் பாட்டுக்கு ஏன் மனசு இப்படி விடலயாய்த் துள்ளுகிறது. இது காமமா? பெண் சபலமா? இன்று திரைப்படம். அதிகமாக ஈர்ப்பதற்குக் காரணம் செக்ஸ்; மற்ற காரணங்கள், வசதிகள் பிற்பாடுதான்.

பிடரி முழுவதும் நரைத்த திரைப்பட வசனகர்த்தா பேட்டி ஞாபகம் வந்தது. நிஜம்தானோ அது திருமணம் ஆன பின்னும் பெண் அந்தரங்கம் தெரிந்த பின்னும் வருமோ இது.

''குதிரைகள் கண்கள் மூடி
குறி விறைத்து நிற்கும் காட்சி
யோகத்தின் உச்சக் கட்டம்
நெற்றிக்குள் சந்திர பிம்பம்.''



புணர்ச்சிக்குத் துணை இல்லாதபோது குதிரைகள் மனசுக்குள் புணர்வு கொள்ளுமாம். கண்மூடி நிற்குமாம். வெறும் வெளியில் கால் தூக்கிக் கனைக்குமாம். என் மனசும் இப்படியோ? துணை இல்லாத குதிரையோ? கூடல் என்பது பெண்ணோடு மட்டும் தானா? நாலு பேருடன் பேசுவதும், எழுதுவதும், தன் மனசை லட்சம் பேரிடம் வெளியிடுவதும், அவர்கள் அதை அறிந்து கொள்வதும் கூடக் கூடல்தான். நான் தவிப்பது இந்த வெளியிடுதலுக்கா? இந்த அமைதியின்மை, தவிப்பு, அலையல் இது குறித்துத்தானா?

;ச்சே... நான் அதிகம் படித்திருக்கக்கூடாது. இந்தப் படிப்பால் நிம்மதியில்லை. குமாஸ்தாவுக்குப் படிப்பு அப்பா படித்த அதே குமாஸ்தா படிப்பு. கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல், டியர் சார், வித் ரெஃப்ரென்ஸ் டு யுவர் லெட்டர்-இப்படியே முடிந்துவிட்டது. இந்தப் படிப்பில் அற்பமாய் ஒரு நம்பிக்கை பிறக்கிறது. அந்த அற்ப நம்பிக்கையை இறுகப் பிடித்து தொங்க நேரிடுகிறது. இந்த தொங்கலே ஜீவிதமாகிறது.

வாழ்க்கையில் முன்னேற பயம் அவசியம். பயத்திற்குப் பாதுகாப்பாற்ற தன்மை அவசியம். பாதுகாப்பற்ற தன்மைக்குச் சிதிலமான குடும்பம் வேண்டும்.

விஸ்வநாதன் குடும்பம் உறுதியாய் இருந்தது. அவனைச் சுற்றிப் பலவிதமான பாதுகாப்புகள் இருந்தன. அவனை முன்னேற ஒட்டாமல் செய்தன.

# 7

நடேச முதலி மெல்ல ராவுத்தர் வீட்டை நெருங்கினார். தண்ணித் தொட்டித் தெருவின் திருப்பத்திலேயே ராவுத்தர் வீடு இருக்கிறது.

தெரு நடையிலிருந்து குறுகலாய்ச் செங்குத்தான மாடிப்படிகள் போயின. முதல் மாடி, ராவுத்தரிடம் வேலை செய்த முஸ்லீம் இளைஞர்களுக்கான தங்குமிடம். கீழே லாரிக் கம்பெனி. வேறு ஏதோ கம்பெனி. நடேச முதலி படியேறினார். கதவு அடைத்திருந்தது. அழைப்பு மணியை அழுத்தினார். 'சிலாங்சிலாங்—' உள்ளே மணி சிலிர்த்துக் கொண்டது. கம்பிக் கதவு தாண்டி உள்ளே மரக்கதவு சற்று இடைவெளியுடன் திறந்தது. சட்டென்று மூடிக்கொண்டது. யாரோ ராவுத்தர் வீட்டுப் பெண் பிள்ளை போலிருக்கிறது. திறந்த வேகத்தில் மாமிசம் வேகவைக்கும் வாசனை தக்கென்று மூக்கைத் தாக்கிற்று.

மூன்று நிமிடத்துக்குப் பிறகு ராவுத்தர் கதவைத் திறந்தார்.

''என்னங்க முதலியார்?''

''மொதலாளி கொஞ்சம் சுருக்க வரணும். கரீம்பாய் வண்டி வந்திருச்சு.''

''என்ன?''

''நாஷ்டா முடிச்சுட்டீங்களா?''

''இல்லே.''

''முடிச்சுட்டு வாங்க.''

நடேச முதலி கீழே இறங்கினார்.

''முதலியார், பதினெட்டு நாப்பத்தாறு பெரிய பாளையத்தாண்ட கெணறு தட்டிருச்சாம்.''

''வரதனா?''

''ஆங். அவன்கிட்டேயிருந்து சேதி இல்லே. யாரோ வழியோட போற புண்ணியவான் போன் போட்டுச் சொன்னான்.''

''அடி பலமா?''



''நிக்குதுன்னாங்க.''

''ஆளு சேதமுண்டா?''

''தெரியலை. நான் அங்கனப் பயணப்படலாம்னு பார்த்தேன். இஞ்ச தகராறு உண்டா?''

''உண்டு மொதலாளி''

''யா அல்லா.''

''நடேச முதலி வேதனையுடன் முதலாளியைப் பார்த்தார். ஒரே நாளில் இரண்டு வண்டிகளின் விபத்து, ராவுத்தர் கூக்குரலிட்டு அழுகிறவர் இல்லை. அந்த வயது தாண்டியவர். ஆயினும் அடியின் வேதனையை உடனே அவர் முகம் காட்டியது—அந்தக் கடவுள் விளிப்பில் துக்கம் மண்டிற்று.

ராவுத்தர் கதவைப் பிடித்தபடி குனிந்து நின்றார். பின்பக்கம் காலடி ஓசை கேட்டது. கொலுசுகள் சிணுங்கின. உருதுவில் மடமடவென்று யாரோ ஏதோ கேட்டார்கள் ராவுத்தர் பதிலாய்த் தலையாட்டினார்.

''வண்டிக்கு ஏதுமா?''

''ஆமாம் மொதலாளி.''

''என்ன ஆச்சுது?''

''ஆளு அடிச்சுட்டு நிக்காத வந்துட்டாங்க. முன் பக்கம் வண்டில பட்டு சொல்ப சேதம், கண்ணப்பன் பம்பர் நிமித்திடலாம்னு உடைச்சிப்புட்டான்.''

ராவுத்தர் கண்ணில் க்ஷணநேரம் கோபம் மின்னிற்று.

''யாரு தொடச் சொன்னது?''

''கரீம்பாய்.''

''உயிர் போயிடிச்சா?''

''தெரியலை. கைச் சுண்டு விரல் ஒண்ணு வண்டியோட ஒட்டிக்கிட்டு வந்திருக்குது. இப்பத்தான் பார்த்தாங்க.''

"யா அல்லா."

மௌனம், கலக்கம். இருட்டில் தள்ளப்பட்டவன் எழுந்து நிற்கத் தடுமாறுவது போல சிந்தனை. என்ன என்ன ஏன் இது என்கிற தவிப்பு.சகலமும் ராவுத்தரிடம் நடேச முதலி காண முடிந்தது. ராவுத்தர் எண்ணி மூன்று வண்டிக்குச் சொந்தக்காரர். 'அப்துல் ரஹ்மான் டிரான்ஸ்போர்ட் கம்பெனி, சென்னை என்பது இந்த மூன்று வண்டிகள்தான். ஆனால் தனிப்பட்ட பலருடைய வண்டிகளும் அவர் கம்பெனிக்கு வேலை செய்தன. நாள் தவறாது அரிசியும் கோதுமையும் பருப்பு வகையறாக்களும் சென்னை நகரமெங்கும் வியாபாரிகளுக்குக் கொண்டு வந்து தருவதாய் ஒப்புக்கொண்டிருந்தார். இந்த ஒப்புதலுக்கு எழுத்து மூலம் எதுவும் இல்லை. வாய் வார்த்தைதான். சொல் சொன்னக் கட்டுப்பாடுதான். மூட்டை இறங்கினால் காசு, ஏறி நகர்ந்தால் காசு. காசுக்கு ராவுத்தர் போய் நிற்க வேண்டியதில்லை. லாரி தேடி ராவுத்தரிடம் எந்த வியாபாரியும் வந்ததில்லை. பொட்டலம் கட்டிக் காசு வரும். பசு மாதிரி லாரிபோய் நிற்கும்.

இந்த மரியாதைதான் மூலதனம். எவர் சொத்தையோ தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு தன்குழந்தையாய்ப் பாவித்து, உரிய இடத்தில் சேர்ப்பிக்கும் நாணயம்தான் மரியாதை. ராவுத்தர் வண்டி சரக்குக்குப் போனால் சேதம் அதிகம் இருக்காது. நூற்று நாற்பது மூட்டை அரிசி ஏற்றி நூற்று நாற்பதிலும் இரண்டுபடி அரிசி எடுத்துப்பிரித்துத் தைக்கிற பெரும் கொள்ளை நடக்காது.அரிசி மீது சிமெண்ட் மூட்டை ஏற்றி நாறடிக்காது. செக்போஸ்டில் சரியான தாக்கீது இல்லாமல் வெட்டிக்கு மடங்காது. ராவுத்தர் லாரி ரசீதுக்கு செக்போஸ்டில் மரியாதை உண்டு. எல்லாவற்றுக்கும் மேல் பேச்சுத்தன்மை.

லாரி டயர் வெடிச்சிடுச்சா. நானே வெறுப்புல இருக்கேன் உன் வாழத்தாருத்கு குரங்காக் குதிக்கிறியே. வரும், கூவாதே. ஒரு வாரமானாலும் நிச்சயம் வரும்"—குரங்குகூட சீண்ட முடியாத அழுகலாய் சில லாரிக் கம்பெனியில் காய் வரும்.



ராவுத்தர் அப்படி அல்ல. "ஆண்டவனே, வண்டி மடங்கிடிச்சு. நான் ஆளு அனுப்பிட்டேன். இன்னும் நாலு அவர்லே சரக்கு வந்திடும் ஐயா. சரக்கு சேதமாயிடுச்சா. ராவுத்தர் பொறுப்பு மன்னிச்சுக்க ஆண்டவனே."

டெலிபோனை ரொம்ப மிருதுவாய் வைப்பார். ஆண்டவனே என்று சகலரையும் வாய் நிறைய அழைக்கும் ராவுத்தருக்கு இன்று சேதம்? சோதனைக் காலம். இரண்டு வண்டி சிதிலம். ஒன்று குப்புறக்கிடக்கிறது. ஒன்று குதறி விட்டு வந்திருக்கிறது.

ஒரு நாளைக்கு ஆயிரம் சம்பாதிக்கிற இரண்டு வண்டியும் அடி.

லாரிக்காரன் தாங்க முடியாத விஷயம் ஓடுகிற வண்டி மடங்குவது,விபத்தில் சிக்குவது. மரத்தில் முட்டி நசுங்கினால்கூடத் தேவலாம், ஆள் கொன்றவண்டி அசிங்கம். பதிலுக்குச் சவுக்கடி பட்டால் தப்பிப்பது அபூர்வம். அதுவும் நிற்காமல் வந்தது கொலைபாதகம். மாட்டிக் கொண்டால் ஓட்டினவன், உரிமையாளன் சகலரையும் நிற்க வைத்து ஆணி அறைந்து விடுவார்கள்.

ஆனால், ஆள் மீது மோதிக் கொன்றுவிட்டு நின்றவனை ஜனம் குதறிப் போட்டுவிடும். லாரியைக் குப்புறக் கவிழ்த்துத் தீ வைக்கும். இவையெல்லாம் சுலபமாய் நடக்கும்; நடந்திருக்கிறது. நிறையபேருக்கு நடந்திருக்கிறது. மாட்டிக்கொண்டு நின்றவர்க்குத் தெரியும் அந்த வேதனை. சைக்கிளில் கிழவியை முட்டினவனே தர்மஅடி வாங்குகிற காலம் இது லாரி, அதுவும் ஆறு சக்கரங்கள். உறுமும் இன்ஜின். அறுபதடி நீளம் இருபதடி உயரம் உள்ள லாரி இடித்தால்

ரொம்பக் கோபம் வருகிறது ஜனங்களுக்கு. குறுக்கே வந்து விழுந்தாலும் குடித்துவிட்டு நடை தப்பி முட்டிக் கொண்டாலும் தப்பு லாரிக்காரன் மீதுதான். உயரமாய் உட்கார்ந்து ஓட்டுவது உடனே முக்கியமாய்ப் பெரிய அவமதிப்பாய் பட்டுவிடுகிறது. சகலருக்கும் லாரியின் சௌகரியம் மறந்தே போய் விடுகிறது.

''கண்ணு மண்ணு தெரியாத ஓட்டறமுண்டம். கீழே இறங்குடா.''—இறக்கிவிட்டு மிதித்துவிடுவார்கள். பேச முடியாமல் வாய் மேலேயே போடுவார்கள்.

நடேசமுதலி பிரும்மாண்டமாய் யோசித்துக் கொண்டே நின்றார்.

''முதலியார், நான் தொழுகைக்குப் போயிட்டு வரேன். நீங்க சாவி எடுத்துப் போய்க் கதவு தொறங்க. மூட்டை இறங்கட்டும். நம்ம இடத்திலேயே இறங் கட்டும். மாட்டு வண்டிலே போட்டுப் போய் கடைல குடுத் துருவம், கிடங்கு தொறந்து பலகை போடுங்க வரேன்''—நகர்ந்து சாவியை எடுத்துக்கொடுத்தார்.

நடேசமுதலி சாவியுடன் கம்பெனிக்கு வந்தார். நெல்லூர் வண்டியின் கயிற்றை அழுத்தி முடிச்சு நீக்கி செல்லத் தம்பியும் கூலி ஆட்களும் கட்டவிழ்த்தார்கள். படிப்படியாய்க் கித்தானைச் சுருட்டினார்கள். பின்புறக் கொக்கியைச் செல்லத்தம்பி அசைத்து நீக்கிக் கதவைத் தடாலென்று இறக்கினான். ராவுத்தர் கோடவுன் கதவு சரசரவென்று மேலே சுருண்டுகொண்டது. உள் பக்கம் சுவரோரம் வைத்திருந்த பெரிய பலகையை எடுத்துக் கோடவுன் வாசலுக்கும் லாரியின் பின் பக்கத்துக்கும் பாலமாய் போட்டார்கள்.

ராவுத்தர் மெல்ல நடந்து வந்தார். வெள்ளை மல் ஜிப்பாவும் நீல லுங்கியும் மேல் துண்டும் தொப்பியு மாய்ச் சுத்தமாய் இருந்தார். உள்ளே நுழைந்து



கிடங்கின் மூலைகளை நோக்கி கைவழியே காற்று ஊதினார். ஊதுபத்தி கொளுத்திக் கல்லா அருகே நின்று உள்ளங்கைகளைப் பார்த்துப் பிரார்த்தனை சொன்னார். கைகளை விரித்து மேல் கூரையை அண் ணாந்து பார்த்தார்.

ராவுத்தர் மைத்துனன் சுலைமான் க்ளிப் பலகை யில் பேப்பர் பொருத்தி ஒன்று இரண்டு நூற்றி நாற்பது வரை எழுதினான்.

''அத்தா ஆரம்பிக்கட்டுமா? எடைச் சீட்டு சரி பார்த்தாச்சு. நூத்தி நாற்பது மூட்டை.''

ராவுத்தர் தலையசைக்க, சுலைமான் முதலியை நோக்கிக் கையசைத்தான்.

ராவுத்தர் வந்ததும் லாரியைச் சோதிப்பார் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஏமாற்றமாய் இருந்தது. ஆனால் முதலி இதை எதிர்பார்த்தார். பிரச்னை என்று தெரிந்ததும் அதை உடனே ராவுத்தர் அணுக மாட்டார். உள்ளே பிரச்னை பற்றிய கோபமும் படபடப்பும் அடங்க வேண்டும். ஒரு நிதானம் வந்த பிறகே என்ன என்று கேட்பார். லோடு இறக்கும்வரை ராவுத்தர் யாரையும் எதைப் பற்றியும் விசாரிக்கப் போவதில்லை.

முதலி இடுப்பிலிருந்த கொக்கியை எடுத்தார். நான்கு அங்குல நீள மர உருளையில் கனமாய் ஒரு கொக்கி பொருத்தப்பட்டிருந்தது. முதலி வலக்கையில் மர உருளையைக் கொக்கியாய்ப் பிடித்துக்கொண்டார். ஆள்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்கும் நடுவே கொக்கி எட்டிப் பார்த்தது. லாரியின் பின்பக்கப் பலகை தூக்கப் பட்டுச் சங்கிலியால் பிணைத்திருந்த காலி இடத்தில் முதல் மூட்டை தள்ளப்பட்டிருக்கிற அந்த முதல் மூட்டையைப் பலம்கொண்ட மட்டும் முதலி குத்தினார். நடைபாதையில் உட்கார்ந்திருந்தவர்கள் பரபரத்து எழுந்தார்கள். பெண்களும் குழந்தைகளுமாய் லாரி யைச் சூழ்ந்து கொண்டார்கள்.

முதலி குத்தின இடத்தில் ஒரு திருகுத்திருகி ஓட்டை
யைப் பெரிதாக்கினார். வலிவுடன் இழுத்தார். மூட்டை
நாலங்குலம் சரட்டென்று கிழிந்தது. பச்சரிசி உயர்
ரகம் தடாலென்று தரையில் சரிந்தது. ஆறு ஏழு பெண்
கள் முந்தானையை விரித்துப் பிடித்துக்கொண்டார்கள்.
முந்தானைகளை மீறி தரையில் அரிசி சிதறிற்று.
சின்னப் பையன்கள் தகர டப்பாவையும் மேல் துண்டை
யும் ஏந்தினார்கள். பத்து கிலோ அரிசி சுலபமாய்ச்
சரிந்திருக்கும். முதலி சட்டென்று மூட்டையை நிமிர்த்தி
விட்டார். அரிசிச் சரிவு நின்றது. பெண்கள் இன்னும்
அரிசி சிதறுமோ என்று ஆவலுடன் காத்திருந்தார்கள்.

''முதலி, ஒரு குத்துதான். அடுத்து மூட்டை சேத
மாகக்கூடாது''—சுலைமான் கூவினான்.

முதலி பெண்களை விலக்கினார். கிழிந்த மூட்டையை
முதுகில் சாய்த்துக் கிழிசலை மேல்பக்கம் காட்டி தம்
பிடித்துத் தூக்கினார். கோடவுனை நோக்கி நடப்
பலகை மீது நடக்கத் துவங்கினார். சுலைமான் க்ளிப்
பலகையில் ஒன்று என்று எழுதப்பட்ட இலக்கத்தைப்
பென்சிலால் குறுக்கே அடித்தான்.

தொலைவில் டீக்கடையில் நின்றிருந்த கௌசல்யா
வின் கண்களில் முதலி பலகையில் நடக்க ஆரம்பித்தது
தென்பட்டது, ''அடடே அரிசி வுட்டுட்டேன்.' —தடா
லென்று பாதி டீயோடு டம்ளரைப் பெஞ்சில் வைத்து
விட்டு ஓடி வந்தாள்.

'அரிசி தரை தொட்டிருச்சா' என்றபடி முந்தா
னையை விரித்தாள். அதற்குள் பெண்கள் அரிசியைச்
சிறு மூட்டைகளாக்கிப் புடவைக்குள் சிறுமுடிச்சுப்
போட்டிருந்தார்கள்.

பலகையில் ஏறின முதலியை நெருங்கின
கௌசல்யா ''கொஞ்சம் அரிசி வுடு. கொஞ்சம் அரிசி
வுடு'' என்று கெஞ்சினாள்.



முதலியாருக்கு முதுகுச்சுமை தள்ளாட்டம் கண்டது.
கீழ்க் கல் சரியாய்ப் பொருந்தாமல் பலகை ஆடியது.

''போம்மா அன்னாண்டை. குத்தச்சொல்ல எங்க
போயிருந்த?''

''அரிசி வுட்டுட்டுப் போ மொதலி. மாட்டேன்னு
சொல்லாதே. பச்சரிசி ரெண்டு வாரமாத் துண்ணல.
இன்னிக்குத்தான் லோடு பாக்கறம்.''

''த்த, அன்னாண்ட போன்னா இன்னமோ
உக்காந்து அடுப்பு மூட்டி ஆக்கிச் சாப்புடறவளாட்டம்.
ஏழை பாழைக்குத்தான் அரிசி. உனக்கென்ன கேடு
வழிமறிக்காத போ அப்பாலே.''

''வுட்டுட்டுப் போன்னு சொன்னா அல்டிக்கிறியே.
பச்சரிசி துண்ணு நாளாச்சு மொதலி. அரிசி வுடு,''
முதலியின் முழங்கையைப் பிடித்து இழுத்தாள்.

''த்தோ பார் கௌசல்யா, மொத லோடு போச்
சொல்ல வழி மறிக்காதே. லோடு முடிஞ்சதும் வண்டி
அரிசியைப் பெருக்கி எடுத்துக்க.''

''பெருக்கின அரிசி வேணாம். மூட்டேலேர்ந்து
கொஞ்சம் வுடு,''—கிழிசலில் விரல்விட்டுப் பெரிதாக்கி
னாள். சிறிது அரிசி சிந்திற்று.

காலை நிகழ்ச்சிகள் முதலியாரைப் பெரிதும் கலக்கி
யிருந்தன. மனசுக் கலக்கம் உடம்பை வலுவற்றதாக்கி
யிருந்தது. முதுகுச் சுமை அதிகம் அழுந்தி எரிய
வைத்தது. நடை பலகையின் கீழ்க் கல் நகர்வதை
உணர முடிந்தது.

''போன்னா போ. வெரவம் புரியாத வம்பு பண்
ணாதே நவுரு அப்பால''—வலது முழங்கையால்
அவளை இடித்து நகர்த்தினார். முன்னேறி அவளைக்

கடந்து மூட்டையால் அவள் தோளை இடித்தார். அரிசி கிழிசலில் கவனமாய் இருந்த கௌசல்யா கால் தப்பி அந்தச் சின்ன இடிக்கு பொத்தென்று மேலாடை பறக்க நடைபாதையில் விழுந்தாள்.

முதலியை வெறித்து நோக்கினாள். கூலி ஆட்கள் சிரித்தார்கள். அவள் காலருகே நடைபலகை கிடந்தது. கோபத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் கௌசல்யா நடை பலகையை எட்டி உதைத்தாள். பலகை ஆட்டம் காண கீழ்க் கல் நகர முதலி தடுமாறி மூட்டையோடு இடப்பக்கம் விழுந்தார். வலது கை கொக்கி இசகு பிசகாய்ச் சிக்கி பளு தாங்காமல் கையை முறுக்கி இழுத்தது. கொக்கியைத் தளரவிட மூட்டையின் கிழிசல் பக்கம் தரையில் மோதித் தரையெங்கும் அரிசி சிதறியது. சுலைமான் அதிர்ந்தான். கௌசல்யா எழுந்து நின்று அசிங்கமாக இரைந்தாள்.

# 8

அந்த நாளில் முதல் லோடு, முதல் மூட்டை அரிசி உள்ளே வந்து விட்டது என்று ஒன்றாம் நம்பர் இலக்கத்தை அடித்துக் குறித்துக்கொண்ட சரக்கு வாசற்படியில் சிதறி விழுந்து கிடந்தது. கூட இருந்த கூலிக்காரர்கள் ஓவென்ற கூச்சலுடன் புரண்ட பலகையைத் தாவிப்பிடித்துக் கொண்டார்கள்.

முதலியார் வலி தாளாமல் வலக்கையை உதறிக் கொண்டார், நிதானமாய் எழுந்தார். கௌசல்யா நடுத் தெருவில் குழல் பறக்கக் கத்தினாள்.

''டேய் மொதலி, ஒன்ன என் கால்ல போடு மிதிக்கல்ல, எம் பேரு கௌசல்யா இல்ல. ஒன் பொழப்ப நாறடிக்கல நான் பொம்பள இல்ல. காட்டிக் குடுக்கற பேமானி.''



நடை பலகையைச் சரிபார்த்துக் கொண்டிருந்த முதலி திரும்பிக் கௌசல்யாவைப் பார்த்தார். என்ன சொல்கிறாள் என்று யோசித்தார். உதட்டைப் பிதுக்கினார். கீழே கிடந்த மூட்டையில் கொக்கியை மாட்டி இன்னொரு ஆள் துணையுடன் 'தம்' கட்டி முதுகில் ஏற்றிக் கொண்டார். ராவுத்தரை நோக்கி உள்ளே வரட்டா என்பது போல் பார்த்தார்.

ராவுத்தர் எழுந்து முதலியாரைப் பார்த்துவிட்டு, ''ம்ம். போங்க. கடவுள் சித்தம்'' என்றார்.

இன்றைய பொழுது சரியில்லை என்று அவருக்குத் தெரிந்து விட்டது. கடவுள் விருப்பம். இரண்டாவது மூட்டை, மூன்றாவது மூட்டை.... நான்காவது மாறி மாறி ஆட்கள் இறக்க ஆரம்பித்தனர்.

தொலைவிலிருந்து கௌசல்யாவைப் பார்த்துக் கொண்டிருந்த செல்லத்தம்பி அவள் அழுகை அடங்கியதும் மெல்ல நெருங்கினான்.

''நீ செஞ்சது தப்பு. இதெல்லாம் இனிமே வேணாம். வந்தமா கெடங்கு பெருக்கினமான்னு இரு. பேசிப் பேசியே நாசமாக்கிக்கிற.''

''டீ குடிக்காத வந்துட்டேன்.''

''போ, எனக்கும் வாங்கியா.''

''என் கணக்குல வாங்கியாறட்டா.''

செல்லத்தம்பி சிரித்தான். இவளிடம் எங்கேயோ ஒரு சின்னத்தப்பு இருக்கிறது. பரபரவென்று அந்தத் தப்பை உப்புக் காகிதம் போட்டு துடைத்து விட்டால் சரியாகி விடுவாள். என்ன தப்பு என்றுதான் தெரியவில்லை.

நாராயணசுவாமி ஐயருக்கு மாலை போட்டவுடன் மாணவர்கள் பலக்கக் கைதட்டினார்கள். ஆப்பிள் செருகிய பொக்கே கொடுத்தவுடன் மீண்டும் கைதட்டி

னார்கள். ஒரு பெரிய மாணவன் மேடைமீது ஏறி நின்று ''த்ரி சியர்ஸ் டு நாணு சார். ஹிப் ஹிப்'' என்று குரல் கொடுக்க 'ஹுரே' என்று கோஷமிட்டார்கள்.

''போறும் போறும், ரொம்ப ஜாஸ்தி பண்ண வேணாம், போறும்.''—நாணு சார் முணுமுணுத்தபடி கையமர்த்தினார். வெளியே மூன்றுமணி வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. இன்று பள்ளிக்கூடம் இரண்டு மணியோடு சரி. எல்லா வகுப்பு மாணவர்களும் நடுஹாலில் கூடியிருந்தார்கள். நாணு சாருக்கு பிரிவுப சாரம் கொடுக்கக் குழுமியிருந்தனர். தலைக்கு இரண்டு ரூபாய் போட்டு இரண்டாயிரத்துச் சொச்ச ரூபாய் கணக்கு எடுத்து நாணு சாருக்கு என்ன வாங்கலாம் என்று அவரையே கேட்டபோது, ''பணமாகக் கொடுத்துடுங்கோ'' என்று சொன்னார்.

இன்று பிரிவுபசார விழா. இன்றோடு நாணு சார் ரிடையர் ஆகிறார். முப்பது வருட வாத்தியார் உத்தியோகத்துக்கு ஓய்வு. ''இரண்டாயிரத்துச் சொச்சத்துக்கு செக் குடுத்துடட்டுமா'' என்று பவ்யமாக ஹெட் மாஸ்டர் கேட்டபோது, நாணு சார் மறுபடியும், ''பணமாக் குடுத்துடுங்கோ'' என்றுதான் சொன்னார்.

பணம் கொடுத்துவிட்டார்கள். சின்னத்தோல் பையில் போட்டுக் கொடுத்து விட்டார்கள். ஹெட் மாஸ்டர், சக ஆசிரியர் இருவர், பள்ளி மாணவர் தலைவன் எல்லாரும் பாராட்டிப் பேசி முடித்து விட்டார்கள். இப்போது விழாவின் கடைசிக் கட்டம். நாணு சார் நன்றி உரை.

நாணு சார் பேச ஆரம்பித்தார்.

''குழந்தைகளே! இந்தப் பள்ளிகூட ஹால்ல முப்பது வருஷமா நிறையப் பேசியிருக்கேன். இன்னிக்கு ஒண்ணும் புதுசாப் பேசப்போறதில்லே. வழக்கம் போல ஒருசின்னக் கதை. நீங்க எல்லோரும் இந்தப் பள்ளிக்கூடத்தைப் போல ரொம்ப நாள் நன்னா இருக்கணும்னு ஒரு பிரார்த்தனை. இதுதான் சொல்லப்



போறேன். ஆனா ஒரு சின்ன வித்தியாசம். இங்க இது தான் கடைசிப் பேச்சு. இதுக்கப்புறம் இங்கே பேச எனக்கு சான்ஸ் கிடைக்காது. அதனால மனசு நெனச்சதை நேரா வெளிப்படையா சொல்லிடப் போறேன்.

''குழந்தைகள் எல்லாம் சேர்ந்து ஆளுக்குக் கொஞ்சம் காசு போட்டு எனக்குப் பண முடிப்புக் கொடுத்திருக்கா; ரொம்ப நன்றி. இந்தப் பள்ளிக்கூடத்தில் யார் ரிடையரானாலும் இப்படிக் குடுக்கறது வழக்கமாப் போயிடுத்து. நாலணா எட்டணா போட்டு மூட்டையாகக் கட்டி அனுப்பறது வழக்கமாப் போயிடுத்து. ஆனா ரொம்பப்பாவமிது. படிக்கிற குழந்தைகள் கிட்ட காசுகேட்டு வாங்கி வாத்தியார் தன் வீட்டுக்கு எடுத்துண்டு பேசறது மகா கேவலம். இதுக்குப் பதிலா படிக்கிற பையன்கிட்ட பேசாமக் கட்டை விரலைக் குடுன்னு கேட்டுடலாம். சிரிக்க வேண்டாம். எனக்குத் தெரியும். இங்க நெறையப் பசங்களுக்கு ரெண்டு ரூபாயைவிடத் தன் கட்டை விரலைக் குடுக்கிறது ரொம்ப சுலபம்னு தெரியும்.

வாத்தியாரை அவமானப்படுத்த வழக்கமா எல்லோரும் சொல்ற கதை. இந்த கட்டை விரல் கதை துரோணர் ஏகலைவன் கதை. வாத்தியார் மகாமட்டமான பிறவின்னு குத்திக்காட்ட இந்தக் கதையைச் சொல்றது வழக்கம். நேரே நின்னு பாடம் கேக்காதவன் கிட்டயே தட்சணையா கட்டை விரல் கேட்டவர் துரோணர்னு இழிச்சுக் காமிக்கிறது உண்டு.

''கொஞ்சம் யோசனை பண்ணிப் பார்க்கணும். துரோணர் கட்டை விரலைக் கேட்டார். சூழ்நிலை அவரைக் கேக்க வச்சுது. வேறவழியில்லாம துரோணர் கேக்க நேர்ந்தது. சொல்லிக் குடுக்கிறதுல இருக்கிற சந்தோஷம் தட்சணை வாங்கறச்சே நிச்சயமா வராது. எல்லா நல்ல வாத்தியாரும் தட்சணையை மனசு நோகத்தான் வாங்கிப்பான், துரோணர்கிட்ட கட்டை

விரலை வெட்டி ஏகலைவன் குடுத்ததும் பூரிச்சுப் போயிருக்கவா முடியும்? அத வச்சுண்டு என்ன பண்ண முடியும்? நாக்கு வழிக்கவா? சிரிக்க வேண்டாம். நன்னா யோசனை பண்ணிப் பாருங்கோ. இந்த ரெண்டாயிரம் ரூபா காசை வச்சுண்டு நான் என்ன பண்ணுவேன்? முந்தின வருஷம் ஒரு வாத்தியாருக்கு குடுத்தோம். போன வருஷம் ஒரு வாத்தியாருக்கு கொடுத்தோம். இப்ப இந்த வருஷம் நாராயண சாமிக்குக் குடுக்கிறோம்னு ஹெட்மாஸ்டர் சொன்னார். இந்த ரெண்டாயிரம் ரூபா காசை வச்சுண்டு மீதி காலத்துக்கு இந்த நாராயணசுவாமி என்ன பண்ணுவான்? இந்த மன்னார்குடில ஒரு வீடு வாங்கிப் போடுவானா, நிலம் நீச்சு புடிச்சுப் போடுவானா, தங்கமா வாங்கிப் பூட்டிப்பானா, உடுத்திப்பானா, திம்பானா— ஒண்ணுமில்லே. வாசப்படி தாண்டியதும் கடன்காரா அத்தனை பேரும் சூழ்ந்து வளைச்சு எடுத்துண்டு போயிடுவா. எனக்குன்னு ஒரு இருபது ரூபா மிஞ்சினா அதிர்ஷ்டம். அதுவும் எவனோ ஒரு கடன்காரன் வரலைன்னு அர்த்தம். இந்த ரெண்டாயிரம் காசும் வெட்டி வச்ச கட்டை விரல்தான். காக்கா நாய் நரிதான் எடுத்துண்டு போகும். எனக்கு உதவாது. துரோணரை ஏதோ ஒரு சூழ்நிலை கட்டை விரலை ஏத்துக்க வச்சுது. என்னையும் ஒரு சூழ்நிலை இந்த ரெண்டாயிரத்தை வாங்கிக்கச் செய்யறது.

''சாமி, என் கட்டை விரல் உங்களுக்கு எதுக்கு? சாப்பாட்டுக்கு வழியில்லைன்னு தானே பாண்டவர் கிட்டப் போனீங்க, நான் சோறு போடறேன். வரிங்கன்னு துரோணர்கிட்ட அந்த ஏகலைவன் கேட்கப் படாதா? கேக்கலை. கேக்கத் தோணலை. கேட்டிருந்தா துரோணர் சரின்னு சொல்லியிருந்தாலும் சொல்லியிருக்கலாம்.

''வறுமை, வறுமை காரணமாகத்தான் துரோணர் பாண்டவர்களிடம் சேர்ந்தார். ஏகலைவன் கட்டை



விரலை மனம் நொந்து தட்சணையாகவும் கேட்டார். நானும் வறுமை காரணமாகவே இந்த ரெண்டாயிரம் ரூபா காசை வேதனையுடன் ஏற்கிறேன்.

''தொள்ளாயிரத்து அம்பது ரூபா சம்பளம் வேற யாராவது தரட்டும். தூக்கி நடு ஹால்ல இந்த மூட்டையைப் போட்டுட்டுப் போயிடுவேன். குழந்தைகளிடம் ரிடையர் ஆகிற வாத்தியாருக்குக் காசு கலெக்ட் பண்ணி வீட்டுக்கு அனுப்பறதைவிட அடுத்தமாசம் அவன் சம்பாத்தியத்துக்கு ஏதாவது வழி பண்ணினேள்னா ரொம்ப சௌகர்யமா இருக்கும். யாருக்கும் அப்படித் தோணாது. இதுவரைக்கும் அப்படித் தோணினது இல்லை.

''இரண்டு ரூபாயோடு போகட்டும், பீடைன்னுதான் தோணும். வேற வழியில்லை. என்னடா கடைசி நாளன்னிக்குப் போறச்சையும் இப்படிக் கத்திட்டுப் போறானே இந்த நாராயணசுவாமின்னு தோணும். இவன் பிறவி முசுடு. இவனுக்குக் காசு மூட்டை கொடுத்ததே தப்புன்னு தோணும். துஷ்டன்னு படும். இது நான் பேசலை. என் வயிறு பேசறது. இருட்டா இருக்கிற என் எதிர்காலக் கவலை பேசறது. பென்ஷன் வரும். பிசாத்து முந்நூறு ரூபா. என்ன பண்றது அத வச்சுண்டு? தொள்ளாயிரத்தம்பது வந்த இடத்தில் முந்நூறு ரூபா காசு எந்த மூலைக்குக் காணும்.

''சரி, இது என் கஷ்டம். என் வேதனை. இதை ஆத்திக்கிறதுக்குச் சொல்லவில்லை. உங்களுக்கு நெஜம் தெரியணும்னுதான் சொல்றேன் மத்தபடி என் அவலநிலை இங்க யாருக்கும் எவருக்கும் எந்தக்காலமும் வரவேணாம். வரவேகூடாது என்று பிரார்த்தனை செய்து கொண்டு இப்பள்ளிக்கூடம் போல நீங்கள் வெகுநாள் புகழோடு வளமோடு வாழ வாழ்த்துகிறேன். நன்றி, ரொம்ப நன்றி,'' என்று கூறி இரண்டு கைகளையும் விரித்து அடித்து வானம் பார்த்துக் கை கூப்பினார்.

சில பையன்கள் அழுதார்கள். சிலர் உதட்டைக் கடித்து விசும்பினார்கள். சிலர் காலில்விழுந்து கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். நாணு சார் சலனமில்லாமல் நின்றிருந்தார். இனி வேலையில்லை என்ற அடியைத் தாங்கிக் கொள்ளத் தமக்குள்ளே தம்மை ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தார்.

மன்னார்குடி முழுக்க நாணு சார் பேசினதைப் பற்றி விவாதித்தார்கள். காரசாரமாய் கட்சி பிரிந்து சண்டையிட்டார்கள். பாராட்டினார்கள். தூற்றினார்கள்.

''பெரு மதிப்புக்குரிய நாணு சாருக்கு வணக்கம் பல. பள்ளிக்கூடப் பிரிவு உபசார விழாவில் தாங்கள் பேசினதைக் கேள்விப்பட்டேன். வருந்தினேன். தங்கள் ஆசியால் நலமுடன் தற்போது சென்னையில் தனி கம்பெனி வைத்து நடத்திக் கொண்டிருக்கிறேன். நிர்வாகம் செய்ய ஆள் தேவைப்படுகிறது. தாங்கள் சென்னைக்கு வந்தால் என் கம்பெனியில் மேனேஜர் வேலை போட்டுத் தருகிறேன். முதலில் ஐநூறு ரூபாய் என்னால் தரமுடியும். உங்கள் பென்ஷன் பணமும் இந்த ஐநூறும் உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன். தங்களுக்கு விருப்பமிருந்தால் மேற்கண்ட விலாசத்தில் என்னைச் சந்தியுங்கள். வேணும் ஆசீர்வாதம்.

உங்கள் பழைய மாணவன்,
கே. ஆர். வடிவேலன்.''

கே. ஆர். வடிவேல் கடிதத்தைப் பள்ளிக்கூடப் பையனிடம் கொடுத்து வாத்தியாரிடம் சேர்ப்பிக்கச் சொன்னான். இரவு பஸ்ஸில் சென்னைக்குப் போய் விட்டான். அவனுக்கு மன்னையில் கையகல நிலம் இருந்தது. அதை விற்று ரொக்கமாக்கி இடுப்பு பெல்டில் செருகிக்கொண்டு போய்விட்டான். கடைசி சொத்தையும் விற்று மன்னார்குடி பந்தம் முற்றிலும் அறுபட்டுப் போகும் துக்கம் அவனைப் பகல் முழுவதும் வாட்டியது. நாணு சார் பேச்சு பற்றிக் கேள்விப்பட்ட போது இரண்டு பேர் துக்கமும் ஒரே மாதிரி என்பதாய்ப் பட்டது. கடிதம் எழுத வைத்தது.



கூடவே வீடுவரை வருகிறோம் என்கிற பையன்களை நாணு சார் தடுத்துவிட்டார்.

''நான் என்னடா காட்டுக்கா போறேன். கடைசி வரை வரத்துக்கு. இங்கதானே. வந்து போய்ட்டிருப்பேன். பள்ளிக்கூட வாசல்வரைக்கும் வந்தாப்போறும்.''

பள்ளிக்கூடத்தெருவில் தனியே திரும்பி நடந்து வந்தார். மளிகைக்கடை, துணிக்கடை என்று ஏறிக் கணக்குத் தீர்த்தார். முதலாம் தெருவில் காயத்ரி எதிர்ப்பட்டாள். காயத்ரி அவருடைய இரண்டாவது பெண். பி.எஸ்ஸி., கணிதம் முதல் வகுப்பில் தேறிவிட்டு மன்னார்குடி டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். நூறு ரூபாய் சம்பளம் வந்தது. மூத்தவளுக்குப் படிப்பு வரவில்லை, நன்றாய்ச் சமைக்கக் கற்றுக் கொண்டாள். இளையவள் பி.காம்., கடைசி வருஷம். மூன்று பெண்களும் மூன்று ரத்தினங்கள். குடும்பச் சூழ்நிலை புரிந்தவர்கள். வறுமையை எதிர்த்துச் சிரிக்கும் வாளிப்போடு பிறந்தவர்கள். வாரப்பத்திரிகை ஒன்று தவறாமல் படிக்கிறவர்கள். மன்னார்குடி டவுன் புழுக்கத்தில் மேற்கொண்டு மலர முடியாமல் தவிக்கிறவர்கள்.

''என்னப்பா ரொம்ப டல்லா வரே. மனசுக்குக் கஷ்டமாயிடுத்தா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேங்கறேன்.''

''அப்பா கோவிலுக்குப் போலாமா?''

''கடைத்தெரு பக்கமாத்தான் போயிட்டு வரேன்.''

''வாயேன், போலாம்.''

''உனக்கு யார் மேலே கோபம்?''

''கோவமா? ஒண்ணுமில்லே.''

''நடு ஹால்லே சவுக்கு வச்சுண்டு சொடேர் சொடேர்ன்னு சொடுக்கினே, அதுக்குப்பேர் கோப மில்லாம என்ன?''

''கேட்டியா?''

''ஓரமா, ஒங்கண்ணுக்குப் படாம நின்னு கேட்டேன்.'' நாராயணசாமி சிரித்தார்.

''உனக்கு யார் மேலே கோவம்? ரெண்டு ரூபா கொடுத்தவன் பேர்லியா, இரண்டு ரூபா கலெக்ட் பண்ணவன் பேர்லியா, பள்ளிக்கூடத்து மேலயா, கவர்மெண்ட் மேலயா, இல்லை இந்த சோஷியல் ஸெட்டப் மேலயே கோபமா? ரெண்டு ரூபா கொடுத்த பையன் இது புண்ணியம்னு நினைச்சுக் கொடுத்திருப்பான். உனக்காக அத கலெக்ட் பண்ணின வாத்தியார் நாளைக்கு நமக்கும் இதுமாதிரி நடக்கணுமேன்னு செய்திருப்பார். பள்ளிக்கூடம் நீ வேலை செஞ்சதுக்கு மாசம் தவறாம தாவா சொல்லாம காசு குடுத்திருக்கு. கவர்மெண்ட் மேலே கோச்சுக்கிறதும் தப்பு. முந்நூறு ரூபா பென்ஷன் வேலை செய்யாமல் இருக்கிற நாளுக்கும் கவர்மெண்ட் குடுக்கிறது. இந்த சமூக அமைப்பு மேலே கோவம்னா ஒத்துக்கறேன். மூணு பெண்ணுக்குக் கல்யாணம், வரதட்சிணை, சீர்செனத்தின்னு வாத்தியார் வேலைல முடியாதுதான். ஆனா இந்தக் காரியத்துக்குப் பொறுப்பு நீ. நான், நம்ம மாதிரிதனி மனுஷாதான். நாம ஒண்ணாச் சேர்ந்தது தான் சமூகம்''—கோவில் வாசல் தாண்டி பிரதட்சிணம் வந்து வசந்தமண்டபத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்

'மூணு பொண்ணு பெத்துண்டது தப்பு. பெத்துண்ட பிறகு சேர்த்து வைக்காதது தப்பு. ஏகலைவன் சோறு போடறேன்னாப் போயிருப்பாரா துரோணர்? எனக்குத் தோணலை. அவருக்குப் பிராமண வாழ்க்கை தாங்க முடியலை. லக்ஸரி வேணும்னு தோணிடுத்து. தன் பிள்ளைக்குப் பால் பழம் பட்டுன்னு கொண்டு வந்து கொடுக்கும் ஆசை வந்துடுத்து. அதனாலே தான் ராஜா வீட்டுக்குச் சேவகம் பண்ண வந்துட்டார். நீ ஏகலைவன் மாதிரி இருக்கிற ஏழைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் குடுக்கறதுக்கு வந்துட்டு 'ரெண்டாயிரமா குடுக்கற ரெண்டாயிரம்'னு சத்தம் போட்டா எப்படி?''



நாராயணசாமி மறுபடி சிரித்தார். என்னவோ ஒட்டு மொத்தமா எல்லார் மேலயும் ஒரு கோவம். ச்சீ போடான்னு ஒரு வெறுப்பு.

''அப்பா, நீ ரெண்டு விஷயம் உடனடியா செய்யணும்.''

''சொல்லு தாயே.''

காயத்ரி அவர் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

## 9

இரண்டு விஷயங்களைச் சொன்னாள் காயத்ரி.

''உன் பதற்றத்தைக் குறைச்சுக்கணும். அம்பத்தெட்டு வயசுக்கு இது நல்லதில்லை. எனக்குக் கவலையா இருக்குப்பா. அதனால சொல்றேன்...''

''சொல்லு இன்னொரு விஷயம் என்ன?''

''உனக்கு ஒரு லெட்டர் வந்திருக்குப்பா.''

''போஸ்ட்லயா?''

''ஒட்டாத கவர்ல. உன் க்ளாஸ் பையன் கொண்டு வந்து குடுத்தான். யாரோ வடிவேல்னு ஒரு ஓல்ட் ஸ்டூடண்ட் எழுதியிருக்கிறார். உனக்கு மெட்ராஸ்ல வேலை போட்டுத் தராராம். ஐநூறு ரூபா சம்பளம். நீ ஒத்துக்கறது நல்லது.''

''இன்னுமாம்மா வேலை.''

''எனக்காகவோ உனக்காகவோ இல்லை. அக்காவுக்காக. சமைக்க மட்டும்தான் அவளுக்குத் தெரியும். எத்தனை நாளைக்கு வீட்டோட வச்சிருக்க முடியும்? அவளுக்குக் கல்யாணம் பண்ற வரைக்கும் நீ உழைக்கணும்.''

''அப்புறம் நீ இருக்கே, உன் தங்கை இருக்கா.''

''அதுவரைக்கும் நீ வேலை செய்ய வேணாம்.''

''ஏம்மா? எனக்குக் கல்யாணமே வேண்டாம்னு பெரிய பேச்சாப் பேசப் போறயா?''

''நான் அப்படிச் சொல்லலையே. கல்யாணத்துக்கு முன்னாடி வேலை செய்யணும். மெட்ராஸ்ல போய் எனக்கும் ஒரு வேலை பாரு. எனக்கு இப்போ கல்யாண ஆசையில்லேப்பா. நல்ல வேலை. கை நெறைய சம்பளம். வாய்க்குப் புடிச்ச சாப்பாடு, உடுத்திக்கப் பளிச்சுன்னு பத்துப் புடவை...இதுக்கு ஆசை இருக்குப்பா.''

ஒரு வாரம் கழித்து நாணு சார் சின்ன துணிப்பையும் மேல் துண்டுமாய்ப் பகல்நேர பஸ் பிடித்து நாள் முழுக்கப் பிரயாணம் செய்து மெல்ல இருள் கவிழும் அந்திநேரத்தில் வடிவேலுவின் கம்பெனியைத் தேடி அலைந்தார்.

கே.ஆர். வடிவேல் தண்ணித் தொட்டித் தெருவில் இருபதுக்கு இருபது அடியில் ராவுத்தர் வீட்டுக்கு எதிரே உள்ள சின்ன அறையில் தன்னுடைய அன்றைய வேலைகளை முடித்து விட்டுத் தன் முதல் பெக் விஸ்கியை உறிஞ்சி குடித்தான். நாணு சார் உள்ளே நுழைந்த நேரத்தில் உச்சத்தில் இருந்தான்,

''ஐயா வாங்க வாங்க, ஒரு வரி வரேன்னு எனக்கு எழுதப்படாதா'' என்றபடி தடுமாறி எழுந்தவன் மேஜையை இடறி, நாற்காலியை உருட்டி, நாணு சார் காலில் விழுந்தான். விழுந்தவனை எழுப்பி உட்கார வைக்க இரண்டு ஆட்கள் தேவைப்பட்டனர்.



ஊதாவும் ஆரஞ்சுமாய் மாலை வானம் குழம்பிக் கிடந்தது. ;பகல் வானத்தை இவ்வளவு ஆழமாய் ஊடுருவிப் பார்க்க முடியாது. இரவு, வானத்தில் நட்சந்திரங்கள் சிதறி ஊடுருவலைத் தடுத்து எல்லை கொடுத்து விடுகிறது. இந்த அந்திவானம் மகா மயக்கம். கனவு மாதிரி மயக்கம். இருளும் ஒளியும் அற்ற நேரம், பகலும் இரவும் இல்லாத வேளை, காயத்ரிக்கு இந்த நேரம் மிகவும் பிடிக்கும்.

உலகின் இதமான நேரம் இது. ஒரு பகலின் களைப்பு முழுவதையும் இந்த மயக்கம் மிகுந்த வானம் தீர்த்து வைத்துவிடும்.

காயத்ரி வீட்டு வாசலில் உட்கார்ந்து, மேற்கே பார்த்துக் கொண்டிருந்தாள். அரட்டையோ கலகலப்போ சிரிப்போ வேண்டாத நேரம் ஒன்று உண்டென்றால் அது மாலை நேரம்தான். சந்தியா காலம்தான். உள்ளே வெகுதூரம் வரை அமிழ்ந்து தன்னைத் தானே கேள்வி கேட்டுத் தெளிவு கொள்ளும் நேரம் இதுதான்.

ஏதாவது ஸ்வாமி ஸ்லோகம் சொல்லப்படாதா?''-எத்தனையோ முறை அம்மா அலுத்துக்கொண்டிருக்கிறாள்.

இந்த சுகம் எந்த ஸ்லோகத்திலும் வந்ததில்லை. தானும் சப்தமின்றி, பிற சப்தமும் தவிர்த்து ஒரு மௌன நிலை இதமாக இருக்கிறது.

''என்னடி, ஏதாவது கனா காண்றயா?''— அக்கா நெருக்கமாய், கிசுகிசுப்பாய்க் கேட்டிருக்காள்.

இல்லையே என்கிறபோது நம்ப மறுக்கிறாள். கனவென்று எதுவுமில்லை, ஆனால் சில திட்டமிடல் செய்ய வேண்டியிருக்கிறது. சில பாதுகாப்புகள் அவசியமாய் இருக்கின்றன.

திட்டமிடலும் பாதுகாப்புப் பற்றிய பயமும் இல்லாததால்தான் அப்பாவுக்கு இந்த அவஸ்தை நேர்ந்திருக்கிறது. அறுபது வயசுக்கு இந்த அலைச்சல்

விதித்திருக்கிறது. வேதனைதான், பஸ் நம்பரைப் பார்க்கத் தவித்துப் போகும் அப்பாவை நினைக்கிற போது வேதனையாய் இருக்கிறது. அந்த மெட்ராஸ் நெரிசலில் எங்கு தங்கி எங்கு நடந்து எப்படி வாழப் போகிறார் என்று துக்கம் வருகிறது.

ஆணாகப் பிறக்காது போன ஏக்கம் வருகிறது.

வீட்டில் முப்பத்தொரு ரூபாய் நாற்பது பைசா சில்லறைதான் இருக்கிறது. இந்த மாதம் மிச்ச நாள் இதில் தான் ஓடவேண்டும். டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டில் காமர்ஸ் பாடம் சொல்லிக்கொடுப்பதில் நூறு ரூபாய் வரும். அப்பா ஏதாவது அனுப்பினால்தான் சரிப்படும். அனுப்ப முடியுமோ, அவருக்கே போதாமல் அவஸ்தைப்பட வேண்டி வருமோ தெரியவில்லை. ஒரு மாதம் கடன் வாங்கலாம். கெஞ்சிக் கூத்தாடிக் கடன் கேட்கலாம். எத்தனை மாதம் கேட்க முடியும்?

கடன் கேட்க தான்தான் போகவேண்டும். காமர்ஸ் பாடம் சொல்லித் தருவதே மன்னார்குடியில் இளக்காரமாய் இருக்கிறது; கடன் கேட்க வேறு தாவணி போர்த்திக் கொண்டு போனால் இல்லாத பொல்லாத கேள்வி கேட்பார்கள். அப்பாவை ஆயிரம் குறை சொல்லித் தீர்ப்பார்கள். அப்பாவைக் குறை சொல்வதைத் தாங்கவே முடியாது.

அப்பாவுக்குக் சேர்க்கிற சமர்த்தில்லையே தவிர குடும்பத்தை உயர்த்துகிற உரம் குறைவே தவிர அவர் தமிழும் ஆங்கிலமும் அபாரம். அவர் சமஸ்கிருதப் புலமை கேட்போரைப் பரவசப்படுத்தும்.

முந்தாநாள்கூட தஞ்சாவூரிலிருந்து மூன்று இளைஞர்கள் வந்து போனார்கள். வாழைப்பழமும். கவுளி வெற்றிலையும், ஹார்லிக்ஸ் பாட்டிலும். பேனா செட்டும் கொண்டுவந்து பரப்பினார்கள். அப்பாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்களாம்.



ஹோட்டலில் டிபன் முடித்துவிட்டு ரா முழுக்கப் பேசினார்கள்.

பாம்பும் கயிறும் பற்றிக் கேள்வி கேட்டார்கள். அத்வைதம் பற்றிப் பேசினார்கள். காளிதாசனைப் பற்றி, தெரிந்துகொண்டார்கள்.

வீட்டுக்கு அருகே ஒரு குளம். அதில் தாமரை மலர்கள், குளத்தருகே ஒரு மரம். சுத்தமான மேடை. இதமான சுகமான காற்று. வீட்டில் மனைவி உணவு சமைக்கும் நறுமணம். குழந்தைகளின் மெல்லிய கூக்குரல். இப்படிப்பட்ட சூழ்நிலை வேண்டுமாம் கவிஞனுக்கு. அவனால்தான் நல்ல கவிதைகள் எழுத முடியுமாம். இது காளிதாசன் சொன்னதாம்.

அப்பா இதை விதரணையாய் சமஸ்கிருதத்திய தமிழில் சொன்னபோது அவளையும் அறியாமல் 'ஐயோ' என்று கூக்குரலிட்டாள். இளைஞர்கள், திரும்பிப் பார்க்க உள்ளே நகர்ந்து கொண்டாள்.

அடிப்படை வசதி உள்ளவன்தான் ரசனையோடு இருக்க முடியும், குழப்பமின்றி யோசிக்கமுடியும்.

எதிரே அந்திவானம் தெரிகிறது. ஊதா மறைந்து வெறும் ஆரஞ்சு போர்த்திக்கொண்டிருக்கிறது. இது சாயா என்கிற தேவதை உலவும் நேரம் தகடு தகடாய் ஆரஞ்சு மேகம், ஆனால் வீட்டில் முப்பத்தொரு ரூபாய் நாற்பது பைசா நினைவு போகமாட்டேன் என்கிறது. பணம் மிகவும் அவஸ்யம். மிக மிக அவஸ்யம்.

குறைந்தபட்சம் அக்கா கல்யாணமாவது சீக்கிரம் நடந்தாக வேண்டும். ஆனால் உள்ளே முப்பத்தொரு ரூபாய் நாற்பது பைசாதான் இருக்கிறது.

காயத்ரி கண்களை மூடிக்கொண்டாள். உள்ளே ஆரஞ்சு மிதந்தது.

அக்கா கனவு காண்கிறாயா என்று கேட்கிறாள். எதைக் கனவு என்று அவள் அர்த்தபடுத்துகிறாள்.

என்பது தெரிகிறது. வாலிபனை, அரும்புமீசைக்
காரனை. பரபரப்பும் துடிதுடிப்பும் உள்ளவனை
நினைத்துக் கொண்டிருக்கிறதுதான் கனவு என்று
நினைக்கிறாள் போலிருக்கிறது.

'தனக்கென்னவோ இவர்களை விடலைகள்,
பையன்கள் என்றுதான் நினைக்க முடிகிறதே தவிர
இவர்களோடு பேச முடியும். சிரிக்க முடியும் என்றே
தோன்றவில்லை. பேசவே முடியாத ஆளைக் கனவில்
கூட்டிப் போய் என்ன செய்வது? தெருவில் நடக்கை
யில் பரக்கப் பரக்கப் பார்க்கும் பையனை எப்படி
நேசிப்பது? தன்னால் யாரை நேசிக்க முடியும்? அப்பா
மாதிரி இருக்கிறவனை அப்பாவின் அறிவோடு மிளிர்
கிறவனை நேசிக்கலாம். நேசிப்பு என்பது வயசைப்
பொறுத்ததா? வயசையா நேசிக்க முடியும்? வயதின்
பின்புலமான அனுபவத்தைத் தானே. ஹா என்று
பெண்ணை வெறுக்கிறவனை அசிங்கப்படுத்தத்தான்
தோன்றுகிறது.

அந்தத் தஞ்சாவூர் இளைஞர்கள் மூன்று பேரும்
திருமணமானவர்கள். வீட்டில் மூன்று பெண்கள் இருப்
பதை லட்சியம் செய்யாமல் அப்பாவோடு உட்கார்ந்
திருந்தார்கள். இவள் காளிதாசன் பாட்டுக்கு ஐயோ
என்றதும் திரும்பிப் பார்த்துவிட்டு மறுபடி பேச்சில்
இறங்கிவிட்டார்கள். அவர்களைப் பிடித்திருந்தது. ஒரு
நாள் பாடம் கேட்டதற்கு நூறு ரூபாய் கவரில்போட்டுக்
கொடுத்ததும் ஆச்சரியமாக இருந்தது. அப்பா காசு
வேண்டாம் என்று சொல்லி விட்டார்.

''பழம் வெத்திலை மரியாதை. ஹார்லிக்ஸ் பாட்டில்
கிழவன்னு சொல்லிக் கொடுக்கிற அன்பு. பேனா செட்
உபயோகப்படும். ஞாபகார்த்தம். காசு எதுக்குப்பா?
வேண்டாம். நீ மறுபடி வந்தாக்கா சரி நூறு ரூபா வரு
மானம்னு ரூபாலேயே புத்தி நிற்கும். பேச்சு சுவாரஸ்
யப்படாது. காசுக்குக் கத்துவேன் வாத்தியார் மாதிரி.



நெஞ்சிலேர்ந்து விஷயம் வராது. காசு வேண்டாம்.
முடிஞ்சபோது வாங்கோ பேசலாம். நிறைய இலக்கியம்
பேசலாம்'' அப்பா திடமாய் மறுத்து அனுப்பினார்.
சட்டென்று அவர் மனசைப் புரிந்து கொண்டு நகர்ந்
தார்கள்.

அப்பாவை, அந்த இளைஞர்களை ரொம்பப்
பிடித்து போயிற்று. அலட்சியம் செய்கிறவர்களைத்
தான் லட்சியம் பண்ண முடிகிறது சிரித்து ஒழுகி அசடு
வழியாதவர்களைத்தான் ஸ்நேகம் கொள்ள முடிகிறது.
இதை அக்காவோடு பேசினபோது பைத்தியம் மாதிரி
பாட்டுப் பாடினாள்.

''மாறும் கன்னி மனம் மாறும்
கண்ணன் முகம் தேடும்.''

—சினிமா தோழி மாதிரி தோளில் கை போட்டுக்
கொண்டாள். உதடு சுழித்தாள். காயத்திரிக்கு அடி
எழவே என்றுதான் கூக்குரல் வந்தது. சகலத்துக்கும்
சினிமாவா? ஆனந்தம். அழுகை, ஆத்திரம் அத்தனை
யும் சினிமாப் பாட்டு மட்டும்தானா வெளியிடும்? அக்கா
இந்த மாதிரி நிறையச் செய்கிறாள்.

''என்னுயிர் தோழி கேளொரு சேதி
இதுதானோ உங்கள் மன்னவன் நீதி.''

—கண்ணாடிக்குள் வெட்கப்பட்டு நெளிந்து முகத்தை
கையால் பொத்திக்கொண்டு பிறகு மெல்ல மெல்ல
விரித்து உதட்டைக் கடித்து கண்களைப் படபடவென்று
கொட்டி கொண்டு துவளுகிறவளைப் பார்க்க ஹா
என்று வேதனை பொங்கும். வீட்டில் மரப்பாச்சி
பொம்மைகூட இல்லை. மன்னவனுக்கு எங்கே போக?

ஆனால் எந்தப் பாட்டும் தன்னை உசுப்பாது போய்
விட்டது. பாட்டைவிட மொழி சொல் உயர்த்தி என்று
பட்டுவிட்டது. சினிமாப் பாட்டோ சங்கீதமோ நாட்டு
பாடலோ அசைக்கவே இல்லை.

''உனக்கு சங்கீதம் தெரியுமாப்பா?''

''தெரியும்''

''அது ரொம்ப உசத்தியா.''

''நிச்சயம் உசத்திதான். என்னகேள்விம்மா இது?''

''எல்லாரும் சொல்றதை சொல்றயா. இல்லை நீயே தெரிஞ்சுதான் சொல்றயா?''

''மனசுக்கு இதமா இருக்கிறது தெரியறதே.''

''இதமான்னா?''

''சகல கவலைகளையும் மறந்து, அதுலேயே லயிச்சுப் போய்ப் பாட்டு முடிஞ்சப்புறம் லயிப்பு நெஞ்சிலேயே தொடர்ந்து...''

''ஹாங் ஓவர்ன்னு இங்கிலீஷ்லே சொல்வாளே அது மாதிரி.''

''ச்சேச்சே ஹாங் ஓவர்—குடி சமாச்சாரம்னா?''

''சங்கீதம்கூட போதை தாம்பா. மது சாப்டற மாதிரி தானே.''

''உன் பிரச்னை என்ன காயத்ரி?''

''சங்கீதம் பெரிய விஷயமில்லைன்னு...''

''ச்ச்சு...உனக்குத் தெரியுமா சங்கீதம்.''

''ம்ஹூம்... தெரியாது.''

''அப்புறம் அபிப்பிராயம் எப்படி வரும்? யாரோ சொன்னதை வச்சுண்டா?''

''இல்லாப்பா பாட்டு தொந்தரவாய்ப் படறது. நாலு நிமிஷத்துக்கு மேலே கேட்க முடியலை.''

''எது இதம் உன் வரையில்?''

''கவிதை, பொயட்ரி. அடுக்கடுக்கான சொல்; சொல்லிலிருந்து வரும் செய்தி.''



''பாட்டும் மொழியோடு கலந்துதானே அம்மா வருது?''

''ஒரு எக்ஸாம்பிள் சொல்றேன் கேள் அப்பா!''

''சாரம் உதைத்துச் சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்''

இதைச் சொல்லிப்பார், என்ன வேகம் எவ்வளவு திடம். உதைத்துச் சரமழை போல்னு சொல்றபோது மனசுல வர படம் பளீர்னு சரமாரியா இறங்குகிற மழை! கோடு கோடா மழை. இதை எப்படிப் பாட்டுல ராகத்தில் அடக்க முடியும்? இது பாடறப்ப செத்துப் போயிடலையா?''

''தேவாரம், திருவாசகம்,பாசுரம் எல்லாமே பாடல்கள் தாம்மா.''

''எனக்கு சந்தேகமா இருக்கு. ராகம் மையமா வச்சா இதை எழுதியிருக்க முடியும்? முதலில் உணர்வு, உணர்விலிருந்து செய்தி. செய்தியை வரிசைப்படுத்தக் கவிதை. அப்புறம் நடுவுல யாரோ பாட்டா இழுத்துட்டா. செய்தி உணர்வு எல்லாம் மங்கிப்போச்சு.''

''புதுசா இருக்கும்மா உன் விவாதம்.''

''தப்பா இருக்காப்பா?''

''இவளுக்குப் பாட வராது. ஆம்பளை தொண்டை. கரகரன்னு. அதுதான் யார் பாடினாலும் எரிச்சல் வருது!''—அக்கா குறுக்கே புகுந்தாள்.

''ச்சு. நீ குறுக்கே பேசாதே.''

''காயத்ரி, உனக்கு தியாகையர் கீர்த்தனை சொல்றேன், வேண்டாம். பாஷை புரியலேம்பே. பாரதி கவிதை சொல்றேன்.''

''நம்மை பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார்—அதை
வெட்டி விட்டோம் என்று கும்மியடி''

அப்பா கைதட்டிப் பாடிக் காட்டினார். ''எவ்வளவு கடின பதங்கள் எவ்வளவு வேகம். இது கும்மிப் பாட்டும்மா, பாட்டு பாடல், என்ன குறைஞ்சு போச்சு?''

''பாடமா இதைச் சொல்லிப் பாருப்பா. வேகம். சொற்பொழிவு வேகம், தீர்மானம் வரலையா? மனசுக்குள்ளேயே பாடம் படிச்சுப் பாரு. இந்த விஷயத்தில் கோபம் வர்றதில்லையா பாடினா?''

''முரட்டுத்தனமாப் பேசற காயத்ரி.''

''நோ நெவர். சங்கீதம் ஒரு தவறான விஷயம்பா. சொல்லும் அதன் பொருளும் பிரியாது இருப்பதைப் போல என்றும் பிரியாத உலகத்துக்குத்தாயும் தந்தையுமாய் இருக்கிற பார்வதி பரமேச்வரர்கள் என சொல்லும் அதன் பொருளும் பிரியாதிருக்கும்படி அருளட்டும் காளிதாஸன் பத்தி எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கே. பாடினா சொல் பொருள் பிரியலையா? பாடறது பாவமில்லையா? பொருளை விட ராகம்—முக்கியமாகலாமா?''

''காயத்ரி!''

''சரிப்பா, இது சந்தேகம்தான், தீர்மானமில்லை.''

''உனக்குப் புரியாத விஷயத்தை ஏன் போட்டுக் குடையறே! பெரியவா நல்லது சொல்லியிருக்கா. கேட்டுக்கோ''னு அம்மா முணுமுணுத்தாள்.

''முடியாது. தெரியாமக் கேட்க முடியாது கேட்டுக்கறதுக்கு அர்த்தம், தெரிஞ்சுக்கறதுதான்.''

நாராயணஸ்வாமி மகளைத் தடவிக் கொடுத்தார். உனக்கு இந்த ஹிம்சை வந்துடுத்தா, இனி கஷ்டம்''



''ஏம்பா?''

''கேள்வி கேட்டுக்க ஆரம்பிச்சுட்டே. இனி ஒத்துப் போக முடியாது. தூக்கம் வராது லோ லோன்னு புத்தி பறக்க ஆரம்பிக்கும். சகலமும் தப்புன்னு படும். வெரிகுட் படுபடு. அனுபவம் நிறையச் சொல்லித்தரும். நான் சொல்றதைவிட உனக்கு உன் அனுபவம் தெளிவு கொடுக்கும்.''

'இது தக்கென்று மனசில் பிடித்துக் கொண்டது. மன்னார்குடி உலகம் சிறியது, குறுகியது. சந்தேகம் இல்லாத ஜனங்களை உடையது. தீர்மானங்கள் கொண்டது. சீக்கிரம் மன்னார்குடி விட்டு நகரவேண்டும். வேறு கண் வேறு மனிதர்கள் சந்திக்க வேண்டும். போதும் போதும் என்கிற வரை' தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்பா இப்போது மெட்ராஸில் என்ன செய்து கொண்டிருப்பார்? கே. ஆர். வடிவேலை பார்த்திருப்பாரா? பேசி வேலை ஏற்றுக் கொண்டிருப்பாரா? சாப்பிட்டிருப்பாரா? தலை சாய்க்க இடம் கிடைத்திருக்குமா? காசு போதுமா? அப்பா, என் செல்ல அப்பா, சீக்கிரம் என்னை வரச் சொல்லி எழுதேன். எனக்கு ஒருவேலை பாரேன். இரண்டு பேரும் வேலைக்குப் போய் வீட்டுக்கு வந்து சமைத்துச் சாப்பிட்டுப் பேசுவோம். நிறைய பேசுவோம். எனக்கு சொல்லிக்கொடு என் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லு. உன் அறிவெல்லாம் எனக்கு வழங்கு. உனக்கு நான் பணத்தின் மதிப்பைச் சொல்லித் தருகிறேன்.

காயத்ரி கண்களை மூடிக்கொண்டாள்.

''என்னடி ஏதாவது கனவா? யார் இப்ப கனவுல? ரஜனியா? கமலா?''—அக்கா அருகே உட்கார்ந்து கொண்டாள்.

''ம்ம்... காளிதாசன்.''

''யாரு... காளிதாஸனா?''

''ஆமாம். அவனும் ஆம்பளைதான்.''

''பார்த்திருக்கியா, முடியாதே.''

''கேள்விப்பட்டிருக்கேன், அது போறாதா?''

மறுபடி கண்களை மூடினாள். ஒரு குளக்கரைப் படியில் உட்கார்ந்து உத்தரீயமும், குண்டலமுமாய் யாரோ எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மெல்ல வீசும் காற்று, இதமான வெயில்.

''வாகர்த்தாவிய ஸம்ப்ருக்தெள
வாசகர்த்தப்ரதி பத்தயே''

நிதானமாய் நிறுத்திச் சொல்கிறார்கள்.

''சினிமாக்காரன்னா ச்சீங்கற! உனக்குள்ளவும் ஒரு பொயட் இருக்கான். காளிதாசன் இல்ல... அது மாதிரி யாரோ. இன்னிக்கு காளிதாசன் இருந்தா சினிமாவுக்கு பாட்டு எழுதமாட்டானா?''

''மாட்டான்.''

''சினிமா ஆசையே இருக்காதா?''

''இருக்காது.''

## 10

விஸ்வநாதன் தன் டைரியில் ஆறாவது பாடம் என்று தலைப்பிட்டு அடுத்த கவிதையை எழுதத் துவங்கினான்.

ஆனால் எவ்வளவு நேரம் வெட்ட வெளியைப் பார்த்துக் கொண்டு மனசுக்குள் கவிதை நெய்ய முடியும்? ஊமை வெயிலாக இருந்தும் 'ஊர் முழுக்க ஒரு காந்தல் பரவியிருக்கிறது. மரம் ஆடாத, இலை அசங்காத, காற்றும் தூங்கி போன பகல் பொழுது ஹிம்சையாய் இருக்கிறது. கபூர் சின்ன அசைவுகூட இல்லாமல் தூங்குகிறான்.



யார் கூடவாவது பேசவேண்டும்போல இருக்கிறது; மெல்ல நூறு அடி தூரம் நடந்து செக்போஸ்ட் ஆட்களோடு பேசலாம். ஆனால் அவர்களுக்கு இவனோடு வெறுமே பேசுவதைவிட சுவாரஸ்யமான காரியங்கள் இருந்தன. லாரி நம்பரைக் கண்டதும் ஓட்டுபவன் பேரைச் சொல்லும் அளவுக்கு ஸ்நேகிதம் இருந்தது. தான் பேசாது போனாலும் பேசுவதைக் கேட்கலாமே என்று தோன்றிற்று.

''என்னடா தம்பிராஜு இன்வாய்ஸ் வெச்சிருக்கியா?''

தம்பி ராஜீவாகப்பட்டவன் கத்தைச்சுருள் பேப்பர்களை மேஜையில் வைத்துவிட்டு உஸ்ஸென்று உட்கார்ந்தான்.

''அடடே சார், தம்பிராஜு இந்தத்தடவை இன் வாய்ஸ் கொணாந்திருக்கான்.''

''எங்க பொறுக்கியாந்தான், கேளு,''

''சதாய்க்காத சார். சீலு போடு,'' -தம்பிராஜு முகத்தை மும்முரமாய் வைத்துக்கொண்டான்.

''சீலு எங்கடா போடணும்?''

''எங்கணாப் போடு.''

சொத்தென்று இங்க் பேடில் தோய்த்து ஒரு முத்திரை தம்பிராஜு கன்னத்தில் குத்தினார்கள். ''ரைட் குத்தியாச்சு. நீ போகலாம்.''

''நெசமாத்தானா?'' தம்பிராஜு விழி விரியக் கேட்டான்.

ஓவென்று எல்லோரும் சிரித்தார்கள்.

''ஒன்னை நம்பி ஒருத்தன் வண்டி குடுத்திருக்கானே, அவனைச் சொல்லணும்.''

''ஏன் எனக்கென்ன கேடு?''

மறுபடி ஓவென்று சிரித்தார்கள்.

''ஆந்திரால குப்பை வண்டி ஓட்டிக்கிட்டிருந்தான் சார். திடும்னு ஹைரோடுலாரி ஓட்ட ஆசை வந்திடுச்சு. எவங்கிட்டயோ பொய் புளுகி லாரி ஏறிட்டான். அரை லோடு கால் லோடா வண்டி மொத்தமும் சாமான். இளநி, அரிசி மூட்டை, எண்ணெய் டின். அங்கங்க பேரம் பேசி ஓவர் லோடு வேற. இங்க வந்து மாட்டிக்கினாரு. பேப்பரை எட்றானா, தினத்தந்தி பேப்பரை எடுத்து நீட்றானே பார்ப்பம். என்னடா நாலு வருஷம் இருக்குமா இது நடந்து?''

செக்போஸ்டில் உள்ளவன் தானாய் விஸ்வநாதனிடம் பேசினான். தம்பிராஜு அந்தப் பேச்சைக் கேட்டு வெட்கப்படுவதா பெருமைபடுவதா என்று தெரியாமல் உட்கார்ந்திருந்தான்.

''ரெண்டுநாள் மடக்கிப்போட்டுட்டம். அழுகையான அழுகை, ஒரே புலம்பல். ச்சே போன்னு வுட்டுட்டம். அடுத்த தடவை கைகொள்ளாத ரசீது. லாண்டரி பில். ஓட்டல்பில் எல்லாம் போட்டு தச்சுருக்குது. என்னடான்னு கேட்டா மறுநாள் போட்டுக்க சட்டை வேட்டி பொட்டில இருக்குதாம். செக்போஸ்ட்ல பில் கேட்டா? எடுத்தாந்துட்டான். ஓட்டல் பில் எதுக்குடான்னோம். எதுன்னா கொறைஞ்சா இத வச்சு சமாளிச்சுக்கலாம்னு நினைச்சானாம். சிரிச் சுச்சிரிச்சு வயிறு கிழிஞ்சு போச்சு சார். எப்படா தம்பிராஜு வருவான்னு காத்துக்கிட்டுக் கிடப்பம். வந்தா ரெண்டு மணிநேரம் மடக்கிடுவோம். செமத்தியாப் பொழுது போவும்.''

''இன்னொரு கதை தெரியுமா?''—வேறொருவன் முன் வந்து பேசினான். ''தம்பிராஜு பெண்டாட்டி மெட்ராஸ்பார்க்கணும்னு சொல்லிச்சாம். கூட்டிக்கின்னு போறதா வேணாமான்னு ஒரே யோசனை. பெண்டாட்டியை லாரிலே கூட்டிக்கினு போனா பில் இருக்குதான்னு செக்போஸ்ட்காரன் கேட்டா?''—மறுபடி வெடிச்சிரிப்பு.



''அதெல்லாமில்ல. இனிமே தகிரியம் வந்திருச்சு. நீதான் தம்பிராஜு கன்னத்தில் முத்திரை குத்திட்டியே. செக்போஸ்ட்ல மொள்ளத்தான் குத்துவான். போலாம்னு தீர்மானம் பண்ணிட்டான், என்ன தம்பிராஜு சரி தானே?'' கூரை அதிர்ந்தது. விஸ்வநாதன் முகத்தைத் திருப்பிக் கொண்டு மெல்லச் சிரித்தான்.

''யார் யாரோ லாரி ஓட்ட வந்துடறாங்க சார். தூக்கம் முழிச்சாப் போறும். வலுவு இருந்தாப் போறும். நல்ல துட்டு இதுலேனு நெனச்சு வந்துடறாங்க. எதுக்கு செக் போஸ்ட், என்ன கேப்பான், எது காட்டணும்னு தெரிஞ்ச டிரைவர் நூத்துக்கு நாப்பது பேர்தான். மத்த ஆளுங்களோட மல்லாட்டல்தான். பேஜார் வேலை ஸார் இது. சார் தம்பிராஜு பேப்பர் சரியா இருக்குது. அனுப்பிச்சிட்டுமா?''

''அதுக்குள்ளியா தம்பிராஜு அந்த மூலக்கடை கதை சொல்லு.''

''அவன் சொல்ல மாட்டான் சார், நான் சொல்றேன். அப்ப சாராயக்கடை தொறக்காத நேரம். புத்தூர் தாண்டினதும் மெட்ராஸ் சரக்கு வைக்க லாரில எடம் இருக்கான்னு கேட்டாங்க. அதுக்குத்தானே வண்டி ஓட்றேன். என்னா சரக்குன்னு கேட்டான். தேங்காய் எண்ணை டின்னுன்னு சொல்லி இருபது டப்பா, ஏத்திட்டானுங்க. துட்டும் குடுத்தாச்சு பாதித் தொலைவு போனதும் தம்பி ராஜுக்கு டக்குன்னு ஞாபகம் வந்தது அடடா ரெண்டு நாளா தலைக்கு எண்ணெயே வைக்கல்லியேன்னு. இருட்ல வண்டியை நிறுத்தி பின்பக்கம் போய் ஒரு டின்னு சீலு ஒடைச்சு ரெண்டு கை அள்ளிவச்சு பரபரன்னு தேய்ச்சுக்குன்னா பக்குன்னு புடிச்சுது நாத்தம். மொத்தமும் சாராய டின்னு. பயந்துபோய் எடுத்து ரோட்டோரம்அடுக்கிட்டு ஒரே புடி. மூலக்கடை அங்கப்போனா மடக்கிட்டானுங்க எங்கடா டின்னுன்னு கேட்டானுங்க. தேங்காண்

ணெய்ன்னு சாராயம் ஏத்திட்டான். பார் என் தலையெல்லாம் ஒளுவுது எடுத்து ரோட்டுல அடுக்கிட்டு வந்துட்டேன்னானாம். பொத்துப் பொத்துன்னு போட்டுப் பொரட்டிட்டு ஓடிட்டானுங்க. வாயெல்லாம் ரத்தம். அன்னிலேர்ந்து எவன் டின்னு ஏத்தினாலும் தம்பி ராஜு மோந்து பார்த்துட்டுதான் வண்டில வைக்க விடுவான்''

ஒவ்வொரு கதைக்கும் குடல் அறுந்துதான் போயிற்று.

மர பெஞ்சில் தம்பிராஜு குத்துக்காலிட்டு இந்தச் சிரிப்புக்கும் தனக்கும் சம்பந்தமில்லாதது போல உட்கார்ந்திருந்தான்.

''சார் யாரு? சரக்கு ஏத்தணுமா?''—தம்பிராஜு விஸ்வநாதனை நெருங்கிப் பேசினான்.

''இல்லை. வண்டி காணோம், தேடறேன்.''

''என்னா வண்டி சார்?''

''காந்திலால் டிரான்ஸ்போட்.''

''அடடே டின்னு லோடா.''

''பார்த்தியா?''

''தூங்கறானே!''

''எங்க?''

''கீழ்த் திருப்பதிலே. இன்னேரம் கிளம்பிட்டிருப்பான். காலைல பேசிக்கிட்டிருந்தோம். உடம்புக்கு முடியலைன்னு சொன்னான். சரக்கு மாத்திக்கிட்டுமான்னு கேட்டேன். வாணான்னுட்டான்.''

''இடம் சரியாச் சொல்லு.''

''எப்படிப் போவே?''

''கார் இருக்குது.''

''அப்பப் போவாதே. இங்கியே இரு. ராத்திரி ஏழு எட்டு மணிக்கு இந்த எடம் தாண்டுவான். மடக்



கிடலாம். நீ அங்க போய் அவன் ஆப்படாத ராவுல லோல்படப் போற. இது தாண்டித்தான் போவணும். செக்போஸ்ட்ல சொல்லிடு. மடக்கிடுவாங்க.''

''தாங்ஸ் தம்பிராஜு.''

''அட பரவால்லீங்க.''

''ரொம்பக் கலாட்டாப் பண்றாங்க உன்னை.''

''பைத்தியக்காரன்னு நினைச்சிக்கிட்டிருக்கானுங்க. இவனுங்க மாதிரி பத்து பைத்தியக்காரனைப் பார்த்தவன் நான். வந்தப் புதுசுல ஒன்னும் தெரியாத இருந்தா எப்பவும் அப்படியேவா இருந்துடுவான். மொறைக்கிறத விட முழிக்கிறது நல்லதுன்னு சும்மா இருக்கேன்.''

''நிஜமாவா?''

''ஒரு நா ஒரே இடில மொத்தமும் பேத்துட்டுப் போயிடப் போறேன். அன்னிக்குத் தெரியும். தம்பி ராஜு யாருன்னு!''

''ச்சே ச்சே. வாணாம்பா,''

''மொள்ளக் குத்தறதாம். டேய் இருங்கடா ஒரு நா இல்லேன்னா ஒரு நா...''

சட்டென்று இறுகிய ரௌத்திரகாரமான முகம். ஆச்சரியமாய் இருந்தது. என்ன அற்புதமான அப்பாவி வேடம். எல்லாக் கேலிக்கும் சலனமற்றிருந்த முகம்.

கபூரை எழுப்பி நடந்ததைச் சொன்னான். மெல்ல இருள் கவ்விய குளிர்காற்று வீசிற்று. லாரி வரவில்லை.

''என்னாங்கோ மணி என்னா?'' பெண் குரல் கேட்டது.

''எட்டு பத்து.''

''வண்டி ஓடலையா?''

''ம்ம்ம்.''— தலை நிமிர்த்திப் பார்த்தான். க்யூடெக்ஸ் போட்ட நீண்ட நகங்கள். கார் உள் விளக்கில் மின்னின. கதவு விளிம்பைப் பற்றிக் கொண்டிருந்தன.

''ச்சு, அப்பால போம்மா.''—கபூர் அதட்டினான்.

''ம்...போவாட்டி என்ன செய்வியாம்?''

''அடி செருப்பால, போன்னு சொல்றேன்ல.''

''கபூர் என்ன இது.''

''உனக்குத் தெரியாது சார். சும்மா இருங்க. போ அந்தப் பக்கம்.''

''ஐய்ய, பெரிய பிஸ்தா இவரு.''

''த்தே பார், உதைபடப் போற நீ.''

''கபூர்?''

''இது லோல் சார், பார்த்தாத் தெரியலே. ஏம்மா உனக்கு ஆளா கிடைக்கல. போ அப்பாலே.''

''நான் உன்னியா கூப்பிட்டேன், சாரோடதானே பேசிக்கிட்டு இருக்கேன், இல்ல சார்...?''

விஸ்வநாதன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான் ஹைவே க்வின். நெடுஞ்சாலை ராணி பாதையோரப் பட்டிப்பூ.

''சார் உத்துப் பாக்றார். நீ என்னவோ விரட்றே. இல்லே சார், நான் உள்ள வரட்டா?''

''எதுக்கு?''

''எதுன்னா சாப்டக் குடேன், பசிக்குது.''

விஸ்வநாதன் ஒரு பச்சை வாழப்பழத்தை எடுத்துக் கொடுத்தான். உரித்து ஒரு விள்ளல் விழுங்கினாள்.

''உம் பேரு என்னா?''

''விஸ்வநாதன்.''



''தமிளு ஆளா?''

''ஆமா.''

''எம் பேரு கேக்கலையே.''

''உன் பேர் என்ன?''

''வசந்தா பேரு நல்லா இல்லை?''—கதவு விளிம்பில் மார்பை அழுத்தியபடி கண் சிமிட்டினாள்.

''சேலை மூடும் இளஞ்சோலை
மாலை சூடும் மலர் மாலை''

மாலைப்பொழுது மட்டுமே சூடிக்கொள்கிற மலர் மாலை. விடியலும் பகலும் வெறுக்கின்ற பூ, ஒருவேளை இவளுக்குத்தான் இந்த வரிகள் பொருத்தமோ?''

''இருபது நிலவுகள்
நகமெங்கும் ஒளிவிடும்''

''அய் நீ நல்லாப் பாடறியே.''

''நீ பாடுவியா?''

''அன்னாண்ட வாங்க. போயிடலாம். கார்ல வேணாம்.''

''வேணுமா சார்.''—கபூர் கேட்டான்.

''வண்டியை மிஸ் பண்ணிடப் போறோம் கபூர்.''

''நான் பார்த்துக்குறேன் சார். ஏய் இங்க வா... எவ்ளோ?''—குசுகுசுவென்று பேசினார்கள்.

''நீங்க போயிட்டு வாங்க சார். ஒரு பைசா குடுக்காதீங்க. இங்க வந்ததும் நான் பேசிக்கிறேன். ஏய் இந்த ஆபீசர் சரி இல்லேன்னுட்டா, ஒரு பைசா தர மாட்டேன்.''

அவள் உதடு சுளித்துச் சிரித்துவிட்டுப் பாதையோரம் இறங்கிப் போனாள். சற்றுத் தொலைவில் இருட்டில் நின்று விஸ்வநாதனுக்காகக் காத்திருந்தாள்.

''வெறுமனே பேசத்தான் போறேன் கபூர். இந்த மாதிரி ஆளுங்ககூடப் பேசினதில்லை.''

பளிச்சென்று லாரி வெளிச்சம் அடித்தது, பூசின உடம்பு, கற்றைத் தலைமுடி. ஒன்றைப் பின்னல், கதம்பம், காது ஜிமிக்கி, பெரிய செந்தூரம். வெள்ளைப் பற்கள், செதுக்கின முகவாய். கருகமணி லாரி. தாண்டிப் போயிற்று. இருட்டு அடித்தது.

''காமன் கோவில் சிறைவாசம்
காலை எழுந்தால் பரிகாசம்
தழுவிடும் பொழுதிலே
இடம் மாறும் இதயமே...''

''ஐய்யோவ்! என்னா நல்லாப் பாடற நீ. புதுப் படமா!''

''நீ படம் பாப்பியா?''

''தெலுங்குப் படம் பார்ப்பேன். இப்பப் பாடினத மறுபடி பாடேன். நல்லாப் பாடற.''—உட்கார்ந்து கொண்டார்கள். இருளில் தொலை தூரத்து வெளிச்சம் பின்புறமாக இருக்க, வடிவமைப்பு மட்டும் தெளிவாகத் தெரிய மறுபடி அவளை உற்றுப் பார்த்தான். இரண்டு கைகளை விரித்துக் கட்டை விரலை இணைத்து அவள் வலப்பக்க முகத்தைப் பார்த்தான்.

''சினிமாப் புடிக்கிறியா?''—திரும்பி விழி விரியக் கேட்டாள். நரை வெள்ளி மின்னிற்று.

''பனிவிழும் மலர்வனம்—உன்
பார்வை ஒருவரம்—இனி
வரும் முனிவரும் தடுமாறும்
கனி மரம்...''

விஸ்வநாதனுக்கு மனதில் கேமரா விர் இட்டது. இவளை நடனம் ஆடச்சொன்னால் என்ன? இவள் ஆட்டத்தை மனசுக்குள் படம் பிடித்தால் என்ன? இவளை மட்டும் ஆடச்சொல்லி இந்தப் பாட்டைப் படமாக்கினால் என்ன? சொன்னதும் ஆடினாள். இஷ்டத்திற்கு வளைந்து நெளிந்து குலுங்கிச் சிரித்துக் கேலி



பேசி ஆடினாள். பாட்டு முடிய விஸ்வநாதன் கை தட்டிப் பாராட்டினான். மெல்லக் கன்னங்களைப் பொத்தி நெற்றியில் முத்தமிட்டாள். அப்பா...இப்பத் தான் இடைஞ்சல் இல்லாமல் ஒரு பாட்டு முழுசா ஃபிலிம் பண்ண முடிஞ்சுது.

# 11

''உனக்குப் பாடத் தெரியுமா வசந்தா?''

''பாட்டுப் பாடினா வுட்டுடுவீங்களா?'' வசந்தா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''விட்டுடுவேன்.''

''வேற ஒண்ணும் வேணாமா?''

''வேணாம்.''

''இது என்னா புதுசா இருக்குதே.''

''இன்னிக்கு ஒரு நா புதுசா இரேன்.''

''நானா புதுசா இருக்கிறதா?'' வசந்தா வாய் விட்டுச் சிரித்தாள். ''கூட ரெண்டு ரூபா குடுக்கணும்.''

''எதுக்கு ரெண்டு ரூபா.''

''புதுசு மாதிரி நடிக்கிறதுக்கு.''

''இருபது ரூபா தரேன். முதல்ல பாட்டுப் பாடு அப்புறம் புதுசு மாதிரி நடி.''

''நெசந்தானா?''

''உம்மேல சத்தியமா.''

''வுட்டேன் சொல்லுங்க.''

''ஏன்?''

''ஆள் மேலே சத்தியம் வச்சா ஆயுசு குறையும். வுட்டேன்னு சொல்லுங்க.''

இந்த முறை விஸ்வநாதன் வாய்விட்டுச் சிரித்தான் நெடுங்காலம் வாழ யாருக்குத்தான் ஆசை இல்லை. உலகத்தின் சகல தொழில்களும் நல்வாழ்க்கையை, வளமையை, அமைதியை எதிர்பார்த்துத்தானே. இதில் இவள் தொழில் என்ன விதிவிலக்கு?

''நீ இருபது ரூபா குடுத்தா இன்னி பாரம் ஒழிஞ்சுது நீ இருபது ரூபான்னது மேல் துட்டுத்தானே. ட்ரைவர் பேசினது சேர்த்து இல்லியே.''

''மேல் துட்டுன்னா?''

''உனக்குப் புடிச்சு நீ தர்றது, ட்ரைவர் பேசின துட்டு தனி. அந்தத் துட்டு பங்குபோடப் போயிடும்.''

''அடடே, அப்போது கபூர் பேசினது இதைவிடக் குறைவா? டிரைவர் எவ்ளோ சொன்னாரு?''

''உங்க ரெண்டு பேருக்கும் சேத்துப் பதினைஞ்சு ரூபா.''

''பதினைஞ்சா?''

''ஏன், மேல் துட்டு கிடையாதுங்கிறியா?''

''நோ, நோ, நிச்சயம் தருவேன். இப்பவே தரேன். இந்தா இருபது ரூபா.''—இடப்பக்கச் சட்டைப்பையிலிருந்து இரண்டு பத்து ரூபாய்களைத் தடவித் தொலைவு வெளிச்சத்தில் அடையாளம் கண்டு அவளிடம் கொடுத்தான். வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். ''நல்ல மனசு உனக்கு. இப்ப என் இடுப்புல சொருகினா எங்கியாவது வுளுந்துடும், என் துட்ட இந்தப் பாக்கட்ல வக்கிறேன்.''—அவள் வலப்பக்கப் பையில் வைத்தாள். பையில் உள்ள பட்டனைப் போட்டாள். ''டிரைவரு உன்னை ஆபீசருன்னாரு நீ என்னமோ சினிமாப்படம் புடிச்சே. சினிமா ஆள்தானே நீ?''



''ஆபீஸர்தான். ஆனா சினிமா ஆளு எல்லாம் தெரியும்.''

''எல்லாருமா?''

''ம்ம்ம்.''

''கமலு தெரியுமா?''

''ம்ம்ம்.''

''ரஜினி தெரியுமா?''

''ம்ம்ம்.''

''நெசமா''

''உம்மேல சத்தியமா, சாரி... நெசம்மா.''

''பரவால்ல. இதுக்கு சத்தியம் வைக்கலாம். நீ பேசியிருக்யா அவங்களாண்டா?''

''நெறைய.''

''ஐய்யோ நெசமாவா? எப்டீ... கிட்டக்க நின்னா?''

''எப்பவாச்சும் கமல் வூட்டுக்குப் போவேன். பேசுவோம். கிட்டக்கிட்ட நின்னுதான்.''

''என்ன பேசுவ.''

''படிச்சது, எழுதினது, பார்த்தது.''

''என்ன படிச்சது பேசுவ?''

''கதைப் புஸ்தகம்.''

''அப்புறம்?''

''என்ன இங்கிலீஷ் படம் பார்த்தோம், எப்படி கதை இதை இங்க எப்படிச் செய்யலாம். எப்படி மாத்தலாம்னு பேசுவோம். எழுதிப்போம்.''

''நீ எழுதுவியா?''

''எழுதணும்னு ஆசை, முடியலை.''

''ஏன்''

''வேலை இருக்கே... எங்க உக்காந்து எழுத?''

''வேலைய வுட்ர வேண்டியதுதானே.''

''இது நல்ல வேலை வசந்தா.''

''சினிமாவ விடவா?''

விஸ்வநாதன் முகத்தைப் பொத்திக் கொண்டான். நீண்ட பெருமூச்சு விட்டான். இந்தப் பெண்ணிடம் அதிகம் பேசுகிறோம். வேறு எவரும் கிடைக்காமல் இவளிடம் மனசை இறைக்கிறோமோ? இவள் அப்பாவித்தனத்துக்கு முன் அலட்டிக் கொள்கிறோமோ?

''ஏன் தலை குனிஞ்சிட்டே?''

''ஒண்ணுமில்ல.''

''எல்லாம் விட்டுட்டு உனக்கு சினிமா பிடிக்கப் போகணும்னு ஆசை. வூட்ல வுடமாட்டேங்கறாங்க, இல்லை?''

சபாஷ் இவளிடம் கூட சின்னதாய் கெட்டிக்காரத் தனம் மின்னுகிறதே ''எப்படிக் கண்டுபிடிச்சே வசந்தா?''

''யார் வீட்ல சினிமா எடுக்கப் போன்னு அனுப்பு வாங்க? வேணாம்னுதான் சொல்வாங்க...அப்படி நீ போனா என்னையும் இட்டுக்கிறியா?''

விஸ்வநாதன் மெலிதாய், சோகமாய்ச் சிரித்தான்.

''உன் நல்ல மனசுக்கு ஓகோன்னு வருவ, பாரேன்.''

விஸ்வநாதன் மீண்டும் சிரித்தான்.

''சிரிக்காதே உம் மேலே சத்தியமா...வுட்டேன்; வுட்டேன். எம் மேலே சத்தியமா சொல்றேன். நீ ரொம்ப நல்லா வருவ.''



விஸ்வநாதன் அவள் வலக்கையை இரண்டு கைகளாலும் மெல்லப் பற்றிக்கொண்டான். உதடு பதிய அவள் புறங்கையில் முத்தமிட்டான். வசந்தா இடக் கையால் அவள் தலையை உருட்டிவிட்டாள். பிடரியை நீவிவிட்டாள்.

''ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கஷ்டம். ஒவ்வொரு விதமான வேதனை. உனக்கு உன் வேதனை. எனக்கு என் வேதனை. யாருதான் இங்க நல்லா இருக்காங்க. ஒருத்தர் கூட இல்லை.''

ஒரு லாரி வெளிச்சம் மதகின் மேல் பளிச்சென்று விழுந்து மயங்கியது.

கையில் இடையது நெளிகையில்
இடைவெளி குறைகையில்
எரியும் விளக்குச் சிரித்து.
கண்கள் மூடும்
பனி விழும் மலர் வனம்—உன்
பார்வை ஒரு வரம்.

இவளுக்கும் எனக்கும் இடையே மனவெளி ரொம்பக் குறைந்துவிட்டதோ?

''ஒனக்கு ரொம்ப புடிச்ச பாட்டா இது?''

''ம்ம்ம்''

''எனக்கும் கூடப் புடிச்ச பாட்டுன்னு நெறைய இருக்குது. மறக்கவே மறக்காது.''

''பாடறேன்னியே.''

''ஐயோ புடிச்சிக்கினியா... பேஜாருப்பா.''

''ம்ம்ம். ஜாக்கிரதை'' உன் துட்டு எம்பைல இருக்குது.

''இருக்கட்டுமே. நான் பாடாத போனாக்கூடக் கொடுத்துருவே.''

''எப்படிச் சொல்றே?''

"உம் மூஞ்சி சொல்லுதே."

"துட்டு இல்லை போ."

"வச்சிக்கயேன். இது வந்துதானா கோட்டை கட்ட போறேன். எவ்வளவோ ஏதேதோ வுட்டாச்சு. இந்த இருபது ரூபாதானா..."

"உனக்கு உன் வேதனை எனக்கு என் வேதனைன் னியே...என்ன வேதனை உனக்கு?"

"ஒண்ணா ரெண்டா...ஒவ்வொரு நாள் ஒவ்வொரு மாதிரி?"

"இன்னிக்கு என்ன வேதனை? நானா?"

"நீயா வேதனை, என் ராசா"—வழித்து நெட்டி முறித்தாள். "எவங்கிட்ட இப்படி மனசு வுட்டுப் பேசிருக்கேன். எவன் பைல என் துட்டை இப்படி தைரியமா வச்சிருக்கேன், வேறொன்னு மனசைப் போட்டுக் குடையுது."

"என்ன வசந்தா?"

"என் கூட இருக்கிற பொண்ணு—எம்மாதிரிதான், நேத்திலேர்ந்து காணம், லாரில ஏறிக்கினு போனா. இன்னும் வரலை."

"உறவா?"

"இல்லே இங்கித்து ஸ்நேகம். மல்லிகான்னு கூப்பிடுவோம். எங்க போனாளோ தெரியலை."

"ஓடிட்டாளா?"

"சாக்கடைக்குப் போக்கிடம் ஏது? வருவா. எம் பொட்டிலதான் அவ துட்டு, துணிமணி எல்லாம் இருக்குது, நா கிளம்பட்டுமா?"

"பாடவேயில்லையே."

"வுடவே மாட்டியா?"



"சரி போ இந்தா துட்டு. இன்னொரு தடவை வந்தாப் பாடணும்."—வலது பையின் பட்டனைப் பிரித்தான்.

"இன்னொரு தடவை வருவியா?"

"தெரியலை."

"அப்பப் பாடிடறேன். என்ன பாடறது?"

"என்ன மனசுல தோணுதோ பாடு."

"என்னென்னவோ தோணுது. இப்படியே செத்துப் போயிடலாமான்னு தோணுது. அதைப் பாட்டாப் பாட முடியுமா?"

"ச்சு...என்ன வசந்தா."

"ரொம்பக் கஷ்டங்க இந்தத் தொழிலு. நேத்து ஒருத்தன் செருப்பு எடுத்து அடிக்க வந்தான். எழுந்து உடுத்திக்கறதுக்குள்ள ரெண்டு அடி அடிச்சுட்டான். இன்னிக்கு நீ மரியாதையா, எதுக்க உக்காரவச்சு பாட்டுப் பாடுன்னு கேக்கறீங்க. என்னால ரெண்டை யுமே தாங்க முடியலே"—வசந்தா அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். விஸ்வநாதன் அவளை அணைத்துக் கூந்தலை வருடினான். நெற்றியில் உதடு பதித்தான்.

இறையே, பரம்பொருளே, அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமான உருவே, இந்தப் பெண் குழந் தைக்கு நிம்மதி கொடு. இவள் யாராயினும் சரி, வளரட்டும். வளர்ந்து உரமாகி நிற்கட்டும். உயர்வு பெறட்டும்.

"முடியலேன்னா வேணாம் வசந்தா."

வசந்தா இன்னும் முகத்தை அவன் தோளினில் அழுத்திக் கொண்டாள். அவன் கழுத்து வளைவில் கன்னத்தை உருட்டிப் புறா மாதிரி பொதிந்து கொண் டாள்.

"தேவுடு சேசினி பெள்ளியிது"—மெல்ல ஒரு வரி பாடி நிறுத்தினாள், "மா தேவனின் லீலையிது..."

மெலிந்த குரலில் உச்ச சுருதியில் அடுத்த வரி இழுத்தாள். மௌனமானாள். குரலைச் சரிசெய்து கொண்டாள். மறுபடி ஆரம்பித்தாள்.

தேவுடு சேசின பெள்ளியிது
மா தேவனின் லீலையிது
கலகல லாடேநவ்வுனு லோலா
கண்ணீர் எந்துக்கோ?

இது கடவுள் செய்த கல்யாணம். இது அவன் லீலை. இங்கே அழுகை எதற்கு, சிரி கலகலவென்று சிரி;—பாடி விட்டு வசந்தா விசும்பினாள்.

விஸ்வநாதனுக்குள் ஒரு குதிரை சோர்வோடு அலைந்தது. களைப்போடு தடுமாறியது. நீரற்ற பாலைவெளியில் வெகுநாளாய் நீர் தேடுவன போல் திரும்பித் திரும்பி வெறுத்தது.

''அடியே வசந்தா எங்க இருக்கிற? வசந்தா—'' யாரோ மூன்று நான்கு பேர் திபுதிபுவென்று ஓடி வந்தார்கள்.

வசந்தா திடுக்கிட்டுத் திரும்பினாள்.

உயரமும் தடிமனுமாய் ஒரு பெண் ஓடிவருவது தெரிந்தது.

''அடியே மல்லிகா பூட்டாளாண்டி.''

''ஓடிப்பூட்டாளா?''

''செத்துப் பூட்டாளாண்டி. லாரி ஏறிட்சாம். பெரிய பாளையம் போலீஸ் எடுத்துக்கினு போயி மெட்ராஸ் ஆஸ்பத்திரில பாடிய சேத்துட்டாங்களாம்.''

''ஐய்யோ''—வசந்தா வாய் மீது கை வைத்துக் கூவினாள்... ''ஐயோ... ஐயோ...'' என்று அறைந்து கொண்டாள். தரையில் விழுந்து புரண்டாள், எழுந்து அலைந்தாள். தடுமாறினாள். விஸ்வநாதன் பயத்துடன் எழுந்து நின்றான்.



''அக்கா நான் பார்க்கணும். எம் மல்லிகாவ நான் பார்க்கணுமே.''— அந்தப் பெரியவளைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

''வா...வா...எதுனா வண்டி புடிச்சிப் போயிடலாம் வா.''— அந்தப் பெரியவள் அணைத்து அழைத்துப் போனாள்.

சற்றுத் தொலைவில் போனதும் விஸ்வநாதன் சிகரெட் தேடினான். சட்டைப் பையில் கை விட்டான். இருபது ரூபாய் உறுத்திற்று.

''வசந்தா வசந்தா...இருபது ரூபா.''—தொடர்ந்து விரைவாய் நடந்து கூவினான். அதற்குள் பாதை இருளில் இறங்கிவிட்டார்கள். கபூர் ஓடிவந்தான்.

''என்ன சார். என்னா ஆச்சு?''

''என்னவோ ஆக்ஸிடெண்டாம்...''

''யாருக்கு?''

''அவங்க கூட்டத்துப் பெண்ணுக்கு.''

''எந்த இடம்?''

''புத்தூர் தாண்டி, பெரியபாளையம் பாடர்ல சார்', ...அந்தக் கூட்டத்தோடு வந்த சின்ன பையன் கபூருக்குப் பதில் சொன்னான். ''மூஞ்சில லாரி அடிச்சிருக்கு. அடையாளமே தெரியலை. அப்ப, நீ ரூபா குடு சார். வசந்தாகிட்டக் குடுத்துட்றேன்.''

''ச்சீ போடா.''— கபூர் விரட்டினான்.

''துட்டு குடுக்கல்ல, ஆள் இட்டாருவேன்.''

''அடி...'' கபூர் பட்டென்று அந்தப் பையன் தலையில் அடித்தான். ''வாங்க சார், வண்டில ஏறுங்க.''

வண்டியில் ஏறினதும் சரட்டென்று திருப்பிக் கிளம்பினான்.

''மிரண்டுட்டியா சார்.'' கபூர் திரும்பாமலே கேட்டான்.

இது பயமா? ஆட்கள் கண்டு நடுக்கமா? மிரட்சி யாருக்கு வரும்? குற்றமுள்ளவனுக்குத்தானே. குதிரை மிரளுமா?

நீர் குடிக்கக் குனியும் குதிரை
நிழல் தெரியப் பின்னால் போகும்
மிரளுவது மிருகம் என்பார்
சீர் குணம் அறிய மட்டார்
வேறொன்று குடிக்கும்போது
தான் கலக்கல் கூடாதென்று
குழப்பத்தைத் தவிர்க்கும் குதிரை
மிருகத்தில் குழந்தை ஜாதி
கால் வைத்த இடங்கள் எல்லாம்
பூ முளைக்கும் இடமென்றெண்ணி
குளம்பது விளிம்பில் நிற்கும்
குதிரையா மிரளும் மிருகம்
குதிரையின் குளம்பைப் பாரும்
இடுக்கிலே ரோமம் சிரிக்கும்
இது குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் ஆறாம் பாடம்

கார் ரயில் பாதையைத் தாண்டியது. ''சார் நம்ப லாரி.''—கபூர் கூவினான். சட்டென்று பிரேக் போட்டு இடப்புறம் ஒதுக்கினான். வலப்பக்கம் ஓரம் டீஸல் துணி கொளுத்தின வெளிச்சத்தில் புகையினூடே காந்திலால் டிரான்ஸ்போர்ட் என்கிற பலகை பளபளத்தது. ஆக்ஸில் ஷாப்ட் கழன்று தரையைத் தேய்த்துக் கோடு போட்டிருந்தது. ப்ரேக்டௌன். விஸ்வநாதன் வசந்தாவை மறந்து போனான்.

# 12

காந்திலால் மேத்தா கண் விழித்தபோது ஏழு மணி. கழுத்துச் சங்கிலியைத் தடவித்தேடி டாலரில் இருக்கும் வெங்கடாஜலபதியை உற்றுப் பார்த்தான். கண் மடலில் ஒற்றிக் கொண்டான். ஜெய் பாலாஜி என்றான். எழுந்தான். வீடு முழுக்க வனஸ்பதி வாசனை அடித்தது. எழுந்து பீடா பெட்டியைத் தேடி நேற்றைய ஜர்த்தா சுருளை உதறி வாயில் போட்டுக்கொண்டான். நாலு முறை மென்றதும் ஜர்தா சுருக்கென்று நெற்றி நரம்பில் ஏறிற்று. கண் இமையில் போதை கவிழ்ந்தது. அண்ணத்திலும் கன்னக் கதுப்புகளிலும் சுகம் நகர்ந்தது.

தலையணைகளை உயர்த்திப் போட்டுச் சாய்ந்தபடி அகலமான மார்பையும் வயிற்றையும் தடவிக் கொண்டான். காந்திலால் மேத்தாவின் மனைவி தரையில் படுக்கை விரித்து படுத்திருந்தாள் மேத்தா உட்கார்ந்திருக்கும் இரட்டைக் கட்டில் மாமனார் சீதனம் தான். ஆனாலும் மனைவி சந்தோஷமளித்தபிறகு தரைக்குப் போய் விடவேண்டும். இது கட்டளை. சோர்வோடு தூங்கிய பிறகு ஒரு சிறகுகூட மேலே படக்கூடாது. பகல் முழுக்க ஆட்களோடு பேசிப் போராடிச் சண்டையிட்டு வெற்றியோடு வரும் மனிதனுக்குத் தனிமை அவசியம். அந்த இடத்திலும் காதோடு பேச, கழுத்தை இறுக்கிக்கொள்ள யாரும் தேவையில்லை. பெண்களைக் கண்டு தடுமாறுபவன் நல்ல பனியா இல்லை. ஒரு பனியா உழைப்பது பிறர் பொருட்டே. மனைவிக்கும் குழந்தைகளுக்கும் மற்றும் பலருக்கும் அள்ளிக் கொடுக்க, தருமம் செய்யப் பனியாவுக்குத்தெரியும். இருக்கும்பொழுது கொடுக்கப்படும், கொடுப்பதற்காகவே சேமித்து வைக்கப்படும். சேமிப்புக்காகவே

அதிகம் உழைக்க வேண்டும். வாழ்க்கை இறுதிவரை வியாபாரம் பற்றிய கவனம் வேண்டும். சரி இன்றைய வேலை என்ன... ஆ .. அந்த பம்பாய் லாரி. இங்கிலீஷ் கம்பெனி லோடு. நாற்பது டிரம்கள் கொண்ட வண்டி. ஒவ்வொரு டிரம்மிலும் இருநூறு லிட்டர் ரப்பர் பால். லடெக்ஸ் திரவம். துளைத்து எடுக்கிறார்கள். அரை மணிக்கு ஒரு போன். ஆ ஊ என்று கூச்சல். இன்று சாயங்காலத்துக்குள் வரவில்லை எனில் உன் சங்காத்தமே வேண்டாம் என்கிற மிரட்டல். எங்களுக்கு ஏற்பட்ட எல்லா நஷ்டத்துக்கும் வழக்குப் போடுவோம் என்ற அதட்டல்.

சகலத்துக்கும் காந்திலால் நிதானமாகவே பதில் சொன்னான். பம்பாய் சந்திப்புக்குப் போன் போட்டுக் கிளம்பின தேதி விசாரித்து, பெங்களூர் சந்திப்புக்கு வந்ததை உறுதி செய்து இங்கிருந்து கிளம்பிய லாரியிடம் வழியில் பார்த்து விவரம் சொல்லும்படி கேட்டு எல்லா முயற்சியும் செய்தாயிற்று. முயற்சிகளை விளக்கிச் சொல்லியாயிற்று. கூச்சல் குறையவில்லை.

''சோட்டா சாப்... நான் லாரி கம்பெனிதான் நடத்துகிறேன். ஏரோப்ளேன் இல்லை. ஏரோப்ளேன் எட்டு மணி நேரம் தாமதமென்றால் எத்தனை பேர் கூச்சல் போடுவீர்கள்? கேன்டீனில் முட்டை ரொட்டி சாப்பிட்டுவிட்டு லவுஞ்சில் பல் குத்திக்கொண்டுதானே இருப்பீர்கள். வரும் லாரி வரும்.''

இது திமிர் பேச்சாம். அடாவடியாம். கம்பெனி முதலாளி நிதானமாய்ப் பேசினார்.

''காந்திலால் மேத்தா, காலை வணக்கம். உனக்கு ஏரோப்ளேன் கம்பெனி நடத்த ஆசை வந்தது பற்றி அறிந்தேன். என் பாராட்டுகள். என் வாழ்த்துகள்.

''லாரி கம்பெனிக்கு நிறைய போட்டி இருக்கிறதைத் தெரிந்துகொண்டிருக்கிறாய். நல்லது. ஆனால் உன் ஒரு லாரி தாமதத்தால், என் கம்பெனி ஒரு வாரம் மூடப்படப் போகிறது. நானூறு பேர் வேலை இழக்கப் போகிறார்கள். உன் ஏரோப்ளேன் கம்பெனியில் வேலை போட்டுக்கொடு. மறுக்காதே காந்திலால். நானூறு பேரும் பெண்கள். சுறு சுறுப்பானவர்கள். என்னையும் என் கம்பெனி ஆட்களையும் மட்டமாய் நினைக்கிறாய் போலிருக்கிறது. சரி ஒன்று செய். நாளைக் காலை என் ஆள் ஒருவனை உன்னிடம் அனுப்புகிறேன். விஸ்வநாதன் என்பது ஒரு ஆணின் பெயர். பெண்ணல்ல. சிரிக்காதே அவனிடம் உன் லாரி வழித்தடங்களைக்கூறு, உதவிசெய் அவன் எப்படியாவது லாரியை அல்லது சரக்கை இங்கு கொண்டு வர முயற்சி செய்வான். அவனைக் கம்பெனி காரில் அனுப்புகிறேன். ஹெல்ப் ஹிம். என்ன முடியாதா? ஓ...லாரியைச் சுலபமாய்க் கண்டுபிடிக்க முடியாது என்கிறாயா? முடியாதது எதுவுமில்லை காந்திலால் மேத்தா. இம்பாஸிபிள்ஸ் ஆர் இம்மீடியட், மிரக்கல்ஸ் லிட்டில் லேட்டர்.''

டக்கென்று போன் வைக்கப்பட்டு விட்டது. அவர் பேசினது வேடிக்கையாய், கேலியாய் வெளிக்குத் தென்பட்டாலும் கண்டிப்பும் கோபமும் தெளிவாய்த் தெரிந்தன பெரியவர்கள் இப்படித்தான் இனிமையாய்க் கோபித்துக் கொள்வார்கள். லாரிக் கம்பெனிக்கு நிறையப் போட்டி இருப்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறாய். நல்லது. என்ன அர்த்தம் இதற்கு? நீ இல்லாவிட்டால் நூறு லாரிக் கம்பெனி. ஜாக்கிரதை.

காந்திலால் சுறுசுறுப்பானான். தன் தோழமை லாரி கம்பெனிகளுக்குப் போன் போட்டுக் கிளம்பும் வண்டிக்கெல்லாம் தன் வண்டி நம்பர் கொடுத்து விசாரிக்கச் சொன்னான். இரவு தகவல் வந்துவிட்டது. இங்கிருந்து கிளம்பிய லாரிகள் பெங்களூர் சேர்ந்தன. அந்த ரப்பர் குழம்பு டிரம் ஏற்றிய வண்டி பெங்களூரில் ரிப்போர்ட் செய்து அந்த இடம் விட்டுக் கிளம்பிவிட்டது. கிளம்புகையில் திருப்பதி வழியே போவேன் என்று கூலிக்காரர்களிடம் டிரைவர் சொன்னானாம்.

பெங்களூர் தங்காமல் கிளம்பினானாம். அரை நாள் திருப்பதியில் நின்றுவிட்டு சென்னை போவதாய்ச் சொன்னானாம். லாரியும் சரக்குமாய் எட்டு லட்சம் பெறுமானம். இது இந்தக் கணம் ஒரு லாரி டிரைவரிடம் அடக்கம். லாரி கம்பெனியின் தலைவிதியில் இதுவும் ஒன்று. கிளம்பிய பிறகு வந்து சேர்வது கடவுளின் கருணை. கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, ஆம்பூர் என்று வழக்கமான வழித்தடம் விட்டுவிட்டு அநாவசியமாய்த் திருப்பதி புத்தூர் ரூட் எடுக்கறான். யார் கேட்பது? வந்து நிற்கையில் அதட்டலாம். கூச்சல் போடலாம் நிலவரம் தெரியும். பெரிய கம்பெனி, உடனடிப்பணம், மரம் மாதிரி நின்று கேட்டுவிட்டு மறுபடியும் தன் விருப்பத்துக்கு ஓட்டுவார்கள். டிரைவர்களை ரொம்பவும் முறைத்துக்கொள்ள முடியாது. லாரியோடு காணாமல் போவார்கள். லாரியை நடுத்தெருவில் விட்டு விட்டு மறைந்து விடுவார்கள். பிடித்துவிடலாம். பிடித்து என்ன செய்ய? நஷ்டம் நஷ்டம்தான். இதோ ராவுத்தர் வண்டி எங்கோ கவிழ்ந்து கிடக்கிறதாம். டிரைவர் காணோமாம். ராவுத்தர் கார் எடுத்துக் கொண்டு ஓடியிருக்கிறார். வழி நெடுக 'கடவுளே கடவுளே' என்று பிரார்த்தனை செய்துகொண்டு போவார். எல்லா வண்டியும் உரிமையாளர்களேவா ஓட்டமுடியும்? நம்பிக்கைத் துரோகிகளைக் கடவுள் தான் தண்டிக்க வேண்டும்.

அந்த விஸ்வநாதனுக்கு இதை விவரமாய்ச் சொல்லி அனுப்பியாயிற்று எங்கு அலைகிறானோ, வந்து என்ன கூச்சல் போடுவானோ, நம்பிக்கையான ஆட்கள் கிடைப்பது சிரமமாய் இருக்கிறது. கிடைத்தாலும் அவர்கள் லாரிக் கம்பெனியில் நிரந்தரமாய் வேலை செய்ய மறுக்கிறார்கள். இந்த மதராஸிகளுக்கு லாரி கம்பெனி, அதன் வேலை மகாமட்டம் என்று நினைப்பு. மதராஸிகளுக்கு உழைப்பைவிட சொகுசு ரொம்ப முக்கியம்.



காந்திலால் மேத்தா கடையைத் திறந்தான். விறு விறுவென்று உள்ளே போய்த் தன் மேஜையைத் தொட்டுக்கும்பிட்டான். எதிரில்உள்ள வெங்கடாஜலபதி படத்தைக் கைகூப்பி உற்றுப் பார்த்தான். கண்களை மூடினான். பாலாஜி, பாலாஜி, பாலாஜி. உள்ளே மனசு கூவிற்று. பரபரப்பாய் பெரிய உருவம் தோன்றி மனசு கண் புத்தி முழுக்க வியாபித்தது. காந்திலால் மலர்ச்சியுடன் கண்களைத் திறந்தான். இப்படிப் பெரிய பாலாஜி உருவம் தோன்றிவிட்டால் போதும், மனசு தெளிவாகிவிடும். மீண்டும் பலம் கொள்ளும். அதிகம் குழம்பிய நாளில் இப்படி உள்மனத் தரிசனம் கிடைக்காது. இன்று நல்ல தரிசனம். பிரச்னை எதுவாயினும் நல்லபடி முடிந்துவிடும். பகவான் பாலாஜி முடித்துவிடுவார். இன்றைய வலிமைக்கு பாலாஜி தான் காரணம். இல்லையெனில் லாரி டிரான்ஸ்போர்ட்டு கம்பெனியை மனிதனா நடத்த முடியும்? அது பாலாஜிக்குத்தான் சாத்தியம். பெரும் புருஷனின் செயல். அவன் துணைதான் இந்த லாரிக் கம்பெனி.

அன்றைய தபாலை டைப்பிஸ்ட் பெண் பிரித்து வைத்தாள். முதல் கடிதம் சென்னையில் உள்ள பெரிய கம்பெனியிலிருந்து.

பம்பாய்த் துறைமுகத்துக்கு உள்ளேயிருந்து நூறு பெரிய பெட்டிகளைச் சென்னைக்கு எடுத்துவர முடியுமா என்று கேட்டிருந்தார்கள். ஒரு பெட்டியின் எடை என்ன டன் என்று குறிப்பிட்டிருந்தார்கள், காந்திலால் கம்பெனியின் யோக்கியதையையும் லாரிகள் எத்தனை என்றும், ஒரு பெட்டிக்கு எவ்வளவு சரக்குக்கட்டணம் என்றும் கேட்டிருந்தார்கள்.

அது கார்பன் காப்பி கடிதம்தான். இது மாதிரி பல லாரிக் கம்பெனிகளைக் கேட்டிருப்பார்கள். யோக்கியதை உள்ளதை, விலை படிமானமாய் இருப்பதைத் தேர்ந்தெடுப்பார்கள். காந்திலாலுக்கு அந்தக் கம்பெனி

நிலவரம் தெரியும். பெரிய கம்பெனி உடனடிப் பணம். தெளிவான வியாபாரம் கிடைத்தால் அதிர்ஷ்டம். பாலாஜிதான் துணைசெய்ய வேண்டும். எல்லாவற்றையும் விட இந்தக் கடிதத்துக்கு முதலில் பதில் எழுத வேண்டும். பதில் கடிதத்தில் டிரான்ஸ்போர்ட் கம்பெனி பற்றித் தெளிவாகவும் திடமாகவும் சொல்ல வேண்டும்.

காந்திலாலுக்கு—வியாபாரம் பண்ணத் தெரியும். ஆங்கிலம் தெரியாது. உடைத்து உடைத்து ஆங்கிலம் பேசி ஒப்பேற்றிவிட முடியும் எழுதத்தெரியாது. படிக்கத் தெரியும். பதிலெழுத வராது. என்ன பதில் எழுத வேண்டும் என்று தெரியும், பாஷை வளையாது.

டைபிஸ்ட் பெண் சுத்தமாய் டைப் அடிப்பாள். சுயமாய்ப் பதில் எழுதத் தெரியாது, நன்கு ஆங்கிலம் தெரிந்த ஆட்கள் லாரிக் கம்பெனி வேலைக்கு வருவதில்லை. வந்தாலும் தங்குவதில்லை.

என்ன செய்வது என்று யோசித்தபடி காந்திலால் பல் குத்திக் கொணடிருந்தான். பாலாஜி இருக்கிறார் என்று சமாதானப்படுத்திக் கொண்டான்.

தண்ணீர்த் தொட்டித் தெருவின் எல்லாக் கடைகளும், திறந்துவிட்டான். கே.ஆர். வடிவேலு டிரான்ஸ்போர்ட் தவிர.

நாராயணசுவாமி வாசலில் துணிப்பையோடு உட்கார்ந்திருந்தார். பட்டணம் பரம அயோக்கியத்தனமானது என்பது காலையிலேயே விளங்கிவிட்டது. வெளிக்குப் போகக்கூடக் காசு கேட்கிறார்கள். ''கார்ப்ரேஷன் கக்கூஸ் தானேடா, நீ எதுக்குக் காசு கேக்கறே'' என்று சத்தம் போட்டார். காசு கொடுக்காவிட்டால் வெளியே விடமாட்டேன் என்று சொல்லிட்டான். நின்று வாதாடிப் பார்த்தார். துர்நாற்றம் பொறுக்க முடியவில்லை, நாலணாவைக் கொடுத்துவிட்டு வழி நெடுகச் சபித்தபடி வந்தார்.



சென்னையில் நாராயணசுவாமிக்குத் தங்க இடமில்லை. லாட்ஜுக்கு இருபது ரூபாய் கொடுக்க மனசில்லை. இரவுப் படுக்கை கோயில் வாசல்தான். உடம்பு பாறாங்கல் படியில் படுத்து ரணமாய் வலித்தது. அடி வயிறு சூடேறி வலித்தது. நேற்று காலில் விழுந்தவன்தான் வடிவேலு எழுந்திருக்கவில்லை. தினமும் இப்படித்தானாம். காலையில் சரியாகி விடுமாம். விடிந்து ஒரு வார்த்தை சூடாகக் கேட்டுவிட்டுப் போக வேண்டும் என்று நினைத்துக் கடை வாசலில் உட்கார்ந்திருந்தார். மணி தெரியவில்லை. எழுந்து அடுத்த கடைக்குப்போனார். குனிந்து மணிபார்த்தார். வலது கையைக் கண்களுக்கு மறைப்புக் கொடுத்தபடி உற்றுப் பார்த்தார். ஒன்பதா ஒன்பதரையா என்பது தெரியவில்லை. ஒரே முள்தான் கடிகாரத்தில் தெரிகிறது. இது என்ன கிரகச்சாரம் இந்தக் கடிகாரம் சரியில்லையா? இல்லை எனக்குத்தான் கண் போயிடுத்தா?

காந்திலால் கடை வாசலில் யாரோ ஒரு கிழவர் குனிந்து காலை வணக்கம் செய்வதைப் பார்த்தான். விபூதிக் கீற்றும் நரை தாடியுமாய்ப் பளிச்சென்று இருந்தார்கள்.

''குட்மார்னிங் ஸார். வாங்கோ. என்ன வேணும்.''

''ம்ம்... குட்மார்னிங். ஒண்ணுமில்லே மணி பார்த்தேன்.''

''நௌ இட் இஸ் நைன் ஃபார்ட்டி ஃபைவ் எக்ஸாக்ட்லி?''—காந்திலால் கைக்கடிகாரம் பார்த்துத் தனக்கு ஆங்கிலம் சரியாய்ப் பேசவாவது வருகிறதா என்று டெஸ்ட் பண்ணிக் கொண்டான்.

''தேங்க்யூ வெரி மச்; தேங்க்யூ. நான் கிழவன். கண் பார்வை சரியில்லை எனக்கு. அதுதான் கைதூக்கி உற்றுப் பார்த்தேன். மற்றபடி உங்கள் இதமான பதிலுக்கு நன்றி.''

முப்பது வருட வாத்தியார் உத்தியோகம். ரெண் அண்ட் மார்ட்டின் கரைத்துக் குடித்த பிரயோகம். தெளிவான ஆங்கிலம் நாணு சாரிடமிருந்து பதிலா யிற்று.

"உள்ளே வாங்கோ சார்"—காந்திலால் தமிழுக் குத் தாவினான்.

"சித்த குடிக்க ஜலம் தரேளா?"—நாணு சாரும் தஞ்சாவூர் தமிழுக்குப் பாய்ந்தார்.

ஜில்லென்ற பானை ஜலம் தொண்டைக் குழிக்குள் இறங்குகையில் சுகமாய் இருந்தது.

"ஹாவ் சம் டீ ஓல்ட் மேன்."

தேநீர் இதமாய் இருந்தது.

"ஐ லைக் ஆல்வேஸ் ஓல்ட் மேன்."—காந்திலால் மறுபடி ஆங்கிலம் பேசிப் பார்த்தான். நாணு சாருக்கு அவன் காதைத் திருகித் தலையில் குட்ட வேண்டும் போலிருந்தது.

"எனக்கு மன்னார்குடி, ஸ்கூல் வாத்தியாராயிருந்து ரிடையர் ஆயிட்டேன். அடுத்த கம்பெனி வடிவேல் என் கிட்டப் படிச்சவன். விசுவாசி நல்ல குணம். வேலை போட்டுத் தரேன்னு கூப்பிட்டிருக்கான்."

"மொள்ளப் பேசுங்கோ ஓல்ட்மேன். எனக்கு ஸ்பீட் தமிழ் புரியதில்லே."—காந்திலால் அவரைக் கையமர்த் தினான். 'எனக்கு இங்கிலீஷ் வரதில்லை. தமிழ் படிக்க வரதில்லே தமிழ் நல்லாப் பேசுவேன். இங்கிலீஷ் நல்லா வராது, உங்க தமிழ்ரொம்ப ஸ்பீடு."

"அதனாலென்ன. வெள்ளைக்காரனுக்கே இங்கிலீஷ் நன்னா வராது. கொசக்குன்னு நிறையப் பேசு வான் எழுதச் சொல்லுங்கோ. வரிக்கு நாலு தப்பு. இங்கிலீஷ்னா அது மதராஸி பேசற இங்கிலீஷ்தான். மதராஸி எழுதற இங்கிலீஷ்தான்."



காந்திலால் யோசித்தான். மெல்ல அந்தக் கம்பெ னிக் கடிதம் நீட்டிப் பதில் எழுத முடியுமா என்றான். நாணு சார் கண்ணாடி மாட்டிக் கொண்டு படித்தார். ஸ்டெனோ டைப்பிஸ்ட் பெண்ணைக் கடிதம் எடுத்துக் கொள்ளச் சொன்னார். தேனருவியாய் சுகமாய் தம்பூர் சுருதியாய் அவர் ஆங்கிலம் பரவிற்று.

காந்திலால் மேத்தா கடிதம் படித்து முடிந்ததும் முகம் மலர்ந்தான். சட்டைப் பையில் கைவிட்டு ஒற்றை நூறு ரூபாய் எடுத்துக் கவரில் வைத்து நீட்டினான்.

நாணு சார் வாய் பிளந்தார். இன்னிக்கு முழிச்ச முகம் நல்ல முகம் என்று இருவரும் நினைத்துக் கொள் கையில் கே. ஆர். வடிவேல் கடை மெல்லத் திறக்கப் பட்டது.

# 13

பல்லாவரம் வளைவில் நெடுஞ்சாலை வழியே உள்ளடங்கி அந்தக் கம்பெனி இருந்தது. முன் பக்கம் நிறைய புளிய மரங்கள் அதை மறைத்துக் கொண்டி ருந்தன. அந்தக் காலை நேரத்திலும் பஸ்ஸிலும், மின் வண்டிலும் நிறையப் பெண்கள் இறங்கி, இந்தக் கம்பெனிக்கு நடந்து போய்க் கொண்டிருந்தனர். பகல் உணவுப் பொட்டலமும் இரண்டு மூன்று வாரப் பத்தி ரிகைகளும் அநேகமாய் எல்லோரும் வைத்திருந்தார் கள். அது ஏழுமணி பகல் ஷிப்ட். கம்பெனியை நெருங் குகையில் இரவு ஷிப்ட் எதிர்ப்பட 'என்னாடி ஆச்சு' என்று விசாரித்தார்கள். பதில் கேட்டுக் கவலைப்பட் டார்கள்.

இரவு ஷிப்டில் சுத்தமாய் வேலை இல்லை.

"என்னாதான் செஞ்சீங்க. தூங்கினீங்களா?"

''முதல்லே தூங்கக்கூடாதுன்னுட்டாங்க. ஒரே பேச்சு பாட்டுத்தான். காலைலே மூணு மணிக்கு சரி. தூங்கறதுன்னா தூங்குன்னுட்டாங்க. தூங்கிட்டோம்.''

''எங்களுக்கு வேலை இருக்குமா?''

''லடெக்ஸ் வந்தாத்தான்.''

''வருமா?''

''தெரியலை. வரேண்டி. தூங்கி எந்திருச்சது பேஜாரா இருக்கு. ட்ரெயின்ல தூங்கி ஸ்டேஷன் விட்டுற போறேன்.''

''தமிழ்ச்செல்வி லடெக்ஸ் வராதாம். முருக பூஷணம் சொல்லிட்டுப் போச்சு. ஒரே பாட்டு கூத்துத் தானாம்.''

''ஜாலிதான். உனக்குப் பாடத் தெரியுமா?''

''டே ஷிப்ட்ல பாடினாக் கொன்னுடுவாங்க.''

''வேலை இல்லேன்னா என்ன செய்யறதாம்?''

''தூங்கறது''

''டே ஷிப்ட்ல தூங்கவிடமாட்டாங்க. நைட்ஷிப்ட்ல ஒழிஞ்சுப் போகட்டும்னு விட்டிருப்பாங்க.''

''இன்னிக்கும் லடெக்ஸ் ரப்பர் வரலேன்னா என்னாவும்?''

''ஒரு வாரம் வீட்ல போய்த் தூங்குங்க, பின்னாடி பார்த்துக்கலாம்னு நோட்டீஸ் போர்டு பேசும்.''

''சம்பளம் போடுவாங்கல்ல.''

''தவடலை போடுவாங்க.''

''அப்பாடி இப்பகார்டு பஞ்ச் பண்ணியாச்சு. இன்னி சம்பளம் உண்டு.''

அவரவர்கள் இடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். ஜெனரேட்டர் சப்தம் உலை கொதிக்கும் சப்தம், நிராவி சப்தம்... எதுவும் இல்லை. வழக்கத்தை மீறி அங்கே ஒரு மௌனம் நிலவியது. அந்த மௌனம் எவரையும் பேசவொட்டாமல் செய்தது.



அது கருத்தடை சாதனங்கள் செய்யும் தொழிற்சாலை. லட்சக்கணக்கில் அரசாங்க நிரோத் தயாரிக்கப்பட்டது. நிரோத் போல் பல கருத்தடை உறைகள் தயாரிக்கப்பட்டன. மெல்லிய ரப்பர் உறைகள் செய்ய உயர்ந்த ரப்பர்க்குழம்பு—லடெக்ஸ்—அவசியம். உள்நாட்டிலேயே கிடைக்கும் ரப்பர் எஸ்டேட்டில் மூன்று மாதமாய் ஸ்டிரைக். உற்பத்தி முடங்காமல் இருக்க உடனே இறக்குமதி லைசென்ஸ் வாங்கி வெளிநாட்டிலிருந்து ரப்பர் குழம்பு தருவிக்கப்பட்டது. மலேசிய ரப்பர் அதை ஏற்றிவந்த சரக்குக் கப்பல் நிற்கத் துறைமுகத்தில் இடமில்லை. கப்பல் துறைமுகத்தில் காத்திருக்காமல் பம்பாய் போய்விட்டது. பம்பாயில் இறங்கி வெகு அவசரத்தேவை என்று நிர்ணயிக்கப்பட்டு உடனடியாய்த் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு லாரிகளில் ஏற்றப்பட்டது. பத்து நாட்களுக்கு முன்பே தொழிற்சாலைக்குள் வந்துசேர வேண்டிய சரக்கு, கடைசிச் சொட்டு ரப்பர் பால் கையிருப்பு தீரும்வரை வராமல் போய் விட்டது.

கைபடாமல் யந்திரம் தயாரிக்கும் உறைகளை இந்தப் பெண்கள் மெல்லிய தகரப் பேப்பரில் மூடி அடுக்கி, டப்பாவில் போட்டு பேக்கிங் செய்வார்கள். ஒவ்வொரு உறையையும் பலவித சோதனைகளில் ஈடுபடுத்துவார்கள். ஒரு நாளைக்குப் பலலட்சம் உறைகள் சோதனை செய்து மூடி அடுக்கிப் பெட்டியில் இட்டு நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும். நெற்றி வியர்வையைத் துடைக்கக்கூட நேரமின்றி வேலை இருக்கும். ஒரே மாதிரி வேலை எனினும் மடமடவென்று செய்ய வேண்டும். ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் தொழிற்சாலை இன்று மௌனமாய் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருக்கிறது.

மேற்கொண்டு வேலைக்கு லடெக்ஸ் ரப்பர் வர வேண்டும். வந்துவிடும். வந்தே ஆகவேண்டும்.

''வரல்லேன்னா என்னடி ஆவும்?''

''த்த, சும்மாக் கெடடி தொணதொணன்னு.''

''சும்மா இருந்தா எப்படிய்யா?''—விஸ்வநாதன் கோபத்தில் இரைந்தான். ''இதோ அதோன்னு விடியற வரைக்கும் மல்லாக்க படுத்துத் தட்னீங்க. ஒரு போல்ட்கூட நகரலை. தள்ளி வா, நான் பாக்கறேன். ம்... முடியாது, இது முடியற சமாசாரமில்லை. நான் வேற லாரி மாத்தறேன்''

''த்தோ, ஒன்னவர்லே போய்டலாம் பார். இது ஒண்ணு கழட்டிட்டா மத்தது சுளுவா வந்துரும்.''

''கபூர் வண்டி எடு இவங்ககூடப் பேசிப் புண்ணியமில்லை. திருப்பதி போய் இன்னொரு லாரி புடிக்கலாம்.''

''எப்படி சார் மாத்தறது? இருநூத்தியஞ்சு லிட்டர் டிரம். அசைக்கக்கூட முடியாது சார். தப்பித் தவறிச் சாஞ்சுதுன்னா பொத்துக்கும்.''

''அசைச்சு நகர்த்த முடியாது?''

''முடியாது சார்.''

''கிரேன் கிடைக்குமா பார்ப்போம்.''

''எடுத்து வைக்கவா, திருப்பதிலியா?''

''எடு கபூர் வண்டியை, ஏதாவது செய்துடணும்.''

''யோசனை செய்ங்க சார். திருப்பதிலே க்ரேன் இருக்குமா? மெட்ராஸுக்கு போன் போட்டுச் சொல்லுவோம்.''

''நாம் டிரை பண்ணிட்டு மெட்ராஸைத் தொந்தரவு செய்யலாம். எடு வண்டியை.''

''நேரா மெட்ராஸ் போய்க் கையோட லாரி, க்ரேன் கூட்டியாந்தா...''



''எடுப்பா வண்டிய. ஒரு மரியாதைக்குக் கன்ஸல்ட் பண்ணினா... தொண தொணன்னு.''

''இன்னிக்கும் லடெக்ஸ் வராதாம். ஏத்தி வந்த வண்டியைக் காணமாம்.''

''என்னாடி ஆவும்?''

''கவலைப்படாதே. நம்ம ஹீரோ தேடிக்கினு போயிருக்காரு.''

''பெரியவரா?''

''மொதலாளி இல்லேடி, சம்பளம் எடுத்தாருவாரே விசுவநாதன், அவுரு.''

''உயரமா, சுருள் கிராப்பா... தங்கச் செயின் போட்டுக்கினு... அவரா?''

''த்தோடி பத்தினி. செயினு வரைக்கும் பாத்திருக்கியா? எனக்கு பேர் மட்டும்தான் தெரியும் தங்கமா பித்தளையான்னு தெரியாது. தமிழ்ச்செல்வி, இவ பேசறதைக் கேளேன்.''

''என்னாம்மா விஷயம்?''

அவள் காதோடு இவள் சொல்ல, இவள் காதோடு அவள் சொல்ல, மௌனம் விடியல் நேரத்து இருள் மாதிரி கலைந்து அங்கே தும்பிகள்துடிக்கும் சத்தமாய்க் கிசுகிசுப்புகள் தொடர்ந்தன.

''லாரி ஏற்பாடு செய்து குடுத்திட்டேன் சாமி, க்ரேன் இங்க பிடிக்க... இங்க கேட்டுச் சொல்றேன். தேவஸ்தானம் க்ரேன் வச்சிருக்கும்?''

''தருமா?''

''கேட்டுச் சொல்றேன்.''

''ஹலோ, எவரு அக்கட? பாக உன்னாரா?''—விஸ்வநாதன் நகம் கடித்துத் தவித்தான்.

''தேவஸ்தானம் க்ரேன் தராது சார். இன்னொரு எடம் சொன்னாங்க, கேட்டுறலாம். தம்பி, காபி, டிபன் சாப்பிடீங்களா?''

''பல்லுகூடத் தேய்க்கலை.''

''விளக்கிட்டு வாங்க, சாப்டலாம்.''

''க்ரேன் கெடைக்கணும் சார்.''

''பல்லு விளக்கவா?''

''ப்ளீஸ். தமாஷ் பண்ற நேரமில்லை. க்ரேன் கெடைக்குமா சொல்லுங்க.''

''ஹலோ, அக்கட பாக உன்னாரா?''

விஸ்வநாதனின் வாய் குழம்பிக் கசந்தது. வயிறு குழைந்து எகிறிற்று.

''அடடே. க்ரேன் இப்பத்தான் பெரிய பாளையம் போச்சாம். லாரி கெணத்துலே மாட்டிக்கிச்சுனு கூட்டிப் போனாங்களாம்.''

''எந்த லாரி... யார் கூட்டிட்டுப் போனது?''

''தெரியலீங்களே.''

''எப்பப் போச்சாம்?''

''இப்பத்தான் அரை அவுருன்னாங்க.''

''கபூர் கிளம்பு. உங்க லாரி எங்கே? இந்தாப்பா டிரைவர், கார் பின்னாடியே வா. இந்தா மொத்த வாடகை நானூறு ரூபா''

''சந்தோஷம் தம்பி. டிபன் சாப்பிடலீங்களே.''

''க்ரேன் பிடிச்சுப் பல் தேய்ச்சுட்டுச் சாப்பிடறேன், நீங்க கவலைப்படாதீங்க.''

''தம்பி, தமாஷாப் பேசறீங்க.''

''தமாஷில்லே, வயித்தெரிச்சல்.''



''எப்போ வருவாரோ எந்தன் கலி தீர... எப்போ வருவாரோ...''

''பாடாதடீ, வரவனும் ஓடிப்பூடப் போறான்.''

''எங்கே போயிட முடியும்? சம்பளம் போட இங்க வந்துதான தீரணும்.''

''யாரைச் சொல்ற?''

''காலைலே நீ கேட்டியே..தங்கமா, பித்தளை யான்னு. அவருதான்.''

''அடிசக்கை. ஒனக்கு அந்தாள் மேல் ஒரு கிக்கா? அவருக்கு கல்யாணம் ஆகி ரெண்டு பொட்டைப் பசங்க இருக்குது.''

''கிக்குமில்ல...குக்குமில்லே''

''பாட்டுப் பாடற...எப்ப வருவாரோன்னு.''

''அந்தாள் வந்து ரப்பர் லடெக்ஸ் கொணாந்து மிஷினு ஓடி வேலை தொடங்கணும்!''

''வேலை மேல அவ்ளோ இஷ்டமா?''

''துட்டுடி. இவ சொல்ற மாதிரி ஒரு வாரம் வேலை இல்ல, வீட்டுக்குப் போன்னுட்டா பாலு துட்டு, வூட்டு வாடகை யார் குடுக்கறது? சம்பளம் முழுசா வந்தாலே, ஒன்னப் பிடி என்னப் பிடின்னு இருக்கச் சொல்ல...''

''லாரி கிடைச்சுடுச்சாம். விஸ்வநாதன் மடக்கி எடுத்தாராம். இப்பத்தான் போன் வந்துதாம், ஆந்திரா லேர்ந்து''

''ஆந்திரா எவ்ளோ தொலைவுடி?''

''த்த்...மாம்பலம் தாண்டி...''

''ச்சீ...சாப்பாட்டுக்கு மேலே வேலை இருக்குமா?''

''நீ போய் சாப்பிடு கபூர். வண்டி ஓட்டறவன் நீ சாப்பிடு. ஏங்க இந்த கிரேன் யார் வாடகைக்கு எடுத்தது?''

க்ரேன் டிரைவர் கைநீட்ட, திருப்பதி எல்லையில் ஓர் ஓட்டல் வாசலில் விஸ்வநாதன், ராவுத்தரைச் சந்தித்தான்.

''ஐயா நமஸ்காரம். நீங்க யாரு ராவுத்தர் கம்பெனியா?''

குரல் பரிச்சயம் மிகுந்து முகம்மறந்துபோன மாதிரி பாவத்துடன் ராவுத்தர் முகம் சுருக்கி விஸ்வநாதனைக் கவனித்தார். முதல் பார்வையில், 'முதல் கைகூப்பலில் அந்த இளைஞனை அவருக்குப் பிடித்துவிட்டது.

''அடடே விஸ்வநாதன் நீங்கதானா...ரொம்ப சந்தோஷம் தம்பி. அல்லா கருணை உள்ளவன். பெரும் பேராளன் உங்களை இவ்வளவு சீக்கிரமாப் பார்ப்பேன்னு நினைக்கவேயில்லை. என் நன்றியை எப்படிச் சொல்றதுன்னே தெரியலை. உங்க உதவி பெரும் உதவி. மறக்கவே மாட்டேன்!''—நீண்ட நீண்ட புகழுரைகள். மலர மலர முகஸ்துதிகள். விஸ்வநாதன் உதவி கேக்கக் கூசினான். ஆனால் வேறு வழியில்லை. கேட்டான்.

''இவ்ளோ தானே? ஒங்களுக்கு இல்லாமலா! இதுக்கு போய் இவ்ளோ தயங்கணுமா? எடுத்துக்கிட்டுப் போங்க. என் வேலை இதனால பாதிக்கப்படாது. எங்க மடங்கிச்சு வண்டி? புத்தூர் கேட்டா? நானும் வரேன் தம்பி. டிபன் முடிச்சீங்களா? ரொம்ப களைப்பா இருக்கீங்களே.''

இதமான பேச்சு விஸ்வநாதனை மேலும் களைப்புற வைத்தது. ஒருவாய்க் காப்பி அவசியமாய்த் தேவைப்பட்டது. ஓட்டலில் பல் துலக்கி முகம் அலம்பி டிபன் காப்பி முடித்தான்.

ராவுத்தர் காரும், க்ரேனும், லாரியும் பின்தொடர லடெக்ஸ் வண்டியிடம் போனான்.

எண்பது நிமிடத்தில் லடெக்ஸ் டிரம், லாரி மாறிற்று, மேல் தூசுக்கூடக் கலையாமல் இடம் பெயர்ந்து புதிய வாடகை லாரியில் அடுக்கப்பட்டது.



''ஐயா, க்ரேன் வாடகை.''

''உங்ககிட்ட வாடகையா? மாட்டேன் தம்பி. உதவி செய்ய அல்லா இடம் கொடுத்த கருணை பெரிசு.''

''ஐயா, இது கம்பெனிச் செலவு. என்னுடையது இல்லை. வாடகை சொல்லுங்க.''

''யாருதா இருந்தா என்ன? நான் வாடகை வாங்க மாட்டேன், தம்பி. ஒருமுறை நம்ப கடைக்கு வரணும்.''

விஸ்வநாதன் மௌனமாய் நின்றான். குளிர்வாய் வாடகை வாங்க மறுத்த அன்பில் மூழ்கினான்.

''கடவுள்...அதுபத்திய நம்பிக்கை இதுவெல்லாம் நான் அதிகம் யோசிச்சதில்லை. உங்களைப் பார்க்கறப்போ பேசறப்போ எனக்கும் இதம்மா ஒரு நம்பிக்கை வருது ராவுத்தர். என் நன்றியை எப்படிச் சொல்றது...''

''எல்லா மதமும் சொல்ற கடவுள் ஒன்றுதான். அன்பே கடவுள். எல்லையில்லாத பரம்பொருளை உணரும் விதம் அன்பு செய்யும்போது தெரியுது. ஸ்நேகத்துக்கும் அன்புக்கும் எல்லையில்லாத மாதிரிதான் அவன் அருளும் கருணையும் நன்றி சொல்றது எதுக்கு? நாம ரெண்டு பேரும் ஒரு ஹிம்சைல இருக்கோம். இது மாதிரி ஹிம்சை இல்லாத நேரத்தில் இதமா ஒரு தடவை பார்த்துப் பேசுவோம். போய்ட்டு வாங்க தம்பி'' காருக்குள் அவன் உட்கார்ந்ததும் மெல்லக் கதவைச் சாத்தினார். சலாம் செய்தார்.

லடெக்ஸ் லாரி முன்னால் போக, கார் பின்னால் நகர்ந்தது. புத்தூர் மதகு தாண்டிற்று. வசந்தா மனசுள் மின்னினாள். அந்தக் குழந்தை என்னாயிற்றோ? செக் போஸ்ட் தாண்டிற்று. அந்த லாரி டிரைவரை கேலி செய்தார்களே...அவன்பேர் என்ன தம்பிராஜு. மறுபடி அவனைச் சந்திக்க முடியுமா? எவ்வளவு அற்புதமான உதவி. வடமலைப்பேட்டை, பெரியபாளையம் தாண்டி

யதும் கிணற்றில் கவிழ்ந்த லாரி தென்பட்டது. ராவுத்தர் முகம், சிரிப்பு, கைகூப்பல் படர்ந்தது. புழல், செங்குன்றம், செம்பியம்—லாரி முன் போகக் காரில் துவண்ட படி விஸ்வநாதன் போனான்.

''யம்மா...யாரும் கூச்சல் போடாதிங்க. நாளைக்கு வேலை உண்டு. லடெக்ஸ் வருதாம். அரை அவர்ல வந்துடும். உள்ள நைட் ஷிப்ட் க்ளீன் பண்ணி வேலை ஆரம்பிச்சுடும் இப்ப எல்லாரும் போலாம்னுட்டாங்க. கூச்சல் போடாதப் போங்க''—தலைவி மாதிரி உள்ளவள் சொல்ல மெல்லக் கலைந்தார்கள். இரண்டு மணி நேரம் முன்னதாக வீட்டுக்குப் போகும் சந்தோஷம் சிரிப்பாய் பொங்க வெளியே வந்தார்கள்.

லாரி உள்ளே நுழைய வழி கேட்டு ஹார்ன் அடித்தது பெரிய கதவுகள் திறந்தன.

''என்னப்பா வண்டில லடெக்ஸ் ரப்பரா? டெலிவரி செலான் வச்சிருக்கியா?'' கேட் கீப்பர் வழக்கம்போல கேட்க, விஸ்வநாதன் பின்னால் காரிலிருந்து சீறினான்.

''வாட்ச்மேன், வண்டியைவிடு, முதல்ல. சலான் கேக்கற நேரம் பாரு.''

லாரி உள்ளே நுழைந்தது விஸ்வநாதன் கால்கள் நடுங்க மிஷின் ரூம் போனான். யாரோ கை குலுக்கினார்கள். முதுகில் தட்டினார்கள். கூட்டமாய் பெண்கள் வெளிவர ஒதுங்கி நின்றான்.

''தமிழ்ச்செல்வி, தங்கச் செயின்தான்டி. சொக்கத் தங்கம், கழுத்துல தேய்ஞ்சு தழைஞ்சு போனாக்கூட நிகுநிகுன்னு இருக்குது பாரேன். யாரோ ஒரு பெண் பேசிக்கொண்டு போனாள். யாரோ சிலர் சிரித்தார்கள்.

''சார், பெரியவர் போன். கூப்பிடறார் உங்களை''

''விஸ்வநாதன் குட்ஜாப். வெரிகுட் ஷோ. ஐயம் ஹேப்பி அபௌட் யூ. கீப் இட் அப்.''



போன் வைக்கப்பட்டுவிட்டது. தளர்ந்து விஸ்வநாதன் நாற்காலியில் சாய்ந்தான். இதற்கு இந்த நாலு வார்த்தைக்குத்தான் இந்த அலையலா? இந்த வேதனையா? இந்தத் தவிப்பா? இது செய்யத்தான் பிறப்பா, வாழ்நாள் பூராவும் லடெக்ஸ் தேடல்தானா?''

மறுபடி மணி அடித்தது.

''ஹல்லோ விஸ்வநாதன் ஹியர்.''

''நான் தாரிணி, நீங்கதானா, எப்ப வந்தேள்?''

''இப்பத்தான். பத்து நிமிஷம் ஆச்சு.''

''உடனே எனக்குப் போன் பண்ணக்கூடாதா? நிறைய வேலைன்னு சொல்ல வேண்டாம். இத்தனை வேலைக்காரா ஆபீஸையே கல்யாணம் பண்ணிண்டிருக்க வேண்டியது தானே. உங்களுக்கு எதுக்குப் பெண்டாட்டி குழந்தைகள்?''

''குழந்தைகள் எப்படி இருக்கா—தாரிணி.''

''உயிரோடதான் இருக்கா. செத்துச் செத்துப் பொழைக்கிறது நான் மட்டும்தான். என்னைப்பத்திக் கவலையே கெடையாதான்னா உங்களுக்கு? தனியா ஒரு பொம்மனாட்டி...'' தாரிணி பேச முடியாமல் அழுதாள். ''ஏன் இப்படிவதைக்கிறேள்? ஒரு வார்த்தை போன் பண்ணிட்டுப் போப்படாதா...அத்தனை என்ன துவேஷம்? நானும் பொறுத்துப் பொறுத்துப் பாக்கறேன். நெஞ்சைக் கீறிக் கீறிப் புண்ணாக்கறேளே, எம்மேலே ஏன் இத்தனை கடுப்பு? இத்தனை விஷம் கூடாதுன்னா மனுஷாளுக்கு.''

போன் பளிச்சென்று வைக்கப்பட்டது.

எனக்கா, விஷமா? பாம்பா, பல்லியா நான்? கீறிக் கீறிப் புண்ணாக்க நகமுண்டா எனக்கு? குதிரைகளுக்கு எங்கேனும் நகம் உண்டா? நகத்தில் விஷம் உண்டா? குறைந்த பட்சம் கொம்பிருக்கிறதா குதிரைக்கு?

அவல ஆடுகள் கூட இங்கே
கொம்புடன் ஜனித்தாக.

விஸ்வநாதன் நாற்காலியில் சரிந்து வெறித்தபடி கவிதை நெய்யத் தொடங்கினான்.

# 14

கே ஆர். வடிவேலின் தகப்பன் ஒரு நல்ல விவசாயி. கால் கட்டை விரலால் கிளறி அவரால் மண் வாகு சொல்ல முடியும். எண்ணி நாலே வெட்டில் மடை திருப்ப முடியும். நாற்றுப் பச்சையைப் பார்த்து விளைச்சல் சொல்ல முடியும். இரவும் பகலும் தூக்கமின்றி வளர்ந்த் பயிரை களத்து மேட்டில் இருந்தபடி காவல் காக்க முடியும். அப்பா அசந்து உறங்கி வடிவேல் பார்த்ததே இல்லை. இடுப்பு வேஷ்டியை அவிழ்த்து மேல்துணியைப் போர்த்திக் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருப்பதே தூக்கம். எஸ். எஸ். எல். சி. முடிகிறவரை வடிவேலுவை அவர் களத்து மேட்டுக்கு அழைக்கவில்லை. பேப்பரில் நம்பர் இல்லையென்றதும், ''போவுது வுடு பாஸ் பண்ணாத்தான் சேறு மிதிக்க மிதிக்க முடியுமா என்னா... எவனும் செய்யலாம். இங்க வா. ஏர்க்காலைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக்க. நான் இறங்கி ஓட்டறேன். பின்னாலேயே தடம் பார்த்து வா.''

''யப்பா செருப்புப் போட்டிருக்கேனே. எப்படி சேறுல வர்றது?''—வரப்பில் நின்றபடி இடுப்பில் கை வைத்தபடி வடிவேலு கேட்டான்.

''அவுத்துட்டு வாடா.''

''செருப்பில்லாத கஷ்டம்ப்பா எனக்கு.''

''ஏண்டா கர்ணன் கவச குண்டலத்தோடு பொறந்தாப்பல உங்கம்மா வவுத்லேர்ந்து செருப்புக் காலோடா பொறந்த? கூட வாடா இறங்கி.''



''ஃபயர் இன்ஜின்காரன் முழங்கால் மட்டும் ஒரு ரப்பர் ஷூ போட்டிருப்பானே அதைப்போல வாங்கி மாட்டிக்கிட்டா சுளுவு இல்ல?''

வேஷ்டியை அவிழ்த்து வடிவேலின் தகப்பன் தலைப்பாகையாய்க் கட்டிக் கொண்டார். வரப்பில் நின்றபடி பிள்ளையை மல்லாக்கச் சேற்றில் தள்ளி விட்டார்.

''எப்ப்பே...'' என்று பயக் கூச்சலுடன் கைகளை விரித்துச் சேற்றில் விழுந்த வடிவேலுக்கருகில் நின்றார். ''இப்ப தொப்புள்வரை நனைஞ்சிருச்சில்ல, இனி செருப்பு என்னாத்துக்கு? அவுத்துப்போடு.''

வடிவேலு உடம்பெல்லாம் குழம்பின சேறும் மனசெல்லாம் விவசாயம் பற்றிய வெறுப்பும் ஒட்டிக் கொண்டன. வடிவேலு பரிட்சையில் தோற்றதால் அவன் தகப்பன் சேற்றில் போட்டுப் புரட்டியதாய் ஒரு பையன் புரளி கிளப்ப மன்னார்குடியில் நிறையப்பேர் துக்கம் விசாரித்தார்கள்.

''பயப்படாம செப்டம்பர் பரிட்சை எழுதிடு. நவம்பர், டிசம்பர்ல ரிசல்ட் வரும். உங்கப்பா தள்ளினாலும் காஞ்ச வரப்பிலேதான் தள்ள முடியும். சேறு இருக்காது. என்ன சொல்றே?''—இந்த தஞ்சை மண் கிண்டல் இன்னும் துக்கப்படுத்திற்று. செப்டம்பர் எழுதினான். தோற்றுப் போனான். யாரும் துரத்தாமல் வீட்டை விட்டுச் சென்னைக்கு ஓடிப்போனான்.

''போவுது கழுதை. ஐயரு பசங்க சகவாசம் நாற்காலில உக்காந்து சம்பாதிக்க ஆசை வந்திருச்சு. செய்யட்டும். வாணாங்கலை. அதுக்காகச் சேத்துல செருப்புப் போட்டா நடக்க முடியும்? உக்காந்து புண்ணாச்சுன்னா ஆசன வாய்ல மண்ணு சேறுதான் கொழப்பிப் பூசுவாங்கன்னு சொல்லு.''

இந்தச் செய்தியும் எட்டிற்று. ரோசம் ஊட்டிற்று.

''சேர்ல உக்காந்து சம்பாதிக்கத்தான் போறேன். சம்பாதிச்ச முதல் துட்டுல அந்தக் கிழவனுக்குப் புதுசா ஒரு ஜோடி செருப்பு அனுப்பத்தான் போறேன். பார்த்துடலாம் நானா கிழவனா, யார் ஜெயிக்கிறதுன்னு.''

வால்டாக்ஸ் ரோட்டில் ஒற்றைவாடைத் தியேட்டர் தாண்டி ஒரு ரோட்வேஸில் வேலை கிடைத்தது. நாற்காலி வேலை. சரக்கு எண்ணி டி. ஸீ. நோட் எழுதும் வேலை. குட்ஸ் கன்ஸைட்மென்ட் நோட் அதாவது லாரி ரசீது எழுதும் வேலை கிடைத்தது. லாரியில் ஏறி நாலு ஊருக்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தது. வடசென்னை நாயுடு பையன்கள் ஸ்நேகம் கிடைக்க தெலுங்கு தெரிந்தது. பெங்களூர் கிளைக்கு மாற்று ஆள் உதவிக்குப் போகக் கொஞ்சம் கன்னடம், ஹிந்தி கற்க முடிந்தது. எடை மிஷின் சூட்சுமமும் செக்போஸ்ட் சிரமங்களும் தெளிவாயின. போக்குவரத்து போலீஸ் அறிமுகமாக நெருக்கடி நேரத்து பவ்யம் வந்தது. கூலி ஆட்களோடு மோத தடலடி முரட்டுத்தனம் தெரிந்தது. டிரைவர்கள் ஸ்நேகம் வர அரைபாட்டில் பிராந்திக்கு எந்தவித உதவியும் கிடைத்தது.

லாரி கம்பெனியில் ஏற்றிய பத்து டன் சரக்குப் போகக் கம்பெனிக்குத் தெரியாமல் சந்து பொந்தில் அடைத்து சாமான்கள் ஏற்றிப் போக ஆட்கள் பறப்பது தெரிந்தது.

வண்டி முழுக்க வாழைத்தாரும், அடியில் பாண்டிச்சேரி விஸ்கி பாட்டிலும், அரிசி மூட்டையோடு சிலோன் பாக்கு மூட்டை டயர் லோடுக்கு நடுவே வெள்ளிப் பாளம் கடத்தல் பொருட்கள், திருட்டுச் சாமான், வரி கட்டாது போகும் விற்பனைகள். இது ஏற்ற அலையும் புரோக்கர்கள் அறிமுகமாயிற்று. எட்டு வருடத்தில் வடிவேலு கழுத்தில் தங்கச் செயினும் இடுப்பில் மல் வேட்டியும் டெரிலின் சட்டையும் புல்லட் மோட்டார் சைக்கிளுமாய் மாறிப் போனான்.



மன்னார்குடிக்கு முதல் முறையா மோட்டார் சைக்கிளில் போனான். அப்பா வீட்டில் இல்லை. வயல் பக்கம் போனான். வண்டியை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டு அப்பனை நமஸ்கரித்தான். காற்று பலமாய் வீச நெகிழ்வு மண்ணில் நிறுத்தின வண்டி சாய்ந்து போயிற்று.

''சந்தோஷம்தான். அதுக்கு வண்டிய இங்க எடுத்து வாணுமா? வாணாம். வண்டியைத் தொடைக்காதே, இந்த தண்ணில விழுந்தது புரண்டது எதுவும் கெட்டுப் போனதில்லே! ஒன்னையும் சேர்த்துத்தான் சொல்றேன். இது மண்ணுல்ல வடிவேலு, தங்கம். நல்லா இரு''— தகப்பன் ஆசீர்வதித்தான்.

பட்டணத்தில் தன் ஜாதிப் பெண்ணையே மாலை மாற்றிக் கல்யாணம் செய்தான். வடிவேலு என்பதே தமிழ்ப் பெயராக இருப்பதால் ருசிகரமாய் வேறு பெயர் மாற்றிக் கொள்ள முடியவில்லை. பொன்னம்மாள் என்பதும் தமிழ்ப் பெயராகவே இருந்தது. பிள்ளை பிறந்து தலைவரிடம் போய் மதியழகன் என்று பெயர் வைத்தான். சென்னை கோட்டையைக் கட்சி கைப்பற்றிய நேரம் அன்பழகன் பிறந்தான். வடிவேலும் பல கூட்டங்களில் பங்கேற்று வழி மொழிந்தான். நன்றி சொன்னான். எடைக்கு எடை ஏற்பாடு செய்தான். இவையனைத்தும் வாழ்க்கைக்கு உதவிற்று. இரட்டைக்கரை வேட்டிக்கு ஒரு பயம், மரியாதை இருந்தது. இவனால் உதவி செய்ய முடிந்தது. உதவிக்கு உதவி பெற முடிந்தது. சுமை தூக்கும் தொழிலாளர் சங்கமும், ஓட்டுநர் உதவியாளர் சங்கமும் திறக்கப்பட்டன. வால்டாக்ஸ் ரோடு முழுவதும் வணக்கம் சொல்லிற்று. பகடி இல்லாமல் எட்டடிக்கு எட்டடி கடை கிடைத்தது. போன் கிடைத்தது. வடிவேலு யோசித்தான். லாரி வாங்கி அதை எவனிடமோ ஓட்டக் கொடுத்து விரல் பின்னி தவிப்பதை விட, எவர் வண்டியிலோ எவர் சரக்கோ ஏற்றுவது உத்தமம் என்று தெரிந்தான்.

தண்ணித் தொட்டித் தெருவின் தலை சிறத்த தரகர் ஆனான்.

''ஏங்க மொதலியாரே, திருச்சிக்குப் பைப்புப் போகணும்னு சொன்னீங்களாமே? எவ்ளோ எடை? ஒரு டன்னா? ஏத்தலாம். கடையாண்டே கொண்ணாந்து போடுங்க, நாளை விடிகாலை போய்டும். எந்த லாரியா இருந்தா ஒனக்கென்ன? சரக்குப் போகணுமா எங்கிட்ட விடு. சேட்டுக்கு என்ன தர, அதுல பத்து ரூபா கொறைச்சுக் குடு.''

நூறு ரூபா வாடகை வாங்கி லாரிக்காரனுக்கு சந்து இடத்தில் பைப் வைக்க நாற்பது ரூபாய் கொடுத்து மீதிக் காசைப் பாக்கெட்டில் போட்டுக்கொள்வான். மேஜை அறை முழுக்கச் சுருள் சுருளாய் நோட்டுகள் இருந்தன.

இந்த வியாபாரம் தெரிந்து காந்திலால் எதிர்த்தான். 'கூலிப்பசங்களைக் கைக்குள்ளாற போட்டுக்கிட்டு திருட்டுச் சரக்கா ஏத்தறே? கேஸ் போடுவேன்'' என்றான்.

''ஊரை விட்டு ஊர் வந்து என்னை மிரட்டறதுக்கு என்னா துணிச்சல் நாளைக்? காலைல பார். நா யாருன்னு தெரியும் ஒனக்கு?''

மறுநாள் கூலி ஆடகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். கூலி உயர்வும் கூலிகளுக்கு உரிய மரியாதையும் வேண்டுமெனக் கேட்டார்கள். வடசென்னை முழுவதும் தக்காளி, முட்டைக்கோஸ் இரண்டு நாள் நாறிற்று; எண்ணெய் டின்கள் வெயிலில் கிடந்தன. மீறி ஏற்றத் துணிந்த யாரோ அடிபட்டார்கள். இரண்டு லாரிக் கண்ணாடிகள் சிதறின.

எதிராளி பலம் தெரிந்து காந்திலால் உடனே சமாதானம் பேசினான். வடிவேலுக்குத் தன் லாரிகளில் குறைவான ரேட்டில் சரக்கு ஏற்ற ஒப்புக்கொண்டான். ஒட்டுமொத்தமாய் வடசென்னை கூலிகளுக்குக் கூலி உயர்வு கொடுக்கப்பட்டது.



நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும். —வடிவேலு எண்ணெய் டிரம்மில் ஏறிப் பேசியபோது தொழிலாளர்கள் வேலைக்கு மறுபடி போனார்கள். லாரிகள் ஓடின.

மோட்டார் சைக்கிளில் வந்து வடிவேலு கடை திறந்தான்.

''வாத்தியாரைக் காணமே கோவிச்சுகினு மன்னார்குடி போயிட்டாரா?''

'அன்புசால் தமிழ் ஐயா அவர்களுக்கு வடிவேலுவின் வணக்கம் பல-ஒரு லெட்டர் எழுதிப் போடலாமா?''

''த்தோட த்தோட,கிழவர் போவல, காந்தி கடைலருந்து வராரு.''

''ஐயா வாங்க.'' —வடிவேலு கைகூப்பி அவசரமாய் எழுந்தான்.

நாராயணசாமி பயந்து பின்வாங்கினார்.

''வுழ மாட்டேன். தகிரியமாய் வாங்க.''

நாராயணசாமி உட்கார்ந்து கொண்டார்.

''நேத்து நடந்ததுக்கு மன்னிப்புக் கேட்கிறேன்.''-வடிவேலு பவ்யமாய் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டான். தக்காளி அழுகல் வாசனை மாதிரி விஸ்கி வாசனை இன்னமும் வீசிற்று. ''நான் ராத்தூக்கம் இல்லாதவன். தொழிலு அப்படி. இது சாப்டாத்தான் தூக்கம் வரும். பழக்கமாயிடுச்சு ஐயா. மனசில வச்சுக்கக்கூடாது.'' குனிந்து காலைத் தொட்டான்.

கை கூப்பவும் காலை தொட்டு எழவும் வடிவேலு அதிகம் பழகியிருந்தான்.

''இருக்கட்டும். இருக்கட்டும். எனக்கு வேலை உண்டா இல்லையா சொல்லு.''

''ஐயா, இந்தக் கடையே உங்களுதுங்க இது நீங்க போட்ட பிச்சை! நீங்க சொல்லிக் கொடுத்த தமிழ்! இன்னிக்கு நான் நிமிர்ந்து நிக்கிறேன். என்னான்னு யோசிக்கிறீங்களா? நூத்திப்பத்தாவது வட்டத்திலே இன்னிக்கு கூட்டம் இருக்குதுங்க. நம்ம கட்சிக் கூட்டம் கொள்கை விளக்கக் கூட்டம். தலைமை நாந்தாங்க. ஐயா வரணும். இங்க வேலைன்னு ஒண்ணும் இல்லீங்க ஒங்களுக்கு மரியாதை செய்யணும்னு ஒருஆசை. ஆசை ஏன்னா, நன்றிக் கடன் அவ்ளோதான். ஐயா சரின்னு சொன்னா அது என் அதிர்ஷ்டம். நீங்க தங்க இடம், தினசரி, உங்க பகல் சாப்பாடு இரண்டு வேளை காப்பி டிபன் என் பொறுப்புங்க, நீங்க கடைல இருந்தாப் போதும். அதுவே எனக்குப் பெரிய பலம்.

அதிமதுரம், சர்க்கரை, வெல்லம், தேன் எல்லாம் குழைத்துப் பேசினான்.

''இது என்னா கடை, அதை முதல்ல சொல்லு.''

''நான் லாரி புரோக்கருங்க. இரண்டு நாள்ல விவரம் உங்களுக்குப் புரிஞ்சிடும். உக்காந்த இடத்துல வியாபாரம்.''

போன் வந்தது. போடப்பட்டது. வந்தது.

காசு உள்ளே வந்த வண்ணம் வெளியே போன வண்ணம் இருந்தது. நாராயணசுவாமி மாலையில் மட மடவென்று மனசுள் கணக்குப் போட்டு நிகர லாபம் ஆயிரத்து நூற்று நாற்பது என்று புரிந்து கொண்டார். மாலையில் கூட்டத்துக்குப் போனார்.

''தலைவருக்கும் தாய்க்குலத்துக்கும் எனக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்த ஆசான் செந்தமிழ்ச்செல்வர் மறை வழி அந்தணர் எதிரே அமர்ந்திருக்கும் முது பெரும் அறிஞர் நாராயணசுவாமி அவர்களுக்கும் என் பணிவு கலந்த வணக்கம் பல சொல்லிப் பேச ஆரம்பிக்கிறேன்'' என்று துவங்கினான். சிவனே என்று உட்கார்ந்திருக்கும் நாராயணசுவாமி ஐயரைக் கூட்டம்



எட்டி எட்டிப் பார்த்தது. அவருக்கு அந்தப் பார்வைகள் பயம் கொடுத்தன. இவனைவிட அந்தக் காந்திலால் மேத்தா நிம்மதியான இடம் என்று தோன்றிற்று. நாளை காந்திலாலிடம் சகலமும் பேசிவிட வேண்டும் என்று முடிவு செய்தார்.

# 15

நாணு ஐயர் உள்ளே நுழைந்தபோது காந்திலால் மேத்தா இரு கைகளாலும் போனைப் பிடித்து எதிரே வைத்துக் கொண்டிருந்தான். காதில் பொருத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் ரிஸீவர் பக்கமிருந்து பெரும் கூச்சல் கேட்டது.

''பாதி தூரம் வந்த சரக்குகள். என்ன தைரியத்தில் பில் அனுப்பிப் பணம் கேட்கிறாய்? சரக்கு எப்படி வந்தது தெரியுமா உனக்கு? க்ரேன் செலவும் மற்றும் லாரி செலவும் யாருடையது? இங்கிருந்து திருப்பதி வரை கார் போயிருக்கிறது. இரண்டு பேர் ஓவர்டைம் இரண்டு நாள் யார் செலவு? முதலாளியிடம் பேசி விட்டேன், உனக்குத் தலை முழுகச் சொல்லிவிட்டார். மறந்து போய்கூடக் கம்பெனிப் பக்கம் வரவேண்டாம். ஆனால் ஒன்று, பம்பாய் சரக்கு ஒரு லாரி லோடு என்று நினைக்காதே. அடுத்த கப்பலில் ஐம்பது லாரி லோடு வருகிறது. தண்ணித் தொட்டித் தெருவிலேயே ஏற்பாடு செய்கிறேன். பார். இந்தப் பில் பணம் கிடையாது என்பது மட்டுமில்லை. மகத்தான ஒரு வியாபாரம் இழந்து விட்டாய். என்னிடம் கெஞ்சிப் பயனில்லை. என்னைப் பார்க்கவும் வரவேண்டாம் நன்றி.''

ரப்பர் உறைக் கம்பெனி அக்கௌண்டெண்ட் சீறி முடித்தார். இத்தனை கூச்சலுக்கு அந்தக் கடைசி வார்த்தை நம்பிக்கை அளித்தது. என்னைப் பார்க்க வர வேண்டாம். என்னிடம் கெஞ்சிப் பயனில்லை. இதற்கு

என்ன அர்த்தம்? காந்திலாலுக்குத் தெரியும். தனியே என்னை வந்து பார். கெஞ்சு.

செய்யலாம். செய்ய வேண்டும். உடனே இல்லை, நாலுநாள் கழித்து இவரைப் பார்க்கும் முன்பு அந்த விஸ்வநாதனை பார்க்க வேண்டும். அந்த ஆள் பட்ட சிரமங்களைக் கம்பெனியில் பெரிதுபடுத்தாமல் இருக்கும்படி கேட்க வேண்டும். ஆபீஸில் பார்க்காமல் வீட்டிற்குப் போய் உட்கார்ந்து பேசவேண்டும். விஸ்வநாதன் வீட்டு நம்பர் என்ன? தன் டைரியைப் புரட்டி நம்பர் தேடினான்.

விஸ்வநாதனுக்குக் குழந்தைகள் உண்டா?

தாரிணி போன் எடுத்தாள். 'இல்லையே ஆபீஸ் போயிருக்காரே' என்றாள். வேகமாய்த் தமிழ் பேசினாள். குழந்தை ஒன்றின் கூச்சல் போனில் கேட்டது.

தமிழர்களைத் தமிழ்பேசி மடக்குவது எளிது. அவன் ஊருக்கு வந்த புதிதில் தமிழர்கள் ஆங்கிலத்தில்தான் வியாபாரம் பேசுவார்கள். வீட்டிலும் ஆங்கிலம் அதிகம் உபயோகப்படுத்துவார்கள். இப்போதுதான் கொஞ்சம் தமிழ் அதிகமாக இருக்கிறது நாலு கடை தள்ளியிருக்கிற வடிவேல் மேடைமீது தமிழ் பேசத் துவங்கியதும் கூட்டம் அசையாமல் கேட்கிறது குரல். உயர்த்திப் பேசினால் கை தட்டுகிறது.

ம்ம்... விஸ்வநாதன் வீட்டுக்கு யாரைக் கூட்டிப் போகலாம். காந்திலால் நிமிர்ந்தான். நாணு ஐயர் கைகூப்பினார்.

''அரே ஓல்ட்மேன்... வாங்கோ... சாப்பிட்டா ஆச்சா?''

''ஆச்சு சேட்ஜி. வடிவேலு இன்னிக்கும் கடை லேட் போல இருக்கு. நேத்தே சாவி வாங்கிக்கோன்னான். நவமி, நாளைக்கு வாங்கிக்கிறேன்னேன்.''



''இன்னிக்கு நாள் நல்லதா.''

''முழுக்க அமிர்தயோகம். என்ன புதுசா ஒப்பந்தமா?''

''இல்லை நாணு ஐயர். ஒரு வியாபரம் எகிறிப் போவுது லாரி மடங்கிப் போச்சு. கத்தறாங்கோ அதுதான். பெரிய மனுஷாள் நாலு பேரைப் பார்க்கலாமா சமாதானம் பேசலாமான்னு நெனைக்கிறேன்.''

''போலாமே.''

''ஞாயித்துக்கிழமை போலாமா, நாளு நல்லதா?''

''ம்... போலாம், காத்தாலே போயிடணும்!''

''கூட வரீங்களா?''

''நானா?''

''ஆமா ஐயர். எனக்குத்தமிழ் வரதில்லை இங்கிலீஷ் பேச முடியலை. சிரிக்கிறாங்கோ.''

''நான் வடிவேலுகிட்ட வேலை ஒத்துண்டு உன் கூட வியாபாரத்துக்கு வரலாமா? தப்பில்லையா?''

''நான் பேசறேன் சாமி வடிவேலுக்கிட்ட, எனக்கு வடிவேலு கட்டுபடும்.''

''அவன் மீட்டிங் பேசறவன். அவனை நம்ப முடியாது.''

''புரியுது புரியுது ஆனா வடிவேலு நரம்பு எனக்குத் தெரியும்.''

''உனக்கு ஆள்படை சரியா இல்லையா?''

''இல்லை சாமி. நான் கணக்குப் போட்டுடுவேன். கடுதாசி எழுத முடியலை.''

நாணு ஐயர் யோசித்தார். உடனே காயத்ரிக்கு வேலை கேட்கலாமா? காயத்ரிக்கு இந்த வேலை சுலபம். அவள் ஆங்கிலம் சுத்தமானது. காமர்ஸ் படித்த பெண்ணுக்கு லாரிக் கம்பெனிக் கணக்கு சுண்டைக்காய்.

ஆனால் உடனே கேட்க வேண்டாம். கொஞ்சம் தள்ளிப் போடுவோம். இவன் நமக்குக் கட்டுப்படும்படி செய்வோம். இவன் நன்றியில் நனையட்டும், கண்ணில் நம் கையை வைத்து ஒற்றிக் கொள்ளட்டும். அப்போது கேட்போம். இப்போது கேட்டால் சம்பளம் கட்டையாய்ச் சொல்வான். கொஞ்சம் விட்டுப் பிடிப்போம்.

''ஞாயிற்றுக்கிழமை நான் வரேன் சேட்ஜி. வடிவேலு கிட்டப் பேச வேண்டாம். கொஞ்சம் தள்ளிப் போம் சென்ட்ரல் பக்கம்போய் உன்னோட சேர்ந்துக்கறேன்.''

''மேலே... இடம் வசதியா இருக்கிறதா ஓலைக் கூரை''

''அடாடா... அபாரமான இடம். காத்தும் பிச்சுக் கிட்டு வருது. பையைக் கார்த்தாலே கொண்டு போய் வச்சு சுவாமி படம் மாட்டி பால் வரவழைச்சுக் குடிச் சேன். வாடகை விஷயம் பேச வந்தேன்.''

''குடித்தன வாடகைன்னா பெரிசாக் கேக்கலாம். நீங்க மட்டும்தானே. இருபத்தைஞ்சு ரூபா கொடுங்கோ.''

அது வடிவேலு பேசித் தங்கவைத்த இடம். காந்திலால் மைத்துனன் படிக்கச் சென்னை வந்தபோது கட்டினகூரை. பழைய டயரும் லாரி சாமானும் வைக்கப் பட்டிருந்தது. அத்தனையும் அகற்றிச் சுத்தப்படுத்திக் கொடுத்தான். அந்த இடத்தை வடிவேலு இரவு படுப்பதற்காகக் கேட்டபோது காந்திலால் மனைவி கூடாது என்று சொல்லிவிட்டாள். ஆனால் நாணு ஐயரை எதிர்க்கவில்லை,

குடித்தனமில்லையே தனியாள்தானே என்கிறான் காந்திலால். பெண்ணைக் கூட்டி வரப்போகிறேன் என்று இப்போதாவது சொல்லலாமா வேண்டாம். போகட்டும், தோன்றியவுடன் எதையும் செய்யாது சற்றுத் தள்ளிப் போடுவோம். வயசுப் பெண்ணோடு இந்த மாடியில் தங்க முடியுமோ என்று யோசிப்போம்.



''அப்ப ஞாயித்துக்கிழமை...'' நாராயணசாமி எழுந்தார்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் விஸ்வநாதன் உள்ளே நுழைந்து கைகூப்பும் கிழவரை வியப்புடன் பார்த்தான். கைகூப்பினான்.

இவரை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்று யோசித்தான். எல்லாக் கிழவர்களையும் எங்கோ பார்த்த மாதிரிதான் இருக்கிறது. பரிச்சயம் உள்ளது போல் தோன்றுகிறது. கொஞ்சம் பேசினாலும் நெடுநாள் பழக்கம் போலப் படுகிறது. இளைஞர்கள்தான் புதிராய் இருக்கிறார்கள். அதுவும் இளம்பெண்கள் விஸ்வநாதனுக்குச் சற்றும் புரியாது போய் விடுகின்றனர்.

'என் பேர் நாராயணசாமி. காந்திலால் டிரான்ஸ்போர்ட்டிலேருந்து வரேன். கேட் வாசல்லே கார்ல இருக்கார்.''

ஓ விசு யோசித்தான். ''காந்திலால் எதற்கு என்னைத்தேடி...

''என்ன விஷயம்?''

''கொஞ்சம் பேசணும்.''

''நீங்க என்ன காந்திலால் டிரான்ஸ்போர்ட்ல...?''

''கணக்கு விஷயம் கவனிக்கறேன்.''

''புதுசா?''

''இப்பத்தான் சேர்ந்தேன். சேட்டை வரச் சொல்லட்டுமா?''

''சரி.''

நாணு ஐயர் மெல்ல வாசல் நோக்கித் திரும்ப, ''நீங்க உக்காருங்க, நான் வரச் சொல்லி ஆள அனுப்பறேன். வாசல் வரைக்கும் மறுபடி நடக்க வேண்டாம்'' என்றான் விஸ்வநாதன்.

''ரொம்ப தேங்க்ஸ் . ப்பா. ராஜகோபாலா... நல்ல வெயில்.''

''தாரிணி, ஜலம் கொண்டு வா.''

''தேங்க்ஸ். பச்சுன்னு இருக்கு தோட்டமும் வீடும். ரயில் சத்தம் உளப்பலா இல்லையோ?''

''பழக்கமாயிடுத்து. சாருக்கு எந்த ஊர்?''

''மன்னார்குடி.''

''அட.''

''உங்களுக்கும் மன்னார்குடியா?''

''இல்லை. சிக்கல் பக்கம்.''

''சபாஷ், தஞ்சாவூர் தானா?''

''சார் இதுக்கு முன்னாடி...''

''தமிழ் வாத்தியார் நேஷனல் ஸ்கூல்ல.''

''அப்படியா. அங்க கருடன்னு ஒரு எழுத்தாளர் இருந்தார் தெரியுமோ?''

''தெரியும். நீங்க படிச்சிருக்கேளா?''

''முழுக்கப் படிச்சதில்லை. ஒரு சிறுகதைத் தொகுதி படிச்சிருக்கேன்.''

''சுமாரா எழுதுவான்.''

''இல்லை. நல்லாவே எழுதுவார். மினுக்குன்னு கதைக்கு நடுவே ஒரு செய்தி இருக்கும். பொத்திப் பொத்தி வைச்சிருக்கிற உணர்ச்சிகளை முட்டாளே... அது ரொம்ப அல்பம்னு சொல்ற த்வனி இருக்கும்.''

''அப்படி இடிச்சுக் காட்டறது புடிக்கிறதா உங்களுக்கு?''

''சந்தோஷமா கூட இருக்கு.''

''வாட் டு யூ மீன்?''



''உதாரணமா அழறது முட்டாள்தனம்னு ரொம்ப நாளா ஒரு யோசனை. அவர் கதைல இதையே படிச்ச போது சந்தோஷமா இருந்தது.''

''அழறது முட்டாள்தனம்தானே?''

''ஆமாம் தோன்றது. ஏன் இல்லையா, நல்லதுங்கறேளா?'

''சிரிக்கிறது?''

''அது கூட ஆபாசமாத்தான் இருக்கு. என்னால் உரக்க வாய்விட்டுச் சிரிக்கவே முடியலை''

''பிறகு உங்களோட தூக்கலான உணர்ச்சிஎன்ன?''

''சோகம். ஆழமான அமைதியான சோகம்.''

''கதை எழுதுவேளா?''

''என்ன சட்டுன்னு கேட்கறேள், எழுதினதில்லை. கொஞ்சம் கவிதை எழுதுவேன்''

''புது'க்கவிதைங்கறாளே, அதுவா?''

''புதுசாத் தெரியலை. பழசும் புதுசும் கலப்படமா ரெண்டுக்கும் நடுப்பட்ட இடமா எழுதுவேன்.''

''உதாரணமா ஒரு கவிதை சொல்லுங்கோ.''

காந்திலால் உள்ளே நுழைந்தான்.

''வாங்க காந்திலால், என்ன வாசல்லே நின்னுட்டீங்க. நேரே வரவேண்டியது?''—விஸ்வநாதன் கை கூப்பினான். ''தாரிணி குடிக்க ஏதாவது கொண்டாம்மா.''

''நமஸ்தே'' என்று காந்திலால் பதிலுக்குக் கை கூப்பினான். ''ஞாயிற்றுக்கிழமை தொந்தரவு பண்றவா?''

''தொந்தரவா? நத்திங். ஈஸியா இருங்க''

''சேட்ஜீ. நான் கொஞ்சம் சார்கிட்டப் பேசிடறேன். அப்புறம் உன் ஜோலிய வச்சுக்கோ. இரண்டு நிமிஷத்துல படபடன்னு எங்கயோ போய்ட்டோம். எங்க பேச்சு முடியட்டும்.''

''என்ன விஷயம் காந்திலால்?''

''உப்புப் பெறாத விஷயம். தப்புப் பண்ணிட்ட பயம். வந்திருக்கார். அது கிடக்கட்டும், நீங்க கவிதை சொல்றேனேளே.''

தாரிணி காப்பி டம்ளரை ஸ்டூலில் வைத்துப் பரப்பினாள்.

''சகதர்மிணியா?''

''ஆமா, தாரிணின்னு பேரு.''

''தீர்க்க சுமங்கலியவ க்ஷேமமா இருக்கணும். குழந்தைகள் உண்டில்லையா?''

''இரண்டு பெண் குழந்தைகள்.''

''அடடா. க்ஷேமமா இருக்கட்டும். தூங்கறதோ.''

''உள்ளே என்னமோ விளையாட்டு. டீ வி.''

''காந்திலால், குழந்தைகளுக்கு என்னவோ கொண்டு வந்தேளே...''

காந்திலால் முழங்கை நீளத்துக்கு இரண்டு பிஸ்கட் டப்பாவை நீட்டினான். பாதாம் பருப்புப் பொட்டலமும் முந்திரி திராட்சைக் கலவையும் ஸ்டூலில் வைத்தான்.

''எதுக்கு காந்திலால்?''

''குழந்தேள் இருக்கிற இடத்துக்கு வெறும் கையோட வரப்படாது. சேட்ஜி, பூகூட வாங்கிண்டு வந்திருக்கலாம் தோணலை.''

''என்னய்யா காந்திலால், திடீர்னு கிலோ பருப்பு . திராட்சைன்னு...என்ன விஷயம்?''

''அதான் சொன்னேனே பயம்னு. கிடக்கட்டும். விஷயத்துக்கு வாங்கோ.''

''தடக்குன்னு எப்படி சார் கவிதை சொல்றது?''

''புஸ்தகம் இருக்கோன்னோ''



''அதெல்லாம் இல்லை சார். வெறும் நோட்ல கிறுக்கி வைக்கிறது. உங்களுக்கு கருடன் நல்ல பழக்கமா?''

''பழக்கம் உண்டு இன்னும் புரிஞ்சுக்கலை.''

''புரியமுடியாம என்ன? நேரடியான எழுத்துத் தானே, பூடகமா பொதிஞ்சு எழுதறவர் இல்லையே''

''கேட்கக் கர்வமா இருக்கு. எப்படிச்சொல்றதுன்னு தெரியலை. லட்சம் பேர்ல ஒருத்தனுக்குத்தான் முகம் அறியாத புகழ்ச்சியைக் கேட்க முடியும்.''

''புரியலையே.''

''நான்தான் கருடன், கதை எழுதறவன்.''

''சார்.''—விஸ்வநாதன் எழுந்தான்.

''உட்காருங்கோ. இப்போ எழுந்திருக்க வேண்டியது, கை கூப்ப வேண்டியது என் முறை. வியாபாரம் பேசவந்த இடத்திலே இவ்வளவு விவேகம் கேப்பேன்னு நெனைக்கலை, இது ராஜகோபாலன் கருணை. தெய்வ சங்கல்பம்.''

''சார்...''

''எப்பவோ எழுதின கதைக்கு இப்போ பாராட்டும் மனசுக்குள் குளிர்வா வார்த்தையும் கேக்கறப்போ வாழ்ந்த வாழ்க்கை, இருக்கிற இருப்பு எல்லாமே நிறைவா இருக்கு. காசோ பணமோ நான் சரியா சம்பாதிக்கல்லை. சம்பாதிக்கத் தெரியலை. ஆனா, இப்படி மனசு நெறைஞ்சு அபாரம்னு பாராட்டற ஸ்நேகம், புரிஞ்சுக்கிற நட்பு, சிலது உண்டு. கஷ்டப்படக் கஷ்டப்பட ராமனுக்கு நெறைய சிநேகிதா கிடைச்சா. சீதையே வேண்டாம்னு கூடத் தோணியிருக்கும். ஆனால் சீதைதான் இப்படி ஸ்நேகம் கிடைக்கக் காரணம்.''

''சார். நான் நமஸ்காரம் பண்றேன். தாரிணி கொஞ்சம் இங்கே வா.''

மனைவியுடன் அவர் காலில் விழுந்து எழுந்தான். பாதங்களைத் தொட்டு சதகுரு என்று ஒற்றிக்கொண்டான்.

நாணு ஐயர் நின்று கண்மூடி தியானித்தார், "உன் நல்லவிருப்பங்கள் நிறைவேறட்டும்" என்று கை தூக்கி ஆசீர்வதித்தார்.

காந்திலால் மலங்க மலங்க விழித்தபடி இருந்தான்.

# 16

"கதை சொல்றது ஆதிகாலத்துப் பழக்கம். எப்ப மொழின்னு ஒண்ணு வந்ததோ அது உடனே கதை சொல்லத்தான் ஆரம்பிச்சிருக்கும். இன்னிக்குக் கார்த்தால என்ன நடந்தது தெரியுமான்னு கதை பேச ஆரம்பிச்சிருக்கும், கார்த்தால நடந்ததுக்கும் இப்பச் சொல்ற கதைக்கும் வித்தியாசம் நெறைய இருக்கும். கார்த்தால அது ஏன் நடந்ததுன்னான்னு ஒரு ஆராய்ச்சியோட செய்தி துவங்கும். விஷயம் நடக்கிறபோது ஆராய்ச்சி வரலை. அப்புறம் வராது. விஷயம் நல்லதோ கெட்டதோ ஒரு அலசல் செய்யத் தோன்றது. ரீகலெக்ஷன் ஆஃப் தாட்ஸ் மனுஷாளுடைய பெரிய சொத்து இது. நடந்ததை நினைவுக்குக் கொண்டுவந்து யோசனை பண்ணத் தன்னைப்பக்குவப் படுத்திக்கறது மனுஷாளுக்கு மட்டுமே உண்டு. மிருகம் மாதிரி சட்டென்று கோபமோ, காமமோ வந்துடறதில்லே. வாலை மிதிச்சவுடனே பாஞ்சுடறதில்லை. கோபப்பட்டா என்னாகும்னு நம்மாலே யோசிக்க முடியும். தொடர்ந்து யோசிக்கிறவன் ஞானி. முடியாதவன் மிருகம். யோசனை பண்ணினதின் விளைவு இன்றைய வாழ்க்கை, வளர்ச்சி"

"யோசனை பண்ணியும் வேதனை போகலையே. குழப்பம் தீரலையேன்னு கோபம் வரும். படர்ந்து வரவர கொடிக்குத்தான் ப்ராப்ளம். பாறாங்கல்லுக்குப் பிரச்னை இல்லை. அண்ணிலேருந்து இன்னிவரைக்கும் மிருகத்துக்கு பசிதான் பிரச்னை நமக்கு ஆயிரம்."

"இது ஏன்?"—நாணு சாரே கேள்வி கேட்டுக் கொண்டார்.

"வளர்ச்சின்னா இடைஞ்சல் உண்டு. இடைஞ்சலைத் தாண்டறதுதான் வளர்ச்சி."

"இனி வளர்ச்சியையும் நிறுத்த முடியாது. இடைஞ்சலையும் ஒதுக்க முடியாது. பூமியை விட்டுப் புத்திங்கிற இறக்கையை விரிச்சுப் பறக்க ஆரம்பிச்சாச்சு. இனி புத்தி இறக்கையை புடிச்சுக்கோன்னா முடியுமோ. முட்டிமோதி மொத்த மனுஷ குலமும் செத்துப்போகும். தொடர்ந்து பறக்கத்தான் வேணும்.

"கதை எழுதறது யோசிப்பதின் பலன். இன்னிக்குப் பிரச்னையை முழுசா முனை உடையாம யோசிக்கிறவன் அதை எழுத முயற்சி செய்யலாம். பாட்டாப் பாடலாம், வரையலாம். டான்ஸ் ஆடலாம். எல்லோரும் பாட முடியுமா, எழுத முடியுமா? வேரா சிலது வரும். கிளையா சிலது நிற்கும் இலையா பத்து, பூவா நாலு, பழமா ஒண்ணு. கிளையால இலை, இலையால பூ, பூவால பழம், பழத்தால விதை, விதையால வேர். அற்புதமான ப்ராஸஸ் இது. சகலமும் முக்கியம். ஒரு விஷயத்தின் உதவி மற்றதுக்கெல்லாம் வேணும்.

"நான் எழுதறது, எழுதினது ஒரு பெரிய ப்ராஸஸ்ல ஒரு சிறிய செயல்ங்கற நினைப்போடதான் எல்லோர்க்கும் பயன் படணும்தான்.

"என் அனுபவம் என் கதை. என் கதையைப் படிச்சு என் அனுபவம் உனக்கும் அனுபவமாறபோது என் வயசும் உன் வயசும் சேர்ந்து முப்பது வயசுக்கு அறுபது

வயசுப் பக்குவம் வந்துடும். வரலாம் இல்லையா. ஏன் எழுதறேன்னு கேட்டியே அதுக்கு இதுதான் பதில்.'—நாணு ஐயர் வாயைத் துடைத்துக்கொண்டார். காப்பி ஆறிக் கொண்டிருந்தது.

விஸ்வநாதன் பிரமித்துப் போயிருந்தான்.

இந்தக் கிழவன் லாரி கம்பெனி க்ளார்க்கா. தமிழ் வாத்தியாரா. தன்னுள் இவ்வளவு அடக்கி வைத்துக் கொண்டு அமிர்தமாய்ப் பொழிகிறதே! ஞானம் பொறி பறக்கப் பேசுகிறதே! இந்த வயதில் இத்தனை புத்திக் கூர்மையை அனுபவச் செழிப்பை வைத்துக்கொண்டு இது ஏன் லாரி கம்பெனி க்ளார்க்காக வந்தது, ஏன் தமிழ் வாத்தியராய் உழன்றது. ஏன் ஞானம் இறைப்பதையே, எழுதுவதையே தொழிலாய்க் கொள்ளாமல் போயிற்று.

மனதில் தோன்றியதை விஸ்வநாதன் கேள்வியாக்கினான்.

''ஞானத்துக்கும் தொழிலுக்கும் என்னப்பா சம்பந்தம்? இரை தேடறது நமக்கும் உண்டே, புத்தியை வயத்தாலே கட்டிப்போட்டிருக்கே. ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்ன்னு ஔவைக் கிழவி பாடறாளே. இரை தேட வேண்டாம்னா பாறாங்கல்லாய்ப் போயிடுவோம். பாறைக்குப் பிரச்னை இல்லை. மிருகம் மாதிரி இரை மட்டும் தேடற சுபாவமும் இல்லை. இரையும் தேடி ஞானமும் தேடி... அடடா. என்ன சுகம், எப்படிப்பட்ட போராட்டம், இது பனிஷ்மென்ட் இல்லை அம்பி. சுயமா புடம் போட்டுக்கற வித்தை சுவாரஸ்யமான விளையாட்டு.

''மிருகத்துக்குண்டான பசியும் வச்சு ஞானமும் கொடுத்திருக்கு மனுஷாளுக்கு.

''நாக்குட்டியை நிலைக்கண்ணாடி முன்னாடி வச்சா என்ன பண்ணும்? நக்கிப் பார்த்துட்டுத் திங்க முடியலைன்னு போயிடும். மனுஷன் நின்னா அடடே



நான் இவ்வளவு அழகான்னு யோசிப்பான். தன் இருப்பும் தெரிந்து எதிர்ப்பக்கம் போய்த் தன்னையே பாத்துக்கற சுபாவம் வர்றது. நாய்குட்டிக்கு இருப்பு மட்டும்தான் முக்கியம். மனுஷனுக்கு இருப்பும் தொலைவும் உண்டு. தொலைவுப் பார்வை இருக்கிறதாலே வீடும் அரிசி சேமிப்பும் வர்றது. இதற்குண்டான பிரச்னையும் வளர்ந்துடறது. படருவதால், வளர்வதால் வரும் பிரச்னை படர்ந்த இடம் மரமோ முள்ளுச் செடியோ மலையோ தரையோ—அந்தந்தச் சூழ்நிலைப் பிரச்னை.''

''நாம வளர்ந்திருக்கோமா சார்?''

''நிச்சயம் அற்புதமாய் வளர்ந்திருக்கோம்.''

காந்திலால் கனைத்தான்.

நாணு ஐயர் அவனைப் பார்த்துவிட்டுத் தலையசைத்தார்.

''சரி, இது பேசினோம்னா முடிவே இல்லை. இன்னொரு நாள் வச்சுப்போம். வந்த விஷயம் என்னன்னா...''

''அந்தத் திருப்பதி லாரி விஷயமாவா?''—விஸ்வநாதன் சட்டென்று கீழிறங்கினான்.

நாணு ஐயர் மெல்லப் புன்னகை செய்தார். பய கெட்டிக்காரன். டக்குன்னு தரைக்கு வந்துட்டான்.

காந்திலால் கைகூப்பினான். ''ஆபீஸ்ல பில் பாஸ் பண்ணமாட்டேங்கறாங்கோ சார். இனி லோடும் கிடையாதுன்னு பேசறாங்கோ. தவறு எங்கியும் நடக்கும். பத்து ட்ரிப்புல ஒண்ணு ஸ்லிப் ஆவும்!''

''நான் என்ன செய்யணும் காந்திலால்?''

''வேணும்னுட்டுச் செய்யலை சார். நடந்து போச்சு. வண்டி பிரேக்டவுன் பற்றி யாரும் சொல்ல முடியாது. எதிர் பார்த்து நடக்கறது இல்லை.''

''எங்க அவசரம் எங்களுக்கு.''

''இல்லைன்னு சொல்லலை சாமி. நான் வேணும்னுட்டுச் செஞ்ச மாதிரி சொல்றாங்கோ.''

''ஏன் அந்த லோடுக்கு பில் அனுப்பிச்சே?''

''முட்டாள்தனம்தான். எல்லாத்துக்கும் பில் போடற மாதிரி போட்டுட்டாங்க. பில் பணம் வாணாம். இனி வியாபாரமே இல்லைன்னா எப்டீ சாமி.''

''என்கிட்ட பேசி என்ன புண்ணியம்? நானா உன் லாரி எங்கேஜ் பண்றேன்.''

''இல்லை சாமி, அது நான் பார்த்துக்கறேன்? வண்டில போய் லாரி மாத்தி எடுத்து வந்ததைப் பெரிசு பண்ணாம நானும் கோவாப்ரேட் பண்ணினதை எடுத்துச் சொல்லணும்; இந்த லோடுக்கு மட்டும் டெலிபோன் கால் இருநூறு ரூபாய் ஆய்ட்டிருக்கும். நானும் சும்மா இல்லை விசு சார்.''

''புரியறது. இன்டைரக்டா உன்னை சப்போர்ட் பண்ணச் சொல்றே.''

காந்திலால் பேசாமலிருந்தான்.

''அது இல்லை. தப்பு இவர்தான் பண்ணினார்னு இதுல சொல்ல முடியாது. போறாத காலம். இவர் மாட்டிண்டு பதில் சொல்ல வேண்டியிருக்கு.''—நாணு ஐயர் மெல்ல இழுத்தார்.

''சரி, என்னால் இடைஞ்சல் வராது. ஆனா அன்னிக்கு நான் பட்ட கஷ்டம், தவிப்பு சாதாரணமில்லை காந்திலால் அதைவிடப் பெரிய தவிர்ப்பு வீட்ல சொல்லாமல் போய் இவகிட்ட வாங்கிக் கட்டிண்டது. இந்த அவஸ்தை எனக்குத் தேவையேயில்லை.''

நாணு சார் பட்டென்று விஸ்வநாதனை உற்றுப் பார்த்தார். விசு விழிகளைத் தாழ்த்திக் கொண்டான்.

''ஓ...உனக்கு வீடு சரியில்லையோ, பிணக்கு நிறைந்த வாழ்க்கையோ, அதுதான் இலக்கியம் தேடி அலைகிறாயோ?—நாணு சார் மனசுள் கணக்குப் போட்டார்.

'இது ஸ்லிப். இவர் எதிரே இதைச் சொல்லியிருக்கக் கூடாது.'—விஸ்வநாதன் மெல்ல மறுகினான்.

''அடடா. அது ஹிம்ஸைன்னா. அவளுக்கும் ஹிம்சை உங்களுக்கும் வேதனை! வெளியே போன புருஷன் வரலைன்னா பொம்மனாட்டி நிச்சயம் தவிக்கத்தான் செய்வா?''

''தவிப்பா''—படியருகே நின்றிருந்த தாரிணி முன்னேறினாள். ''வயிறே கலங்கிப் போறது மாமா. தண்டும் சிண்டுமாகக் குழந்தைகளை வச்சுண்டிருக்கேன். ஆறு மணிக்குத் தகவல் இல்லேன்னா என்னமோ ஏதோன்னு பதர்றது மனசு!

''வாஸ்தவம், வாஸ்தவம்''

''இவரா—லைட்டா எடுத்துக்கறார். வீட்டுக்கு வந்தா மட்டும் என்னா, சதா படிப்பு... பொய்ட்ரி. வீடு மொத்தமும் நான், கட்டித் தூக்க வேண்டியிருக்கு.''

''அடடா, சிரமம்தான். ஆனா தாயே நூத்துல ஒருத்தன்தான் எழுதறான். உன் புருஷன் சாதாரணமா எனக்குப் படலைம்மா''

''அசாதாரணம்தான். ஆனா யார் மெச்சிக்கிறா? ஆபீஸ், பொயட்ரியை பாராட்டறதா? பாராட்டற மாதிரி நாலு புஸ்தகத்தில் வர்றதா? எழுதி எழுதி தானே வச்சுக்க வேண்டியது. வெறும் குதிரைக் கவிதையா எழுதறார். எனக்கே ஒண்ணும் புரியலை.''

''அது என்ன குதிரைக் கவிதை?''

''என்னமோ டைரி முழுக்க நாற்பது அம்பது எழுதி வச்சிருக்கார். ஒண்ணும் புரியலை.''

விஸ்வநாதன் வேதனையுடன் முகத்தைத் துடைத்துக் கொண்டான் அவள் விமர்சனம் வலியளித்தது.

மனைவியே சவுக்கால் பிறர் முன் சொடுக்குவது இழிவாகப் பட்டது, 'ச்சீ... உள்ளே போ' என்று சீற லாம். ஆனால் அது மேலும் இழிவாகும்.

''விஸ்வநாதன், அந்தக் குதிரைக் கவிதை சொல் லுங்கோ கேக்கலாம்.'' நாணு ஐயா குனிந்து கொண் டார். வந்த காரியம் முடிந்துவிட்டது. கவிதை கேட்டால் என்ன தப்பு.

'இத்தனை விஷம் கூடாதுன்னா உங்களுக்கு' என்று தாரிணியின் கீச்சுக்குரல் மறுபடி காதில் மோதிற்று. குதிரைக்கு விஷமுண்டோ என்ற கேள்வி ஞாபகம் வந்தது. எதெதுக்கு விஷம் உண்டு. எவை கொம்பு உடையவை என்று கேள்வி வந்தது. அன்று எழுதிய கவிதை ஞாபகம் வந்தது.

தொண்டையைச் செருமிக் கொண்டான்.

அவல ஆடுகள் கூட இங்கே
கொம்புடன் ஜனித்ததாக
கீச்சுப் பூனைகள் கொண்டதிங்கே
கூரிய நகமும் பல்லும்
யாருக்கும் தீங்கு செய்யா நத்தைக்கும்
கல்லாய் ஓடு.
பச்சோந்தி நிறத்தை மாற்றும்
பல்லிவால் விஷத்தைத் தேக்கும்
குதிரைகள் மட்டுமிங்கே
கொம்பின்றிப் பிறந்ததென்ன?
வெறுப்புடன் பிறந்த மாக்கள்
பயத்தினைத் துணையாய்க் கொள்ள
விருப்புடன் பிறந்த குதிரை
கொம்பில்லை விஷமுமில்லை.
தர்மத்தைச் சொல்ல வந்தோர்
தடியோடா காட்சி தருவர்?



குதிரைகள் காதைப் பாரும்
உள்ளங்கை சிவப்பு தோற்கும்
இது குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் ஏழாம் பாடம்.

''சபாஷ் அற்புதம், தர்மத்தைச் சொல்ல வந்தோர் தடியோடா காட்சி தருவார். ரொம்பப் பிரமாதம். நான் என்னவோ நினைச்சேன். எனக்குப் புரியறது விஸ்வ நாதன். கவிதை உங்களுக்கு நெஞ்சிலேர்ந்து வர்றது. எனக்கு மொத்தமும் புரிகிறது. அடடா, விருப்புடன் பிறந்த குதிரை கொம்பில்லை, விஷமுமில்லை இத் தனை நேரம் பேசிய விஷயம் ஐயா இது. பூமில பிடிப்பு இருந்தா காதல் இருந்தா பயம் எப்படி வரும்? பயமில் லைன்னா விஷம் எதுக்கு. கொம்பு எதுக்கு கரெக்ட். வாழ்க்கையை நேசிக்கணும், நேசிக்கிறவாளுக்குத்தான் உலகம். அடடா, அடடா.''

விஸ்வநாதன் அசையாது உட்கார்ந்திருந்தான்.

நாணு ஐயர் அவன் தோள்மீது கை வைத்தார். உற்றுப் பார்த்தார்—நானிருக்கிறேன் என்பது மாதிரி மெல்லப் புன்னகை செய்தார். விஸ்வநாதனும் அந்தப் புன்சிரிப்பை வாங்கி மெல்ல எதிரொலித்தான்.

'எனக்குப் பரம சந்தோஷம் விஸ்வநாதன். நான் வெறும் வியாபாரம் பேசலைன்னு ரொம்ப சந் தோஷம். நாம அடிக்கடி சந்திக்கணும்.''

எழுந்து கை கூப்பினார்.

காந்திலால் கை குலுக்கினான்.

விஸ்வநாதன் தாரிணியோடு நடந்து வாசல் வரை வந்து வழியனுப்பினான். கார் நகர்ந்ததும் தோள் பக்கம் தாரிணி கிசுகிசுத்தாள்: ''இந்தக் கவிதை என் கிட்டச் சொல்லவேயில்லையே. இது நன்னாயிருக் குன்னா.''

விஸ்வநாதன் சிறிது ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தான்.

''கலைமகளுக்கு அனுப்பிப் பாருங்கோ, போடுவாளான்னு. போட்டாலும் போடுவா.''—உள்ளே திரும்பினாள்.

எதிரே மின்வண்டி தடதடத்துக் கடந்தது.

விஸ்வநாதன் வெகுநேரம் இணையாமல் நெடுந்தொலைவு போகும் தண்டவாளங்களையே வெறித்துக் கொண்டிருந்தான்.

## 17

இன்னும் இரண்டு மூன்று ஆட்களைப் பார்த்துவிட்டுத் தண்ணீர்த் தொட்டித் தெருவுக்குத் திரும்பியபோது பிற்பகல் மணி.

நாணு ஐயர் அயர்ந்து போயிருந்தார்.

''இனிமே கவலையில்லை சாமி. விஷயம் முடிச்சுட்டோம் உங்களுக்குத்தான் சிரமம். நீங்க வந்ததுல தான் அதிகம் வெரட்டாம இருந்தான். வயசுக்கு நம்ம ஊர்ல தனி மதிப்பு சாமி.''

''சரிதான். ஆனா முடியலை காந்திலால். கார்ல போயிட்டு வந்ததும் கஷ்டமா இருக்கு.''

''மன்னிச்சுக்கணும், என்னாலதான் சிரமம்.''

''பரவாயில்லை. ஒரு சின்ன உதவி செய்யணுமே எனக்கு.''

''சொல்லுங்க சாமி.''

''இப்ப மேலே போய் அக்கடான்னு படுக்கத்தான் முடியும். என்னால ஓட்டல்சாப்பாட்டுக்கு ஓடமுடியலை. வயிறு பிடுங்கறது.''

''என் வீட்ல சாப்டுங்க.''



''எத்தனை நாள் போடுவே?''

''புரியலையே சாமி.''

''எனக்கு ஒரு பொண்ணு இருக்கா, காயத்ரின்னு பேரு. பி.காம்., பாஸ் பண்ணிட்டு சும்மா இருக்கா, மன்னார்குடில. கூட ஒத்தாசைக்கு வரச் சொல்லலாமான்னு பாக்கறேன்.''

''சொல்லுங்களேன்.''

''என் சம்பளம் எனக்கே காணாது. இரண்டு பேர் சாப்டணுமே முடியுமா?''

''சாமி டைப்பிங் தெரிஞ்சா என் கம்பெனிலயே வேலை போட்றலாம்!''

''பேஷா செய்வோம். ஷார்ட் ஹாண்ட் டைப்பிங் அக்கௌண்டன்ஸி எல்லாம்தெரியும் ரொம்ப சூடிகை. ஆனா உனக்கு ஆள் தேவைதானா யோசனை பண்ணு''

''நிச்சயம் தேவை சாமி''

''பி.காம். படிச்ச பொண்ணுப்பா.''

''அட இங்க வந்து இருக்கட்டும். என்னால முடிஞ்சதைத் தரேன். அப்புறம் நல்ல வேலை கெடைக்காமலா போய்டும்.''

''அப்படித் தடக்குன்னு விட்டுட்டுப் போயிடமாட்டா. உனக்குச்சிரமம் வராதபடிபார்த்துக்கறேன்.''

''நானூறு ரூபா சம்பளம். சரிதானா?''

''நானூறு?''

''சரி ஐந்நூறு. நீங்களும் இப்படிக் கூட மாட வந்தீங்கன்னா சௌகரியம்.''

''ம்... அது செய்துடலாம்.''

''அப்ப நான் வரேன் ஐயா.''

''ராஜகோபாலா...'' நாணு ஐயர் முன் கடந்து படியேறினார்.

'சௌ. காயத்ரிக்கு அநேக ஆசீர்வாதம்.' என்று கடிதம் எழுதினார்.

காயத்ரிக்கு அரசாங்க பஸ்ஸில் இடம் கிடைக்கவில்லை. டூரிஸ்ட் என்று போட்டுப் பளபளப்புடன் இருந்த தனியார் பஸ்ஸில் டிக்கட் வாங்கினாள். பெரிய பெட்டியும் ஸ்டவ், அரிசி, பருப்பு டப்பா மூட்டையும் உள்ளே வைத்தாள். அந்த ஆம்னி பஸ் கடைத்தெருவில் நின்று சென்னைக்கு ஆள் அழைத்துக் கொண்டிருந்தது.

பஸ்ஸில் டேப் டெக் வைத்து பாட்டும் போட்டிருந்தார்கள், வெயில் ஆரம்பித்த ஒன்பது மணிப்பொழுதில் பஸ்ஸிலிருந்து பாட்டு அலறிற்று.

பனி விழும் மலர் வனம்
உன் பார்வை ஒரு வனம்
இனி வரும் முனிவரும்
தடுமாறும் கனிமரம்

எப்போது இந்தப் பாட்டை நிறுத்துவான்?

இவ்வளவு சத்தம் போட யார் உரிமை கொடுத்தார்கள்? நம் ஜனங்களுக்கு எல்லாமே ஏன் இரைச்சலாகவே பிடித்துப் போகிறது? கல்யாணம் சாவு, கொண்டாட்டம், பிரயாணம், ஊர்வலம் எல்லாமே ஏன் அலறுகின்றன. இவர்கள் மௌனமாய் இருக்கிற நேரம் எப்போது? தூங்கும்போது மட்டும்தானா? ஒரு வேளை கனவிலேயும் சண்டையும் சத்தமுமாய் இருப்பார்களோ? சாப்பிடும்போது பல வீடுகளில் மௌனம் வீற்றிருக்கிறது. பத்துப் பேர் சாப்பிடுகிற வீட்டில்கூட மெல்லுகிற சப்தம் மட்டுமே எதிரொலிக்கிறது.

ஆனால், அப்பாவோடு சாப்பிடுகிறபோதுதான் நிறையப் பேச முடியும். அம்மாவின் அதட்டலை மீறி நிறையக் கேள்வி கேட்க முடியும்.



''அப்பா, அந்தகரணம் என்றால் என்ன?''

அப்பா சாப்பிடுவதை நிறுத்திவிட்டு சாதத்தில் கை வைத்தபடி ஒரு நிமிடம் மௌனமாய்ப் பதில் தயாரித்தபடி இருப்பார்.

''அந்தக் கரணம்னா தன்னுள் தான் இறங்குதல். பார்வையை உள்பக்கம் புரட்டிப் பார்த்தல், தன்னை அறிதல்.''

''தன்னை அறிதல்னா என்னப்பா?''

''எப்படிம்மா இதுக்குப் பதிலாச் சொல்றது. வெளிப்புறத் தாக்குதலுக்குச் சிதிலமாகாமல் தனக்குள் நடக்கிறதை உணர்ந்து பார்க்கிறது. வெளிப்புறத் தாக்கத்தையும் வாங்கி ரிஜிஸ்டர் பண்ணிக்கிறது குளத்துக்கு மேல்தான் அலை. உள்ளே நிச்சலனம். மேல இருக்கிற அலையும் குளம் செய்த காரியமில்லை. அலையும் இருந்து அலையால் தன்னை பாதிக்கப் படாமல் இருக்கும் நிலை. புரியறதா?''

எனக்குள் என்ன நடக்கிறது. நான் யோசிக்கிறேன். இடையறாது யோசிக்கிறேன். வெளிப்புறத் தாக்கத்தில் யோசிப்பு இழை அறுந்துபோக எரிச்சலுறுகிறேன். மறுபடி இழையைத் தேடி யோசிக்கிறேன்.

இரைச்சலாய்ப் பாட்டு காதில் மோதும்போது கோபம் வருகிறது. அந்தக் கோபம் பாட்டே கேவலம் என்று நினைக்க வைத்துவிடுகிறது. இந்தக் கோபம் கூடாது. என் கோபத்தை எதிர்ப்படும் விஷயத்தின்மீது போட்டு மிதித்து விடக்கூடாது.

பாட்டு என்றதும் ஒரு பெண்ணின் டயரியில் எழுதி வைக்கப்பட்டிருந்த கவிதைகள் நினைவு வந்தன.

''அவ சேப்பா இருக்காடி. இவ சேப்புக்கே சட்டுன்னு கல்யாணம் நடந்துடும்.''—அக்கா அந்தப் பெண்ணை கைகாட்ட ஒருநாள் முழுவதும் மனசு கலங்கித்தவித்தது.

அக்கா அந்தச் சிவப்புப் பெண்ணை அறிமுகப் படுத்தினாள். அவள் வீட்டுக்குக் கூட்டிப்போனாள். அந்தப் பெண் டைரி எழுதுவாளாம். அவளுடைய டைரியை அவளுடைய நெருங்கிய ஸ்நேகிதிகள் படித்து விட்டுப் பரவசப்பட்டிருக்கிறார்களாம்.

''நீ படிக்கிறியா?''—அந்தப் பெண் தன் டைரியை நீட்டினாள்.

''உன் டைரியை நான் எப்படிப் படிக்கலாம். தப்பில்லையா?''

''அசிங்கமா எதுவும் இருக்காது. படிக்கலாம்.''—அந்தப் பெண் உத்தரவாதம் சொன்னாள்.

' அதற்கில்லை, டைரிங்கறது அந்தரங்கம் இல்லையா''

''நம்ம எல்லாருக்கும் ஒரே மாதிரி அந்தரங்கம் தானே. படிச்சா என்ன?''

பதிலில் தெரிந்த கெட்டிக்காரத்தனம் யோசிக்க வைக்க, டயரியை அவள் எதிரிலேயே பிரித்தாள்.

முதல் பக்கம் கலர் பென்சிலில் கோடு கட்டிக் கட்டம் போட்டு ஒரு கவிதை,

என் விழிகள் நட்சத்திரங்களோடு
உறவாடினாலும்
என் விரல்கள் என்னவோ ஜன்னல்
கம்பிகளோடுதான்

கீழே அந்தப் பெண்ணின் பெயர் எழுதியிருந்தது.

''இது நீ எழுதியதா?''

''இல்லை மு. மேத்தா.''

''உம் பேர் போட்டிருக்கே.''

''எனக்கு இந்தக் கவிதை பொருத்தமா இருக்கு அதனால போட்டுண்டேன்.''



''ஏது நீ ஜன்னல் கம்பியை விட்டு வரதேயில்லையா?''

''என்ன கேக்கறே?''

''நீ சந்தோஷமா இல்லையான்னு கேக்கறேன்''

''எப்படிச் சந்தோஷமா இருக்க முடியும்? ஆயிரம் கட்டுப்பாடு...இங்க போகாத...அங்கே போகாதன்னு.''

''யார் கட்டுப்படுத்தறா.''

''பெத்தவா, கூடப்பொறந்தவர் எல்லாரும்தான்.''

''ஏன்னு யோசிச்சயா?''

''நான் பொண்ணாப் பொறந்த வேளை''

'நோ'—காயத்ரி சீறினாள். ''உன்னை ரொம்ப டெக்கரேட் பண்ணிக்கிறே. பொண்ணாப் பொறந்ததுக்கு ரொம்ப சந்தோஷப்படற. இன்னும் நெறையப் பொம்மனாட்டித்தனம் வேணும்னு ஆசைப்படற. உனக்கு நன்னா உடுத்திக்கத்தான் தெரியும். உலகம் தெரியாதுன்னு உன்கூட இருக்கிறவாளை நெனைக்க வைக்கிற.''

''இந்த டைரியை படிச்சுட்டு எல்லாரும் ஓஹோன்னு பாராட்டினா... நீதான் என்னன்னமோ சொல்ற.''

அந்த டைரி முழுவதும் கவிதைகள், காதல் செய்திகள், சோக மயமான வேதனைகள். யார் யாரோ எழுதிய வரிகள். ஒவ்வொரு வரிகளுக்கும் கீழே தன் பெயரை எழுதி வைத்திருந்தாள். பூவை பிய்த்துச் சூடிக் கொள்கிற சுலபமாய் யார் வரியையோ எடுத்துத் தன் டைரியில் எழுதி தன் பெயரைப் போட்டுக் கொண்டிருக்கிறாள்.

காயத்ரி மௌனமாய் அவளை ஏறிட்டுப்பார்த்தாள். தேவையின்றி இவளிடம் நான் சீறுகிறேனா. கேள்வி கேட்காமல் பல தலைமுறைகள் தாண்டியாயிற்று. இவளை உலுக்கி என்ன பயன்? எனக்கே எது குறித்தும் தெளிவில்லை, இவளை அதட்டுவது அநாவசியம்.

கவிதை பற்றிப் பேசுகிறாளே விவாதத்துக்கு வருவாள் என்று பார்த்தால் துவஜஸ்தம்பாய் நிற்கிறது. பேயாய் முழிக்கிறது.

''ஆனால் சோகம் சுகமானது என்று, வலிய சோக மாக பாவனை செய்து கொள்வது எத்தனை அபத்தம். ஆனால் இங்கே சோகம் எல்லாருக்கும் பிடிக்கிற தென்று சோகம் விற்கிறார்கள். எது விலை போகும் என்று தெரிந்து அதையே கலையாக்குகிறார்கள்.

சோகம் மட்டுமில்லை. காதல் வர்ணனைக்கும் நல்ல விற்பனை.

ஆண்களை மயக்கக் காதல் வர்ணனை பெண்களை மயக்கச் சோகம் ததும்பும் காட்சிகள். இதில் எதுவும் சிக்காமல் மீண்டுவருவது நிறையப் பேருக்குச் சிரமம் தான்.

பஸ் கிளம்பியதும் பாட்டு நின்றுவிட்டது. ரூம் ரூம் என்ற டயர் சத்தம், டீஸல் நெடி, எஞ்ஜின் சூடு, எதிர்ப் படும் காற்று, பறக்கும் மரங்கள், மலைகள், மலைச் சரிவில் மந்தையாய் மேயும் ஆடுகள். நடுவே உயரப் பாறையில் துறட்டுக் கோலுடன் கோவணத்துடன் ஒரு சின்னப்பையன். 'அடே சின்னப்பையா, இத்னூண்டு வயசில் இவ்வளவு பெரிய பொறுப்பை எப்படி ஏற்றாய்? அத்தனை ஆடுகளையும் அடையாளம் தெரியுமா உனக்கு? உன் பேச்சு அதற்குப் புரியுமா? ஆடு பேசி னால் நீ புரிந்து கொள்வாயா? வெட்ட வெளியில் தன்னந்தனியாய்... யார் உனக்குச் சாப்பாடு எடுத்து வருவார்கள். குடிக்க ஜலம் எங்கே வைத்திருக்கிறாய் மலை முழுக்க ஆடுகளுக்குச் சாப்பிடத் தாவரம் இருக் கிறது. உனக்கு சாப்பாடு எடுத்து வந்திருக்கிறாயா?

''அடேய் சின்னப்பையா—உன்னை நான் நேசிக் கிறேன். இந்த பஸ்ஸிலிருந்து உனக்கு முத்தம் அனுப்பு கிறேன் உன்னை யாரும் கவிதையாக்கி இருக்கிறார் களா?''



காயத்ரிக்கு ஆடு மேய்க்கும் ஆசை வந்தது.

என் மனவெளியில் ஆயிரம்
மரபு ஆடுகள்
அறிவென்னும் துறட்டுக்கோலும்
அப்பா என்கிற கோவணமும்
தரித்து நிற்கிறேன்,
வேறு வழியில்லை;
நான் மேய்ப்பனாகத்தான் வேண்டும்.

ஆ...எனக்கும் கவிதை எழுத வருகிறதே. கவிதை தானா இது? அப்பாவைக் கேட்க வேண்டும்.

ஹைகோர்ட்டுக்கு பின்புறம் உள்ள பஸ் ஸ்டாண்ட் வாசலில் துள்ளி இறங்கிய காயத்ரியை நாணு ஐயர் காத்திருந்து வரவேற்றார். தன்னை நெருங்கிய மகளின் தலையைக் கோதி நெற்றியில் முத்தமிட்டார். ஒரு மளிகையின் பெருங்கதவுகள் திறந்ததென பரப் பான சென்னை நகரம் காயத்ரியை வரவேற்றது.

## 18

கோதுமை மூட்டை மொத்தமும் இறக்கியபின்னும் லாரியைக் கிணற்றிலிருந்து மீட்பது சிரமமாயிருந்தது. குடத்துக்குள் டம்ளர் சிக்கின மாதிரி எப்படிக் கட்டி இழுத்தாலும் முட்டி நின்றது. மீறி வலுவுடன் க்ரேன் தூக்கும் போது பாரம் தாளாமல் முன்பக்கம் இழு பட்டது, க்ரேன் டிரைவர் திண்டாடினான். இறங்கி வெற்றிலை போட்டுக் கொண்டான். புகையிலை அடக்கிக் கொண்டான். மீண்டும் உட்கார்ந்து கியர் களை இயக்கி உயரத் தூக்க முயற்சி செய்தான். அப்படியும் கிணற்றில் துருத்திக் கொண்டிருந்த ஒரு கல் லாரியை எழ ஒட்டாமல் செய்தது.

''சிறுக்கி மவன். நாய்க்குப் பொறந்தபய. வாட்டமா சந்துல சொருகிட்டு ஓடியே புட்டான் பாரேன். போட்டு வலிக்கிறதுக்கே மனசு வர்ல பாய். பளிச்சுனு தூக்கிடுவேன். அடி தாளாம லாரி ரெண்டாப் புட்டுக்கிச்சுன்னா.''

ராவுத்தர் பேசாமல் வேதனை கவிழ்ந்த முகத்தோடு நின்றிருந்தார்.

ஆங்காரமாய் க்ரேன் உறுமிப்பளுவில் தவிக்க, லாரி அசைந்தது. சுவர்பக்கம் உராய்ந்தது. கிரீச்சிடும் போதெல்லாம் நெஞ்சில் ரத்தம் வடிந்தது.

சுவரில் முட்டி மோதிய காயம் மட்டுமல்லாது மீட்கப் படுகையிலும் லாரியின் பக்கச்சுவரும் முன் பக்கத் தகரமும் கிழிபட்டன.

பிள்ளைப்பேறுக்குத் தவிக்கிற கர்ப்பிணி மாதிரி க்ரேன் முனகலும், தொப்புள் கொடி சிக்கிப் பனிக்குடநீர் குடித்த குழந்தையின் அலறலாய் லாரி ஓசையும் ராவுத்தரை வாட்டின.

''பாய், அவனை எங்கனா பார்த்தா நெஞ்சிலியே ஏறி மிதி சொல்றேன். டிரைவரா அவன். பேமானி, காஞ்ச ஆறு தாண்டறப்ப சூடு தாங்காம கொளந்தையைப் போட்டு நின்னாளாமே ஒருத்தி அந்த மாதிரி வண்டியைப் பொதச்சிட்டுப் பூட்டான் படுபாவி.''—க்ரேன் டிரைவர் புலம்பிக் கொண்டிருந்தான். ''சொல்லு பாய். பளிச்சுன்னு இழுத்துறட்டுமா?''—மூணு மணி நேரம் பேராட்டம் தாங்காமல் சொன்னான். ராவுத்தர் சொன்னான். ராவுத்தர் சரியென்று கையசைத்தார். விலகிக் கொண்டார்.

கூச்சல் போட்டுக் கொண்டிருந்த கூட்டம் பின்னால் நகர்ந்தது, அமைதியாயிற்று. க்ரேன் டிரைவர் கியர்களைத் தொட்டுக் கும்பிட்டுக் கண் மூடிச் சில நிமிடம் உட்கார்ந்திருந்தான். 'நைனா கைவுட்றாதடா' என்று க்ரேனிடம் பேசினான். மெல்ல மெல்ல எஞ்ஜின்வேகம் கூட்டிக் கியர்களைத் தழைத்துக்



கட்டியிருந்த கம்பிக் கயிறுகளில் வலுவேற்றுப் பளிச்சென்று மாற்றி முழு உயரம் கொடுத்து வண்டியை இழுத்தான். நச்சென்று கல்லில் லாரி முன்பகுதி இடி வாங்கிற்று. நறநறவென்று கயிறுகள் உரச மேலே நகர்ந்தது. நீட்டிக்கொண்டிருந்த பாறைக்கல்லும் லாரி முன் பகுதியும் அழுந்தித் தவித்தன. உயிருள்ள ஜந்துக்கள் போல் போராடின.

''கோவிந்தா, வெங்கட்ரமணா. ஏடுகொண்டலவாடா, சீனுவாசா, தாமோதரா.''—க்ரேன் டிரைவர் கூவ, கூட்டம் எதிரொலித்தது. பளிச்சென்று கம்பிக் கயிறுகள் அறுந்தன. க்ரேன் சுழன்று பேயாட்டம் ஆடிற்று. லாரி தடால் என்று பெரும் சப்தத்துடன் கிணற்றில் விழுந்தது. யந்திரமும் மனிதனும் ஒன்றாய் தோற்றுப் போனார்கள். க்ரேன் டிரைவர் வேதனையுடன் கீழிறங்கினான். இடது வலது காலால் மாறி மாறித் தன் க்ரேன் வண்டியை எட்டி உதைத்தான்.

''கெட்ட பேரு வாங்கிக் குடுத்திட்டல்ல, போ உன்னையும் எங்கியாவது பாழும் கெணத்திலே தள்ளிர்றேன் போ?''—மறுபடி எட்டி உதைத்தான்.

ராவுத்தருக்குக் கண்கள் இருண்டன. முழங்கால் வலித்தது. மெல்லத் தரையில் குத்திட்டு உட்கார்ந்தார். தொப்பியை எடுத்துவிட்டுத் தலையைத் துடைத்துக் கொண்டார். ஊர் ஜனம் லாரியை விட்டுவிட்டு ராவுத்தரைச் சூழ்ந்துகொண்டது. உண்மையில் கிணற்றில் தள்ளப்பட்டது ராவுத்தர்தான் என்று ஜனத்துக்குப் புரிந்திருக்க வேண்டும். ஐயோ பாவம் என்று சூள் கொட்டியது.

கிணற்றுக்குச் சொந்தக்கார ரெட்டியார் மெல்லக் குனிந்து ராவுத்தரைத் தோளைத் தட்டிக் கொடுத்தார். ரூபாய் இரண்டாயிரம் நஷ்டஈடு என்று எழுதிக் கொடுத்த வெள்ளைத் தாளை மடித்து ராவுத்தரின் தோல் பை மீது வைத்தார்.

''நானும் லாரி ஓட்டி நொடிச்சவன்தான் ஐயா. எனக்கு உங்க காசு வேணாம். குத்துப்பட்டவன் பையிலிருந்து துட்டு எடுக்குறது பாவம். நான் வரேன்.''— சாலையேறிக் கிராமத்துக்கு திரும்பினார்.

ராவுத்தர் பையிலிருந்து சால்வையை விரித்தார். தொப்பி அணிந்து கொண்டார். வானம் பார்த்துத் திசை தெரிந்தார். நெற்றி நிலம் அழுந்தத் தொழுதார். மௌனமாய் உள்ளுக்குள் அழுதார்.

பெரியபாளையம் போலீஸ், தீயணைப்புப் படைக்குச் சேதி சொல்லிற்று. ''அவன் பைப்புலோடு இருக்கறவன். அவனுக்கு லாரி எடுக்கிற வேலை தெரியுமா, ஏங்க பெரியவரே, முதல்லயே எங்களைக் கூப்பிடக் கூடாது?''

தீயணைப்புப் படையினர் வேலை தெரிந்தவர்கள். மேலும் கயிறு அறுந்து லாரி செங்குத்தாய் இறங்கியது, சௌகரியமாய் இருந்தது.

முன்பக்க காபின் முற்றிலும் சிதிலமாகி க்ரேன் நுனியில் சில நிமிடங்கள் செத்த மீனாய் லாரி தொங்கிற்று. அலட்சியமாய்த் தரை தொட்டது.

உடைந்த வீலுக்குப்பதில் ஸ்டெப்னி மாட்டப்பட்டது. இன்னொரு லாரி துணையோடு முன்பக்கம் உயர்த்தப்பட்டுப் பின்பக்கச் சக்கரங்கள் மட்டும் சுழல 'இழுவையில்' என்று எழுதப்பட்டுச் சென்னை நோக்கிப் பயணப்பட்டது. தீயணைப்புப் படையினருக்கு, க்ரேன் டிரைவருக்கு, கம்பி கட்டியவனுக்கு, கத்தியவனுக்கு, கம்பி வாங்கி வந்தவனுக்கு என்று சகலருக்கும் ராவுத்தர் பணம் இறைத்தார். நெஞ்சுச்சுமையோடு சென்னை வந்தார்.

தண்ணித்தொட்டித்தெருமுனையில் பூவரச மரத்துக்கருகில் லாரியை நிறக வைத்தார். தண்ணித் தொட்டித் தெரு டிரைவர்கள், க்ளீனர்கள், உரிமையாளர்கள், புரோக்கர்கள், கூலியாட்கள், கூடை சுமப்பவர்கள், தெருவில் போவோர்—வருவோர் அத்தனை பேரும் வந்து பார்த்தார்கள். வெவ்வேறு தெருக்களிலிருந்து செய்தி கேட்டு ஓடிவந்து பார்த்தார்கள்.



நடேசமுதலி கிடங்கு அருகே அசையாது நின்றிருந்தார். காரை விட்டிறங்கியதும் ராவுத்தரிடமிருந்து தோல் பையை வாங்கிக் கொண்டார். பையைப் பிரித்துக் கிடங்கு சாவியைப் போட்டார்.

வீட்டுக்கு நடக்கத் தலைப்பட்ட ராவுத்தரிடம் காந்திலால் மேத்தாவின் கடை வாசலில் நின்றிருந்த மோட்டார் சைக்கிளைச் சுட்டிக்காட்டினார்.

அந்த புல்லட் மோட்டார் சைக்கிளில் வயர்லெஸ் பொருத்தப்பட்டிருந்தது. அவ்வப்போது தொண்டைச் செருமலோடு பேசிற்று போலீஸ்.

ராவுத்தர் கேள்விக் குறியுடன் நடேச முதலியைப் பார்த்தார்.

நடேச முதலி ஆமென்று தலையசைத்தார்.

''நம்ம லாரியைப் பார்த்துட்டாங்களா?''

''பார்த்துட்டாங்க.''

''என்ன ஆச்சு?''

''எல்லாம் தெரிஞ்சு போச்சு.''

''எப்படி?''

''காட்டிக் குடுத்திருக்காங்க.''

''ஆளு யாரு?''

''தண்ணித்தொட்டித் தெரு ஆளுங்கதான். இன்னார்னு இப்பச் சொல்ல முடியலை. நூல் புடிச்ச மாதிரி நேரா நம்ம லாரியாண்ட வந்து பம்பரு பாத்தாரு· உங்களை கேட்டாரு விவரம் சொன்னேன்.''

''கைது பண்ணிட்டாங்களா?''

''இல்லை. உங்களுக்காகக் காத்திருக்காங்க.''

''எப்படிப் பேசறாங்க?''

''ரொம்ப மொறப்பா. மூடி மொளுகிடலாமுன்னு பார்த்தீங்களா? போலீஸ்னா கிள்ளுக் கீரையா? உங்க கூட்டத்துல எவண்டா யோக்கியன்? கொலை பண்ணிட்டுச் சம்பாரிக்கப் பாக்கிறீங்களா? அது நடக்காது, அது இதுன்னு பேசறாங்க.''

''காந்திலால் மேத்தாகிட்ட என்னா?''

''அவரு அடக்கி, உள்ள டீ சாப்பிடக் கூட்டிப் போயிட்டாரு.''

''ரெண்டு லாரி மடக்கினா நான் தாங்கமாட்டேனே முதலி.''

''சோதனைக் காலம் ஐயா.''

''முடிவு காலம் முதலி.''

''ஆத்தோட போயிட்ட கரை தெம்படாதயா போய்டும்.''

''கண்மாய்ல சொருகிடுச்சே.''

''தெய்வம்னு ஒண்ணு இருக்குய்யா. நாம யாரையும் கெடுக்கலை. கெடுக்கத் தெரியாது நமக்கு.''

''கெடுக்கத் தெரியாத குறைதானா இத்தனை அடியும் வேதனையும். கோதுமை வண்டியைப் பாத்தீங்களா?''

''பாத்துட்டு வர்ற ஜனம் பேசறதைக் கேட்டேன். வரதனைப் பார்த்தீங்களா?''

''காணோம்.''

''நன்னி கெட்டவன். நல்ல சாவு வராதுங்க அவனுக்கு.''



''வேணாம் முதலி, நம்ம வாயால வேணாம். எப்ப எந்தக் கூட்டைக் கலைச்சிட்டோமா தெரியலை, இன்னிக்கு நம்ம குடி கலைஞ்சு போச்சு.''

''குடி கலையற அளவுக்கு நட்டமா? என்னாண்டை காசு உண்டு மொதலாளி. பதினெட்டு ரூபா சொச்சம் பாங்கில இருக்கு.''

''வட்டிக்கு வாங்கறதும் குடுக்கிறதும் பாவம், மதத் துரோகம். வட்டியில்லாத காசு வாங்கி நாம ரத்த பந்தமா?''

''பிரிச்சிப் பேசறீங்க மொதலாளி.''

''வாயும் வயிறும் வேற முதலி. வண்டிய வித்துப் போடுவோம். மறுபடி மொதல்லேர்ந்து ஆரம்பிப்போம். தரகருகிட்டச் சொல்லுங்க—கோதுமை வண்டி விலைக்குக் கிடைக்குதுன்னு.''

ராவுத்தர் முதலியைக் கிடங்கு திறக்கச் சொன்னார். விளக்கு போட்டுவிட்டுக் கல்லாவில் உட்கார்ந்தார். காந்திலால் கடைக்கு ஆள் அனுப்பித் தம் வருகையைத் தெரிவித்தார்.

''என்னங்க ராவுத்தரே, ஆள் அடிச்சிட்டுப் பேசாம உக்காந்திருக்கீங்க.''

முழு போக்குவரத்து உடையில் முழு: நீள சார்ஜ் ஷீட் புஸ்தகத்துடன் இன்ஸ்பெக்டர் நடராஜன் படியேறினார்.

''வாங்க ஆள் அடிச்சதா நீங்கதான் சொல்றீங்க. கேட்டுக்கறான்.''

''அடடே. கேட்க ஆள் இல்லேன்னா அப்படித் தான் அடிப்பேன்னே சொல்வீங்க போலிருக்கே.''

''பகையா பந்தமா? தெருவுல போற ஆள் வண்டில அடிபட்டது கொலையில்லை இன்ஸ்பெக்டர்.''

''விபத்துத்தான், நிறுத்தி யார்ன்னு பார்த்து போலீஸ்"க்குச் சொன்னா விபத்துத்தான். ஓடி வந்துட்டா கொலைன்னுகூடச் சொல்லலாம்.''

''சொல்றதுக்கென்ன சொல்லுங்க. ஆடும் கோழியும் அரைபட்டாலே ஜனங்க வெட்டிப் போடுவாங்க. ஆளு அடிபட்டா என்ன நடக்குமோ.''

''அதனாலே...''

''ஓடி வந்துட்டான்.''

''ஆக ஒப்புக்கிறீங்க.''

''அது கடவுள் சித்தம்.''

''அட அவ்வளவு ஒழுக்கம் பேசறவரு அங்க வந்து ரிப்போர்ட் பண்ணலாமில்ல?''

''வேற வண்டி விபத்து ஆச்சுது. அதுக்குப் போயிட்டேன்.''

''ராவுத்தர் கம்பெனின்னா ராவுத்தர்தானா இங்க எல்லாமும். பத்து ஆளு இருக்கானுங்க கோடவுன்ல. ஆனா ஒருத்தனும் வாயைத்தொறக்கமாட்டேங்கறான், வண்டி ஓட்டினது யாருன்னு தெரியாது. வண்டி யாருது தெரியாது. ராவுத்தர் எங்க தெரியாது. எப்ப வருவாரு தெரியாது.''

''யாரோ ரிப்போர்ட் பண்ணித்தானே வந்திருக்கீங்க. அப்புறம் கேள்வி எதுக்கு?''

''கேள்வி கேக்கறது எங்க வேலை. முதல் குத்தம் ஆள் அடிச்சது. இரண்டாவது நிறுத்தாம ஓட்டி வந்தது. மூன்றாவது மறைச்சது.''

''எதுவும் மறைக்கலை இன்ஸ்பெக்டர், படி ஏறினதும் ஒத்துக்கிட்டேன்.''

''பிடிச்சதும் வர உண்மைக்குப் பேரு ஒப்புதலா?''

''வாசல்ல எழுதியா ஒட்டுவாங்க?''



''இடக்குப் பேசறிங்க ராவுத்தர். போலீஸ்கிட்ட இடக்கு உதவாது.''

''என் நேரம் அப்படிப் பேசச் சொல்லுது. நான் வலில இருக்கேன் இன்ஸ்பெக்டர்.''

''அதுபத்திக் கவலை இல்லை:''

''என் பதில் பத்தியும் கவலைப்பட வேணாம்.''

''ஓ, திமிரான ஆள்னு சொன்னது சரிதான்.''

''யார் சொன்னது?''

''ஏன் பேர் சொல்லிட்டா வெட்டிப் போட்டுருவீங்களோ? இல்ல லாரிலே இடிச்சுட்டுப் பம்பரை ரிப்பேர் பண்ணிடுவீங்களோ?''

ராவுத்தர் வேதனை தாங்காது முகம் சுருங்கினார். உள்ளே கோபம் பொங்கிற்று. 'கருணையுள்ளவனே. அல்லாவே என்னை என்னிடமிருந்து காப்பாற்று. தீங்கு செய்பவரை உன் அருள் பார்வையால் மாற்று.''

''என்ன பேச்சையே காணோம்?''

''உங்களாண்டே பேச்சு எதுக்கு?''

''கோர்ட்ல பேசிக்கிடறேன்னு சொல்றீங்களா?''

''அங்கே நிதானமா சந்தேகமா கேப்பாங்க, தீர்மானமாப் பேசமாட்டாங்க.''

''இதுல ச்ந்தேகம் வேறயா, விரலை உடைச்சுக் கையெழுத்து வாங்கிட மாட்டேன்.''

''அப்டீ எதுவும் செய்துடவாணாம். எங்கக் குத்தம் இல்லேன்னாத்தானே விசாரணை.''

''அப்பக் கூப்பிடுங்க ஓட்றவனை.''

ராவுத்தர் நடேச முதலியைத் திரும்பிப் பார்த்தார். நடேச முதலி கையசைக்க இருட்டில் ஒதுங்கியிருந்த செல்லத் தம்பி வெளிச்சத்துக்கு வந்தான்.

''வாடா செல்லத்தம்பி, வண்டி ஓட்டினது யாரு?'' இன்ஸ்பெக்டர் நடராஜன் அவன் வருகையை எதிர் பார்த்தது போல் எக்களித்தார்.

சகலமும் சொல்லியிருக்கிறார்கள். யாரோ கூட இருந்து மொத்தமும் பிட்டு வைத்திருக்கிறார்கள். யார்? யார் அது? ராவுத்தர் நெற்றியை நீவிக் கொண்டார்.

''ஏண்டா முழிக்கிறே, உம் பேரு எழுதிடவா? பேனாவைப் பிரித்தார்.

செல்லத்தம்பி தலையசைத்தான். நீட்டின இடத்தில் கையெழுத்துப் போட்டான்.

ராவுத்தரிடமும் கையெழுத்து வாங்கினார். வண்டியின் ரெஜிஸ்டிரேஷன் புத்தகமும் செல்லத்தம்பியின் டிரைவிங் லைசென்ஸும் இன்ஸ்பெக்டரிடம் சரணாயிற்று.

''ம்ம்ம். உங்க ஜாதி ஆளைக் காப்பாத்திட்டீங்க.'' —மறுபடி உரத்த குரலில் இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

நடேச முதலி அந்தச் சிரிப்பு சூட்சுமம் கண்டு பதறினார். ''அப்படிப் பேசாதீங்க ஐயா. மொதலாளி அந்த மாதிரி பார்க்கறவரு இல்லே.''

''பின்னே என்னய்யா, இவன் என்ன பாவம் செஞ்சான் கம்பி எண்றதுக்கு?''

''அது ஒப்பந்தங்க. அதை கேக்க வேணாம்.''

''ஒழிங்க எப்படியோ. செல்லத்தம்பி, நட ஸ்டேஷனுக்கு.''

செல்லத்தம்பி சைக்கிள் ரிக்ஷாவில் ஏற்றப்பட்டான். தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான். ரிக்ஷா, மோட்டார் சைக்கிள் பின்னே நகர்ந்தது.

வண்டி மறையக் காத்திருந்தவள் போல் கௌசல்யா பம்பாய் கோடவுன் சந்திலிருந்து ஓடி வந்தாள்.



''ஐயோ, அடிச்சு இட்டுக்கினு போறாங்களே. என் ராசாவே. ஒரு பாவமும் பண்ணாத பொறப்பாச்சே. கூறுகெட்டவன். எவனோ குடி கெடுத்துட்டானே. மகமாயி... கேட்பாரில்லையா? காட்டிக்கொடுத்தவன் வாழப் போறானா நா பார்க்காத போறேனா— ஆத்தா உம்பேரு சொல்லி மண்ணு போடறேன். அவன் நாசமாப் போவ... நல்லபாம்பு புடுங்க... அவன் பெண்டாட்டி தாலி அறுவ... அவ பூச்சுத்தாத போவ அவன் போற வழில காலு முறிய...'' கைவிரித்து மண் இறைத்து அவள் கதறக் காயத்ரியும் நாணு ஐயரும் ஆட்டோவில் வந்திறங்கினார்கள்.

காயத்ரி கௌசல்யாவை வியப்புடன் பார்த்தாள். இவள் யாரையோ திட்டுகிறாள், இதில் ஒரு கவிதை இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

கௌசல்யா பேச்சை ரஸித்துக் கேட்டபடி கே. ஆர். வடிவேலு குடிக்க ஆரம்பித்தான்.

## 19

''உம் பேரு என்ன?''

''கௌசல்யா.''

கௌசல்யா காலையில் குளித்துவிட்டு மஞ்சள் பூசிப் பெரிய பொட்டு இட்டு தலைக்கு எண்ணெய் தடவிக் கொண்டை முடித்து, துவைத்த ரவிக்கையும் புடவையுமாய் பளிச்சென்று இருந்தாள்.

''நேத்து ராத்திரி நீதானே யாரையோ திட்டினே?''

''பார்த்தீங்களாம்மா நா கவனிக்கலியே.''

''யாரைத் திட்டினே. எதுக்கு?''

''இது என்னடா இது, ஐயரு பொண்ணு மடக்கி மடக்கிப் போலீசு மாதிரி கேக்குது. ஐயரே, அம்மாவ இட்டாரலியா?''

''அழைச்சுண்டு வரலாம். நீ தெருவிலே சண்டை போடறது பார்த்தா அவளுக்கு ஜுரம் வந்துடும். அதான் விட்டுட்டு வந்துட்டேன்.''

''ஆமா, தெரு பூராவும் சொல்லியாச்சு என் சண்டைய, நீதான் பாக்கி. இதுதான் மூத்ததா?''

''ரெண்டாவது.''

''ரெண்டாவதா? மூத்தது கட்டிக் குடுத்திட்டியா?''

''இன்னும் இல்லை.''

''இது சமஞ்சே வருஷமாயிட்டிருக்கும் போல. ஏன் இன்னும் மூத்தது கட்டிக் குடுக்கல.''

''பகவான் கண் தொறக்கலை.''

''இதுவே பாக்க சுள்ளுனு இருக்கு, மூத்தது பாத்து பகவான் கண் தொறந்தாதானே கட்டிக்கிறேன்னுடு வான் ஆண்டாளம்மாவைக் கட்டிக்கிட்டா மாதிரி.''

காயத்ரி கலகலவென்று சிரித்தாள்.

எவ்வளவு அழகு இவள் பேச்சில். இந்துக்களுக்கு மதம் எவ்வளவு ஒட்டுதலாய் இருக்கிறது. ஆண்டாள் திருக்கல்யாணம் எவ்வளவு அழகாய் உதாரணம் காட்டப்படுகிறது.

''ஐய்ய... என்ன சிரிக்கிற?''

''ஒண்ணுமில்லே.''

''சொல்லேன் நான் பேசினது தப்பா?''

''தப்பில்லே. இன்னித் தேதிக்கு அப்படி யாராவது கடவுள் மாதிரி வந்து கேட்டா எங்கக்கா சரின்னுடுவா.''



''பொட்டப் புள்ளைங்க என்னம்மா பண்ணும். உன்ன மாதிரி வேலைக்குன்னு வந்துட்டா இதச்சொல்லியே ஒத்திப்போடலாம், வூட்டோட இருக்கற பொண்ணுதான் கல்யாணம் கட்டிக்கப்பறக்கும்.''

ச்சே .. மார்வலஸ், உண்மைகள் எவ்வளவு சுலபம் அறிந்துகொள்வதற்கு, எவ்வளவு கூர்மையாய் இது சொல்லப்படுகிறது.

''அக்காவுக்குக் கல்யாணம் கட்டத்தான் நான் வேலைக்கு வந்திருக்கேன்.''

''செய் ராசாத்தி, நல்லாச் செய். ஆனா கேடுகெட்ட ஊரு இது. சாக்ரதையா இரும்மா.''

''உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா கௌசல்யா?''

கௌசல்யா முகம் இருள சட்டென்று நின்றாள். ஒரு கணம் செல்லத்தம்பி மனசில் நிழலாடினான்.

''நான் என்னம்மா அப்பன் ஆயி இல்லாதவ. நாய் குட்டி போட்டதும் கண் தொறக்குறதுக்குள்ளாறப் பிரிச்சுக் குடுத்தா மாதிரி தண்ணித் தொட்டித் தெருவுல ஒதுங்கிட்டேன். எவன் கட்டிக்குவான். கட்றேன்னு கையடிச்சவனையும் நேத்து போலீசு புடிச்சுக்கிட்டுப் போயிடுச்சு.''

''அதான் திட்டினியா? எதுக்கு உன் ஆளைப் பிடிச்சுண்டுப் போறாங்க.''

''அவன் சுதந்திரப் பறவை. அதிகம் கிளறாதே.'' — நாணு ஐயர் ஆங்கிலத்தில் எச்சரித்தார்.

''பாரு. உங்கப்பா என்னவோ இங்கிலீஷ்ல திட்டறாரு என்னை.''

''உன்னைச்சொல்லலை. என்னாண்டே பேசறாரு, நேரம் ஆயிடுச்சுன்னு.''

“ஆமா. கிளம்பு. நான் பெருக்கிட்டுப் போய்ட றேன்”—குடிசையைப் பெருக்கி வெளிவராந்தாவையும் பெருக்கிக் குப்பையை வாரினாள்.

“காயத்ரிம்மா...” மெல்லக் கிசுகிசுத்தாள்.

“என்ன கௌசல்யா.”

“உங்கிட்டப் பழம் பொடவை எதனாச்சு இருந்திச் சுன்னாக் கொடேன், நான் கட்டிக்கிறதுக்கு.”

காயத்ரி சிரித்தாள்.

“என்ன சிரிக்கிறே சும்மானாச்சும்.”

“எங்கிட்ட இருக்கிற எல்லாப்புடவையுமே பழசு தான். எதன்னு குடுக்கிறது. நான் முதல்மாசம் சம்பளம் வாங்கிப் புது புடவை எடுத்ததும் உனக்கு ஒரு பழசு தரேன்.”

கௌசல்யாவுக்கு இந்த உண்மையான பேச்சு பச்சென்று ஒட்டிக்கொண்டது.

“வெள்ளையாப் பேசறம்மா நீ. மறப்பில்லாம.”

“மறைக்கறதுக்கு இதில் என்ன இருக்கு கௌசல்யா. உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நீ பெருக்குற, நான் டைப் அடிக்கப் போறேன். அவ்வளவுதான்.”

“என் தாயீ உனக்கு நெறைய புது புதுசாப்புடவை கிடைக்கணும். நீ உடுத்தின பழசு நான் உடுத்தணும்.”

“நிறைய புதுசு கெடைச்சா உனக்குப் பழசா தருவேன் புதுசே குடுத்துடுவேன்.”

“என் ராசாத்தி, பேச்சா இது. வெல்லப் பாகு. ஈரமா நெஞ்சிலேர்ந்து வருது. நல்லா இரும்மா. நான் வரேன், உனக்கு எதுன்னா வேணும்னா என்னைக் கூப்பிடு. அன்னாண்ட எட்டிப்பார்த்தா பாம்பே கோவுடன் தெரியும். அங்கேதான் இருப்பேன். குரல் குடு போதும், வந்துடுவேன்.”



கௌசல்யா காயத்ரிக்குச் சென்னையில் முதல் ஸ்நேகிதியானாள். படியிறங்கிப் போனாள்.

கௌசல்யா படியிறங்கிப்போனதும் காயத்ரி அந்த மூன்றாம் மாடியிலிருந்து சென்னையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். அந்த எட்டரை மணி காலையில் கடற்காற்று சுருட்டிச் சுருட்டி முகத்தில் அடித்தது. கட்டடங்கள் பொதுக்கூட்டத்துக்கு வந்து உட்கார்ந்திருக்கிற ஜனங்கள் மாதிரி நெருக்கமாய் அதே சமயம் ஒழுங்கற்று இருந்தன. ஒவ்வொரு கட்டடமும் ஒவ்வொரு விதமாய் மனித முகம்போல் தனித்தனி ரூமாய்த் தெரிந்தன. இடது பக்கம் நீண்ட கூட்ஸ் வண்டிகள். தெருவை அடைத்துக்கொண்டு லாரிகள், மஞ்சள் முதுகு டாக்ஸிகள்.

“ரொம்பக் கச்சாடாவா இருக்கும் போலிருக்கே பட்டணம்.”

“இந்தப் பக்கம் கொஞ்சம் கச்சாடாதான். தெற்குப் பக்கம் அடையாறு, இந்திரா நகர் ஒகோன்னு இருக்கு? ஒருநாள் காந்திலால் கூட்டிண்டு போனான், இது ஹார்பர். கிட்டக்க ரயிலடி. கொஞ்ச தூரம் போனால் பெரிய மார்க்கெட் கொத்தவால் சாவடின்னு மெட்ராஸுக்கு வேணுங்கற சாமான் அத்தனையும் அங்கதான் வரது போறது.”

“பீச்சுக்குப் போனியா?”

“இல்லேம்மா. ஒரு தடவை அந்த வழியாக வந்தேன். வேணா இன்னிக்குச் சாயங்காலம் போலாம். உனக்குத் தேவையானது எல்லாம் கொண்டு வந்திருக்கிறாயா? ஏதும் வாங்கணுமா?”

“எதுவும் வேண்டாம்பா. இன்னிக்கே சேர்ந்துடவா?”

“இரண்டு நாள் கழிச்சுச் சேரு. இன்னுக்கு உனக்கு எட்டாம் நட்சத்திரம். யோகம் சரியில்லை.”

''இரண்டு நாள் சும்மா இருக்கணுமேப்பா.''

''படுத்துத் தூங்கு. கௌசல்யாவைக் கூட்டிண்டு சினிமாவுக்குப் போ, ஏதாவது படி.''

ஹிண்டு இருக்கா, வாங்கறியா?''

''காந்திலால் வாங்கறான். வடிவேல் கடையிலேர்ந்து தினத்தந்தி எடுத்துண்டு வரட்டுமா? படிக்கிறாயா?''

''அம்மாவுக்குக் கடுதாசி எழுதணும், வந்து சேர்ந்தேன்னு நீ எழுதிடறயா?''

நாணு ஐயர் தலையசைத்தார்.

காயத்ரி மறுபடி பக்கம் பக்கமாய் மேல்மாடியைச் சுற்றி வந்தாள். காற்றில் பறக்கும் தலையைக் கோதிக் கொண்டாள்.

''காயத்ரி.''

''சொல்லுப்பா.''

''வேலைக்குப்போணுமேன்னு கஷ்டமாஇருக்கா?''

''இல்லியே, ஏன் கேக்கறே?''

''நிழலா வீட்டோட வளர்ந்துட்டே. மத்தியானம் படுத்துத் தூங்கி, அரட்டை அடிச்சுண்டு பொழுது போயிருக்கும். சட்டுன்னு வேலை, ஆபீசுனா கஷ்டமாயிருக்கும்.''

''எனக்கு வேலைக்குப் போறது பிடிச்சிருக்குப்பா.''

''பெண் கொழந்தைகளுக்குச் சிரமமான காலங்கள் உண்டு.''

''ஸோ வாட். வீட்டுக்கு உபயோகமா இருக்கணும். அதுவும் முக்கியம் இல்லியா?''

''பையனாப் பொறந்திருந்தா போடா வேலைக்குன்னு தொறத்தலாம். மூத்தது பொண்ணாப்பொறந்ததுக்குப் பையனா இருந்திருக்கலாம். பொம்மனாட்டி பொழைப்பு கஷ்டமாயிடுத்து இப்ப.''



''பையன் பொழப்பும்தான் கஷ்டம். அதுவும் முதல் பையன்னா கஷ்டம்தான். படிச்சு உடனே வேலைக்குப் போய் அப்பாவுக்குக் காசு குடுத்து, அக்கா கல்யாணக் கடனடைச்சு, தங்கைக்கு வரன் பார்த்து கடன் வாங்கி, அதை அடைச்சு நிமிர்ந்து... நல்லவேளை... நம்ம வீட்ல பையன் இல்லை. இருந்தா அவனை ரொம்ப படுத்தியிருப்பே.''

''இது கடமைதானேம்மா, உடம்பொறந்தான் செய்ய வேணாமா.''

''நோ எனக்கு ஒருத்தனுக்கு இரண்டு அண்ணா இருந்தாலும் நான் வேலைக்குப் போவேன். அண்ணா புடவை வாங்கித் தருவான். சீப்பு, சோப்பு, வாங்கித் தருவான். கல்யாணம் பண்ணி வைப்பான்னு நிக்கக் கூடாது.''

''பின்னே ஒரு பையன் சம்பாதிச்சு என்னதான் செய்யறது?''

''அவன் பொண்டாட்டிக்கு வாங்கித் தரட்டும், அவனுக்குப் பிடிச்ச பெண்ணுக்குச் சோப்பு சீப்பு எல்லாம் குடுக்கட்டும்.''

''இப்ப மூத்தவ கல்யாணச் சுமை உன் தலைல விடிஞ்சுடுத்தே.''

''அது சரி. படிப்பு வரலை. அதனாலே சுமையாபடறது, அவபடிச்சிருந்தா அவ கல்யாணம் அவளோட சுமைன்னு தள்ளியிருக்கலாம்.''

''அப்ப உன் கல்யாணம் உன் சுமையா?''

''நிச்சயமா. அது என் ரெஸ்பான்ஸிபிலிட்டி இல்லையா?''

நாணு ஐயர் முகத்தைச் சொறிந்து கொண்டார். ''நான் நாலு காசு சேர்த்து வச்சிருந்தா, எப்படின்னு கேட்பேன். சேர்க்கலையே.''

''ஏன் ஈகோ உதைக்கிறதோ? நீ குபேரனா இருந்தாக்கூட இதுதான் என் பதில்.''

''காயத்ரி, புஸ்தகப் படிப்பு ரொம்ப கரெக்ட்னு சொல்ல முடியாது. ப்ராடிகலாகவும் பார்க்கணும்.''

''பயம்மா இருக்கா நான் பேசறது?''

''வேகமாக இருக்கியோன்னு தோன்றது.''

''ஒரு விதத்திலே யெஸ். உள்ளே ரொம்ப வேகம் தென்படறது. மடமடன்னு வேணும் வேண்டாம், சரி தப்புன்னு நிறையப் பிரியறது. ஆனா நான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கேன். எந்த முடிவோடயும் சேராம மலங்க மலங்க நிக்கறேன்.''

''அற்புதமாப் பேசறே காயத்ரி. கொழந்தை கொழந்தைன்னு நினைச்சுண்டிருக்கேன். டக்குன்னு மாறிப்போயிருக்கே. எப்போ மாறினேன்னு தெரியல்லே.''

''உன்னை ரொம்ப குளோசா கவனிச்சேம்பா. உன் வாழ்க்கை, நீ எழுதின கதை எல்லாம் கவனமா படிச்சேன். நீ சீட்டாடித் தோத்துப் போனது, அம்மா சங்கிலியைத் தெரியாம எடுத்துண்டு போய் அடகுவச்சு மறுபடி ஆடினது. வருத்தப்படாம வெக்கப்படாம அதைக் கதையா எழுதினது... அப்பத்தான் தெரிஞ்சது, அடடா வெட்கப்பட எதுவும் இல்லேன்னு.''

''என்ன தப்பு வேணாப் பண்ணலாங்கற மாதிரி நான் எழுதலேம்மா.''

''இல்லை. நானும் அப்படிப் புரிஞ்சுக்கலை. வெட்கப்படற மாதிரி செய்யக்கூடாது பண்ணிட்டு வெட்கப் படக்கூடாது. நீ பண்ணின தப்பு உன் கதையைப் படிச்சப்புறம் எனக்கு உதவியா இருக்கே. என்னைக் காபந்து பண்றதே.''

''குட்.''



''இப்ப நீ கலவரமா இருக்கியாப்பா? என்னடா வயசுப் பொண்ணைக் கூட்டிண்டு வந்துட்டமே பட்டணத்துக்குன்னு என்னைப்பத்தின கவலையும் கூடச் சேர்ந்திருக்கா?''

''கவலை இருக்கு. இல்லேன்னு சொல்ல முடியாது. ராஜகோபாலன்னு அவன்கிட்டப் பாரத்தைப் போடறேன்.''

''என்னைப்பத்திக் கவலை வேண்டாம்பா! நான் எந்தச் சிக்கல்லேயும் மாட்டிக்கமாட்டேன். மாட்டிண்டா மறைக்கமாட்டேன். அப்பா ஹெல்ப் பண்ணுன்னு கேட்பேன்.''

''செய்யறேண்டா தாயி. எது கேட்டாலும் செய்யறேன். நீ கேட்காமலேயே செய்யறேன்.''

'ஒரு கேள்வி புஸ்தகப் படிப்பு, ப்ராடிக்கல் லைஃப்ன்னு ரெண்டாப் பிரிச்சியே, எப்படி? அறிவு அனுபவம் இல்லையா? அனுபவ அறிவுதான் முக்கியமா?''

''புஸ்தக அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஒரு இழை வித்தியாசம் உண்டு. என் அனுபவம் புஸ்தகமா உனக்கு அனுபவமாகணும்னா நீ ரொம்பத்தெளிவா இருக்கணும். குழந்தை மாதிரி அபிப்பிராயமே இல்லாமே இருக்கணும் குழந்தையா இருக்கிறது கஷ்டம்.''

''உதாரணத்தோட சொல்லு.''

''இந்த மாடியிலேர்ந்து கண்ணுக்குத் தெரியற அத்தனைக்கும் உனக்குப் பேர் தெரியும் இல்லையா? பேரே தெரியாத போனா எப்படிப் பாப்பே? இது அழகான வீடு அது அவலமான குடிசை அப்படின்னு பிரிக்காம எக்ஸ்ட்ரா அந்தப் பார்வை சகலத்திலயும் வருமா? வரணும். வரது உசத்தி. வரது சுலபமில்ல.''

''கொஞ்சம் புரியுதுப்பா.''

''அம்மாடி—கஷ்டமான சிந்தனைகளுக்குப் போக ஆரம்பிச்சுட்டே. மனசுத்தெளிவு வரலாம். தெளிவுக்கு ஆரம்பம் உணர்ச்சிவசப்படற நிலைமை. இது சிரம மான இடம். யாராவது அழுதா நமக்கு அழுகை வர இடம். யாராவது கொடுமை பண்ணினா கோபம் பொத்துண்டு வர இடம். இங்கே சிதறிப்போயிட்ட உரம் வராது காயத்ரி.''

''புரியுதுப்பா.''

# 20

வசந்தா அவளைப் பெரியக்கா என்று அழைத் தாள். அங்கிருக்கின்ற எல்லா ஜனங்களும் அவளைப் பெரியக்கா என்றுதான் அழைத்தார்கள். பெரியக்கா வின் புருஷன் மாதிரி இருக்கிறவன்கூட அவளைச் சில சமயம் அவ்விதமே கூப்பிட்டான்.

வசந்தாவுக்கு அக்காமாதிரி அங்கே நிறையப்பேர் இருந்தார்கள். முப்பது முப்பத்திரண்டு நாற்பது வயசுப் பெண்கள்கூட அந்தச் சேரியில் வசந்தா மாதிரியே தொழில் செய்தார்கள்.

வசந்தாவும் பெரியக்காவும் இரண்டு நாள் ஆஸ்பத் திரி வாசலிலேயே காத்திருந்து சடலத்தை வாங்கிக் கொண்டார்கள்.

ஆஸ்பத்திரி போலீஸ்காரர் பெரியக்காவை அடை யாளம் தெரிந்து உன் கூட்டத்து ஆளா என்று கேட்ட போது பெரியக்கா பயந்து விட்டாள். மனு, சடலம் பெற்றுக்கொண்ட கையெழுத்து எல்லாம் வசந்தா வையே போடச் சொன்னாள். வசந்தாவின் தங்கை மல்லிகா என்று விவரம் கொடுத்தாள். வசந்தாவின் அப்பா பெயரே மல்லிகாவின் அப்பா பெயராயிற்று.



சடலம் நசித்துப் போயிருந்தது. உதடும் மூக்கும் தவிர புறங்கையும் கணுக்காலும் தவிர, வேறெங்கும் பார்க்க முடியாமல் கட்டுப்போட்டிருந்தது.

சடலத்தை அருகில் உள்ள காட்டிலேயே கொளுத்தி விட்டுச் சேரிக்கு வந்தார்கள். பெரியக்கா நிறையப் பணம் இறைத்திருந்தாள். சேரிக்கு வந்ததும் பேயாட் டம் ஆடினாள்.

''எல்லை தாண்டாதீங்கடீன்னா கேக்கறீங்களா'' எவடீ துட்டு அழுவுறது. எங்காளு உங்காளுன்னு அடிச்சிக்கினு லாரி ஏறிப் பூட்றீங்க. எவடி லோல் படுறது? இனிமேல் டோல் கேட்டு தாண்டுங்க சொல் றேன். வெட்டிப் போட்டுர்றன் பாரு'' என்று கூச்ச லிட்டாள்.

ஆனால் பதினோரு மணிக்குப் படையல் வைத்து கல் நட்டு அதற்குத் தண்ணீர் ஊற்றியபோது பெரியக்கா உண்மையிலேயே அழுதாள். ''யார் பெத்த பெண்ணோ என் தோள்ல போட்டு வளர்த்தேனே... தலை சீவி முடிச்சேனே...'' என்று அழுதாள். வசந்தா வுக்குள் துக்கம் பீறிட்டது. தலையை விரித்துக் கருங் கல்லைக் கட்டிக் கொண்டு கேவினாள். எம் மல்லிகா, எம் மல்லிகா என்னையும் கூட்டிக்கடி, என்னை விட்டுட்டுப் போவாதடி என்று அழுதாள்.

எல்லோருக்குமே அழுகை வந்தது,

அன்று இரவு யாரும் தொழிலுக்குப்போக வேண் டாம் என்று சொல்லிவிட்டார்கள். கூட்டி வருகிற பையன்கள் விஷயம் தெரியாமல் ஆட்களோடு சேரிக் குள் நுழைந்த போது 'ச்சீ போங்கடா, நாங்களே நொந்துபோய்க் கெடக்கோம்' என்று சீறினார்கள்.

பிற்பகலில் மல்லிகாவின் பெட்டியை உடைத்துத் திறந்தாள். அதில் மொத்தம் எட்டுப் புடவைகள். ஒன்பது ஜாக்கெட்டுகள், நாலு பாவாடைகள், உள்

பாடிகள், நிறைய பிளாஸ்டிக் மணி மாலைகள் இருந்தன. பெட்டி உள்பக்கம் மூடியில் யேசு, புத்தர், வெங்கடாசலபதி. காளி படங்கள் இருந்தன.

அங்கிருந்த பெண்கள் ஆளுக்கொரு புடவையை எடுத்துக்கொண்டார்கள். இருப்பதில் நல்ல புடவையை அவர்களே வசந்தாவுக்குக் கொடுத்தார்கள் அலுமினிய டப்பாவிலிருந்த காசை பெரியக்கா எடுத்துக் கொண்டாள். எண்ணி முடிந்து கொண்டாள். ''பொடவையைத் தோச்சு கட்டுங்கடி தரித்திரங்களா'' என்று கத்தினாள்.

சேரியின் திறந்த வெளியில் கலர் கலராய் இறந்தவளின் புடவைகள் தொங்கின. கண்ணில் படுகிற போதெல்லாம் துக்கத்தைக் கொடுத்தன.

''இன்னிச்கு ராத்திரி மட்டுமில்லை. இன்னும் ரெண்டு நாளைக்கு நீ போவாணாம்'' என்று வசந்தாவைப் பெரியக்கா நிறுத்திவிட்டாள்.

''நாங்க விடிஞ்சதும் போலாமா'' என்று ஒரு பெண் கேட்க, ''எக்கேடாவது கெட்டு ஒழி'' என்று முணு முணுத்தாள்.

வசந்தா இல்லாமல் மறுநாள் இரவு சேரியில் எப்போதும் போல வியாபாரம் களைகட்ட ஆரம்பித்தது. காடா விளக்கு வெளிச்சத்தில் வெளியூர் ஆட்கள் நடமாட்டம் துவங்கியது.

தெற்கு வடக்காக நீண்டு கிடக்கும் ரயில்வே ஸ்டேஷன் மேற்குப் பக்கம் நெல்லூர் நெடுஞ்சாலை. ஸ்டேஷன் தாண்டி கிழக்குப் பக்கம் முழங்கால் உயரம் வளர்ந்திருக்கும் தும்பைச் செடிகளைத் தாண்டிப் புல்மேடு கடந்து அமுக்கமாய் இருக்கும் சேரி. சேரியைச் சுற்றி வேலிக்காத்தான் செடிகள் அடர்த்தியாய் இரண்டாள் உயரம் வளர்ந்திருந்தன. ஸ்டேஷன்



வெளிச்சத்தை உள்ளே வராமல் தடுத்தன. உற்றுக் கவனித்தால் திட்டமிட்டே வேலிக்காத்தான் செடிகளைப் படுதா மறைப்பாக இந்தச் சேரி வளர்த்திருப்பது தென்படும், அடுப்பெரிக்க என்று யாரும் வேலிக்காத்தான் செடிகள் மீது கத்தி வைத்துவிட முடியாது. சேரி கூட்டமாய் எதிர்க்கும். ''ஏன்டா பொழைப்புல மண்ணைப் போடறீங்க?' என்று கூச்சலிடும்.

இரவு வேளைகளில் 'ஸ்டேஷன் வெளிச்சம் சேரியிலிருந்து தெரியும். சேரி நடமாட்டம் ஸ்டேஷனிலிருந்து தெரியாது. காடா விளக்கு வெளிச்சமும் அடுப்படி வெளிச்சமும் சேரியைத் தாண்டிப் போகாது.

சேரியிலிருந்து எல்லாத் திக்கு நோக்கியும் ஒற்றையடிப்பாதை பிரியும், வெளியாட்கள் வருகையும் அந்த ஒற்றையடிப் பாதையின் மூலம்தான். பழக்கப்பட்ட ஆள் துணையோடுதான் உள்ளே சுலபமாக தடம் கண்டு வரமுடியும்.

அந்த இடத்திலிருந்து இரண்டு மணி நேரம் ஓட்டத்தில் சென்னையைத் தொடமுடியும். நீண்ட பயணத்தில் வரும் லாரிகள் சென்னையின் எல்லையைத் தொடும் முன்பு இளைப்பாறிப் போகும் இடம் இது. அநேகமாய் இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் லாரி மந்தை மந்தையாய் நிற்க ஆரம்பித்துவிடும்.

இரவில் பாதை ஓரம் நின்ற பெண்களைப் பார்த்து லாரிகள் மெதுவாக நகரும். க்ளீனரைக் காவல்வைத்துவிட்டு டிரைவர் மெல்ல இறங்கித் தனக்குப் பிடித்த பெண்ணோடு புல்மேடு தாண்டிக் குடிசைப் பகுதிக்கு நடப்பான். புல்மேட்டில் சிரித்து கொஞ்சுகிற பெண் சேரி வந்ததும் சிடுசிடுப்பாள். அவசரம் காட்டுவாள். வந்த நபர் அதிக ராங்கித்தனம் செய்தால் சேரி

யிலிருந்து சாக்கடைக்கு முடியும் பாதையில் கூட்டிப் போய் ''நேரே போ. ரோடு வரும்' என்று சொல்லி விடுவாள். கணுக்கால் சேறோடு போனவன் மறுபடி சேரிக்குத்தான் வர வேண்டும்.

''லெப்ட்லயா திரும்பின? ரைட்ல இல்ல போகச் சொன்னேன்...''

''ஏய், நீ பீச்ச கைனு சொல்லலே.''

''பெரீக்கா, பீச்சைக் கைன்னா ரைட்டுத்தானே ஐய்யய்ய. காலெல்லாம் சாக்கடை நாத்தமா நாறுது. ரெண்டு ரூபாய்க்குப் பால்மாறினியே அதான் கடவுளா பார்த்து உன்னைச் சேறுல தள்ளிட்டாம் போ.''

விடிந்த பிறகுதான் தெரியும். அந்தப் பாதை இடது பக்கம் திரும்பினாலும் வலது பக்கம் திரும்பினாலும் சாக்கடையில்தான் முடியும் என்பது.

ஆனால் விடியல் வரை காத்திருந்து அந்தப்பாதை எங்கே போகிறது என்று எவரும் ஆராய்ச்சி செய்த தில்லை.

வசந்தாகூட நாலைந்து ஆளைச் சாக்கடைக்கு அனுப்பியிருக்கிறாள்.

அப்படிப் போனவன் வெகுநேரம் வரை திரும்பி வராது கண்டு பயந்திருக்கிறாள். காடா விளக்குடன் ஆள் அனுப்பிப் பார்த்ததில் அந்த ஆள் சாக்கடைக் கருகே குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்தான். காரணம் கேட்ட போது விடிந்த பிறகு போகலாம் என்று உட்கார்ந்து விட்டானாம்.

மறுபடி அவனுக்கு நல்ல பாதை காட்டியபோது அவன் சற்றுத் தூரம் போய்விட்டு இதுவும் சாக்கடை யில் தான் முடியும் என்று கூறிச் சேரியிலேயே குத்துக் காலிட்டு உட்கார்ந்து விட்டான். விடிந்த பிறகுதான் போவேன் என்று சொல்லிவிட்டான்.

வசந்தா ரோடு வரை துணை வந்து பத்து ரூபாய் இனாம் வாங்கினாள்.



ஒரு ஆணின் குணாதிசயம், அவன் வெப்பமான மூச்சுடன் அவள் மேலே படருகிறபோது மட்டுமில்லை, இப்படிப் புல்மேட்டுப் பாதையில் நடந்து வருகிற போதேகூட வசந்தாவுக்குத் தெரிந்துவிடும்; இவன் எவ்வளவு ரூபாய்க்குத் தேறுவான் என்று கணக்குப் போட்டுவிட முடியும்.

புல்மேடு தாண்டுவதற்குள் தொட்டுவிட்டால் பத்து ரூபாய் இனாம் நிச்சயம். சேரிவரை பேசாது வந்தால் இரண்டு ரூபாய் மேல் துட்டு வாங்குவதே சிரமம்.

பாட்டுப் பாடு என்று இருபது ரூபாய் கொடுத்தவன் தான் அதிசயம்.

பனி விழும் மலர்வனம்—பாடியவன் இப்போது எங் கிருக்கிறானோ? அவன் தோளில் சாய்ந்து எதற் காகவோ அழுது தீர்த்தோம். ஒருவேளை மல்லிகா செத்துப் போவது முன்கூட்டியே தெரிந்து போய் அழுகை வந்து விட்டதா? அன்று முழுக்க மனசு பாரமாய் இருந்த காரணம், தவியாய் இருந்த காரணம் மல்லிகா மரணம்தானா?

அட... அவனிடம் இருபது ரூபாய் வாங்கிக்கொள்ள வில்லையே, பாவி ஏமாத்திட்டானே...

இல்லை. அவன் ஏமாற்றவில்லை. தபதபவென்று நான்தான் ஓடிவந்துவிட்டேன். அது ஏமாற்றுகிற முகம் இல்லை; வேறெவனாவது எம்பேர் சொல்லித் தட்டிக்கினு போயிருந்தாலும் போயிருக்கும். போவட் டும் விடு.

துட்டே வாங்காது போன முதல் இடம் இதுதான். எங்கே போனோம்? உட்கார்ந்து பேசினோம், பாடி னோம். டான்ஸ் ஆடினோம். வுடு, போவுது விடு.

பனி விழும் மலர் வனம்—மனசுள் ட்யூன் ஓடிய போது இருபது ரூபாய் நோட்டு ஞாபகம் வந்தது.

மல்லிகாப் பொண்ணு உசிரோட இருந்தா அதனிடம் இவன் எதிரே ஆடினதையும் பாடினதையும் சொல்லியிருப்பேனே.

''இருபது ரூபா கொடுத்தானா...ஆடினதுக்கா...ஏய் எனக்குக் காட்டுடி அவனை...' என்று நச்சரித்திருப்பாள்.

சட்டென்று இமைக்கும் நேரத்தில் காணாது போய் விட்டாள். நானும் இப்படித்தான் முடியப்போகிறேனோ? அடிபட்டுத் தெருநாயாய்ச்சாகப்போகிறேனோ? மல்லிகா என்னைக் காப்பாத்துடி. உனக்குக் கல்லு வச்சுக்கோயில் கட்றேண்டி. என்னை நல்லபடியாக் காப்பாத்துடி.

விடியல் நேரத்தில் ஒரு போலீஸ்காரர் வசந்தாவைக் காலை எட்டு மணிக்கு ஸ்டேஷனுக்கு வரச் சொன்னார்.

பெரீக்கா சின்னப் பையனைத் துணைக்கனுப்பினாள்.

வசந்தாவுக்கு அங்கே உள்ள எல்லாப் போலீஸையும் தெரியும். வழக்கம்போல் தயங்கி ஸ்டேஷன் பின் பக்கம் போனாள். உள்ளே வரச் சொன்னார்கள். 'உன் தங்கச்சி தானே மல்லிகா' என்று கேட்டார்கள். புரியாமல் ஆமா என்றபோது ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள். வெள்ளைச் சட்டையும் வெள்ளைப் பேண்டுமாய் இன்ஸ்பெக்டர் முன்னால் உட்கார்ந்திருந்த ஒருவன்,

''தங்கச்சின்னா எப்படி? சொந்தமா தொலைவா?'' என்று கேட்டான்.

''சொந்தத் தங்கச்சிங்க'' என்று வசந்தா பதில் சொல்ல, எழுதிக் கொண்டார்கள்.

''வசந்தா அடிச்ச வண்டி கண்டுபிடிச்சிட்டாங்க. அந்த டிரைவர் பேர்ல கேஸ் நடக்கும். அது முடிஞ்ச பிறகு உன் தங்கச்சி செத்ததுக்குத் தனியா ஒரு கேஸ் போடலாம்.''

''கேஸ[illegible] வா[illegible]ங்க. பெரீக்கா கோச்சுக்கும்.''

''துட்டு வேணாமா?''

''துடடா?''



''உன் தங்கச்சி செத்துப் போனதுக்கு நஷ்டஈடு இன்ஷூரன்ஸ் இருக்கும். உன் தங்கச்சி செத்துப் போனது உனக்கு நஷ்டம்தானே?''

''ஆமாங்க.''

''துட்டு வேணாமா?''

''வேணும்.''

''எத்தினி துட்டு தெரியுமா? நாப்பதாயிரம் கேட்டு கேஸ் போடப் போறோம்.''

''யாருங்க?''

''நான் போடப்போறன். நான் வக்கீல்.''

''நாப்பதாயிரமா?''

''இன்னும் ஜாஸ்தி கேப்பமா?''

''இன்னும் ஜாஸ்தியா?''

''அவ்ளோ வராது பத்தாயிரம், பன்னிரண்டாயிரம் தருவான். நீ என்ன சொல்றே?''

''புடுங்குவாங்களே.''

''யாரு?''

''பெரீக்கா. சுத்தியுள்ள ஜனம்.''

மறுபடியும் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள்.

''நீ ஒண்ணு செய். இதுல கையெழுத்துப் போடு. துட்டு கேட்டு மனு கொடுக்கிறோம். இதுல இப்படிக் கையெழுத்துப் போட்டீனா பின்னாடி கோர்ட்ல ஒரு தபா வந்து உன் தங்கச்சின்னு சொல்லிடு. நான் ஆள் அனுப்பறேன். பார்ட்டிகூட வராங்கன்னு சொல்லிட்டு வந்துட்டுப் போ. எம் பேரு ஜனார்த்தனம் இந்தா என் அட்ரஸ், வச்சிக்க. தமிழில் எழுதித் தரட்டுமா? படிப்பியா?''—அட்டைக்குப் பின் தமிழில் விலாசம் எழுதிக் கொடுத்தார்.

வசந்தா நிறைய இடங்களில் கையெழுத்துப் போட்டாள்.

# 21

வரதன் அந்த நாலாம் நம்பர் சாராயக் கடை வாசலில் குத்திட்டு உட்கார்ந்திருந்தான். அவனிடம் பதினேழு ரூபாய்தான் இருந்தது.

கோதுமை லாரி கவிழ்ந்து இன்றோடு பத்து நாட்கள் முடிந்துவிட்டது. ராவுத்தர் பணம் எழுநூறு ரூபாயோடு கிளம்பி இன்று பதினேழு ரூபாய்தான் மிச்சம். ராவுத்தர் தேடிய மாதிரித் தெரியவில்லை. நெல்லூரில் இரண்டு நாள் பெங்களூரில் இரண்டு நாள் தலைமறைவாக இருந்து விட்டு ரயில் பிடித்து நேரே திருச்சி வந்துவிட்டான். சேலம், நாமக்கல் போகலாம் என்று முதலில் தோன்றிற்று. ஆனால் தண்ணித் தொட்டி வண்டிகள் அதிகம் வராத இடமாக இருப்பதே நல்லது என்கிற எண்ணம்வர, சட்டென்று திருச்சிப் பக்கம் வந்து விட்டான்.

தண்ணித் தொட்டி வண்டிகள் அநேகமாய் வடக்கே ஓடுபவை. தொழிற்பேட்டை அதிகம்இருக்கும் பகுதிக்கு லோடு அடிப்பவை. ஹார்பர் லாரிகள் வரும் என்றாலும் வடக்கே இருந்து தண்ணித் தொட்டித் தெருவைத் தொட்டு திருச்சி வருகிற லாரி மிகக் குறைவு. அநேகமாய் வரவே வராது. இந்த ஆனைகட்டி மேட்டுத் தெருவுக்கு, காந்தி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் எடுக்க வராது. ஆனைகட்டி மேட்டுத்தெரு வாழை மார்க்கெட். பகல்நேர மார்க்கெட். காலை பத்து மணிக்கு மார்க்கெட் மெல்லத் திறக்கும். பழமண்டிகள் ஒவ்வொன்றாய் திறந்து பூஜை போட்டுப் பலகாரம் முடித்து, வெள்ளைச் சட்டையும், குங்குமப் பொட்டும் அத்தர் மணமுமாய் வியாபாரிகள் நடமாடத் துவங்குவார்கள். பகல் ஒரு மணி சாப்பாட்டுக்குப் பிறகு மாட்டு வண்டிகளில் வாழைத்தார் சுற்றுவட்டாரக் கிராமங்களிலிருந்து இறங்க, நாலு மணிக்குக் கொஞ்சம் சுறுசுறுப்பாகும். பச்சை பச்சையாய் வாழைத்தார். ஆயிரக்



கணக்கில் தெரு முழுக்க அடைத்துக் கிடக்கும். விளக்கு வைக்கிற நேரம் ஏலம் துவங்கும். ரக வாரியாக பேயன், பூவன், ரஸ்தாளி நேந்திரம் என்று தார் கட்டிப்போட்டிருப்பார்கள். ஆள் உயரத்துக்கு இரண்டங்குலம் மரப்பலகை. அதில் ஒற்றை மின்விளக்கு நீளமாய் ஒயர் சுற்றப்பட்டு வாழைத்தாரில் சாய்த்து வைத்திருப்பார்கள். இருட்டியதும், ஒயரின் மறுமுனையை கடை விளக்கின் ப்ளக்கில் சொருகிவிட்டு தோளில் விளக்கு தாங்கியபடி அட்டி அட்டியாய் ஒரு ஆள் நகர்த்த வியாபாரிகள் வாழைத்தார் அட்டியைச் சூழ்ந்து கொள்வார்கள். ஏலம் துவங்கும்.

பதினாறு தார் பூவன் முப்பது ரூபா. கேள்வி முப்பது ரூபா. முப்பத்தி நாலு. முப்பத்தி நாலு, முப்பக்தி எட்டு, நாப்பது, நாப்பத்தியாறு, நாப்பத்தி ஏழு, நாப்பத்தி ஏழு...விலை கட்டாது. மேலே கேளு. ஐம்பது. ஐம்பத்தியொன்னு... ஐம்பத்தியொன்னு ஐம்பத்தியொன்னு ஆனைப்பாலு, ஆனைப்பாலு என்கிறவன் கடைசித் தொகை கேட்டவன். எட்டுத்தார் பூவன் பதினாறு ரூபா, கேள்வி பதினாறு ரூபா...

ஆயிரக்கணக்கில் தார்கள் இரவு பதினொன்றுவரை ஏலம் விடப்பட்டு வாழை இலையில் சுற்றப்பட்டு புகை போடப் போகும். புகை போட்டதும் வாழை இலைச் சுற்றோடு வண்டியில் ஏற்றப்பட்டுவிடும். சென்னையிலிருந்து திருச்சி வரையுள்ள பெரிய ஊர்களில் மொத்த வியாபாரிகள் வாழை எடுப்பது திருச்சியில்தான். அநேகமாய் ஆனைகட்டி மேட்டுத் தெருதான்.

ஏற்றப்பட்ட சரக்கை அங்கங்கே இறக்கிவிட்டுச் சென்னைக்குப் போக வேண்டும். அநேகமாய் ஜாம் பஜார்தான் சென்னைக்கு வாழை மார்க்கெட். கொத்தவால் சாவடி மாதிரி பெரிய மார்க்கெட்.

இந்த வாழைத்தார் லாரியில் வேலை கிடைத்தால் தண்ணித் தொட்டித் தெருப்பக்கம் போக வேண்டாம். ஜாம்பஜாரோடு நின்று விடலாம்.

இந்த வேலையாவது அங்கு ஏறி உட்காருகிற லாரியாவது தன்னைத் தள்ளிவிடாமல் இருக்க வேண்டும். ஹெவி லைசென்ஸ் எடுத்து பன்னிரண்டு வருடம் ஆயிற்று. கவிழ்ந்து போன கோதுமை லாரியோடு ஐந்தாவது விபத்து. விபத்து என்று வந்துவிட்டால் முதலாம் அடிபடுகிறவன், அதிகம் பாதிக்கப்படுகிறவன் டிரைவர்தான். தன் தவறோ, பிறர் தவறோ, வண்டி பழுதோ அவன் முதுகில் விழும் பிரம்படிதான் அதிகம். சிவப்பு சிவப்பாய் லைசென்சில் விபத்துக் குறிப்பு எழுதப்பட டிரைவர் மதிப்புக் குறையும். ராசி இல்லாதவன் என்று பெயர் வந்துவிடும்.

சாராயக் கடையில் டிரைவர்கள், க்ளீனர்கள் வந்து போன வண்ணம் இருந்தார்கள். கூலி ஆட்கள் அதிகம் குடித்தார்கள். க்ளீனர் பையனைத் தோளோடு அணைத்துக் கொண்டு 'வாடா சிலுக்குப் பையா' என்று அவனை வெட்கப்பட வைத்தபடி உள்ளே போனவன் வருகைக்காக வரதன் கழுகாய்க் காத்திருந்தான்.

''சாமுவேல் அண்ணாச்சி, சுவரெல்லாம் ஆடுது பாத்து வாங்க.''

''போடா கூறு கெட்டவனே, நாம ஆடினாத் தாண்டா சுவரு ஆடும்.''

''நீ ஆடறியே! நானூருக்கே சித்துறியே.''

''நானா, ஆடறேனா குடியைப் பத்தி ஒனக்கு ஒன்னும் தெரியாதுடா பையா...டான்ஸ் ஆடறவன் குடிச்சுட்டுப் பாடப்படாது. குளறும். பாடறவன் குடிச்சா ஆடப்படாது. தடுக்கும். நமக்குத் தெரிஞ்சதைச் செய்ய உக்காந்துடணும். லாரிக்காரன் குடிச்சுட்டு வண்டி எடுத்தா நூல் பிடிச்ச மாதிரி ரோட்ல போகும். அன்னாண்ட நவராது. என்னாங்க நான் சொல்றது...'' வரதன் எழுந்து நின்று ''ஆமாங்க'' என்றான்.



''நீங்க சாப்பிடறீங்களா?''

''இப்பதாங்க சாப்டேன்.''

''பழம் புடிக்க வந்திருக்காப்லியா?''

''இல்லிங்க வண்டி ஆப்டுமான்னு பார்க்கறேன்.''

''லாரி டிரைவருக்கு இல்லாத வேலையா? என்னா கேக்கறீங்க ட்ரிப்புக்கு?''

''நாஷ்டா துட்டுப்போதுங்க.''

''சிலுக்குப்பையா... கூட்டிக்கிட்டு வாடா. நம்ம வண்டிக்கு மாத்து டிரைவர் போட்டுக்குவோம்.''

லாரி புரோக்கர் மேஜையை சுற்றி மடங்கு இரும்பு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

ஏலத்தில் கை மாறின வாழைத்தார்கள் அடையாளம் காட்டிவிட்டு வியாபாரிகள் லாரி ரசீது வாங்கினார்கள். வாடகைப்பணம் கட்டினார்கள். இரவு நேரம் ஆக ஆக நிறைய ரசீதுகள் கிழிக்கப்பட்டன. லாரி ரசீதுகளின் இரண்டாவது காப்பி தனித்தனியே கவரில் போடப்பட்டு கவர்மீது இறக்கப்பட வேண்டிய இடமும் வியாபாரிகள் பெயரும் எழுதப்பட்டிருந்தன. ஒரு லாரி லோடு ஆனதும் கவர் தனியே அடுக்கப்பட்டு கயிற்றினால் கட்டப்பட்டது. கட்டப்பட்ட கவர் பண்டல்கள் எட்டு ஒன்பது தேறிற்று.

மார்க்கெட் அடங்கும் வேளையில் டிரைவர்கள் முகம் துடைத்து திருநீறு இட்டுக்கொண்டார்கள். புரோக்கர் கடைகளின் வாசலில் நின்றார்கள்.

புரோக்கர் கடை மேஸ்திரி வெளியே வந்தான். 'மெட்ராஸ் லோடு காலைல எட்டு மணிக்குள்ளாறப் போணம். ஆயிரத்தி எரநூறு.''

சாமுவேல் முன்வந்து, ''ஆயிரம்'' என்றான்.

''மெட்ராஸ் லோடு ஆயிரம், நேர் லோடு. மேல கேளுப்பா!''

''எட்டுநூறு.''–எவனோ குரல் கொடுத்தான்.

''எட்டுநூறு''—சாமுவேல் கூவினான்.

''சாமுவேல் எழுநூறு''

''அறநூறு.''—வேறு குரல் வாடகையைக் குறைத்தது.

''ஐநூறு.''—சாமுவேல் விடாப்பிடியாக இறக்கினான்.

''சாமுவேல் ஐநூறு. வேற யார் கேக்கறது ஐநூறு.''

''முந்தா நாள் எட்டு நூறுக்குப்போனேன், இன்னிக்கு ரேட்டு பாரேன். ஐநூறுக்கு வண்டி நவுருது, அடாவடி ஆயிடுச்சு வியாபாரம்''

''அடாவடி என்னய்யா. மெட்ராஸ்ல வாடகை லாரி ஆயிரத்துக்கும் மேல ஓடுது. எம்டியாக்கூட வண்டி போகுது. ஐநூறு கசக்குதோ. கடைசிதரம் ஐநூறு கடைசிதரம் ஐநூறு. வாயைத் தொறந்து கேளுய்யா. ஐநூறு சாமுவேல்''

சாமுவேல் வண்டியில் மடமடவென்று வாழைத்தாரும் இலைக்கட்டும் ஏற்றப்பட்டன. தார்ப்பாய் போட்டுக் கட்டப்பட்டது.

''சிலுக்குப் பையா, வண்டிய அந்தாளை வுட்டு எடுக்கச் சொல்லு. மார்க்கெட் எப்டி தாண்ட்றான்னு ஒரு தடவைப் பாத்துக்கலாம்.''

வரதன் வண்டியில் உட்கார்ந்து கும்பிட்டான். லாரி உரசாமல் ரிவர்ஸ் எடுத்து கியர்மாற்றி முன்னேறி மார்க்கெட் விட்டு வெளியே வந்தான். க்ளீனரும் சாமுவேலும் ஏறிக்கொள்ள கொள்ளிடம் பாலம் தாண்டினான். சமயபுரம் திரும்பினான்.



''உங்க பேரு என்னா பெரியவரே.''

''வரதனுங்க.''

''வண்டி எப்படி இருக்கு?''

''கடைசி கீரு சிக்குதுங்க. மத்தபடி குத்தம் இல்லிங்க.''

''அழுத்திப் போடு. கையெடுக்காதே. கொஞ்சம் உட்டீன்னா கீர்ல நின்னுடும்.''

''ஆச்சரியமா இருக்குதுங்க.''

''என்னாது?''

''ஐநூறுக்கு வண்டி மெட்ராஸ் போவுதே.''

''நேரம்தான்.''

''கட்டுப்படியாவுங்களா?''

''மெட்ராஸ்ல ஹார்பர் லோடு இரும்பு சாமான் பைப்பு லோடுன்னு கிடைக்கும். அதவச்சித்தான் இங்க ஒத்துக்கறது அது கம்பெனி லோடு, பால்மாறாத ஆயிரத்து எரநூறு கிடைக்கும்.''

'எனக்கு மனசு கேக்கலீக...பட்டு பட்டுன்னு சரிய வுட்டீங்களே.''

''நாநூறுக்குப் பேயாக் காத்துக்கிட்டிருக்கானுங்க. இன்னிக்கு முழிச்ச நேரம் டீஸல் துட்டு நஷ்டமில்லாது ஓடுது.''

''டீசல் நானூறு ஆவாதுங்களா?''

''ஆவும், நடுவுல நம்ப செலவு அம்பது போச்சுன்னா அம்பது நிக்கும்.''

''அம்பது ரூபாய்க்கு இத்தினி கஷ்டப்படணுமான்னு யோசிக்கிறேன்.''

''வேற வழி. வண்டிங்க பெருத்துப் போச்சே.''

''இங்க தொட்டீங்க இல்லியா?''

''என்னாது...?''

''தொட்டி, டீஸல் தொட்டி. மெட்ராஸ்ல இருக் காப்பல.''

''அதெல்லாம் கெடையாது.''

''தொட்டின்னா என்னப்பா?''—பையன் ஆவலுடன் கேட்டான்.

''டாங்கர் போவுதில்ல. அதுல கறந்து விக்கிற எடம்.''

''கறக்குறதுன்னா?''

''பசுமாட்ல பால் கறக்கறதில்லியா அதுமாதிரி டீஸல் டாங்கர்ல நூறு எரநூறு லிட்டர் கறந்துரு வாங்க.''

''சீலு இருக்காது?''

''சீலு ஒடைக்காத கறப்பாங்க.''

''எப்படீப்பா அது?''

''வேலைதான்... பெரியவரே, அங்க டீஸல் கெடைக்குமா?''

''பாதி வெலைக்குக் கெடைக்கும்.''

''திருட்டு டீஸலா?''

''ச்சீ...கூவாதேடா. திருட்டு டீஸல்னா என்னா... துட்டு இல்லாதியா நாம வாங்க முடியும். ஏங்க வரதன். ஒங்களுக்கு தொட்டி எடம் தெரியுமா?''

''தெரியுமுங்க.''

''என்னா வெலை?''

''ஆளப் பொறுத்தது.''

''பேர்பாதிக்குக்கூட கெடைக்குமா.''

''இப்ப கடனாக்கூட கிடைக்கும்.''

''டீஸலு கடனாத் தரானா?''



''ஆமாங்க. டீஸ்ல் ஊத்திக்கினு டிரிப்பு முடிஞ்சு நாலு நாளு கழிச்சு துட்டுத் தரலாம்.''

''எங்கந்த எடம்.''

''தண்டையார்ப்பேட்டைப் பக்கம்.''

''லோடு எறக்கிட்டுக் காட்டறீங்களா?''—வரதன் சரியென்று தலையசைத்தான்.

''எதுல கலந்து விக்கிறானோ.''

''சரக்கு சுத்தங்க. திருட்டுச் சமாச்சாரம்தான். ஆனா கெடுதல் இருக்காது. நாளைக்கு நாலு வண்டி வர வேணாமா. அதமாதிரி தப்புச் செய்யமாட்டாங்க.''

''இனி அங்கேயே போட்றலாம், அப்பத்தான் கட்டுப்படியாவும். நா மாத்திக்கிடட்டுமா வண்டிய?''

''இல்லீங்க. விழுப்புரம் போய்ட்டுப் பாத்துக்கலாம்.''

''பார்றா சிலுக்குப் பையா. என்னமோ முணு முணுன்னியே பெரியவர் பேர்பாதி லாபம் காட்றாரு. தெரியாமயா நான் மாத்து டிரைவர் எடுத்தேன். பெரியவரே படுக்கட்டுமா?''

''சரீங்கய்யா.''

''ஐயால்லாம் வேணாம். சாமுவேல்னு கூப்பிடுங்க.''—டிரைவர் பின்பக்க பெரிய சீட்டில் மல்லாந்து படுத்தான். தூங்கிப் போனான்.

அந்தச் சேரியில் ஒரு குடிசைக்குள் இரண்டு ஆட்கள் தூங்காமல் காத்திருந்தார்கள். குடிசைக் கதவை இறுக்க மூடி தரையில் காது வைத்துக் காத்திருந்தார்கள். தரைக்கு அடியே ஒரு ஓங்கார சத்தம் ஓடிக் கொண்டிருந்தது. களங்கென்ற ஓசையோடு ஓங்காரம் பெரிதாயிற்று.

இருவரும் பெரிதாகப் புன்னகை செய்தார்கள்.

# 22

கார் மலைப்பாதையில் கிரீச்சுடன் வளைந்து திரும்பியது. உயரம் ஏற ஏறக் குளிர்காற்று வெயில் உக்கிரத்தைக் குறைப்பதை உணர முடிந்தது.

விஸ்வநாதன் ஒரு வளைவில் காரைச் சற்று நிறுத்தச் சொன்னான். கீழே இறங்கினான். தாரிணியும் அவனுடன் இறங்கினாள். அவனுக்கு நெருக்கமாய் நின்று பள்ளத்தாக்கை வியப்புடன் பார்த்தாள்.

''காடு இப்படித்தான் இருக்கும். இல்லேன்னா... குட்டிகளா... கீழே இறங்கி வாங்கோ, காடு பார்க்கலாம்.''

குழந்தைகளும் ஆரவாரத்துடன் இறங்கின.

திருப்பதி போக வேண்டும். இரண்டு நாட்கள் விடுமுறை வேண்டும் என்று கேட்டபோது ஆபீஸே பிரைவேட் டாக்ஸி அமர்த்திக் கொடுத்தது. 'இந்தக்கம்பெனி லையசன் ஆபீஸர் பஸ்ஸுலே இடிபட்டுக்கொண்டு போவதா? கார்ல போ மேன். என்ஜாய்' என்று தட்டிக் கொடுத்தது. விஸ்வநாதன் ஆபீஸ் இப்படித்தான் திடும் திடுமென்று விட்டுக் கொடுக்கும். கட்டியணைக்கும். இது எல்லா தனியார் கம்பெனிக்கும் உண்டான குணம். அயிரை விட்டு விரால் வாங்கும் குணம்.

விஸ்வநாதன் தாரிணியிடம் கார் வசதிபற்றிச் சொன்னதும் துள்ளிக் குதித்தாள். விடிகாலை வீட்டு வாசலில் வந்து சலாம் செய்த கார் டிரைவருக்கு காப்பி போட்டுக் கொடுத்தாள்.



குழந்தைகள் வழி முழுவதும் நர்ஸரி ரைம்ஸும் சினிமாப் பாட்டுமாய் பாடிக்கொண்டு வந்தன. டிரைவரை மாமா என்று அழைத்தன. அவனையும் பாடச் சொல்லி வற்புறுத்தின. ''அப்பாரு பாடட்டும் அப்பால நான் பாடறேன்.''

முன் சீட்டில் நின்றபடி விஸ்வநாதன் சட்டையை இழுத்து பாடுப்பா என்று கெஞ்சின.

''அமர ஜீவிதம் ஸ்வாமி அமுத வாசகம்
பதித பாவனம் ஸ்வாமி பக்த சாதகம்
முரளி மோகனம் ஸ்வாமி அசுரமர்த்தனம்
கீத போதகம் ஸ்ரீ கிருஷ்ண மந்திரம்''

—அடிக்குரலில் குரல் நாண் அதிர அரைக்கண் மூடி விஸ்வநாதன் பாடினான். துள்ளிக்கொண்டிருந்த குழந்தைகள் பளிச்சென்று அடங்கி வியப்புடன் தகப்பனைப் பார்த்தன. தாரிணி குனிந்து விஸ்வநாதன் கண் கலங்கி இருப்பதைப் பார்த்தாள்.

சட்டென்று நெருங்கி அவன் கைகளைப் பிணைத்துக் கொண்டாள். வளைவில் காடு பார்க்க இறங்கினாள். புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். குழந்தைகள் கைப்பிடிச்சுவரில் எட்டிப் பள்ளத்தாக்கைப் பார்த்துக் கூவிக்கொண்டிருந்தன.

''ஏதாவது கவலையான்னா உங்களுக்கு?''

''இல்லையே தாரிணி.''

''ஏன் கண் கலங்கிடுத்து?''

''இனிமையான பாட்டு இல்லையா, நெகிழ்ச்சியா இருந்தது.''

''எப்பவும் முகத்தில் ஒரு சோகம் இருக்கே.''

''என் லட்சணமே அவ்ளோதான்.''

''இல்லை. ஏதோ பெரிய வருத்தம் இருக்கறாப்பல படறது எனக்கு!''

''பெரிசா ஒண்ணும் இல்லை.''

''அப்போ சிறிசா உண்டா?''

''வருத்தம் இல்லாதவா யாரு தாரிணி?''

''ஏன்... நான் இருக்கேனே. கை நெறைய சம்பாதிக்கிற புருஷன். ஆரோக்கியமான குழந்தைகள். ஊர் கோடில வீடு பிக்கல் பிடுங்கல் இல்லாத உறவு. நான் சௌக்கியமாத்தான் இருக்கேன். கர்வமாக்கூட இருக்கேன். எப்பவாவது சிடுசிடுப்பேன். இது டெம்ப்ரரி. மத்தபடி நீங்களோ குழந்தைகளோ வருத்தப்பட்டா எனக்குத் தாங்காதுன்னா''

''உனக்கு இது போறும்னு பட்ருக்கு தாரிணி.''

''உங்களுக்கு போறலையா?''

''என் சக்தியெல்லாம் வீணாக்கறேனோன்னு படறது!''

''எப்படி?''

''ஆபீஸே என்னை அதிகமா முழுங்கிடறதோன்னு படறது!''

''கஷ்டப்பட்டாத்தானே நாலு காசு சம்பாதிக்க முடியும்? என்னைக்கோ பட்ட கஷ்டத்தாலேதானே இந்தக் கார் வசதி போக்குவரத்து எல்லாம்...''

''காரோ, சம்பளமோ, இன்கிரிமெண்டோ நிறைவு தரலை தாரிணி. எனக்கு இன்னும் என்னவோ தேவைப்படறது!''

''சொல்றேன்னு கோச்சுக்க வேண்டாம். இன்னும் பூமில கால் ஊனிப் பார்க்கலை நீங்க. ரெண்டு பொண் குழந்தைகள் நமக்கு. திரும்பிப் பார்க்கறதுக்குள்ளே பளிச்சுன்னு தாவணி சுத்திண்டு நிக்கும். இன்னிக்குப்



பாத்திரம் பண்டமா, நகையா, பணமா சேத்தாத்தான் அவளுக்குக் கல்யாணம் கார்த்தி நல்லபடியா நடக்கும். நாளைக்கே மூத்தவளுக்குக் கல்யாணம்னு சொல் லுங்கோ நான் ரெடி அத்தனை பித்தளை, வெள்ளிப் பாத்திரம் சேர்த்திருக்கேன்''

விஸ்வநாதன் சிரித்தான். ''நான் பிராக்டிக்கலா இல்லேன்னு சொல்றயா.''

''குறையாச் சொல்லலை. திடும்னு எங்கேயோ நழுவிப் போயிடறேள். சாதாரணமா இருக்க மாட்டேங்கறேள்.''

''உனக்கும் எனக்கும் கொஞ்சம் வித்தியாசம் உண்டு தாரிணி இந்த மலைல இருக்கிற ஸ்வாமி உனக்கு என்னமாப் படறது?''

''கேட்டதைக் கொடுக்கிற தெய்வம். பிரார்த்தனை பண்ணிண்டா பலிக்கிற எடம் வரப்பிரசாதி''

''எனக்கு இந்த மலையே ஸ்வாமியா படறது. காலம் காலமா தொங்கிண்டிருக்கிற பாறையைப் பாக்கறபோது ஹான்னு இருக்கு. அந்தப்பாறை எதிர்க்க நான், என் முயற்சி, வியக்தி ஒண்ணுமேயில லைன்னு படறது. அப்படிப் பாறையா காலம் காலமா நிற்க மாட்டோமான்னு படறது. காலம் காலமா நிக்கற காரியம் பண்ணமாட்டோமான்னு ஆதங்கம் வரது. ஆபீஸ்ல வேலை பண்ணிப் பெண்களுக்குக் கல்யாணம் பண்ணி... இதை எல்லாரும்தான் பண்றா... இதையே பண்ணணும்னா படறது.''

''நீங்க ரொம்ப லேட். இரண்டு பொண் குழந்தைகளை வெச்சுண்டு பாறையா இருக்க ஆசைப்படறது பாவம்''

''வாஸ்தவம். தாரிணி வாஸ்தவம் நான் அல்லாடற இடம் இதுதான். நீயும் குழந்தைகளும் ஒரு பக்கம். எனக்குள்ள இருக்கிற ஆதங்கம் ஒரு பக்கம். நடுவுல தராசு முள்ளா கிடந்து அல்லாடறேன்.''

''உங்க கவிதைகளையெல்லாம் நான் பாராட்டலைன்னு கோபமா?''

''ச்சே...சே... எனக்குக் கோபமே வராது தாரிணி. அது எப்பவோ போயிடுத்து.''

''எல்லாருக்குமா கவிதை, கதை பாட்டுன்னு ஈடுபாடு இருக்கும். இது தெரியாதாவளும் இருப்பாளோன்னோ?''

''பேஷா.''

''இது தெரிஞ்சவாளுக்கு எழுதுங்கோ. உக்காந்து பேசுங்கோ! அன்னிக்கு ஒரு கெழவர் வந்தாரே... அந்த மாதிரி யாராவது வருவா? படிச்சுக் காட்டுங்கோ. ஆனா...''

''சொல்லு தாரிணி?''

''இதெல்லாம் தெரியலைன்னு என்னை ஒதுக்கீடாதீங்கோன்னா''

''சேச்சே''

''என்னை விட்டு நகர்ந்துடாதீங்கோ.''

''தாரிணி.''

''முரடாப் பேசறேனே தவிர உள்ள ரொம்பப் பூஞ்சை. உங்களைத்தவிர வேற ஒருத்தரையும் தெரியாது எனக்கு...''

''என்னம்மா பேசற...?''

''கண் சொருக எங்கேயோ யோசனை பண்ணிட்டு நீங்க உட்கார்ந்திருக்கச்சே... இது என் புருஷனே இல்லையோன்னு தோண்றது. நாம ரொம்பப் பாரமோ இந்த மனுஷனுக்குன்னு தோணறது.''

''நெவர், தாரிணி நெவர்.''

''குழந்தைகள் குதிச்சுண்டு வர்றபோது கண் கலங்க அடிக்குரல்ல ஸ்வாமிப்பாட்டுப் பாடினா வயத்தைக் கலக்கறது. நடுவ விட்டு விடுவமோன்னு பயம் வர்றது. இறுக்கப் பிடிச்சுக்கத் தோண்றது.''



''ஐயம் ஸாரி, தாரிணி.''

''நான் ஸாரி சொல்றேன்னா. நான்தான் ஸாரி சொல்லணும். உங்க உசரத்துக்கு என்னால வரமுடியாது. எனக்கு நன்னாத் தெரியும். எத்தனை உசரம் வேணாப் போங்க. அதைத் தடுக்கக்கூடாதுன்னு தெரியும். ஆனா நம்மாத்திலே காலை ஊனி வெச்சுக்கணும் நீங்க.''

'சந்திய பங்கஜம் ஸ்வாமி அந்திய புஷ்பகம்
சர்வ ரட்சகம் ஸ்வாமி தர்ம தத்துவம்
ராக பந்தனம் ஸ்வாமி ராஸ லீலகம்
கீத போதகம் ஸ்ரீ கிருஷ்ண மந்திரம்'

மனசுக்குள் முழங்கிய எம்.எஸ்.வி.யின் குரல் விஸ்வநாதன் செவிப்பறையில் மோதிற்று. மூச்சு இறைத்தது மறுபடி கண்கள் செருகின. அந்தக் குளிர்காற்றுக்கு நடுவிலும் நெற்றி வியர்த்தது.

''இது நம்ம குழந்தைகள். இதுகள் நன்னா இருக்கணும் நல்லபடியா வாழ்க்கைப்படணும். இது ரொம்ப முக்கியம். ஸ்வாமி பெருமாளேன்னு அடுத்தது நமக்கு ஒரு பையன் பொறக்கட்டும். பெத்து இறக்கின மூனா நிமிஷம் உங்க கைல கொடுத்துடறேன். உங்க இஷ்டப்படி அவனை. வளர்த்துக்கோங்கோ. கவிதையோ, கதையோ பாட்டோ கூத்தோ சொல்லிக் குடுங்கோ. மனசைக் கொஞ்சம் லேசாக்கிக்கணும்னா நீங்க எங்க எடத்துக்குக் கீழிறங்கி வரணும்.''

விஸ்வநாதன் தாரிணியை மெல்ல அணைத்துக் கொண்டான் தாரிணியுடன் காருக்குள் ஏறினான். பேச்சுக் களைப்பில் சுருண்டு மடியில் படுத்துக்கொண்ட தாரிணியின் மெத்தென்ற மார்பில் கை பதிய இறுக்கிக் கொண்டான்.

எதிர்க்காற்று குழந்தை மாதிரி நெஞ்சை மிதித்தது. முகமெங்கும் சில்லென்று முத்தம் கொடுத்தது. முன் கூட்டிப் பதிவு செய்த இடத்தில் குளித்து, உடுத்தி

சிற்றுண்டி முடித்து சிறப்புத் தரிசன டிக்கெட் வாங்கி வரிசையில் மெல்ல நகர்ந்து நிமிர்ந்தபோது அந்த நெடிய உருவம் நெஞ்சில் சரக்கென்று தைக்கக் கண்ணில் ஜலம் பொங்கிற்று.

சுடரும் ஆழியும் ஏந்தி நெற்றித் திருமண்ணே குறுஞ் சிரிப்பாய் உடல் முழுவதுமாய் வருட அம்மா சொல்லிக் கொடுத்த பாசுரம் அனைத்தும் மனசுள் வழிந்தது. கால் துவளத் துவங்கியது. சூழல் மறந்து போயிற்று. மறுபடி தனிமையின் உக்கிரம் பொங்கிற்று.

''கம்ப மதயானை கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்
வேண்டேன்
எம்பெருமான் ஈசன் எழில்வேங் கடமலைமேல்
தம்பமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே''

யானை கழுத்தில் உட்கார்ந்திருப்பது கம்பீரமாய் சுகமாய் கீழே இருப்பவனுக்குப் படும். ஆனால் உட்காருகிறவனுக்கல்லவா தெரியும் அந்த வேதனை, அந்த பயம். ஆபீஸ் என்பது சம்பளம், போனஸ், கார் வசதி மட்டுமில்லை தாரிணி. அது யானை. கம்பமத யானை. அந்த மிருகத்தின் ஒவ்வொரு அசைவும் உட்கார்ந்திருக்கிறவனைப் பயம் காட்டும். பிரியமில்லாமல் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிற வேதனை புரிந்தவனுக்கு நரகம். வேஷமே வாழ்க்கையாகிவிட்டால்... என் கால்களும் பூமியில்தான் இருக்கின்றன. தாரிணி நான் கொஞ்சம் உயரம். என் பார்வையில் தொலைவு அதிகம். என் உயரம் உன்னை உதாசீனப்படுத்துவதற்கல்ல. என் பார்வைக்குள் நீயும் இருக்கிறாய். மனைவியே உன்னை பிரிவது உண்டா? நீயற்று இருப்பது முடியுமா?இறையே இந்தக்குழந்தையை எனக்கு மணம் முடித்தாய். இதன் நெஞ்சு மிதிக்காமல் நான் நடக்க வரம் தா. எவருக்கும் இடைஞ்சல் இல்லாமல் என் மனம் வளர வழி தா. மறந்தும் தீங்கு செய்யா குணம் பெருக வரம் தா.''



அந்தக் காட்டேஜைச் சுற்றிச் சுற்றிக் குழந்தைகள் ஓடின. இரட்டைப் படுக்கையில் குதித்து ஆடின. மலை முழுவதும் மேகம் போர்த்தி மறைவதை வேடிக்கை பார்த்தன. மின் விளக்கில் தகதகக்கும் விமானத்தை நோக்கிக் கும்பிட்டன. உணவு முடித்துப் போர்வைக்குள் களைப்புடன் சுருண்டு தூங்கின. இருட்டு மலையை அழுத்தமாய் அணைத்துக் கொண்டது.

''எனக்கு பாசுரமெல்லாம் சொல்லிக்குடுத்திருக்கா. ஆனா நீங்க பாடறச்சே, வித்தியாசமாத் தெரியறது. உங்க கண்ணுல தகதகன்னு என்னமோ படறது.''

''ஒரு தகதகவும் இல்லை. இருட்ல விளக்கு வெளிச்சம் கண்ணுல பட்டுத் தெறிக்கும்.''

''ம்ம். நான் அதைச் சொல்லலே.''

''என்னைப் பயமுறுத்தாதே தாரிணி. நீ சொல்ற மாதிரியெல்லாம் பெரிசா பக்குவம் வரலை எனக்கு. பாட்டு, ராகம், தமிழ் வார்த்தை இதெல்லாம் கொஞ்சம் நெகிழ்த்தும் என்னை.''

''நான் வழிலே பேசினது வருத்தமில்லையே''.

''துளிக்கூட வருத்தமில்லை.

''ரொம்ப சந்தோஷமா இருக்குன்னா எனக்கு இன்னிக்கு. ஊர் விட்டு ஊர் வர்றது, ஸ்வாமி தரிசனம், ஜிலீர்னு இந்த இடம், மனசுவிட்டுப் பேசினது, மடில படுத்து இறக்கிண்டது... ரொம்ப நாளைக்கப்புறம் பாரம் இறங்கின மாதிரி லேசா இருக்கு, ஏதாவது பாடுங்களேன்.''

''என்ன பாடணும்?''

''ஆண்டாள் பாசுரம் அடிக்கடி பாடுங்கோ.''

''யம்மாடி. நல்லவேளை. கீழே இறங்கி வான்னு கட்டளை போட்டு சினிமா பாட்டா கேப்பியோன்னு நெனைச்சேன்.

''சீ... இங்க வந்து சினிமாப் பாட்டு எதுக்கு?''

''ஏன் உனக்கு சினிமாப் பாட்டு பிடிக்காதா?''

''பிடிக்கும். ஆனா இது...இந்த ஆண்டாள் பாட்டுல இன்னும் குழைவா இருக்கு.''

''எது—?''

''நீங்க அடிக்கடி பாடுவேளே—''

கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும்
நாற்றமும்
விருப்புற்று கேட்கின்றேன் சொல்லாழி
வெண்சங்கே!

விஸ்வநாதன் மனசுள் ஆண்டாளானான். ப்ரேமையுடன் பாடினான். தாரிணி எழுந்து அவனை அணைத்துக் கொண்டாள். என் புருஷன், என் புருஷன் என்று சந்தோஷத்துடன் இறுக்கிக் கொண்டாள். வாய்ச் சுவையும், வாசனையும் நெரித்தாள். இருட்டில் மெல்லிய வெளிச்சத்தில் அவனை உற்றுப் பார்த்தாள்.

## 23

வேலைக்குச் சேர்ந்த பதினைந்தாவது நிமிடத்திற்குள் அந்த லாரிக் கம்பெனியின் ஆண்கள் அத்தனை பேரும் ஒரு முறை நின்று பார்த்து விட்டுப் போனார்கள். குறுக்கே போகிறபோது ஒரு முறை, வருகிறபோது ஒரு முறை, விழியோரம் பார்த்துவிட்டுப் போனார்கள். கூலிகள், கிளார்க்குகள், எடுபிடிப் பையன்கள் எல்லோர் பார்வையும் ஒரே விதமாய் இருந்தன. இந்தப் பார்வை காயத்திரிக்கு புதிதல்ல. மன்னார்குடியிலும் உண்டு. சற்று அதிகமாகவே உண்டு.



மன்னார்குடி இன்ஸ்டிடியூட்டில் 'ஸிஸ்டர், ஸிஸ்டர்' என்று அதிகம் பேசிய பையன்தான், 'உங்களை நான் காதலிக்கிறேன். என்னை நீங்கள் காதலிக்கிறீர்களா. உடன் பதில் இப்படிக்கு' என்று கடிதம் எழுதினான். இளமையான ஷார்ட்ஹாண்ட் மாஸ்டர் ஒருவர், ''என்ன காயத்ரி. காமர்ஸ் கத்துக்குடுக்க வந்துட்ட எப்பக் கல்யாணம் பண்ணிக்கப் போறே'' என்று நாலு பேர் நடுவே கேட்டார்.

''நல்ல மாப்பிள்ளையாக கெடைச்சவுடனே ;சார்!''

''ஏன் நான் இருக்கேனே, தெரியலையா?''—ஜோக் அடித்தார்.

''தெரியலையே சார்''

''என்ன தெரியலை?''

''நல்ல மாப்பிள்ளையாகத் தெரியலையே சார்.''

கூட இருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தபோது முகம் கண்டிப்போனார். 'நான் எவ்வளவு நல்லவன் தெரியுமா? நாலுபேர் முன்னால் என்னை இப்படி ஏன் அவமானம் செய்தாய்' என்று விளக்கம் கேட்டு நாலு பக்கம் கடிதம் எழுதினார்.

''நீங்க சும்மா இருங்க காயத்ரி. எவனாவது வாலாட்டினாச் சொல்லுங்க. நடுத்தெருவுல சட்டையைப் பிடிச்சுப் பளார்ன்னு செவுட்ல இழுத்துப் புடறேன்.''—அரசுசலுகையில் பி.ஏ. முடித்துப் பொழுது போக காமர்ஸ் படிப்புக்கு வந்த கதர்ச்சட்டைப்பையன் ஆதரவு தெரிவித்தான்.

நாலு மாதம் கழித்து, ''காயத்ரி, என்னை லவ் பண்றீங்களான்னு கேக்கலை. கல்யாணம் கட்டிங்கிறீங்களான்னு கேட்கத் தோணுது. எனக்கு நாலு அண்ணன், நாலு மதனி, ஒருத்தருமே சரியில்லைன்னு தோணுது. பொருத்தமான பொண்ணு கெடச்சாத்தான் கல்யாணம் கட்டிக்கணும். இல்லேன்னா கல்யாணமே வேணாம்னு தோணுது. நான் பேசறது தப்புங்களா?''

காயத்ரி அவனையும் மறுதலித்தாள். அதுவரை திடமாய்ப் பழகியவன்மாறிப்போனான். இன்ஸ்டிடியூட் பிரபு உபசாரவிழாவில் ஒரு வெள்ளை ரோசாப்பூவை ஒரு குருவி காதலிச்சது. ரோசாப்பூ காதலிக்கலைன்னு தெரிஞ்சதும் முள்ளுமேலே மோதி மோதித் தன் ரத்தத்தையெல்லாம் ரோசாப்பூ மேலே அபிஷேகம் செய்தது என்று கதை சொன்னான்.

காயத்ரி சட்டென்று புரிந்து கொண்டாள். நிறையப் பையன்களை சினிமா ஆட்டிப் படைக்கிறது என்று தெரிந்து கொண்டாள். வெகுளியாய், நகைச்சுவையாய், நல்லவனாய்ப் பெண்களைக் காதலிக்க 'வேஷம்'கட்டியதைப் பார்த்து அதிசயித்தாள். உடுத்துவது மாதிரி, உண்பது மாதிரி காதல் ஒரு அவஸ்யத் தேவை என்று இவர்கள் பரபரப்பதைப் புரிந்து கொண்டாள்.

ஐயன்மீர்...காதல் என்பது என்ன...காதல் என்பது ஆக்கிரமித்தலா...அடி பணிவதா...கவர்ந்து போவதா... விலைப் பொருளா—பண்டமாற்றா... நாம் இதைப் பற்றித் தெளிவாய் யோசிக்கத் துவங்குவோம். எனக்குத் தோன்றுகிறது, காதல் என்பது விட்டுக்கொடுத்தல், எந்த எதிர்பார்ப்புமின்றி இயல்பாய் நேசித்தல். நேசம் வளைத்துப் போடுமா? விலைபேசுமா? மண்டியிடுமா? இவைகள் வன்முறையல்லவா? வன்முறையில் காதல் மலருமா? காதலை வன்முறை வளர்க்குமானால் அது காதல்தானா?

எதேச்சையாய் ஜே. கிருஷ்ணமூர்த்தி புத்தகம்கைக்குக் கிடைத்தது. ஒரு முறை கட்டுரையைப் படித்ததுமே பளிச்சென்று புரிந்துபோயிற்று. கட்டுரையைப் பார்த்துவிட்டு 'அடடே' என்று துள்ளிக்குதித்தாள். சந்தோஷமானாள். இதுபற்றி எந்தக் கலவரமும் இல்லாது போனாள். கனவும் சினிமாவும் வெகுதூரம் நகர்ந்துவிட்டன. 'அத்தான் என்னைக் கைவிடாதீங்க' என்று



வெள்ளித்திரை அரற்றியபோது, 'நான் வீட்டுக்குப் போகிறேன்டி. நீங்க நல்லா அழுதுட்டு வாங்க' என்று பாதிப் படத்திலேயே எழுந்து போனாள்.

எங்கே நிம்மதி என்று சிலோன் ரேடியோ அலறியபோது பளிச்சென்று ரேடியோவை அணைத்து மனத்தில் கூட சத்தமில்லாமல் இருக்கும் நேரம்தான் நிம்மதி என்று பதில் சொன்னாள்.

''ஏண்டி நல்ல பாட்டை அணைச்சுட்டே...என்ன இது நல்ல பாட்டு இல்லையா?...அப்ப எதுதான்... நல்ல பாட்டு? ஒண்ணுகூட இல்லையா...ஒண்ணே ஒண்ணு கூட?''

காயத்ரி யோசித்துவிட்டு, ''இதுல ரெண்டு லைன் ஸென்ஸிபிளாத் தெரியுதுக்கா'' என்றாள்.

''எதுடி?''

''அள்ளித் தந்த பூமி அன்னையல்லவா
சொல்லித் தந்த வானம் தந்தையல்லவா.''

வானமும் பூமியும் ஜனங்களிடம் என்ன எதிர்பார்க்கின்றன? எதை எதிர்பார்த்து அள்ளித்தருகிறது பூமி? எதை எதிர்பார்த்து சொல்லித்தருகிறது வானம்? வானம் அப்பா மாதிரி. அப்பா வானம் மாதிரி. பேசப்பேச அப்பாவை ரொம்பப் பிடித்துப் போயிற்று. அப்பா மாதிரி இருக்கிறவனைத்தான் காதலிக்கமுடியும் என்று தோன்றிற்று.

மத்தபடி இந்தக் கீழ்வெட்டுப் பார்வையெல்லாம் விஷயமே இல்லை.

இரண்டே நாட்களில் லாரிக் கம்பெனிக் கணக்குப் புரிந்துபோயிற்று. அரசு சௌகர்யத்திற்கு டபிள் என்ட்ரி. காந்திலால் சௌகரியத்துக்கு அவனாகவே ஹிந்தியில் எழுதும் சிங்கள் என்ட்ரி. மற்றபடி கடிதப் போக்குவரத்து வழக்கமானது. நாலுவரி ஐந்து வரிக் கடிதங்கள். வெகு சீக்கிரமே இது திடமான லாரிக் கம்பெனி என்று தெரிந்து போயிற்று. எல்லா லாரியும்

வங்கியின் மூலம் கடனில் வாங்கப்பட்டிருக்கிறது. கடன் அடையும் நேரத்தில் விற்கப்பட்டது. மறுபடி புது லாரிக்கெனக் கடன் வாங்கப்பட்டது. நாலு வருடமாய் ஒரு லாரி சேதத்துக்கு இன்ஷுரன்ஸ் கம்பெனியுடன் பெருத்த சண்டை போடப்பட்டிருந்தது. துருளித் துருவி காயத்ரி ஃபைல்களைப் படிப்பதை காந்திலால் பார்த்தான். இது அப்பனைப்போல பத்து மடங்கு கெட்டி என்று புரிந்து கொண்டான்.

''இந்த இங்கிலீஷ் கம்பெனி கடைசி பில்ல தப்பு இருக்கு சார்.''

''என்னாங்கோ மேடம்?''

''நம்ம இன்வாய்ஸ் இவங்க திருப்பி அனுப்பிட் டாங்க''

''ஆமா, சரக்கு சரியான நேரத்துல போகலை பணம் தரமாட்டேன்னாங்க சரின்னுட்டேன்.''

''ஓ.கே. அதுக்கு இன்வாய்ஸைத் திருப்பி அனுப் பக் கூடாது. அதை ஏத்துக்கிட்டு டெபிட் நோட் தரணும். டெபிட் நோட்ல காரணம் காட்டணும்.''

''ஆங்!''

''இல்லேன்னா நாம இன்வாய்ஸ் பண்ணாத மாதிரி போகும். நாம இன்வாய்ஸ் பண்ணாதபோது நாலா யிரம் நஷ்டம் காமிக்க முடியாது.''

''அவுங்க திருப்பி அனுப்பிச்ச லெட்டர் இருக்கே.''

''அது போதாது, லெட்டர் கரஸ்பான்டென்ஸ் அக் கௌண்ட ரெஜிஸ்டர்ல வராது.''

''என்னா மேடம் பண்றது?''

''திருப்பி இன்வாய்ஸ் அனுப்பி டெபிட் பண்ணச் சொல்வோம்.''

''அனுப்பிச்சுப்பாருங்க. வெவரமா எளுதுங்க, ம்ம்ம். எளுதினாக்கூடப் போறாது. நேரில சொல்ல ணும். என் வண்டில போங்க. அங்க யாரைப் பார்க்கச் சொல்றது? ஆங்...விஸ்வநாதன். உங்க அப்பாருக்கும் ரொம்ப ஸ்நேகிதம். அவரு கிட்டப் போங்க. அப்புறம் அக்கௌண்ட்ஸ் ஆளுங்ககிட்டப்போங்க. நான் போன்ல விசுகிட்டச் சொல்றேன். மாட்டேன் முடியாதுன்னா வந்துடுங்க. மொறச்சுக்க வேண்டாம். எத்தினியோ நஷ்டத்துல இதுவும் ஒண்ணு.''



காயத்ரி பேனா, பென்சிலை எடுத்துக்கொண்டாள். ஃபைலை மடியில் இருத்திக் கொண்டாள். காரின் பின் சீட்டில் சரிந்து புடவையைப் போர்ததிக் கொண்டாள்.

சுருண்ட கூந்தலும் மூக்குத்தியுமாய்ப்பெரிய பூக்கள் போட்ட புடைவையில் டெலிபோன் ஆபரேட்டர், 'ஏன் இன்னிக்கு எனக்கு போன்பண்ணல,' என்று யாரிடமோ செல்லமாய்ச் சண்டையிட்டுக் கொண்டிருந்தாள். 'கொஞ்சம் இரும்மா வச்சுடாத ப்ளீஸ், என்று சொல்லி விட்டு இவளை, யெஸ்...என்று அதட்டினாள். விவரம் சொன்னதும் பட்டன்களைத்தட்டி, ''விசு, உன் வருகை இங்கே தேவைப்படுகிறது'' என்றாள். ''நேத்திக்குப் பல் தேய்ச்ச உடனேவிட்லே சண்டை. அதுபத்தித்தான் உனக்குச் சொல்லணும்னு தோணிச்சு. நீ உன் வொய்ஃப் போட சண்டைன்னு சொன்னியே அதே மாதிரிதான்.''

காயத்ரி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். காத் திருந்தாள். மேஜை ஜாடியில் நெட்டி ரோஜாக்கள் ஆடின. தரைக் கம்பளத்தில் கம்பெனி பெயர் எழுதி யிருந்தது. கண்ணாடிக் கதவுக்கு வெளியே வாகனங்கள் சப்தமின்றி விரைந்தன. ஒரு கண்ணாடிக் கதவில் 'புஷ்' என்றும் மற்றொன்றில் 'புல்' என்றும் எழுதியிருந்தது. யாரோ ஒருவன் 'புல்'லைத் தள்ளியும் 'புஷ்' ஷை இழுத்தும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். உதவ லாமா என்று நினைத்தபோது ஷக்களின் க்ரீச்சலோடு உயரமாய் ஓர் உருவம் வந்தது. ''யெஸ் சுமதி, யார்

எனக்காகக் காத்திருப்பது?'' என்று ஆப்பரேட்டரிடம் கேட்டது. சுமதியானவள் சுட்டு விரலால் காயத்ரியைக் காட்டி விட்டுத் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

''யெஸ், ஐயாம் விஸ்வநாதன். நான் உங்களுக்கு என்ன செய்ய முடியும்?''

காயத்ரி காந்திலால் கம்பெனி பெயரைச் சொன்னாள்.

''ஹா... ஃபோன் வந்தது. உங்களுக்கு அக்கௌண்ட்ஸ் டிபார்ட்மெண்ட் காட்ட வேண்டும். அவ்ளோதானே.''

''இல்லை, இந்த இன்வாய்ஸ் பத்தி...''

''ஸாரி. நான் அக்கௌண்ட்ஸ் ஆள் இல்லை. நான் அவங்களை அறிமுகப்படுத்தறேன். மீறி என் உதவி தேவைன்னா வந்து பார்க்கறேன். கம் இன்.'' மறுபடி கண்ணாடிக் கதவு தாண்டிப் பல மேஜைகளைக் கடந்து உள்ளே நடந்தார்கள். சிடுசிடுப்பான ஒரு மனிதர் முன்னே நாற்காலியை நகர்த்திக் காயத்ரியை விஸ்வநாதன் உட்காரச் சொன்னான். குனிந்து அவளைப் பற்றிய விவரம் சொன்னான்.

''ஆமா, இதுக்கு நீ என்ன? இவங்க நேரே வரட்டுமே.''

''இந்தப் பெண்மணியின் தந்தை எனக்கு நல்ல நண்பர் எனக்குப் பிடித்த எழுத்தாளர்.''

''ஆமாமா... உனக்கு இந்தக் கதை எழுதற பைத்தியம் உண்டில்லையா, இது கிடக்கட்டும். நேத்திக்கு வாங்கின ஆயிரம் ரூபாய்க்குக் கணக்கு எங்க?''

''அல்வா வாங்கித் தின்னுட்டேன். இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கு. முடிச்சிட்டு சாயந்திரமாகக் கணக்கு சொல்றேன்'' ஷூக்கள் கிரீச்சிட நகர்ந்தான்.

''ம்ம்... டெல்மி.''

காயத்ரி விவரம் கூறினாள்.



''இதுக்கு இத்தனை நாளா? போன்ல ஐயாம் ஸாரின்னு இன்வாய்ஸ் கேட்டு வாங்கிட்டு இப்போ இதுக்கு நல்ல நாள் பார்த்திருக்காராக்கும். உடனே டெபிட் நோட் கேட்க வேண்டியதுதானே, உசந்தத்தி உங்க காந்திலால்.''

காயத்ரி பேசாமல் இருந்தாள்.

''உங்களுக்கு எந்த ஊரு?''

''மன்னார்குடி.''

''அடி சக்கை. காந்திலாலுக்கு மன்னார்குடி அக்கௌன்டென்டா? வேண்டியதுதான்! என்ன சம்பளம் தரான். காசுன்னா மூக்கு சிந்துவானே?''

காயத்ரி மெல்லிய குரலில். ''ஐநூறு'' என்றாள்.

''அடி சக்கை. மூக்குகூட சிந்தலையா?''

அவர் கணக்குப்படி மூக்கு சிந்துவதென்றால் எத்தனை ரூபாய் என்று காயத்ரி யோசிக்க ஆரம்பித்து நிறுத்திக் கொண்டாள்.

''சரி, லெட்டரைக் குடுத்துட்டுப் போங்கோ. நாளைக்கு டெபிட் நோட் அனுப்பறேன். காந்தி ஆபீஸ்ல இருக்கானா? ஹலோ...'' போனை எடுத்து படபடவென்று ஆப்பரேட்டருக்குத் தட்டினார். ''இவ ஒருத்தி. சதா ஆம்பிள்ளையோட பேசிண்டு லைனே தரமட்டர்.''

''தேங்க் யூ சார்.''—காயத்ரி எழுந்து நடந்தாள். வெளியேறிக் காருக்குள் உட்கார்ந்தாள். தொலைவில் விஸ்வநாதன் மோட்டார் பைக்கைத் திரும்பத் திரும்ப உதைத்துக் கொண்டிருந்தான். கார் கிளம்பியதும் அருகே வந்து கையசைத்தான்.

''ஹலோ, ஒன் மினிட். என் மோட்டார் சைக்கிள் ஸ்டார்ட் ஆகலை. இது காந்திலால் கார்தானே. என்னை சென்ட்ரல்ல ட்ராப் பண்றேளா, ப்ளீஸ்...''

காயத்ரி தலையசைத்தாள்.

காரைச் சுற்றி வந்து அவன் வலதுபுறக் கதவைத் திறந்து உட்கார்ந்து கொண்டான்.

''யாரு டிரைவர்...அட முருகனா... என்னப்பா சௌக்கியமா...ஸ்பிரிட் வாசனை வருதே. இரு நூறா முந்நூறா...பதறாத ஓட்டும்மா. ஏன் கை நடுங்குது?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே சாமி. சும்மா சதாய்க்கிறியே. இது பெட்ரோல் வாசனை. நான் சாப்டறதை என்னிக்கோ வுட்டுட்டேன்.''

''ஜூன் இருபத்திரண்டுல வுட்டியா?''

''ஆமா சாமி!''

''அதாவது நேத்திக்கு.''

''ஐயோ என்னை வுட்டுடுசாமி.''

விஸ்வநாதன் வாய்விட்டுச் சிரித்தான். பின்பக்கம் சாய்ந்து கொண்டான். கண்களை மூடி 'ஈஸ்வரா' என்றான்.

காயத்ரி இவனை வியப்புடன் பார்த்தபடி இருந்தாள். எதிர்க்காற்றில் பறக்கும் இவன் சட்டைக் காலர் நுனி மாதிரி இவனுள் வெகு ஆழத்தில் ஏதோ ஒன்று பதறியபடி இருக்கிறது என்பதாய் அவளுக்குப் பட்டது.

# 24

சென்னை துறைமுகத்தில் எண்ணெய்க் கப்பல்கள் நிற்பதற்கென்று தனியே இடம் இருக்கிறது. பெரிய பெரிய கப்பலின் அடிவயிறு முழுவதும் தளும்பத்தளும்ப டீஸலோ பெட்ரோலோ வரும். லாரி டேங்குக்கு மாற்றி எடுத்து வரமுடியாது. தண்டையார் பேட்டையிலுள்ள கொட்டில்களுக்கு அவை பைப்லைன் மூலம் அனுப்பப்படும். கப்பலின் அடி வயிற்றில் குழாய்



பொருத்தி விசையான மோட்டார் பம்புகளின் மூலம் கடுமையான அழுத்தத்தில் வேகத்தில் ஆயில், கம்பெனி கொட்டில்களை அவை வந்தடையும். முதலில் பைப் லைனில் கடல்நீர் பாய்ச்சுவார்கள். லைன் முழுவதும் துப்புரவானபிறகு பெட்ரோலோ டீஸலோ அனுப்புவார்கள், இரண்டு அடி விட்டமுள்ள பைப் லைன் ராயபுரம் வழியாக பூமிக்கடியில் தண்டையார் பேட்டை போய்ச் சேரும். அந்தப் பக்கம் மூன்று நான்கு ஆயில் கம்பெனிகள் இருக்கின்றன. ஆனால் பைப் லைன் எல்லோருக்கும் பொது. அவரவர் கம்பெனி எண்ணெய்க் கப்பல் வந்தவுடன் அந்தந்தக் கம்பெனி ஆட்கள் எண்ணெயை பைப்லைன் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்வார்கள். தண்டையார்பேட்டை அருகே வால்வைத் திருப்பி அவரவர் கம்பெனிக்குள் செலுத்துவார்கள். வடக்கே திருப்பதியிலிருந்து தெற்கே தஞ்சை வரை பல முக்கிய நகரங்களுக்கு இந்த ஆயில் கம்பெனிகள் போட்டி போட்டு டீஸலும் பெட்ரோலும் விற்பனை செய்தன. அரசுடைமையான கம்பெனிகள் என்றாலும் ஆரோக்கியமான வியாபாரப் போட்டி இருந்து வந்தது. இந்த பைப் லைன் வசதியை கம்பெனிகள் பங்கு போட்டுப் பராமரித்தன.

கொருக்குப்பேட்டை ரயில்வே லைன் தாண்டி புறம்போக்கு நிலத்தில் அந்தச் சேரி உருவாகியிருந்தது. அந்தச் சேரிக்கு நடுவே உறுதியான குடிசை பைப் லைனுக்கு நேர் மேலாகக் கட்டப்பட்டிருந்தது. எத்தனையோ சேரி போலத்தான் அந்தச் சேரியும் காட்சியளித்தது. கட்சிக் கொடிகள் பறக்கப் பெரிதாயிற்று. ஆனால் அந்தச் சேரியும் குடிசையும் திட்டமிடப்பட்ட செயல். அந்த பைப் லைன் சூட்சுமம் அவனுக்குத் தெரிந்ததும் வெகுநாள் யோசித்தான். தன் குடிசையைத் திடமாய் எழுப்பிக் காத்திருந்தான். யாரும் கலைக்கச் செய்வார்களோ என்று கவனித்தான். பூட்டின குடிசைக்குள் பூமியைத்தோண்டி பைப்லைனில்

சுண்டு விரல் அகலத்திற்கு ஓட்டை போட்டுப் பரிசோதித்தான். அதீத வேகத்தில் பீச்சியடிக்கும் பெட்ரோலைக் கண்டு பயந்தான். அழுத்தமான ஸாலினாய்ட்வால்வுகள் போட்டு ஒரே ஒருநாள் இருநூறு லிட்டர் எடுத்தான். காத்திருந்தான். யாரும் கலைக்கச் சொல்வார்களோ என்று பயந்தான். ஆயிரக்கணக்கான லிட்டர் பெட்ரோலும், டீஸலும் ஓடுகிற பைப்லைனில் இருநூறு லிட்டர் காற்றோடு கரைந்ததாய்க் கணக்கு எழுதப் பட்டதே தவிர கவலைப்பட ஆள் இல்லை. சட்டென்று தீப்பிடிக்கும் பெட்ரோலைத் தவிர்த்துவிட்டு டீஸலை மட்டும் திருட ஆரம்பித்தான். கடல்நீர் எப்போது போகிறது பெட்ரோல் எப்போது போகிறது, டீஸல் எப்போது போகிறது என்று சப்தம் மட்டுமே துணையாய்க் கொண்டு தெரிந்து கொண்டான். மேலும் இரண்டு வால்வுகள் வைத்து எந்தக் காரணம் கொண்டும் உயர் அழுத்தத்தால் எந்தத் தீங்கும் வெடிக்காத திறமையுடன் டீஸல் திருடத் துவங்கினான். இருநூறு லிட்டர் டிரம்கள் கொண்டுவந்து, மணிக்கணக்கில் காத்திருந்து நிரப்பி, மாட்டுவண்டியிலேற்றிச் சேரிக்கு அப்பால் தனியே ஆஸ்பெஸ்டாஸ் கொட்டடியில் அடுக்கி வைத்தான். பாதி விலைக்கு விற்றான். மேற்கொண்டு காலி டிரம்கள் தேவைப்பட்டன. சீக்கிரம் விற்க அவசியம் ஏற்பட்டது. பாதி விலை, அதுவும் கடனில் என்கிற வியாபாரம் வந்தது. முதலில் தெரிந்த லாரி டிரைவர்களுக்கு மட்டும் என்று துவங்கி, வட்டம் பெருகி, புரோக்கர்கள் ஏற்பட்டுத் திடமாய் வியாபாரம் வளர்ந்தது. ஒரு நாளைக்கு ஆயிரம் இரண்டாயிரம் லிட்டர் சுலபமாய் பைப் லைனிலிருந்து எடுக்க முடிந்தது. உதவிக்கு ஆள் தேவைப்பட்டது. கூட்டு நட்புகள் வளர்ந்தன. பணம் புரண்டு புரண்டு சேரியை வளப்படுத்தியது. சேரி வாசலில் ஆட்டு இறைச்சிக்கடையும் மளிகை கடையும் தோன்றின. சென்னை நகரத்துச் சேரிகளில் ஆட்டு இறைச்சிக் கடை உள்ள சேரி அது



மட்டும்தான் இந்த மாற்றங்கள் அவனைப் பயமுறுத்தின. காத்திருந்தான். யாரும் கலைக்கச் சொல்வார்களோ என்று கவனித்தான்.

''ஏதுமில்லை. துறைமுகத்திலும் எண்ணெய்க் கம்பெனியிலும் அதிகாரிகள் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டார்களே தவிர இந்தச் சேரியை யாரும் சந்தேகிக்கவேயில்லை. இப்படி ஒருவனால் திருட முடியும் என்ற யோசனையே யாருக்கும் வரவில்லை.

பூமித்தாய் கொருக்குப்பேட்டைபூமித்தாய் அவனை பணத்தில் மிதக்க விட்டாள்.

களங் ஓசை மாறியதும் அவனும் அவன் கூட்டாளியும் எழுந்து நின்றார்கள்.

''டீஸலுதான்...''

''சுத்தமா டீஸலுதான்.''

''பிரிச்சிருட்டுமா?''

''பிரி''

பூமிக்கு மேல் முதல்வால்வு. பிறகு நேர் மேலாய் ஆள் உயரம் எழுந்த பைப்புக்கு அருகே இரண்டாவது வால்வு. பிறகு வலப்பக்கம் திரும்பிக் குறுகலான பைப்பின் வாய் ஓரம் மூன்றாவது வால்வு ஒவ்வொன்றாய்த் திறக்கத் திறக்கத் தரதரவென்று மெல்லிய ஓசையுடன் பேரல் நிரம்பிற்று.

ஆயிரம் லிட்டர் டீசல் பைப் லைனிலிருந்து பிரிக்கப்பட்டு, பேரல்களில் நிரப்பப்பட்டு மாட்டுவண்டியில் ஏற்றப்பட்டுக் காசாயிற்று.

''பொருமறானுங்கப்பா.''

''யாரு?''

''தொட்டி ஆளுங்க. எங்க கறக்கறே,எந்த வண்டில கறக்கறேன்னு புடுங்கறானுங்க.''

''வாயத் தொறந்தே கொன்னு போட்டுறுவேன்.''

''நானா, நல்லாத் தொறப்பேனே, எதோ உன் புண்ணியத்துல அரிசிச் சோறா துண்றேன். எதுக்கு வாயத் தெறக்கறது?'' —கூட்டாளி பல் தெரியச் சிரித்தான்.

சென்னையில் பலவருடங்களுக்கு முன்பஞ்சம்வந்த போது வடசென்னைப் பக்கம் சிமெண்டு தொட்டிக் கட்டி அதில் அரிசிக்கஞ்சியை நிரப்பி ஏழைகளுக்கு விநியோகம் செய்தார்கள். டீஸல் இன்று அந்தப் பஞ்ச நேரத்துக்கஞ்சி போல அங்கே வியாபாரம் ஆயிற்று. அதனாலேயே தொட்டி என்ற பெயர் வந்தது.

ஆயில் கம்பெனியில் டீசல் பிடித்துக்கொண்டு போகும் லாரி டேங்கரில் பத்தாயிரம் லிட்டர் அல்லது பன்னிரண்டாயிரம் லிட்டர் லாரியின் கொள்ளளவுக் கேற்றபடி இருக்கும் டீஸல், பெட்ரோல் எதுவும் வெப்பத்தில் விரிவடையும். பன்னிரண்டாயிரம் லிட்டர் டீஸல் ஏற்றிய லாரி டேங்கரை இரண்டு மணிநேரம் வெய்யிலில் நிற்க வைத்துவிட்டு, லாரிமீதுஏறி அலு மினியக் குச்சிவிட்டு அளந்தால் பன்னிரண்டாயிரத்து இருநூறு லிட்டர் அளவு காட்டும். வெப்பம் செய்கிற வித்தையிது

கம்பெனியில் ஏற்றிய சரக்கை டேங்கர் ஆட்கள் தொட்டிக்குக்கொண்டு வருவார்கள். சீல் உடையாமல் இருநூறு லிட்டர் டீஸல் எடுப்பார்கள். தொலைவான ஊருக்குக் குலுக்கலுடன் வண்டியை ஓட்டிப் போவார் கள். வழியில் வெய்யிலில் நிற்கவைத்து எடுத்துப் போவார்கள். வெப்பத்தால் விரிவடைந்த அளவு குலுக் கலில், வண்டி உள்ளே அலை அடிக்க உயர்ந்த அளவு- இவையிரண்டும் நடுவே இறங்கிய டீஸலைக் கண்டு பிடிக்க முடியாமல் செய்யும். அந்தத் தொட்டியில் இறங் கின இருநூறு லிட்டர் காசுவுடன் சந்தோஷமாய்ப் பயணம் தொடரும். அந்தக் காசை டிரைவர், கிளீனர்,



சில சமயம்லாரிடேங்கரின் உரிமையாளர்எல்லோருமே பங்கு போட்டுக்கொள்வார்கள். இந்த வம்பில் ஈடுபடாத வர்களும் உண்டு.

அந்தத் தொட்டியில் டீஸல் விலை, பெட்ரோல் பங்க் விலையைவிட எட்டணா லிட்டருக்குக் குறைவாய் கிடைக்கும். வழியில் டீஸல் போட்டுக்கொள்கிறேன் என்று உரிமையாளரிடம் காசு வாங்கிவரும் டிரைவர் தொட்டி டீஸல்தான் போடுவான். லிட்டருக்கு எட்டணா மிச்சம் பண்ணி வழிச்செலவுக்கு வைத்துக் கொள்வான்.

பைப்லைன் ஓட்டைக்கு பிறகு, தொட்டி டீஸல் வியாபாரம்படுத்துவிட்டது. டிரைவர்களைத்தேடிஅலை யும் நிலை ஏற்பட்டது. இன்னும் குறைந்த விலைக்குக் கொடு என்கிற வாக்குவாதம் வந்தது. தொட்டி ஆட்கள் கலவரமானார்கள்.

''பேர் பாதிவிலைக்கு டீஸலா? எப்படிக் கட்டுப்படி யாவுது?''

''எவன்டா விக்கறவன்? எங்க திருடறான் தெரிய லையே?''

''கடன் தரான். நூறு லிட்டர் கடனா. அதுவும் பேர்பாதி விலைக்கு. இதுல என்னாவோ கோல்மால் இருக்கு. துப்பா கண்டுபிடிக்கணும்.'' கழுகாய்ச் சுற்றி சுற்றி வந்தார்கள். இடம் இடமாய்த் தேடினார்கள். தெரியவில்லை.

அவன் சகலமும் புரிந்தவனாய் இருந்தான். எல்லா அசைவுகளையும் நோட்டமிட்டபடி மௌனமாய் இருந் தான். காத்திருந்தான். சேரியைக் கலைக்கச் சொல் வார்களோ என்று கவனித்தான்.

இல்லை. ஏதும் இல்லை. எவருக்கும் இந்த சூட்சு மம் புரியவில்லை.

சேரி வாசலில் உள்ளக் கறிகடைக்குத் தினமும் புதி தாய் இரண்டு ஆட்டுக்குட்டிகள் தோலுரிக்கப்பட்டு இறங்கின. ''இந்தக் கடைலவிக்கிற மாதிரி மெட்ராஸ்ல எங்கேயும் உனக்கு நல்ல ஆட்டுக்கறி கிடைக்காது''— அந்தப் பக்கம் வந்த தொட்டி ஆளுக்கு யதேச்சையாய் யாரோ விவரம் சொன்னார்கள். தொட்டி ஆள் கறிக் கடையை வியப்புடன் பார்த்தான் சேரி அருகே கறிக் கடை. ஆட்டுக் கறிக்கடை கிலோ இருபத்தியெட்டு ரூபாய் விற்கிற மாமிசக்கடை.

தொட்டி ஆளுக்கு மூக்கு அரித்தது. யோசித்தான். தலையில் துண்டு போர்த்தி மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான். நான்கு மணி நேரத்தில் அவனுக்குச் சகலமும் புரிந்து போயிற்று. மாட்டுவண்டி அசைந்து அசைந்து போகப் பின்னால் போய் வாசனை பார்த் தான் டீஸல்.

''டேய், பைப்புலேர்ந்து எண்ணை திருடி எங்க வவுத்திலே மண்ணா போட்டே, டேய்...''—கோபம் பரவி ஆவியாய் முகத்தில் அடித்தது.

பட்டயம் எடுத்தவன் பட்டயத்தாலே சாவான் முள்ளை முள் அப்புறப்படுத்தும். வைரத்தை வைரமே அறுக்கும். இந்த நியதிகள் இவ்வுலகத்தில் எங்கேயும் எப்போதும் நடந்தபடிதான் இருக்கின்றன.

வரதன், சாமுவேலுக்கு புரோக்கரை அறிமுகப் படுத்தினான். சாமுவேல் காசு எண்ணிக் கொடுக்க புரோக்கர் வரதனை மட்டும் அழைத்துப்போய் இரு நூறு லிட்டர் டீஸல் பாதி விலைக்கு கொடுத்தான். டீஸல் பேரல் மூன்று சக்கர வண்டியில் ஏற்றப்பட்டு சாமுவேல் லாரிக்குப் போயிற்று.

பார்ட்டி கூட்டிக்கொண்டு வந்ததற்காக புரோக்க ரிடம் வரதன் கமிஷன் வாங்கினான். சாமுவேலிடம் போய்ப் பாதி விலை டீஸல் இடம் காட்டிக் கொடுத் தற்குத் தனியே பேசினான். பையில் பணம் புரண்டு சாமுவேலுக்கு நன்றி சொல்லி வேறு வண்டி பார்ப்ப தாய்ச் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.



தண்ணித்தொட்டிப்பக்கம் போகாமல் தண்டை யார்ப்பேட்டை பக்கமே சுற்றிக் கொண்டிருந்தான். நிறையக் குடித்தான். வயிறு புடைக்கச் சாப்பிட்டான். மாநகராட்சி குழாயில் குளித்துத் துணி துவைத்தான். நடை பாதையில் தூங்கினான்.

வரதனுக்குச் சொந்தம் என்று எவரும் இல்லை. எதுவும் இல்லை. அவனிடமிருந்து ஒரே ஒரு டிரைவிங் லைசென்ஸ். நான்குமுறை சிவப்புக்குறிப்பு எழுதப்பட்ட டிரைவிங் லைசென்ஸ்

படப்பை முதலியாரிடம் ஆறு டாங்கர் லாரிகள் இருந்தன. லாரி சம்பாதித்துக் கொடுத்த பெரிய வீடும் ஸிமத் காரும் இருந்தன. ஆறு லாரி டாங்கரும் பெட்ரோல், டீஸல் அடித்தன. எல்லா ஆயில் கம்பெனி களுக்கும் வேலை செய்தன. ஒரு லோக்கல் டிரிப் பிறகு பெரிய டிரிப். எல்லா டாங்கருக்கும் இதுதான் கணக்கு. லோக்கல் டிரிப்புக்கு ஆயில் கம்பெனி எண்பது ரூபாய் எழுபது பைசா கொடுத்தது. தண்டையார்ப் பேட்டை யிலிருந்து கிண்டிபோக எண்பது ரூபாய் எழுபது பசா, இது கட்டுப்படியாகிற விலை இல்லை. இந்த விலைக்கு வண்டி ஓடாது. ஆனால் ஆயில் கம்பெனி இதற்குமேல் கொடுக்கவும் செய்யாது.

''சிடில அம்பத்தியாறு சார்ஜெண்ட். அத்தனை பேருக்கும் மொய் எழுதணும். இதை வெளில சொல்ல முடியுமா?''

''வண்டியைப் பழுதில்லாம ஓட்ட டிரைவர் க்ளீன ருக்கு மேல் துட்டுத்தரணும். கணக்குக்காட்ட முடியுமா?''

''சேட்டுக்கிட்டக் கடன் வாங்கி வண்டி எடுக்கிறோம். ஒரு மாசம் துட்டு கட்டாத போனா சேட்டு கட்டாத துட்டுக்கு முப்பத்திரண்டு பர்சண்ட் ரசீதில்லாத வட்டி வாங்கறான்.ரிப்போர்பட்ண்ண முடியுமா?''

''எண்பது ரூபா எழுபது பைசால இத்தினி செலவும் போய் எனக்கு பத்து ரூபா நிக்குமா? எப்படி வண்டி ஓடும்? எப்படி கட்டுப்படியாகும் ஆயில். கம்பெனிலே வாடகை ஜாஸ்தி கேட்டா அந்த வாடகை துட்டு பெட்ரோலில் விழும். டீஸல்ல விழும். டீஸலோ பெட்ரோலே விலை ஏத்தினா ஊர்ஜனம் கோவிச்சுக்குன்றான்.''

''அப்புறம் நடுவல மாட்டறது யாரு?லாரி ஓனரு,''

''டீஸலு திருடத்தான் செய்வான். என்னான்றே அதுக்கு? சாமர்த்தியம் இருந்தா படிச்சுக்கோ போ.''

படப்பை முதலியார் வண்டி தொட்டியில் நின்றது. பத்தாயிரம் லிட்டரில் இருநூறு இறக்கிவிட்டு மாயவரம் போகக் காத்திருந்தது. ,டீஸல் கறந்த காசில் டிரைவருக்கும் முதலியார் பையனுக்கும் சண்டைவர டிரைவர் கெட்ட வார்த்தைகளை இறைத்துவிட்டுத் துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு போய்விட்டான். வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வரதன் டிரைவரானான்.

## 25

தொட்டி ஆளுக்குக் கண் மூடிய போதெல்லாம் பொதபொதவென்று டீஸல்கொட்டுகிறஓசை கேட்டது. பொருமிப் பொருமிக் கண் சிவந்தது நெஞ்சு எரிந்தது.

வர—போற டிரைவர், க்ளீனரை மடக்கி உட்கார வச்சு ஒருக்களிச்சு பல்லு காட்டி டீஸல் வாங்கறோம். வாங்கனதுல எட்டண லாபம் வச்சு விக்கறோம். வித்த



வனுக்கு எட்டணா லாபம் வாங்கறவனுக்கு எட்டணா. லாபம்இதுல ஒருஞாயம் இருக்கு. இவனுங்க என்னடான்னா பூமில ஓட்ட போட்டு பேர்பாதி வெலைக்கு விக்கிறான். அதுவும் கடனா விக்கிறான். அப்ப தொட்டிக்காரன் என்னா தலைல துணியைப் போட்டுக்கிணு போறதா? இதை அப்படியே வுடறதில்லை. ரெண்டுல ஒண்ணு பார்த்துடணும்.

ஒரு ஆயில் கம்பெனியின் டெலிபோன் பகல்பொழுதில் அவலமாய் அடித்தது. ஏதோ ஒரு குரல் புதிதாய் பரபரப்பாய் ஒரு விஷயம் சொல்லியது. அதிகாரிகள் திகைத்துப் போனார்கள். காரில் ஏறி பயத்துடன் சேரியை வலம் வந்தார்கள். மறுபடி கம்பெனிக்கு வந்து டெல்லி பம்பாய்க்குச் சேதி சொன்னார்கள். உத்தரவுக்குக் காத்திருந்தார்கள். கையோடு பிடுங்கிக் கொண்ட வால்வுத் திருகுக்குப் பின்னால் எண்ணெய் கொப்பளித்துச் சிதறுவதுபோல நகரத்தின் எட்டுத்திக்குக்கும் உத்தரவு பறந்தது. மந்திரிகள் பேசினார்கள். மறுபடி ஆயில் கம்பெனிக் கார்கள் சேரியை வட்டமிட்டன. அதிகாரிகள் உள்ளிருந்தபடியே வரைபடம் பிரித்துப் பார்த்து பைப்லைன் தடம் உறுதி செய்து கொண்டார்கள். சேரிக்கு உள்ளே போகப் பயந்தார்கள்.

இந்த லேசான மாற்றங்கள் அவனை நிமிர்த்திற்று. ஏதோ தவறு நடந்து விட்டது என்று தெரிந்து போயிற்று. சகலமும் மறைத்துவிடலாமா என்று யோசித்தான். அதற்கு அதிகநேரம் ஆகும். மாதக்கணக்காய்ப் பொருத்தி வைக்கப்பட்ட வால்வுகளைக் கழற்ற நீண்டநேரம் பிடிக்கும். அவன் யோசனையுடன் கறிக்கடை வாசலில் உட்கார்ந்து கொண்டான். வால்வுகளை இறுக்கிவிட்டுத் தன் ஆட்களை உடனே வெளியூர் போகக் கட்டளையிட்டான். காத்திருந்தான், சேரியை கலைத்து விடுவார்களோ என்று கவனித்தான்.

கடற்காற்று நகருக்குத் திரும்பிய மாலை வேளையில் போலீஸ் லாரிகள் ரயில்வே லைனைத் தாண்டி வந்தன. சேரியை வளைத்துக் கொண்டன.

பெரிய போலீஸ் படைகளோடு எல்லா ஆயில் கம்பெனி அதிகாரிகளும் உள்ளே நுழைந்தார்கள். குடிசை குடிசையாய்ப் பார்த்தார்கள். பூட்டியிருந்த குடிசைக் கதவை உதைத்து திறந்தார்கள்.

''மார்வலஸ் ஐ ஸே மார்வலஸ்'' பைப்லைன் வேலை முழுவதும் அறிந்த ஆயில் கம்பெனி இன்ஜினியர்கள் வியப்போடு கன்னத்தில் கை வைத்து அந்த வால்வுகளில் எதிரே குத்திட்டு உட்கார்ந்தார்கள். அவை இறக்குமதி செய்யப்பட்ட உயர்ரக வால்வுகள். பிசிறில்லாத துல்லிய இணைப்புகள். அழுத்தம் குறைவதற்காக உயரமாக்கப்பட்டு, வலப்பக்கம் மடிக்கப்பட்டு நுண்ணிய பௌதீக அறிவுடன் கூடிய செயல். இந்த இணைப்பு ஒரு நாளும் நெகிழாது; ஒருக்காலும் வெடிக்காது. மார்வலஸ் ரியலி மார்வலஸ்.

சேரியைப் போலீசார் பிய்த்து எடுத்தார்கள். சட்டி பானைகளை உருட்டினார்கள். பெண்களையும் குழந்தைகளையும் மிரட்டினார்கள். பெண்களையும் குழந்தைகளையும் பிடித்துப் பளீரென்று அறைந்தார்கள்.

''யாருது அந்தக் குடிசை? எவன் வேலை இது? சொல்லு சொல்லு, சொல்லுடா.''

அவன் கண் சிவக்கக் கறிக்கடை வாசலில் உட்கார்ந்திருந்தான்.

தன் தாய் மீது கனத்த பூட்ஸ்கள் மிதித்துப் புழுதி பறப்பதைப் பார்த்துத் துடித்தான்.

''டீஸலா திருடறானுங்க? வால்வு போட்டா...எங்க அது...உள்றயா? வழி வுடு பார்க்கலாம்.'' தொட்டி ஆள் குதூகலத்துடன் குறுக்கும் நெடுக்கும் நடந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.



கறிக்கடையில் உட்கார்ந்திருந்த அவனுக்குப் பொறி தட்டியது. சேரியில் உள்ள பூச்சிகூட அவன் பெயரை உச்சரிக்கவில்லை. எல்லா ஹிம்சைக்கும், தெரியாது தெரியாது என்றே பதில் வந்தது.

''பேர்பாதி விலைக்கு அதுவும் கனடா—எப்படிறா கட்டுப்படி ஆவுதுன்னு பார்த்தேன். புதையலு மாதிரி எடுத்தா பேர்பாதி என்னா, தம்பிடிக்கு, நாலு லிட்டர் விக்கலாம்பா. பேர்பாதின்னா கொள்ளையில்லஇது.''- தொட்டி ஆள் மகிழ்ச்சி தாங்காமல் குதித்துக்கொண்டிருந்தான்.

அவன் கறிக்கடையை விட்டு நகர்ந்தான். தொட்டி ஆள் பற்றி விவரம் சேகரித்தான். தொட்டி ஆள் குதிப்பதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வால்வுகள் பிடுங்கப்பட்டன. விரல் அகல ஓட்டை அடைக்கப்பட்டது. சேரி அழிந்து போயிற்று. இருட்டும் நேரத்தில் பெண்கள் அழுகுரல் மட்டுமே பெட்ரோல் வாசனை போல் நிறைந்திருந்தது.

கறிக்கடை மூடும் நேரம் ''இனி ஒனக்கு இங்க வேலை இல்ல பாய். வேற எடத்துல கடை போடு. இந்தக் கத்தி நான் வச்சுக்கிறேன். நீ வேற வாங்கிக்க''–சரட்டென்று கடைக்குள் நுழைந்து மாமிசம் வெட்டும் பெரிய கத்தியை எடுத்து லுங்கிக்குள் செருகிக் கொண்டான். மல் ஜிப்பாவைத் தழைய விட்டுக் கொண்டான்.

நன்கு இருட்டிய நேரத்தில் தொட்டியை நோக்கி வந்தான்.

தொட்டியில் இருபத்தைந்து வாட்ஸ் பல்பு எரிந்து கொண்டிருந்தது. ஒரு டீஸல் டேங்க் மெல்லக் கிளம்பிற்று ''மாயவரம் போகுது. டிக்கட் இருந்தாச் சொல்லு.''—எவன் குரலோ கேட்டது.

"என்னங்க வேணும்? டீஸலா? காலைல வாங்க தரேன் எவ்ளோ வேணும்?"

அவன் பதில் பேசாமல் இருந்தான்.

தொட்டி ஆள் நெருங்கி அவன் முகத்தை ஒற்றை விளக்கு வெளிச்சத்தில் உற்றுப் பார்க்க, நிதானமாய்ப் பேசினான்.

"ஒனக்குச் சாமர்த்தியம் இருந்தா நீ சம்பாதிக்கணும். அடுத்தவன் பொழப்புலமண்ணு போடலாமா?"

"என்ன...என்ன சொல்றே நீ?"

"ஒரு சேரிய அநியாயமா கலைச்சுட்டியே."

"நானா...எந்தச் சேரி?"

"ஒனக்கு வியாபாரம் படுத்துப் போச்சுன்னா அவனுங்க என்ன செய்வானுங்க?"

"அடப் போய்யா-ஊத்துப் போட்டுத் தண்ணி எடுக்கிற மாதிரி டீஸல் எடுக்கறான். என்னமோ பரிஞ்சிக்கினு வரியே சேரி ஜனங்களுக்கு."

"ஒரு ஆளா ரெண்டு ஆளா, நூறு நூத்தியம்பது ஜனமில்ல திண்டாடுது, சம்பந்தமில்லாத பத்துப் பேர லாக்கப்புல ஒதபட வச்சிட்டியே."

"இப்பச் சொல்லு, நீ சொல்லு எவன் அந்த ஓட்ட போட்ட பேமானின்னு சொல்லு. ஒரு போன் அடிச்சாப் போதும் தபதபன்னு வந்து தள்ளிக்கினு போய்டுவாங்க. அவனை மட்டும் உள்ற தள்ளிவுட்டுர்றேன்."

"அவனை உள்ற தள்ளிவிட்டுட்டு நீ ஒக்காத்து சாப்பிடுவியா?"

"ஏன்...என்னா தலையைச் சீவிப்புடுவாங்களா, எனக்கும் ஆள் படை உண்டு. ஒண்ணும் புடுங்க முடியாது.'

"நீ தகிரியமான ஆம்பளையா இருந்தா போய் ஆள் பார்த்துக் கேட்ருக்கணும்.!'



"என்னாத்தக் கேக்றது?"

"எனக்கும் ஓட்ட போட்டுக் குடுறா. நானும் பொழைச்சுக்கிறேன்னு கேட்ருக்கணும்."

"யாரு...யாரு...யாரு...நீ?"

"ஓட்டை போட்டவன்."

"இருக்கட்டும். என்னாண்டவந்து ஏன் மோதறே?"

"காட்டிக்குடுத்தவனோட மோதாத கல்லு சொவுத்துலயா மோதுவாங்க"

"யோவ் சட்டைய வுடு. சட்டை வுடு. கோபாலு... மணி...டேய் சட்டைய வுடுறா."

ஒரு உலுக்கலில் தொட்டி ஆளின் பணப்பை எகிறித் தரையில் விழுந்தது. கண்களில் மரணபயம். தரையில் விழுந்த நாணயங்கள் மாதிரி பளபளத்தது.

"கேடு கெட்ட நாயே, ஒரு சேரியையே கலைச்சிட்டியேடா."

ஆட்கள் ஓடிவந்து இருவரையும் சூழ்ந்து கொள்ளத் தொட்டி ஆள் திமிறினான்.

"கலைப்பேன். என் வவுத்துல அடிச்சா நானும் வவுத்துல அடிப்பேன். வுட்றா சட்டையை."

சட்டையைத் தளரவிட்டுப் பளிச்சென்று தொட்டி ஆளை வலுவு கொண்ட மட்டும் பின்னால் தள்ளினான். கூட்டத்தைப் பிளந்து விழுந்த தொட்டி ஆள் எழுந்து தள்ளாடி நிற்கையில் இடுப்பில் கைவிட்டு மாமிசம் வெட்டும் கத்தியை எடுத்தான். அவன் நிமிர்வதற்குள் கழுத்தில் வெட்டினான். மறுபடி உறுதியாய்க் கத்தியைப் பிடித்து குனிந்த நடுத்தலையில் வெட்டினான்.

ரத்தம் எண்ணெய் போலப் பீச்சி அடித்தது. தரையெங்கும் தெறித்தது. சுற்றி நின்றவர்கள்தலைதெறிக்க ஓடினார்கள். அவன் நாற்றம் நிறைந்த கால்வாய்க் கரையில் இறங்கி நடந்து இருளில் மறைந்தான்.

ஆயில் கம்பெனி அதிகாரிகள் கூட்டம் போட்டார்கள். தொட்டிபற்றியும் பேசினார்கள். எப்படித் தடுப்பது என்று கேட்டுக்கொண்டார்கள்.

மறுபடி டெலிபோன் அடித்தது. ''நான் பூண்டி முதலியார் வண்டி டிரைவர் பேசறேங்க. வண்டி நம்பர் பதினெட்டு நாப்பத்தாறுங்க. பகல் மூணு மணிக்கு மாயவரம் லோட் புடிச்சதுங்க. தொட்டில பேர்பாதி எறக்கிட்டுத் துட்டு வாங்கிக்கினு வண்டி போவுதுங்க, இப்பத்தாங்க தொட்டி வுட்டு வண்டி போவுது. பின்னாடியே போனா பல்லாவரத்துல புடிச்சுடலாங்க. எம்பேர் என்னாத்துக்குங்க. உண்மை விளம்பின்னு வச்சுக்கங்க.''—பொய்க்கூட்டத்தில் திருட்டு ஆட்டத்தில் சண்டையிட்டவன் தோற்றுப்போனதால் உண்மை விளம்பி ஆனான். காட்டி கொடுத்தான்.

''கோ டேக் எ கார். சேஸ் தெட் பாஸ்டர்ட். நெய்ல ஹிம்''—யாரோ நாலு பேருக்கு உத்தரவு விழுந்தது.

பூண்டி முதலியார் வண்டியை வழியில் மடக்கிச் சோதிக்க அதிகாரிகள் கிளம்பினார்கள், ஆனால் பூண்டி முதலியாருக்குச் சகல இடங்களிலும் செல்வாக்கு இருந்தது. அந்தச் செல்வாக்குக்கு அவர் அதிகம் செலவழித்திருந்தார், அவர் வண்டியைத் துரத்துகிற செய்தியை அடுத்த மூன்று நிமிடத்தில் தெரிந்து கொண்டார். மூத்த மகனை அழைத்து விவரம் சொல்லி அவன் காதோடு ரகசியமாய்ச் சில கட்டளை இட்டார். பையன் புல்லட் மோட்டார் சைக்கிளில் பேயாய்ப் பறந்தான் டாங்கர் வண்டி கிண்டி தாண்டுமுன் மடக்கிவிட்டான். இருட்டுச் சந்தில மறைத்தான். இன்னொரு லாரியில் டீஸல் பேரல்களைக் கொண்டுவந்து சீலை உடைத்து ஆறாயிரம் லிட்டர் டீஸலை டாங்கரிலிருந்து பேரலுக்கு மாற்றினான். பேரல் லாரியைப் போகச் சொன்னான்.



''வரதன்... நீங்க புது டிரைவர் இல்ல. இந்த லாரியில் கொஞ்சம் தப்பு நடந்து போச்சு. நாம டீஸல் தொட்டில இறக்கினது ஆயில் கம்பெனில தெரிஞ்சு போச்சு. வண்டியை மடக்குறதுக்கு ஆள் கெளம்பியிருக்கு. நீங்க என்ன செய்யணும்னா...'' வரதன் காதோடு விஷயம் சொன்னான்.

வரதனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. தான் எது தொட்டாலும் அது உருப்படியாகாமல் போவதை நினைத்து நினைத்து வேதனை படர்ந்தது.

''வேற வழியில்லை?''

''இல்ல வரதன்.''

''எந்த எடத்துல செய்யணும்?''

''பல்லாவரம் முன்னாடியே செய்துடுங்க. இருட்டு எடமாப் பார்த்து முடிச்சிடுங்க. நானும் பின்னாடியே வரேன்.''

டாங்கரைச் சந்திலிருந்து ரிவர்ஸ் எடுத்து கிண்டி பரங்கிமலை தாண்டி மீனம்பாக்கம் கடந்து மெல்லச் சாலை ஓரம் நகர்த்திப் பொட்டலாய் இருக்கிற இடம் பார்த்து நிறுத்தினான். மோட்டார் சைக்கிள் பின்னால் வந்து நின்றது.

''இங்க நிறுத்தினா எப்படி? மோட்டுல ஏத்துங்க சீக்கிரம்.''

''மனசாவல சார்.''

''தூத்தேறி யார்யா நீ...நேரங் காலம் தெரியாத உருகற? சீக்கிரம் முடி. பேசினதுக்கு மேல துட்டுப் போட்டுத் தரேன். எடுய்யா வண்டியை.''—மெல்ல இடப்பக்கம் நகர்த்தி மேட்டில் ஏற்றிப் பள்ளத்து விளிம்பின்முன் சக்கரங்களைச் சரித்து வண்டி சரியும் நிலைக்குக் கொண்டுவந்து பின் கதவைத் திறந்து பார்த்தான்.

''ஆக்ஸிலேட்டரை அழுத்திட்டு எகிறிக் குதிச்சிரு' வண்டி அப்படியே கவுந்துக்கும் ம்ம்... மெறி சீக்கிரம்.''

''இடப்பக்கம் சாய்க்கிறதா, வலப்பக்கம் சாய்க்கிறதா?''

''கூறு கெட்ட முண்டம், வலப்பக்கம் சாய்ச்சா கூழாப்பூடுவே, இடப்பக்கம் ஒடிச்சிடு, சரியறபோது எகிறிக் குதிச்சிடு! மெறி மெறி, சீக்கிரம்.''

வண்டி உறுமிக் கொண்டு பள்ளத்தில் சரிந்து பூவாய் மண் இறங்க வலப்பக்க சக்கரம் தூக்கியபடி இடப்பக்கம் மெல்லச்சரிந்தது. வரதன் தன் பையோடு உள்ள டிரைவிங் லைசென்சை வெளியே தூக்கிப் போட்டான்.

''குதி குதி... குதிச்சிடுய்யா.''

குதிக்கிற நேரத்தில் இடது கால் செருப்பு தட்டி எதிற முடியாமல் தடுமாறி முழங்காலில் இடித்துக் கொண்டு மாட்டிக் கொண்டபடியால் வலக்கால் வழுக்கி கைகால் விரித்து ஸ்டியரிங்கில் முதுகுமோதி சந்தில் சரிந்து க்ளீனர் சீட்டில் அடிபட்டு கேபின் உச்சியில் தலைமுட்டி மறுபடி வண்டி பல்டி அடிக்க உள்ளே நங் நங்கென்று அடிபட்டுக் குப்புற விழுந்து, லாரியின் உள்ளே அலைமோதுகிற மூவாயிரத்துச் சொச்ச டீஸலால் மறுபடி புரட்டப்பட, வலப்பக்க ஸ்டியரிங்கும் தரைக்கும் நடுவே கழுத்து மாட்டி, வலியில் கோரமாய்க் கத்தி, நாசித் துவாரங்களில் ரத்தம் வர, மூன்றாவது நிமிடம் செத்துப் போனான்.

மோட்டார் சைக்கிள் காணாமல் போயிற்று. வரதனுடைய டிரைவிங் லைசென்ஸ் மட்டும் பையில் பத்திரமாக மடிக்கப்பட்டுப் புல் தரையில் கிடந்தது.

# 26

''பூவில் வண்டி கூடும்
கண்டு போகும்
கண்கள் மூடும்.''

மாலைக்காற்று நெற்றியை வருட வலக்கை மோதிரத்தின் அடிப்பக்கத்தில் கார்க்கதவில் மெல்லத் தாளம் தட்டி விஸ்வநாதன் பாடிக்கொண்டு வந்தான். சற்றைக்கொருதரம் குனிந்து மவுண்ட்ரோடு சினிமா பானர்களை ஆவலுடன் கவனித்தான். இவள் இருப்புப் பற்றிய நினைவே இல்லாதவன்போல் எங்கெங்கோ சிந்தனைகளும் உதடு முழுக்கப் பாட்டுமாய் உட்கார்ந்திருந்தான்.

தந்தனம்தம் தந்தனம்தம்
தந்தனம்தம் தந்தனம்தம்

''ப்பா. வைரமுத்து கவிதை சிலீர்னு இருக்கு. இல்லே.''—என்று சட்டென்று இவளிடம் பேசினான்.

இவள் ப்தில் சொல்லாது வெறுமே சிரித்தாள்.

''மெட்ராசுக்கு வந்து எத்தனை படம் பாத்தீங்க?''

''இல்லை.''

''என்னது?''

''ஒரு படமும் பார்க்கலை?''

''சினிமா போவீங்கல்லே...''

''ம்ம், எப்பவாவது யாராவது வற்புறுத்தினால் போவது உண்டு, ஆனா...''

''ஆனா....''

''பாதிப் படம்தான் என்னால் பார்க்க முடியறது. முழுக்கப் பார்க்கப் பொறுமையில்லை, நான் முழுசாப் பார்த்த படம் மூணோ நாலோதான். அதுல ஒரு படம் நான் தூங்கிப் போய்ட்டேன்.''

''இண்டர்வெல்ல வந்துடுவேளா?''

''எங்க ஊர்ல இண்டர்வெல்லுக்கு முன்னாடிவாசல் கதவு திறந்து டமாட்டான். இல்லேன்னா பத்தாவது நிமிஷம் வெளியே வந்துடலாம்.''

''அதுக்கு சினிமா போவானேன்?''

''நியூஸ் ரீல் பார்க்கப் பிடிக்கும். நிறைய விளம்பரப் படங்கள் போடுவான். அதுலே சிலது பிடிக்கும். முக்கியமா விளம்பரப் படம் பார்க்கத்தான் போறது.''

விஸ்வநாதன் இடப்பக்கம் திரும்பிக் கூர்மையாய் அவளைப் பார்த்தான்.

''என்ன பாக்கறீங்க?''

''ஒண்ணுமில்லை. நீங்க முழுசாப் பார்த்த தமிழ்ப் படம் எது?

''ஓ நீங்க அப்படித்தான்.''

''ஓ, நீங்க ஆர்ட்ஃபிலிம் பார்க்கற டைப்பா? ஆனா அதிலேயும் ஒரு நல்ல பாட்டு இருக்கு.''

''அந்தப் படத்துக்கு பாட்டே தேவையில்லேன்னு பட்டது.''

''பாட்டில்லாத போனா படம் ட்ரையா இருக்காதா?''

''பாட்டு படத்தை ஈரமாக்கறது?''

''பாட்டு மேலே உங்களுக்கு என்ன கோபம்?''

''கோபம் எதுவுமில்லை. பாட்டு அத்தனை முக்கியமில்லை.''

''எந்தப் பாட்டு, சினிமாப் பாட்டா?''



''எல்லாப் பாட்டும்தான்.''

''மை காட். தடலடியாப் பேசறேளே.''

''நோ, என் அபிப்பிராயம்—பாட்டு போலியாத் தெரியறது எனக்கு. அதுவும் சினிமாப் பாட்டு ரொம்பப் போலி.''

''உதாரணமா?''

''நீங்க சித்த முன்னாடி பாடிய பாட்டு...பூவில் வண்டு கூடும் கண்டு போகும் கண்கள் மூடும்னு...''—காயத்ரி வசனமாய் அதைச் சொன்னாள்.

''இதுல என்ன போலி, இட்ஸ் எ குட் ஸாங்.''

''நோ. பூவ்ல வண்டு உட்கார்ந்திருக்கறதைப் பார்த்தா நீங்க கண்ணை மூடிக்குவேளா? நான் கண்ணை மூடமாட்டேன். க்யூரியஸா அதுல என்ன செய்யறதுன்னு வேடிக்கை பார்ப்பேன். அது கூடல். கலவின்னு மனசில பட்டாலும் வெட்கம் வராது. எனக்கு க்யூரியாஸிட்டி அதிகமாயிடும்.''

விஸ்வநாதன் வாயில் கரைந்த எச்சிலை விழுங்கினான்.

காரின் மேற்கூரையைப் பார்த்தான். ஐயோ பாவம், மன்னார்குடி பொண்ணாச்சேன்னு பேசினா இது இந்தப் போடு போடறதே.

''வெல். கொஞ்சம் அழகுணர்ச்சி தூக்கலா இருக்கு.''

''தட்ஸ் த ப்ராப்ளம். சினிமால சகலமும் தூக்கலாகத்தான் இருக்கு. அழகுணர்ச்சி, அழுகை, வயலென்ஸ், டயலாக், டிரஸ், மேக்கப், செட் எல்லாம் அதிகமாக இருக்கு. அதனாலதான் உக்கார முடியலை. சினிமா மட்டும்தானா? வாரப் பத்திரிக்கை, கதை, நாவல், பட்டி மன்றம், கவியரங்கம் எல்லாமே இங்கே ஒரே பளபளாதான்.''

''கவிதை கூடவா?''

"யெஸ் போனமாசம் மன்னார்குடில ஒரு கவியரங்கம். கவிதை சொன்ன அத்தனை பேரும் ரத்த சிம்மாசனம், மகராந்த புஷ்பம், பாரிஜாதகம், ஒட்டகம், பாலைவனம்னு அதிரடிச்சாங்க கவிதை இங்கே பட்டாசுக் கட்டா, ஜரிகைப் பேப்பரா, கண்ணாடி பாத்திரமா தவிக்கிறது."

"ஒரு கவிதை எப்படி இருக்கணும்னு சொல்றீங்க."

"இதென்ன இண்டர்வ்யூவா?"—காயத்ரி சிரித்தாள்.

"பரவாயில்லை. சொல்லுங்க. தெரிஞ்சுக்கத்தான் கேக்கறேன். சொல்லுங்க. கவிதை எப்படி இருக்கணும்?"

"மரத்து நிழல் மாதிரி, கூழாங்கல் சூடுமாதிரி, நீளமான தலைமுடியை எண்ணெய் தடவி சீவுகிற சத்தம் மாதிரி, ஒரு அமைதியோட இருக்கணும்."

"உதாரணமா..."

"மை காட். இது இண்டர்வ்யூதான்."

"இருக்கட்டுமே. உதாரணம் சொல்லுங்க."

"ம்ம்—" காயத்ரி யோசித்தாள். "நாற்று நடும் பெண்களின் பாட்டுகளில் மட்டும்தான் சேறு பட்டிருக்கவில்லை."

"ம்ம்...அடுத்த லைன்."

"அவ்வளவுதான் கவிதை. சத்தம் இல்லாத கவிதை. ரொம்ப சாதாரண லைன் மாதிரி படும். யோசிச்சா எங்கேயோ ரொம்ப ஆழமான இடத்தில் கொண்டு போய்த் தள்ளிடும். இதுல த்வனிக்கிற சோகம் கட்டிப் போட்டுடும்."

"மறுபடி சொல்லுங்க."

"நாற்று நடும் பெண்களின் பாட்டுகளில் மட்டும்தான் சேறு பட்டிருக்கவில்லை."

விஸ்வநாதன் திகைத்தான். "இது யார்...அப்பா சொல்லிக் கொடுத்தாரா?"



"எங்கேயோ படிச்சேன்."

"மொழி பெயர்ப்புக் கவிதையா?"

"ஏதோ ஒண்ணு. ஆனா இதுதான் கவிதை? என்னைப் பாதிக்கிற கவிதை."

"பாரதி படிச்சிருக்கேளா?"

"ம்ம்."

"அவன் கவிதை எப்படி? பளபளாவா. கண்ணாடிப் பாத்திரமா?"

"உடனே இப்படி க்ரூரமா கேள்வி கேட்கக்கூடாது. யோசிக்காமப் பேசக்கூடாது. கண்ணாடிப் பாத்திரமே கண்டு பிடிக்காத போது கண்ணாடிப் பாத்திரம் ஒசத்திதான். தாரை தப்பட்டையே பெரிய ஒலியா இருக்கறப்போ பட்டாசு வெடி புரட்சிதான். மை ஊறின பேப்பருக்கு நடுவே ஜரிகைப் பேப்பர் அற்புதம்தான். ஆனா பாரதியோட வசன கவிதை படிக்கணும் நீங்க. கந்தனும் வள்ளியும்னு. இரண்டு சணல் கயிறு துண்டு பத்தி எழுதின கவிதை. இன்னிக்கு எழுதறவர்கள் கவிதையைவிட ஒசத்தி. இன்னும் ரொம்ப காலத்துக்கு நிக்கப் போற ஒசத்தி. பாரதியோட சீட்டுக் கவிக்கும், விநாயகர் அகவலுக்கும், வாணி துதிக்கும், கொடி வணக்கக் கவிதைக்கும் தாண்டி நிற்கப்போற கவிதை அது."

"எனக்குப் புரியலை."

"பாரதியாரை நீங்க சரியாப் படிக்கலை."

"உங்க வயசு என்ன காயத்ரி?"

"ஏன்?"

"வேற என்னவெல்லாம் படிச்சிருக்கீங்க?"

"ஏன்?"

"உங்க வயசுக்கு அப்படித் தீர்மானமாப் பேசறது சரியா?"

காயத்ரிக்குள் சட்டென்று கோபம் படமெடுத்தது. வயசுக்கும் யோசிப்புக்கும் என்ன சம்பந்தம்?''

''வயசுங்கறது அநுபவம் இல்லையா?''

''வயசுக்கும் அநுபவத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''வயசு ஆக ஆக அநுபவம் அதிகமில்லையா?''

''வயதான முட்டாள்களை ;நீங்கள் சந்தித்த தில்லையா விஸ்வநாதன்?''

''நீங்கள் சந்தித்திருக்கிறீர்களா காயத்ரி?''

''யெஸ்.''

''எக்ஸாம்பிள்...''

''யூ''

சுளீரென்று பிரம்பால் கண் விளிம்பில் அடி வாங்கின பையன் மாதிரி கணநேரம் தவித்தான் விஸ்வநாதன். மனசுக்குள் முகத்தைப் பொத்திக் கொண்டான். நிமிர்ந் தான்.

''எதுக்கு என்னை முட்டாள்ங்கறீங்க?''

''என்னைக் கவிதை எப்படி இருக்கணும்னு கேட் டீங்க, நான் பதில் சொன்னேன். என் அபிப்பிராயத்தை நீங்கள் மறுத்திருக்க வேண்டும். கவிதை பற்றி உங்கள் இலக்கணம், கவிதை பற்றி உங்கள் அபிப்பிராயம் சொல்லிலிருக்க வேண்டும். பாரதியின் உயர்வு பற்றிச் சொன்னேன். அதைத் தாழ்ச்சியாய் மனசில் வாங்கிக் கொண்டு என் வயசு பற்றி கேட்கிறீர்கள். விவாதம் புரியும் விதம் இல்லை. என்னைவிட உங்களுக்கு வயசு அதிகம். விவேகம் குறைவு.''—காயத்ரி வேகமாய் ஆங்கிலத்தில் பேசினாள்.

''உங்க அபிப்பிராயத்தைச் சரியான காரணங் ளோட மறுத்துப் பேசினா மாத்திக்குவீங்களா?''

''நிச்சயமா மாத்திக்குவேன்.''



''அதாவது நீங்க தீர்மானமாப் பேசலைன்னு சொல்றீங்க.''

''எதைப்பத்தி யார் தீர்மானமாப் பேசமுடியும்?''

''வெரிகுட். எது பத்தியும் யாரும் தீர்மானமாப்பேச முடியாதபோது இவ்வளவு முரட்டுத்தனமா அபிப்ராயம் சொல்றது சரிதானா? சந்தேகத்தோடதானே பேசி யிருக்கணும்? ஒரு விஷயம் பற்றிச் சந்தேகம் இருந்தா இத்தனை கோபம் வருமா?''

''உங்களை முட்டாள்னு சொன்னது கோபம்னு நினைக்கிறீங்களா!''

''இது கோபம் இல்லாம... காதல் வயப்பட்ட பேச்சா? அதனால் வந்த வெளிப்பாடா?''

''நாம் இலக்கியம் பேசறோம். என் தனிப்பட்ட உணர்வுகளை அல்ல.''

''அப்போது இலக்கியம் வேறு, பர்ஸனல் ஃபீலிங் வேறா? தனித்தனியா மனசுக்குள்ள கட்டம் கட்டி வச் சிருக்கீங்களா?''

காயத்ரி சூள் கொட்டினாள்.

''பூவில் வண்டு கூடும், கண்டு போகும், கண்கள் மூடும். வாஸ்தவம். இதுல அழகுணர்ச்சி கூடுதல்தான். பூவும் வண்டும் இணைவதைப் பார்த்து நாணப்படுகிற ஒரு நபரின் மெல்லிய உணர்வு என்று ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது? உங்களை அந்தக் கவிதையில் ஏன் திணித்துக்கொள்கிறீர்கள்? தன் சலவை துணிகளுக்கு நடுவே பனியனுக்குப் பதிலா ப்ரா வந்துவிட்டது என்று வெட்கப்பட்ட விடலைப் பையனைத் தெரியுமா உங்க ளுக்கு? ப்ரா என்பது வெறும் உள்ளாடை இல்லை அவ னுக்கு. அது என்னென்னவோ விஷயம். ரொம்ப நாள் இதுபற்றி அந்தப் பையன் புலம்பிக்கொண்டிருந்தான், அவனையும் முட்டாள் என்று அழைக்க வேண்டாம்

காயத்ரி. மனிதமனம் விசித்திரமானது. அதீத கற்பனைகள் செய்யக்கூடியது. கற்பனை தவறு என்று சொல்லாதீர்கள் மேடம். கற்பனை மனிதனின் சௌகரியம். இதுவரை அவன் வளர்ந்ததற்குக் காரணம் கற்பனைதான். விஞ்ஞானமும், காரும், கம்ப்யூட்டரும் கற்பனை வளர்த்த செடிகள்தான். கற்பனைச் செடியின் கனிகள்தான்.''

''ஹை...'' காயத்ரி அவனை அலட்சியமாய் மறுத்தாள். ''கொலையும், கொள்ளையும், கற்பழிப்பும், யுத்தமும்கூட கற்பனையின் விளைவுதான் நண்பரே. இலக்கியத்திலிருந்து திசைமாறிப் பாயவேண்டாம், நிஜம் மறுக்கிறவருக்குத்தான் கற்பனை சௌகரியம். நிஜத்தின் வெம்மை தாங்காதவனுக்குத்தான் பாடடும், பாட்டுமயக்கமும் அவஸ்யம். பூவில் வண்டு கூடுவது நிஜம். இயற்கை அளித்த வரம். அது வெட்கத்தை ஒருவனுக்கு அளிக்குமென்றால் அவன் பூவையோ வண்டையோ பார்க்காது தன்னை, தன்கூடல் அநுபவத்தைப் பார்க்கிறானென்று அர்த்தம். மிஸ்டர் விஸ்வநாதன், என்னை அந்தப் பாட்டில் நான் திணித்துக் கொள்ளவில்லை. மாறாக நீங்கள் உங்களை, உங்கள் கூடல் அநுபவத்தை அந்தப்பாட்டில் திணித்துக்கொள்கிறீர்கள். அதனால்தான் போதையாய், பிடித்ததாய்ப் போய்விடுகிறது அந்தப் பாட்டு...''

''சபா்ஷ். உங்கள் பேச்சிலேயே பதில் இருக்கிறது காயத்ரி. புரிந்துகொள்ளுங்கள் மனிதன் தோன்றி கல்பகோடி காலமாயிற்று. இன்றுவரை அவனால் நிஜத்து வெம்மையைத் தாங்க முடியவில்லை. கோடானுகோடி மனிதர் இறந்து போய்விட்டார்கள். இன்னும் மரண பயம் போகவில்லை. கற்பனை என்பது நிழல்தான் குடைநிழல்தான், மனிதனால் அதைத் தவிர்க்கவே முடியவில்லை. முடியவும் முடியாது. பாட்டும், கவிதையும், நாவலும், நாடகமும், மனிதன் இங்கு இருக்கும் வரை இருக்கப்போகிற விஷயம்.''



''பழக்கத்தால் நிலைத்துவிட்ட விஷயம்.''— காயத்ரி இடை வெட்டினாள்.

''என்ன பழக்கம்?''

''பாட்டு சுகம், உயர்வு என்று சொல்லிக் கொடுக்கப்பட்டுப் பல் தேய்ப்பது மாதிரி அனிச்சையாய் ஈடுபடும் விஷயமாயிற்று. காலையில் பல் தேய்க்கிறபோது தெளிவோடு தேய்க்கிறவர் எவருமில்லை. மணியடித்ததும் பசியெடுத்து வாயில் எச்சில் ஊறுகிற மிருகம்போல பாட்டு என்றதும் பரவசமாகிப் போகிறது. மேலும் நிஜம் தெரிந்தவனுக்கு மரணமும் இல்லை, மரண பயமும் இல்லை.''

''கடவுளே!''

''யாரை அழைக்கிறீர்கள்? அப்படி யாரேனும் உண்டா?''

விஸ்வநாதன் இரண்டு கைகளையும் தூக்கினான். விவாதத்திலிருந்து விலகிக் கொள்வதாய் சைகை செய்தான். கார் காந்திலால் கம்பெனி வாசலில் நின்றது.

''அடடே. நான் சென்ட்ரல்ல எறங்கணுமே விட்டுட்டேனே...''

''நான் கவனிச்சேன்.''

''எதை?''

''சென்ட்ரல் தாண்டறதை.''

''ஏன் சொல்லல்ல?''

''நீங்கள் முட்டாள்ங்கிறதை மறுபடி நிரூபிக்க''— காயத்ரி இறங்கிக் கம்பெனிக்குள் நுழைந்தாள்.

வடிவேலு கடையிலிருந்து நாணு அய்யர் இறங்கி, ''வாப்பா. வா.'' என்று விஸ்வநாதனை அன்புடன் வரவேற்றார்.

## 27

பேசியது அத்தனையும் முரட்டுத்தனம்தானோ... துக்கிரித்தனம்தானோ? யாருக்கோ என்னவோ பிடித்திருக்கிறது. எனக்கென்ன அதனால். என் மறுதலிப்பின் அவசியம் என்ன? அபிப்ராயம் கேட்டாலும்கூட சிரித்து விட்டுச் சும்மா இருக்க ஏன் முடியாது போகிறது? முட்டாள் என்று இரைச்சலிடுகிற கோபம் குமுறுகிற சீற்றம் எதனால்? அவனைக் காயப்படுத்திப் பலன் என்ன? இந்தத் தமிழ் தேசத்தில் லட்சோப லட்சம் ஆண்களில் அவனும் ஒருவன் சாராசரி புருஷன். பேண்டும் சட்டையும் பிடரிமயிரும்தான் நவீனமே ஒழிய புத்தி முழுதும் பழமை, சிந்தனையற்ற பழமை. கேள்வியற்ற குணம்.

இதைக் கண்டு நான் ஏன் பொருமுகிறேன்? ஏன் பதறித் துடிக்கிறேன்? என் அறிவை. என் யோசனையை வார்த்தை அமிலமாய் மாற்றிப் பிறர் முகத்தில் ஏன் ஊற்றுகிறேன்? ஏன் நாகரிகம் தெரியாமல் பேசுகிறேன்?

எனக்கும் தமிழ்தான் மூச்சு.—ஆனால்
பிறர்மேல் அதை விடமாட்டேன்.

யார் கவிதை இது...ஞானக்கூத்தனா...தன் மூச்சுக் காற்றுக்கூடப் பிறர்மேல் படாமல் விலகிக்கொள்கிற நளினம், என்று வரும் எனக்கு? என் அபிப்ராயத்தை உரத்துச் சொல்லிப் பிறரைத் தாக்குவது ஏன்?

ஆனால் இப்படி ஊசியாய்ச் சொல்கிறபோதுதான் மனசில் தைக்கும்படி நேரிடுகிறது. பளீரென்று அறைகிற போதுதான் நிதானம் கொண்டுவர முடிகிறது. உலுக்குகிறபோதுதான் போதை கட்டவிழ்கிறது.



''உங்கள் வயது என்ன காயத்ரி''—மடையன் என்னவோ இவன் கல்பகோடி காலம் வாழ்ந்து கண்டவன் போல என் வயது கேட்கிறான். அநுபவத்தை, அறிவை வயதோடு இணைக்கின்றவன் நிச்சயம் முட்டாள்தான்.

நெற்றிக்கு நடுவே சுடரை நிறுத்தி, யோசிக்கும் விஷயத்தை அச்சுடருள் பொதிந்து நேர்க்கோடாய் அவ்விஷயத்துள் இறங்கி ஒன்றன்பின் ஒன்றாய்க் கேள்வி கேட்டுப் பிரித்து அறிதல் வயதின் துணையா? காற்று மாதிரி புத்தி அலைந்து அலைந்து பரவித் திசையற்று ஓடுவதை அநுபவம் என்றா அறிவு என்றா சொல்லுகிறாய்.

நெற்றிக்குள் சுடரை எப்போதும் தரித்திருப்பவன் சூழ்நிலை மறப்பானா? சென்ட்ரல் ஸ்டேஷன் வருவது தெரியாமல் போவானா?

நான் அப்படித்தான் எரிப்பேன். தீயாய் சுடுவேன். நெற்றி நடுவில் மட்டுமில்லை. உடம்பே ஒரு சுடராய்த் தெரிகிறது எனக்கு. சகல புலன்களும் மயக்கம் இன்றி விழித்திருக்கின்றன என்னுள்.

அவன் மந்தமாயிருப்பது அவன் குற்றமில்லை காயத்ரி. இன்றைய சூழ்நிலை இவ்விதம். எவ்வளவு மயக்கம் தர முடியுமோ அவ்வளவு மயக்கம் ஊட்டப்படுகிறது. வலிக்குப் பயந்து மாற்றி மாற்றிப் பெதடின் போட்டுக் கொள்கிற வியாதிக்காரன் போல நிஜம் நெஞ்சுக்குத் தெரியவேகூடாது என்று ஜனங்கள் ஆசைப்படுகிறார்கள்.

உன் மூர்க்கம் அவனை மேலும் சிதிலப்படுத்தும். சிதிலம் மேலும் போதையை உட்கொள்ள வைக்கும். உன் எண்ணத்தை அவனுக்கு அறிவித்தல் முக்கியமே ஒழிய— அவனுக்குப் புரியும் வகையில் பரிமாறுவது சிறப்பே தவிர, கோபம் வேதனையைத்தான் தூண்டும். புரிதல் இல்லாமல் அறிந்து கொள்ளும் ஆவலைத் தூண்டாமல் நகரச் செய்யும்.

இரவு வேளைக்கான சாதம் மட்டும் குக்கரில் வைத்துவிட்டு காயத்ரி மேல் மாடியில் சுவரோரம் மோடாவில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தாள். இருள் மெல்லக் கவிழும் வானத்தை வெறித்துக் கொண்டிருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த பக்கம் பாம்பே கோடவுன் பகுதி. பெட்டிகள் உயரமாய் அடுக்கப்பட்டுத் தார்பாலின் போட்டு மூடப்பட்ட பகுதி. கௌசல்யா வசிக்கும் பகுதி.

ஏழு மணிக்கு சோற்றுக்கடை முடிந்துவிட்டது. அப்பா இன்னும் மேலே வரவில்லை. எட்டு மணிவரை வேலை இருக்கும் அவருக்கு. வந்தவுடன் குட்டித்தூக்கம் போட்டுவிட்டுத்தான் சாப்பிட உட்காரப் போகிறார். அதுவரை என்ன செய்வது? கௌசல்யாவை வரச் சொல்லலாமா? மழலையாய் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கலாமா? விஸ்வநாதன் பேச்சையும் மழலை என்று ஏன் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

''கௌசல்யா''—காயத்ரி குரல் எழுப்பும் முன்னால் யாரோ முந்திக்கொண்டார்கள். சின்ன சிம்னி விளக்கோடு பெட்டி இடுக்கில் நின்று தேடினார்கள். குரல் ஆண் குரலாய் இருந்தது. புல்தரையில்... பட்டுப் பூச்சியென இருட்டுப்பச்சையென விளக்கொளி அலைந்து நின்றது நகர்ந்தது. சந்திலிருந்து கௌசல்யா ஓடி வந்தாள்.

''வந்திட்டியா'' என்று கனத்த குரலில் வினவினாள்.

''ஏன், கண்ணு தப்பிச்சிட்டியா— ஓசையற்ற பாம்பே கோடவுனிலிருந்து அவர்கள் கிசுகிசுப்பதுகூட மேலே தெளிவாய்க்கேட்டது. சிம்னி விளக்கு ஏந்தியவன் அதைப் பெட்டியின்மீது வைத்தான். முன்னே நகர்ந்து கௌசல்யாவை அள்ளி அணைத்துக் கொண்டான்.



''ஏன்னா இது நொழஞ்சதும் வலிச்சுக்கிற. வுடு என்னை''— கௌசல்யா சிணுங்கினாள். ''ஓடியாந்திட்டியா?''-மறுபடி கேட்டாள். ''ராவுத்தர் ஜாமீன்ல இட்டாந்துட்டாரு. ஊருக்குப்போய் என் அம்மாவைப் பார்த்துட்டு வான்னாரு. நான் இங்கே ஓடியாந்துட்டேன்.''

''ச்சீ போ. ஆத்தாவப் பாக்காத இங்க வந்து என்னா ஆட்டம்''—தளர்த்திக் கொண்டாள்.

'ஓ, இவன் கௌசல்யாவின் ஆளோ? கைதாகிக் கூட்டிப் போகப்பட்டவனோ?'

''கேஸு என்ன ஆச்சு?''

''வர்ற திங்கக்கிழமை முடியும், கோர்ட்டுக்குப் போவணும். அப்புறம் நேரா ஜெயில், மூணு மாசமோ நாலு மாசமோ?''

''நிச்சயம்தானா?''

ராவுத்தர் வக்கீலே சொல்லிட்டாரு. இதுக்கு மேலே ஒண்ணும் செய்ய முடியாதுன்னுட்டாரு''

''ஒடியாந்திடலியே...?''

''ஏன், ஓடியாந்தா சேத்துக்கமாட்டியா?''

''என் ராசா... உன்னியைச் சேர்க்காத என்னத்துக்கு நான் பொம்பளையா சமைஞ்சேன்.''

கௌசல்யா மறுபடி அவன் முரட்டுப்பிடியில் சிக்கினாள். சிரிப்புடன் தவித்தாள். பரபரக்கிறவனை அனுமதித்தாள். சிம்னி விளக்குக் குதியாட்டம் போட்டது. நிழல்கள் சுவரில் அலைந்தன.

''முட்ட முட்டக் குடிச்சிருக்கியா? எனக்கு என்ன வாங்கியாந்தே?''

சிம்னிக்காரன் சட்டைத்தூக்கிப் பாட்டிலைக் காட்டினான். கௌசல்யா அதை வாங்கிக்கொண்டு பெட்டிகளுக்கிடையில் நுழைந்து தார்பாலின் மறைப்புக்குள் புகுந்தாள். சிம்னியும் வந்த ஆளோடு உள்ளே

நுழைந்தது. பெட்டிகள் காயத்ரி எட்டிப்பாக்கும் சுவரிலிருந்து நான்கு அடி தள்ளி அடுக்கப்பட்டிருந்தன. உள்ளே நுழைந்தவர்கள் தார்பாலினைச் சரித்து மறைத்துக் கட்டி பெட்டிக்கும் சுவருக்கும் இடைப்பட்ட வெளியில் உட்கார்ந்து கொண்டார்கள். கோடவுனுக்குள் வருகிற நபர்களுக்கு அது மறைப்பே தவிர, உயரத்தில் உட்கார்ந்திருக்கிற காயத்ரிக்குஅது வெட்ட வெளிச்சமாய் இருந்தது. கௌசல்யா ஆயத்தமாவது தெரிந்தது.

காயத்ரி அவளை அசையாமல் வியப்புடன் பார்த்தாள். இரண்டு மிடறு பாட்டில் திரவம் விழுங்கிவிட்டு வெற்று நெஞ்சைத் தடவிக்கொள்வதைப் பார்த்தாள். அதே பாட்டிலை அவனுக்கு ஊட்டி விடுவதைப் பார்த்தாள். இது என்ன, இது என்ன என்று வியப்புடன் பார்த்தாள்.

பூவில் வண்டு கூடும்
கண்டு போகும் கண்கள் மூடும்
பூவினம் மாநாடு போடும்
வண்டினம் சங்கீதம் பாடும்

விஸ்வநாதன் குரல் அவள் காதோரம் ஒலித்தது. யப்பா...எத்தனை சந்தோஷம் இவர்களுக்கு. எத்தனை கொஞ்சல். எத்தனை இறுக்கம்... எவ்வளவு முரட்டுத்தனம்... கௌசல்யா பளீரென்று தன்னைக் கலைத்துக் கொண்டபோது காயத்திரியின் முதுகுத்தண்டு சிலிர்த்து அடங்கிற்று.

இதுதான் புருஷன் மனைவி என்கிற உறவின் அர்த்தமா? அன்புஎன்பதன் வெளிப்பாடு இப்படிதானா? இந்த இரண்டு பேரும் என்ன சந்தோஷமாய் இருக்கிறார்கள்? இவர்கள் சந்தோஷம் எவ்வளவு அழகாக இருக்கிறது. எனக்குள்ள எவ்வளவு சந்தோஷம் வருகிறது. மேலேஇருந்து ஒரு கூடைப்பூவைக் கொட்டவேண்டும் போல சந்தோஷம் வருகிறது. வேண்டாம். அவர்களை இதழ் அளவுகூட திசை திருப்பவேண்டாம். லெட் தெம்



பி ஹேப்பி. காயத்ரி எதிர்பக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டாள், கண்களை மூடிக் கொண்டாள். நெற்றியில் சுடர் தெரிந்தது. சுடருக்கு உள்ளே சிம்னி விளக்குக்காரனும் கௌசல்யாவும் பிணைந்து கிடந்தார்கள். இது இயல்பு. இயற்கை அளித்த வரம். புருஷனின் முரட்டுத்தனமும் பெண்மையின் குழைவும் எதிர் எதிராய் நின்று வசீகரித்த விதம். இந்த வசீகரம் ஒரு சூட்சுமத்தை உள்ளே வைத்துக் கொண்டிருக்கிறது. மனிதச் சங்கிலி அறுந்துபோகாமல் இருக்க ஈர்ப்பு உபயோகப்படுகிறது, பசியின் உந்துதலால் வண்டு வரினும் அவன் வருகை பசியின் பொருட்டு மட்டுமில்லை புஷ்பம் தேனைத்தக்க வைத்திருப்பது வண்டியின் பசிக்காக மட்டுமில்லை.

எனக்கு இலை மாதிரி வயிறு. இந்த வயிறு உணவு செரிக்க மட்டுமில்லை. இதற்கு வேறு ஒரு வேலையும் இருக்கிறது. ஒரு உயிரை, ஒரு மனிதனை நான் சுமந்து வழங்க வேண்டிய விதமாகவும் அமைந்திருக்கிறது. என் கை, கால், தோள், மார்பு, உதடு எல்லாம் என் உடல் அமைப்பு முழுவதும் இத்தொடர்புச் சங்கிலியின் பொருட்டே படைக்கப்பட்டிருக்கிறது. நான் பெண்ணாய்ப் பிறந்திருக்கிறதன் பெரிய பர்ப்பஸ் தாயாய் மாறுவதுதான். என் முக்கிய வேலை இதுதான். இதை முன்னிட்டே பிற காரியங்கள், இந்தத் தொடர்பு சங்கிலி இல்லை எனில் என் இன்றைய எந்த வேலையும் பயனில்லை. இது அறுந்துவிடும் எனில் என் இருப்பும் முக்கியமில்லை.

கூடல் என்பது சிலர் சொல்வதுபோல் அசிங்கமும் இல்லை. பலர் கொண்டாடுவது போல் ஆரவாரமும் இல்லை. அது அமைதியான விஷயம். தலையாய காரியம். கவிதை மாதிரி கவனமான சமாச்சாரம். போகம் பிள்ளை பெறுதல் பொருட்டே. ஈர்ப்பு சுகம் மட்டுமே வாழ்க்கையில்லை. தொடர்புச் சங்கிலி தோற்றுவிக்காத சுகம், சத்தில்லாத உணவு.

நானும் இந்தக் கூடலைப் பார்த்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். இது வெட்கத்தினால் அல்ல இவ்விஷயத்தின் நுனிவேர் தேடி உட்கார்ந்திருக்கிறேன். ஒருவேளை வைரமுத்து எழுதினதும் இதைத்தானோ? இந்த இயற்கையின் பிரமிப்பு தாங்காமல்தானோ? வைரமுத்து கண்கள் மூடும் என்று சொன்னது பிரமிப்பா. வெட்கமா தெரியவில்லை. நான் அதை வெட்கம் என்று எப்படி அர்த்தப்படுத்திக் கொண்டேன்? விஸ்வநாதனும் அதை வெட்கம் என்றுதான் அறிவித்தான். என்னை அப்பாட்டில் திணித்துக் கொள்வதாய்ச் சொன்னான்.

இப்படி ஒரு காட்சியைப் பார்த்தேன் என்று விஸ்வநாதனிடம் சொன்னால் என்ன செய்வான்? என்னைக் கூடப் பார்க்க முடியாமல் கண்களை மூடிக்கொள்வானா?

ச்சே. முட்டாள் என்பது கடுமையான வார்த்தை. விஸ்வநாதன் முட்டாளாய் இருப்பதில் எனக்கு எந்தவிதக் கோபமும் இல்லை. எனக்கு உதவி செய்பவனுக்கு நான் உதவி செய்ய வேண்டுமே தவிர எட்டி உதைப்பதில் அர்த்தமும் இல்லை.

விஸ்வநாதனிடம் அந்தப்பாட்டு சரி என்று சொல்லி விடலாமா? கண்களை மூடுவது பிரமிப்பினால் என்று அர்த்தம் காட்டலாமா? இது மன்னிப்புக் கேட்பது மாதிரி படுமோ? மன்னிப்புக் கேட்பதாய்ப் பட்டால் இன்னும் துக்கம் கிளறுமோ?

சென்ட்ரல் வந்ததை அவனுக்குச் சொல்லியிருக்க வேண்டும். சொல்லாமல் தாண்டிப்போன பிறகு அறிவித்தது தண்டிப்பதுபோல் மாறிவிட்டது. இலக்கியப் பேச்சு குரூரமாய்ப் போய்விட்டது. ஸ்நேகம் வளர்க்காத பேச்சு பிள்ளை பெறாத கூடல்போல. கூடல் மாதிரி குரூரமும் ஒரு சுகம். வெற்று சுகம்! வளர்ச்சியில்லாத சுகம்.



தான் விஸ்வநாதனிடம் நேரடியாய் விளக்கி மன்னிப்புக் கேட்டே ஆகவேண்டும்.

எட்டி மறுபடி கௌசல்யாவைப் பார்க்கலாமா? வேண்டாம். அந்த சந்தோஷத்தை என் பார்வை குலைத்துவிட வேண்டாம்.

காதல் மடப்பிடியோடு களிறு வருவன் கண்டேன் என்று பாடியது இந்த மாதிரி சந்தோஷம். இந்த சந்தோஷம் கடவுள் விஷயம். கடவுளைக் கண்ட சந்தோஷம்.

காயத்ரி விருட்டென்று எழுந்தாள். முகம் கழுவித் திலகமிட்டுக் கொண்டாள் தட்டில் சாதம் கவிழ்த்து மோர் ஊற்றிக்கொண்டாள். இது விஸ்வநாதன் சாப்பிடுகிற நேரமா என்று நினைத்துக்கொண்டாள்.

'அடேடே... யார் உங்களை நெனைச்சுக்கிறா?''...தாரிணி விஸ்வநாதன் தலையில் தட்டினாள்.

''தப்பா முழுங்கிட்டேன்.''

''எங்கேயோ யோசனை. சாப்பிடறபோது தட்டுலே நினைவு வச்சுச் சாப்பிட்டாத்தானே ஒட்டும்.''

# 28

'யார், யாரை முட்டாள்னு சொல்றது? வெறும் கர்வம், அசட்டுக் கர்வம். சில பேர் நெனைச்சுண்டு இருக்கா, லிட்ரேச்சர் தெரிஞ்சுட்டா ரொம்ப உசத்தின்னு, உலகமே துச்சம்னு. லிட்ரேச்சர் தெரிஞ்சுக்க எத்தனை நாழியாகும்? எனக்குக் கல்யாணப் பேச்சு வர்றவரைக்கும் சமைக்கவே தெரியாது. கல்யாணத்துக்குப்பேச ஆரம்பிச்சுட்டான்னு தெரிஞ்சதும் நா சமையக்கட்டுல நுழைஞ்சேன்.

பருப்பு ரசத்திலேருந்து பாயசம் வரைக்கும் பார்த்துப் பார்த்துச் செய்யக் கத்துண்டேன். எண்ணி நாலு மாசம் எல்லாச் சமையலும் கத்துண்டாச்சு.

''லிட்ரேசருக்கும் சமையல்வேலைக்கும்வித்தியாசம் இருக்கா? எனக்குத் தெரிஞ்சு ஒண்ணுமில்லே. உங்க கிட்டயும் கர்வம் இருக்கு. எனக்குத் தெரியும். அதனாலதான் அவ முட்டாள்னு சொன்னதுக்கு மாஞ்சு போறேள். முட்டாளா இருக்கிறதோ கெட்டியா இருக்கிறதோ டெம்ப்ரரி. பாத்த அரைமணில ஒருஆம்பிளைய முட்டாள்னு சொல்லணும்னா எத்தனை நெஞ்சுரப்பு இருக்கணும். ஆம்பிளையே வேண்டாம்னு நெனைக்கிற பொம்மனாட்டிபோல இருக்கு. அதனால்தான் சுரீர்னு கோவம் வர்றது.''

''யம்மா... நீ எங்கேயோ போற தாரிணி.''

''எங்கேயும் போகலை, எனக்குப்பட்டதைச் சொல்றேன். அவ அப்பா இங்க வந்திருந்தப்பக்கூட சொன்னார், நூத்துல ஒருத்தர்தான் கவிதை எழுதறான்னு. கவிதை எழுதறது மட்டும்தானா, ஒசத்தி? கல்யாணம் பண்ணிக் குழந்தைகள் பெத்து அதுகளை நல்லபடியா வளர்க்கறது நூறு கவிதைக்குச் சமம், மகா சிரமம். எனக்குத் தூங்கற நேரம் தவிர மத்த நேரமெல்லாம் உங்க ஞாபகம், குழந்தைகள் ஞாபகம், நம்ம விட்டு ஞாபகம். வீடு சரியில்லாத ஒரு ஆள் என்ன கவிதை எழுதி என்ன புண்ணியம்? பெண்டாட்டியச் சரியாக் கவனிக்காதவன் எத்தனை நாவல் எழுதி என்ன...? வேஸ்ட். அத்தனையும் வேஸ்ட் இதெல்லாம் தாண்டித்தான் கவிதை, மண்ணாங்கட்டி, தெருப்புழுதி...''

''கோவமாப் பேசறியா?''

''கொஞ்சம் கோவம்தான். லிட்ரேச்சர் முக்கியமாப் போனதுனாலதான் முட்டாள்னு பேச்சுக் கேட்டுண்டு வரேள்! நான் சிடுசிடுன்னு பேசறது உடம்பு சிரமத்தா



லேயோ பத்துத் தேய்க்கறனேங்கற வெறுமையாலோ இல்லை. இந்த வீட்டுக்கு எவ்வளவு வேணா நான் சிரமப்படுவேன். இது என் வீடு, என் குடும்பம், என்னை, குழந்தைகளை நீங்க சரியாக் கவனிக்கலேன்னா எனக்குக் கோவம் வரும். இந்தக் குடும்பத்தை நீங்க கவனிச்சே ஆகணும் சொல்லத் தோணும். இந்த ரெஸ்பான்ஸிபிலிட்டிக்கு அப்புறம் நீங்க என்ன செய்தாலும் எனக்குச் சம்மதம் சந்தோஷம்.''

''நான் சரியாகக் கவனிக்கலேங்கறியா.''

''சே, நாக்கு அழுகிப்போகும். மாடா ஒழைச்சுத் தேயறபோது கண்ல ரத்தம் வரும். ஆனா ஒட்டுதல் இல்லாம சில சமயம் ஹான்னு உட்காரும்போதுதான் பயம் வர்றது. லிட்ரேச்சர் முக்கியம்—ஆபீஸைவிட குடும்பத்தை விடன்னு தோணிடுமோன்னு கவலை வர்றது!''

''ச்சீ. என்ன கவலை இது? உன்னை அழவச்சிட்டு நான் எப்படிச் சிரிக்க முடியும்?''

''நானும் சமையல் கத்துண்ட மாதிரி நாலு மாசம் இந்தக் கவிதை அந்தக் கதைன்னு கத்துண்டு இணையாய்ப் பேசலாம். ஆனா அதைவிட முக்கியமான வேலை உண்டு இல்லையா? ரெண்டு பேரும் கவிதை கதைன்னு போய்ட்டாக் குடும்பம் சிரமப்படும் இல்லையா?''

விஸ்வநாதன் வாய்விட்டுச் சிரித்தான்.

''என்னா போடு போடறே. நாலு மாசத்துல லிட்ரேச்சரா.''

''சரி, நாலு வருஷம். அப்புறம் என்ன செய்றது? அந்தப் பொண் நாலு வருஷம் பொறுத்து என்ன செய்யும்? யாருக்காவது கழுத்தை நீட்டணுமோன்னோ... அனுசரிச்சுப் போகணுமோன்னோ. அதைத்தான்

சொல்றேன். அவசரப்பட்டு யாரையும் முட்டாள்னு சொல்றது அதுவும் லிட்ரேச்சரை முக்கியமா வச்சுத் தப்புன்னு.''

''அவகிட்ட நீ பேசினதைச் சொல்லணும்.''

''இங்க கூட்டிண்டு வாங்கோ, நானே சொல்றேன்.''

''ச்சீ, ஏதாவது முரட்டுத்தனமாப் பேசிடப் போறே.''

''வேத்து மனுஷாகிட்ட நான் ஏன் முரட்டுத்தனம் காட்டணும்? நிதானமா சிரிச்சுச் சிரிச்சுச் சொல்லத் தெரியாதா? என் முரட்டுத்தனம் காட்டத்தான் நீங்க மாட்டிண்டிருக்கேளே.''

''நீ ஒண்ணும் முரடில்லையே தாரிணி.''

''பெண்டாட்டி ரொம்ப முரட்டுத்தனம் காட்டினா அசிங்கமா இருக்கும்.''

''கொஞ்சம் முரட்டுத்தனம் காட்டு பார்க்கலாம்.''

தாரிணி அவன் மேல் சாய்ந்து அவன் இடது கன்னத்தை வெடுக்கெனக் கடித்தாள்.

''ஏய் சனியனே, இதென்ன பேய் மாதிரி கடிக்கறே.''

''கடிப்பேன், கிள்ளுவேன், என்னவேணா பண்ணுவேன்.''

''எதுக்கு தாரிணி?''

''நீங்க என் புருஷன். என் ப்ராப்பர்ட்டி.''

''யம்மா... நான் ஓடிடப் போறேன்.''

''ஓடக்கூடாதுன்னா, பதிலுக்குக் கடிக்கணும்.''

''நான் கடிக்கிற ஜாதியில்லே தாயே.''

''எனக்குத் தெரியும் அதனால்தான் முரட்டுத்தனம் காட்டாம தோள்ள மூஞ்சியப் புதைச்சுண்டு கொஞ்சறது.'

''யப்பா. இது எவ்வளவு சுகமா இருக்கு.''



''உங்களுக்கு இந்தப் பாட்டுப் புடிக்குமா?''

''என்ன பாட்டு?''

''நீ தானே எந்தன் பொன் வசந்தம்.''

''புது ராஜ வாழ்க்கை நாளை என் சொந்தம்.''

''அதான் உனக்குக் கல்யாணம் ஆயிடுத்தே. அப்புறம் என்ன புதுசா ராஜ வாழ்க்கை?''

''ராஜ வாழ்க்கை வரத்தான் போறது.''

''புரியலையே.''

''திருப்பதிலே ஆட்டம் போட்டேளோன்னோ?''

''ம்ம்.''

''குளிக்கலை. தள்ளிப்போயிடுத்து. பகவானேன்னு இது புள்ளையாப் பொறந்தா நிம்மதி. பெத்து இறக்கி உங்க கைல குடுத்துடறேன். அவனை என்ன வேணாப் பண்ணுங்கோ. கடைசி காலத்துல உங்களுக்கு ஒரு துணை வேண்டாமா?''

''நிஜம்மவா தாரிணி எனக்குத் துணைவேணும்னு தான் பிள்ளை வரம் கேக்கறியா?''

''உங்களுக்குள்ள ஆயிரம் ஆசைகள். கதை, கவிதை, சினிமான்னு தீர்த்துக்க முடியலை. குடும்பம் வந்தாச்சு. அவனுக்குச் சொல்லிக் கொடுங்கோ. போய் சினிமாவில் தள்ளுங்கோ. முட்டிமோதி வெளியே வரட்டும். பெரியாளா நிக்கட்டும். அந்தச் சந்தோஷமாவது வேணுமில்லையா உங்களுக்கு?''

''தேங்க் யூ தாரிணி.''

''நீங்களும் வேண்டிக்கோங்கோன்னா... பிள்ளை வேணுமின்னு.''

''குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான்கண்டு
கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.''

படுக்கையில் தாரிணியை அணைத்தபடி விஸ்வநாதன் பாசுரம் சொன்னான். பாரமெல்லாம் எங்கேயோ இறக்கி வைத்துவிட்டு மனைவியைச் சீராட்டினான். சீராட்டிய களைப்பில் தூங்கிப் போனான்.

''டிரைவருக்கு நாப்பது ரூபா பேட்டா, பரோட்டா குருமாவுக்குக் காணாது. அப்புறம் குடிக்கிறது எங்க குட்டி தேடறது எங்க? பேட்டா துட்டுலதான் குடித்தனமே நடத்துறானுங்க. எல்லா டிரைவருக்கு சம்பளம் இருநூறு முந்நூறுதான். பேட்டா துட்டு சேர்த்து ஆயிரம் பார்க்கலாம். நடுத்தரமா வூடு நடக்கும். வூட்ல எல்லாத்தியும் குடுத்திட்டா வழிச் செலவுக்கு எப்படீங்கறியா? திருட்டு டீஸல் துட்டு, மேல் பாரம் ஏத்தின துட்டு, ஆள் டிக்கட்டு ஏத்திக்கிறது, இதுலதான் டிரைவர், க்ளீனர் சாப்டறது, குடிக்கிறது. மத்த ஆட்டமெல்லாம். இப்ப தொட்டிய மூடிட்டான். துளைபோட்டு எடுத்தவன் நின்னு வெட்டிறலயா, ஊர்ல தொட்டி எடத்தியும் ரெய்டு பண்ணிட்டாங்க. பாதி விலைக்கு டீஸல் எங்கியும் கெடைக்கல. அதுலதான் டிரைவருக்குத் துட்டு. மேல்பாரமும் எல்லா நேரமும் ஏத்த முடியுமா? பாதிவண்டிக்கே லோடு கிடைக்காதபோது மேல் லோடு எங்கன ஏத்துறது? திருட்டு டீஸல்லதான் சுளுவா துட்டு மிஞ்சி நிக்கும். துட்டு இல்லன்னா எவனுக்கு வண்டி ஓட்டறதுல புடிப்பு இருக்கும். சர்த்தாம் போடான்னுட்டு பாதிபேரு நாட்டுப்புறம் பார்க்கப் போயிட்டான். வவுத்துக்கில்லாத டிரைவருங்கதான் ஓட்டறாங்க. அவங்க பத்துப்பேரு சேந்துதான் லாரி ஓனருக்குப் பெட்டிஸன் எழுதறாங்க.



''நம்ம வடிவேலு இல்ல, அவரு கடைலதான் கூட்டம். உங்கப்பாருதான் பெட்டிஸன் எழுதறாரு. நாப்பது ரூபா போறாது. பேட்டா துட்டு நூறு ரூபாயா மாத்துன்னு கேக்கறாங்க. நூறு ரூபா தரமாட்டாங்க. கேக்கறதைக் கேட்டு வெக்கலாமேன்னுதான். அறுபதுக்கு ஒத்துக்குவான். அதுவும் மாட்டேனுட்டா ஸ்ட்ரைக்குதான். ஒருத்தனும் வண்டி எடுக்கமாட்டான். மிஞ்சி எவனா கங்காணி எடுத்தா சரசரன்னு கல்லு பறக்கும்.''

காயத்ரி வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருக்க ஒரு வயதான கூலிக்காரன் அவள் எதிரே குத்துக்காலிட்டு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

வடிவேலுவின் சிறியகடையில் அடைத்தபடி இருபது முப்பது பேர் நின்றிருந்தார்கள். நாணு ஐயர் பெட்டிஷன் எழுதி முடித்துவிட்டு முகத்தைத்துடைத்துக் கொண்டார். ''ஐயரு காப்பி சாப்பிட்டு வந்துரட்டும். நாங்க எங்களுக்குள்ள பேசித் தீர்மானமா ஒருமுடிவுக்கு வந்தப்புறம் மறுபடி கூப்பிட்றோம். இன்னொரு பெட்டிஷன் எழுத வேண்டியிருக்கும்.''

நாணு ஐயர் வெளியேறினார்.

''ஏங்க தலைவரே, என்னாத்துக்கு ஐயரத்துரத்திட்ட, அவரு இருந்தா நாலு விஷயம் உபயோகமாகச் சொல்வாருல்ல''—ஒரு டிரைவர் நாணு ஐயர் போவனதைப் பார்த்தபடி பேசினான்.

''சும்மா இருடா, எனக்குத் தெரியாது? யாரை எப்பக் கேக்கணும்னு. ஐயரு மாதிரி ஆளுங்களை எல்லா இடத்திலயும் கூட்டிக்கக் கூடாது.''

''தலைவருக்குத் தெரியாதயா செய்றாரு? குறுக்க பேசாதீங்கப்பா. தலைவரே, சொல்லுங்க.''

''உங்க கோரிக்கைக்கு மனு எளுதியாச்சு. சாயந்திரமே குடுத்திரலாம். ஆனா எந்த ஓனரும் கோரிக்கையைக் கேப்பான்னு எனக்குத் தோணலை. லாரித் தொழிலு இப்ப ரொம்ப டவுனு. ரயிலு சரக்கு ரொம்ப சுத்தமா போய்ச் சேருது. முன்ன மாதிரி இல்ல. குறைச்ச ரேட்ல டக்கு டக்குன்னு ரயில்வேகாரன் பெரும் லோடு தள்ளிடறான். லாரிய நம்பிக்கிட்டு எந்த வியாபாரியும் இல்ல. அதுனால நாம ஜெயிக்கணும்னா போராடித்தான் ஆவணும். போராட்டம்னா திருட்டுத்தனமா லாரி ஓட்டறது இல்ல. சொந்த லாரின்னு பொய் சொல்றது இல்ல. மெட்ராஸ் ஸிட்டில ஒரு லாரிகூட நவுரக்கூடாது. லாரி டிரைவர், க்ளீனர் மட்டுமே போராட்டத்துல ஈடுபட்டாப் போறாது. கூலித் தொழிலாளி நெலமையும் யோசிச்சுப் பார்க்கணும். ஒங்களை நம்பி இருக்கிற கூலி ஆளுங்க நீங்க ஸ்ட்ரைக் பண்ணினா பாதிக்கப்படுவாங்க. நிச்சயம் அவனுங்க லாரி ஓனர் பக்கம் சேர்ந்துட்டா ஒங்க கதி அதோ கதியாயுடும். அதுனால இன்னொரு பெட்டிஷன் கூலித் தொழிலாளிங்களுக்கு சம்பள உயர்வு கேட்டு எளுதப்போறேன். நீங்க டிரைவர், க்ளீனர் எல்லாரும் மதிப்பு பார்க்காம கூலி ஆளுங்ககிட்டப் போய் பேசி வாங்கிக் குடுத்து நம்ம நெலமையைச் சொல்லணும். ஒட்டு மொத்தமான போராட்டம் ஏற்படணும். அப்பத்தான் ஜெயிக்க முடியும்.''

''கூலிக்காரனுங்க ஒண்ணும் தெரியாதவனுங்க தலைவரே. நாம சொன்னாப் புரியுமா?''

'அறியாதவன்தாண்டா போராட்டத்துக்கு முதுகெலும்பு. அவன்தான் உறுதியா நிப்பான்; கூடப் பத்து ரூபா கெடைச்சா நீ கூடத்தான் ஆந்திராவில வண்டி ஓட்டுவே. உன்னைப்பத்தி எனக்குத் தெரியாதா?''



''அப்பக் கூலி மேஸ்திரிங்களக் கூட்டியாந்து பேசிப்புடுவோம்.''

இரவு வெகுநேரம் வரை பேசினார்கள். உரத்த குரலில் விவாதித்தார்கள்.

இருமல் வந்து சளி பிடித்து மெல்ல ஜுரம் ஏறிய குழந்தை மாதிரி தண்ணித் தொட்டித் தெரு வேதனைப்பட்டது. நடு நிசியில் ஜுர வேகம் அதிகமாகி முனகத் தொடங்கியது.

விடியலின்போது போஸ்டர்கள் தயாராகி விட்டன. திடீர் ஸ்டிரைக் என்று தலைப்பில் அறிவித்தன.

''கொஞ்சம் டைம் குடு வடிவேலு.''—காந்திலாலும் ராவுத்தரும் மற்ற ஓனர்களும் வடிவேலுவிடம் முறையிட்டனர். வடிவேலு முடியாது என்று சொல்லிவிட்டான்.

சாமர்த்தியமாய் போஸ்டரில் தமிழக முதல் மந்திரியின் படமும் வடிவேலுவின் படமும் போடப்பட்டிருந்தன. முதல் மந்திரியின் சம்மதத்துடன் ஸ்டிரைக் நடப்பதாய் பிரமையைக் கொடுத்தன.

''நூறு ரூபா பேட்டா குடுத்தா நான் தலைல துணி போட்டுக்க வேண்டியதுதான்? லாரி வாடகை ஏத்த முடியுமோ? இந்த நேரத்துல மூணு வாட்டி டீஸல் விலை ஏறினதுக்கே ரெண்டு தடவைதான் வாடகை அதிகம் வாங்க முடிஞ்சுது. நஷ்டத்துல வண்டி ஓட்றம் வடிவேலு...புரியாத ஆடாத...''

''ரொம்ப ஆடினா இழுத்து மூடிட்டுப் போய்டுவேன்.''

''காஞ்சா சரியா வருவானுங்க காந்திலால், மூடலாம். வடிவேலு ஆட்டம் பெரிசாப் போயிடுச்சு. நாலு நாள் தாங்காது. காய்கறி மார்க்கெட் ஜனம் கூச்சல்

போட்டா தானா இறங்கிடுவானுங்க. துட்டு குடுக்க முடியாது. வண்டி எடுக்க வேணாம். என்ன வேணா செய்துக்க.''

லாரி ஓனர்கள் கூட்டம் கூடி வண்டிகளைப் பத்திர மான இடத்துக்கு கொண்டு ,போனார்கள்.

கூலி ஆட்கள் மனு கொண்டு வந்தபோது காந்தி லால் எரிச்சலின் உச்சகட்டத்தில் இருந்தான்.

## 29

''உங்களுக்குப் புத்திக் கெட்டுப்போச்சுடா. அவ னுங்களுக்குத் திருட்டு டீஸல் கெடைக்கல்லே மேல் சரக்குக் கெடைக்கல்லே குடிக்கும் கூத்தி ஆட்டத்துக் கும் துட்டு போறல, அவங்க சம்பாதிச்சப்ப பங்கு குடுத் தானுங்களா? ஸ்டிரைக்குன்னு தோள்ல கைபோட்டுப் பேசறாங்களாம். உங்கள்ள எவனாச்சும் டீஸல் துட்டுல பங்கு வாங்கிருக்கறீங்களாடா?''

''த்தோடா, இவரு! வண்டி லாபத்துல கூலி ஆளுங் களுக்குப் பங்கு அள்ளி குடுத்துட்டாரு. லாரி டிரை வரைக் காட்டிப் பேசறாரு. மேல் பாரம் ஏத்தினா கூலி ஆள் டிரைவர்கிட்ட துட்டு வாங்கறது ஊர் தெரிஞ்ச சங்கதி டிரைவரையும் கூலி ஆளையும் பிரிக்க நினைக் காதே.''

''கூடிக்கிங்கடா. கூடி. முடிஞ்சதைப் பாருங்க வயிறு காஞ்சா வருவீங்க.''

''தோழர்களே. பளு தூக்கும் வீரத்தோள் கொண்ட மறவர்களே, வயிறு காய்ந்தால் வழிக்கு வருவீர்கள் என்று சொன்னாராம் ஒரு லாரி முதலாளி.



வசதி படைத்தவன் வயிறு பெருத்தவன் பேசுகிறான். வயிறு காய்ந்தால் வருவீர்கள் என்று கொக்கரிக்கிறான். ஆமாம், வயிறு காய்ந்தால் வருவோம். உன் கடை வாசலை நோக்கி வருவோம். வழக்குப்பேச அல்ல. வாய்தா கேட்பதற்கு அல்ல. வெற்றுச் சமாதானம் பேசுவதற்கல்ல. எங்கள் வயிறு எரியும் வேதனையை உன்மீது கொட்டுவதற்கு வருவோம். எங்கள் அடி வயிற்றுத் தீயை உன் கடைமீது வீசுவோம். தாங்கு வாயா வட தேசத்து வணிகனே. தமிழ் மறவர் கூட்டம் சீறும். புலியெனப் பாயும்.''

வடிவேலு மாலைக்கூட்டத்தில் பேசினான்.

கப்பல் ஒதுங்கிற்று. நூற்றுக்கணக்கான ரப்பர் பால் பேரல்கள் கரையில் இறங்கின. சுங்கச்சாவடியில் எந்த இடைஞ்சலுமின்றிக் காகிதங்களில் கையெழுத் திடப்பட்டன. இரண்டு நாளில் அத்தனையும் வெளி யேறிவிட வேண்டும். நாற்பத்தெட்டு மணி நேரம் தவணை. அத்தனையும் ஹார்பரைவிட்டு வெளியேறி னால் நல்லது. இல்லையெனில் ஒரு கிலோ எடைக்கு ஒரு நாளைக்கு நாற்பது பைசா டெமரேஜ் விதிக்கப் படும். ஏற்கனவே அதீத விலை, கப்பல் கட்டணம். இந்த ஹார்பர் அபராதம் வேறு எதற்கு?

ஒரு லாரிக்கு முப்பது பேரல் வீதம் ஆயிரம் பேரல் இறங்க எத்தனை லாரி தேவைப்படும்?—விஸ்வநாதன் கணக்குப் போட்டான். நாலு கிளார்க்குகள் புடைசூழத் தண்ணித் தொட்டித் தெருவுக்குப் புறப்பட்டான்.

காயத்ரியை இன்று பார்க்கலாம். மரியாதையாய்க் கைகூப்பலாம். மெல்லமாய்க் கிளறிக் கோபம் ரசிக்க லாம். தண்ணித் தொட்டித் தெருவில் கார் விரைவாய்த் திரும்பிய போது தட்டென்று என்னவோ உதைத்தது. என் தெரு காலியாய் இருக்கிறது.

காந்திலால் கம்பெனி பாதிக் கதவு அடைந் திருந்தது. காயத்ரி மட்டும் உள்ளே இருந்தாள். இவன்

நுழைந்ததும் வரவேற்றாள். விஷயம் கேள்விப்பட்டதும், "இம்பாஸிபிள்" என்றாள். பதிலுக்கு அங்குள்ள சூழ்நிலையைச் சொன்னாள். விஸ்வநாதன் இடிந்து போய் உட்கார்ந்தான். தன் ஆபீஸுக்குப் போனில் பேசினான். யாரோ உரத்தக் குரலில் விஸ்வநாதனை ஏசிக் கொண்டிருந்தார்கள். போனில் இரைச்சல் தாளாமல் விஸ்வநாதன் காதிலிருந்து ரிஸீவரை அகற்றி தன் எதிரே வைத்துக் கொண்டான். எதிர்முனை இரைச்சல் அங்குள்ள எல்லாருக்கும் கேட்டது.

"என்ன லயஸன் ஆபீசர் நீ. லாரி ஸ்ட்ரைக் பற்றி அங்கு போகும்வரை தெரியாது என்று சொல்கிற நீ, என்ன விதமான லயஸன் ஆபீசர்? ஊர் நடப்புத் தெரியாதவன் என்ன லயஸன் ஜாப் செய்ய முடியும்? இடியட், இது முன்னமே நமக்குத் தெரிந்திருந்தால் கப்பல் சரக்கை விசாகப்பட்டினம் திருப்பியிருக்க முடியும். ஏன் சென்னையில் சரக்கு இறக்குவதையே பேப்பர் சரியில்லை என்று தாமதப்படுத்தியிருக்க முடியும். டெமரேஜ் எவ்வளவு கொடுக்க முடியும்? எத்தனை நாள் தர முடியும்? கம்பெனிக்கு நஷ்டம் செய்யவே கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்கிறீர்கள். என்னால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது.

"விஸ்வநாதன். லிஸன் டு மீ. என்ன செய்வாயோ எது செய்வாயோ, சரக்கு இறக்கிய இரண்டு நாளுக்குள் நம் இடத்துக்கும் வந்தாக வேண்டும். வழியில்லாமல் போகாது. முயற்சிசெய். விடாது முயற்சிசெய். ஸ்டிரைக் செய்கிறவன் யார் என்று பார். அவனிடம் பேசு. செலவு முக்கியமில்லை; உற்பத்தியும் நேரமும் முக்கியம்.

அங்கே உட்கார்ந்து கவிதை கிறுக்கிக் கொண்டிருக்காதே, ஆக்ட், ஆக்ட் ஐ ஸே. கவிதையும் கதையும் எழுதுகிறவனெல்லாம் வேலைக்கு வந்து கம்பெனியின்



தாலியை அறுக்காதீர்கள். பதில் பேச வேண்டாம் விஸ்வநாதன், உன் கவிதையைப் பற்றிப் பேசியது வருத்தமென்றால்...

"ரிஸைன் த ஜாப் அண்ட் கெட் லாஸ்ட்."—மறுமுனையில் போன் ஆத்திரத்துடன் வைக்கப்பட்டது.

விஸ்வநாதன் தலையைக் குனிந்தபடி இரண்டு கைகளிலும் ரிஸீவரை எதிரே பிடித்தபடி உட்கார்ந்திருந்தான். முகம் சுண்டிப்போயிருந்தது.

அங்கே உட்கார்ந்து கவிதை கிறுக்கிக் கொண்டிராதே செவிப்பறையில் இந்த வாக்கியமே மறுபடி மறுபடி அதிர்ந்தது. எங்கே சறுக்கினாலும் ஆபீஸ் இவனைத் தாக்குகிற இடம் இங்குதான். சட்டென்று இவன் கவிதையைத்தான் வெட்டி எறிகிறார்கள்.

கிரிகெட் ஆடுகிறவனுக்குச் சில ஆபீஸ்களில் மரியாதை இருக்கிறது. இதற்காகவே வேலை தரப்படுகிறது. விளையாட்டில் வல்லவன் என்பதற்காகவே வேலை தரும் இடங்களும் உண்டு. ஆனால் கவிஞனுக்கு யாராவது கவிதைக்காக வேலை தருவது உண்டா? எழுதுகிறவனை எந்த அலுவலகமாவது போற்றி வைத்துக் கொண்டிருக்கிறதா? கவிதை எழுதுகிறவன் சோம்பேறி என்பது இவர்கள் எண்ணமோ?

உழைப்பிக்கே குதிரையென்ற
பெரும் போக்கு ஒரு நாள் உடையும்

விஸ்வநாதனுள் டைப்ரைட்டர் ஓடத் துவங்கியது.

குரங்குகள் மனிதர் போல
வளர்ந்தது உண்மையாயின்
குதிரையின் ரூபம் மாறும்.
உடல் மட்டும் மனிதர் போல
மடிமீது வீணை போட்டு
மழைக்கான வேதம் பாடும்

இரு காலில் புவி ஈர்ப்பை
ஏந்திய குதிரைப் புத்தி
உலகத்தின் மாயை மாற்றும்
சகலமும் கவிதையாகும்.
குதிரைகள் மாறும் ஒருநாள்
குரங்குகள் மடியும் அன்று.

விஸ்வநாதன் ரிஸிவரை மிருதுவாய் அதன் இடத்தில் வைத்தான். காயத்ரி இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இத்தனை வயசுக்குப் பிறகும் ஏன் இவ்வளவு மிருதுவான மனசாய் இருக்கிறான் என்று கேட்டுக்கொண்டாள். வசவுகளைத் துடைத்துப் போடத் தெரியாமல் ஏன் தவிக்கிறாய்? பதிலுக்குச் சீற்றம் கொள்ளாமல் ஏன் மௌனிக்கிறாய்? உன் கவிதை காயம்பட்டது குறித்து வருத்தமா? உன் கவிதை தான் உன் ஈகோவா? அப்படி என்ன அற்புதக் கவிதை உன்னுடையவை?

சரி இவன் கவிதை கிடக்கட்டும். ஆளே உடைந்து போய்ச் சிதறலாய் இருக்கிறபோது கவிதையைப் பற்றி விசாரணை என்ன? இந்த நேரம் எப்படி உதவ முடியும் இவனுக்கு? இவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நினைத்தேன். பேசாமல் மன்னிப்பை உதவியாக மாற்றினால் என்ன?

''மிஸ்டர் விஸ்வநாதன்''—காயத்ரி மெல்லிய குரலில் அவனை அழைத்தாள்.

''உங்கள் நிலைமை, உங்கள் கம்பெனி நிலைமை முற்றிலும் புரிகிறது எனக்கு. பேசியவை அனைத்தையும் தெளிவாகக் கேட்க முடிந்தது. காந்திலாலை நீங்கள் இப்போது பார்ப்பதில் லாபமில்லை. மேலே என் வீட்டுக்குப்போய் உட்காருங்கள், இதோ சாவி. நான் அப்பாவை அழைத்து வருகிறேன். அப்பா ஏதும் செய்ய முடியும். ஏனெனில் இந்த ஸ்டிரைக்குக்கு யார் காரணமோ அவர் அப்பாவுக்குச் சம்பளம் தருகிறவர். நாம் யோசிப்போம்.''



விஸ்வநாதன் சிறிதுநேரம் சலனமற்று இருந்தான். மெல்லியதாய்ச் சிரித்தான். அவளுடன் சமீபத்தில் செய்த கார் பயணம் நினைவுக்கு வந்தது. மறுபடி சிரித்தாள்.

''மூன்றாம் முறையாய் முட்டாள் என்று என்னை அழைக்க நான் வேறு ஒரு சமயம் உங்களுக்குச் சந்தர்ப்பம் தருகிறேன். மிஸ் காயத்ரி இப்போது என்னைச் சற்று தனியே விடுங்கள்.''

''மிஸ்டர் விஸ்வநாதன், மிகச் சில நாட்களிலே இந்த டிரான்ஸ்போர்ட் விஷயங்கள் அத்துப்படியானவள் என்கிற முறையில் பேசுகிறேன். உங்களை என் தந்தையின் நண்பராய்க் கருதிப் பேசுகிறேன். இங்கே நீங்கள் செய்யக் கூடியது ஏதுமில்லை—நான் சொன்னதைத் தவிர. போனமுறை நாம் பேசியது இலக்கியம். ஆளுக்கு ஆள் வேறுபடக்கூடிய ரஸனை விஷயம். அதையும் இதையும் பிணைக்க வேண்டாம். நான் பிறந்ததே உங்களை முட்டாள் என்றழைக்கும் சந்தோஷத்துக்காக அல்ல. எனக்கும் வேறு வேலைகள் உண்டு. உடனே உதவி செய்ய வேண்டும் என்று தோன்றிற்று அதனால்...''

''உங்கள் தந்தை எப்போது வருவார்?''

''உடனே... ஐந்து நிமிடங்களில்''

''சாவி.''

''இதோ''

''நன்றி, மிக்க நன்றி.''

''எதற்கு?''

''உங்கள் இரக்கத்திற்கு, உதவி செய்யும் மனப்பான்மைக்கு. இதன் பலன் எது வேண்டுமானாலும் இருக்கட்டும். இந்த நேரம் உங்கள் பேச்சு இதமாய் இருக்கிறது என்பது உண்மை. உங்களைத தவறாய்ப் புரிந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்கிறேன்.''

''நானும் மன்னிப்புக் கேட்கிறேன் விஸ்வநாதன்.''

''எதற்கு மிஸ் காயத்ரி?''

''இதே காரணத்திற்காக.''

''புரியவில்லை.''

''அதைப் பிறகு பேசலாம். நீங்கள் வீட்டிற்குப் போய் உட்காருங்கள். நாம் பேசுவது ரகசியமாய் இருக்க வேண்டும்.''

பத்து நிமிடத்தில் நாணு ஐயர் மாடிக்கு வந்தார். இருந்த ஒரே நாற்காலியில் உட்கார்ந்திருந்த விஸ்வநாதன் எழுந்து நின்றான். ''உட்கார், உட்கார்.''

காயத்ரி வந்தாள். பாயைப் பிரித்தாள். விஸ்வநாதன் நாற்காலியை நகர்த்திவிட்டுக் கால் மடக்கிப் பாயில் உட்கார்ந்தான். மற்றவர்களும் அமர விவரம் முழுவதும் சொன்னான்.

''முரட்டுப் பசங்களாச்சே எல்லோரும். ரொம்ப சிரமமாச்சேப்பா. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லைன்னு சொன்னா...எவ்வளவு செலவு...வரைமுறை இருக்குமில்லையா?''

விஸ்வநாதன் காதோடு ஒரு தொகையைச் சொன்னான்.

''பெரிசுதான். வடிவேலு காசுன்னா காச்சின இரும்பைகூடக் குடிப்பான். சரி, தனியா வடிவேலு கிட்ட உன் விஷயம் பேசறேன். நீ இங்க இருக்க வேண்டாம். காரை எடுத்துண்டு உங்க ஆட்களை ஹார்பருக்குப் போயிடச்சொல். அவங்க வேண்டாம் நாம பேசறச்ச. டெலிபோன் இருக்கிற ஒரு ஹோட்டலாப் பாத்து நீ சென்ட்ரல் கிட்டக்கப் போய்க் காப்பி சாப்பிடு. நான் வடிவேலுவைக் கூட்டிண்டு வர ட்ரை பண்றேன். முடியலைன்னா நான் மட்டும் வந்து சொல்றேன். நீ இப்ப என் கூட கிளம்பாதே. பத்து நிமிஷம்



கழிச்சுக் கிளம்பிப் போ. யாராவது கேட்டா ஏதாவது தூரத்து உறவுன்னு சொல்லிடு. ஹோட்டலேர்ந்து வடிவேலு கடைக்கு போன் பண்ண வேண்டாம். அங்க நெறைய பேர் இருக்கா. யார் வேணாலும் எடுக்கலாம். காயத்ரியைக் கூட கூட்டிண்டு, போ; அவ போன் பண்ணட்டும். ட்ரை பண்ணுவோம். தைரியமாப் போ.''

நாணு ஐயர் கீழே இறங்கிப் போனார். பிறகு விஸ்வநாதன் வெளியேறினான். வீட்டை பூட்டிக் கொண்டு காயத்ரி படியிறங்கினாள். யானைக் கவுனி போலீஸ் ஸ்டேஷனுக்கருகில் விஸ்வநாதனுடன் சேர்ந்து கொண்டாள். இருவரும் ஆட்டோவில் ஏறினார்கள்.

கவுனி ஸ்டேஷன் வாசலில் இன்ஸ்பெக்டர் நாகராஜன் பல்லிடுக்கிலிருந்து பிரியாணியைப் பிரித்துக் கொண்டிருந்தார். சட்டென்று நிமிர்ந்தார். நாணு ஐயர் பொண்ணு யார்கூட ஆட்டோவுல போவுது என்று யோசித்தார். இரும்புக் கம்பிகள் துருத்தித் தாங்க ஒரு லாரி 'கடக்க—''சிவப்பு சிக்னல் பின்னால காட்ல, போய் நில்லு'' என்று கை காட்டினார். நாணு ஐயர் பொண்ணை மறந்து போனார்.

ஆட்டோ வேகத்தில் காயத்ரியின் புடவைத் தலைப்பு படபடத்து விசுவின் நெஞ்சில் ஒட்டிக் கொண்டது. விசு சிரித்தபடி அதை நகர்த்தினான்.

## 30

எனக்கு ஒரு விஷயம் புரியமாட்டேங்கறது வடிவேலு. இந்த டிரைவர், கூலியாட்கள்ளாம் உங்ககிட்ட எப்படி இவ்ளோ விசுவாசமா இருக்கான். எழுந்திருன்னா எழுந்திருக்கான். உட்கார்ன்னா உட்கார்

றான். நீ அரசியல் கட்சியாளுங்கறதால வரான்னு தோணலை. தமிழ் நன்னாப் பேசறேங்கறதுக்காகவும வர்றதாத் தெரியலை. முன்னகூட ஒரு ஸ்டிரைக் பண்ணி ஜெயமாயிட்டுதாமே?''

''நல்லாக் கேட்டீங்க ஐயரே.''— வடிவேலு தொடையைத் தட்டிக் கொண்டு பலமாய்ச் சிரித்தான். கூட இருந்த இரண்டு மூன்று கூலித் தோழர்களும் சிரித்தனர்.

நாலு பேர் சூழ இருந்தபோது அப்பாவித்தனமாய் நாணு ஐயர் இந்தக் கேள்வி கேட்டது வடிவேலுக்குப் பிடித்திருந்தது. நாலு பேருக்கு நடுவில்தான் வடிவேலைப் புகழ வேண்டும் என்று நாணு ஐயா தீர்மானித்த சூட்சுமம் வடிவேலுக்குப் புரியவில்லை.

''விசுவாசம் எப்ப வரும் ஐயரே?''

''உதவி செய்தபோது.''

''எப்படிப்பட்ட உதவி செய்தபோது?''

''மறக்க முடியாத உதவி செய்தபோது''

''இன்னும் ;நல்லா யோசியுங்க. மறக்க முடியாத உதவி எது?''

''சங்கடத்தில் சமயத்தில் உதவி செய்யறது''

''தப்பா யோசிக்கிறிங்க வாத்தியாரய்யா''

''இன்னும் சரியா யோசியுங்க''

''தெரியலை வடிவேலு.''

''பலன் எதிர்பாராம உதவி செய்யறபோது. வாத்தியாரய்யா, இந்த ஸ்டிரைக்ல நஷ்டம் எனக்குக்கூடத்தான். எனக்கும் வருமானம் போச்சு. ஆயிரம் ஆயிரமாய்ப் பொழங்குற இடம் இது. உங்களுக்கே தெரியும். இவுங்களுக்கு அஞ்சு ரூபா கூடக் கெடைச்சுதுன்னா எனக்கு என்னா லாபம்? நான் அதுல எட்டணா குடுடான்னு கேக்க முடியுமா? இல்லே இதுக்கு முன்னா



அந்த மாதிரிக் கேட்டுருக்கேனா... கேளுங்க...என்னப்பா?...'' கூலியாட்கள் இல்லையென்று தலையசைத்தார்கள். ''இவங்களுக்குத் தெரியும். எந்த எதிர்பார்ப்பும் இல்லாம வடிவேலு முன்னாடி நின்னு ஒதை வாங்குவான்னு தெரியும். தனக்கு நஷ்டம் வந்தாலும் சொல்லு மாறமாட்டான்னு தெரியும். இவுங்க விசுவாசம் வச்சி நான் என்னா எம்.பி. ஆயிட முடியுமா? எம். எல். ஏ. ஆயிட முடியுமா? என்ன... கொறைஞ்ச பட்சம் நான் நாளைக்கு மண்டையப் போட்டா கும்பலா வந்து மாலை போடுவாங்க. காடு மட்டும் வந்து அடடேன்னு வருத்தப்படுவாங்க. அது போதும் ஐயரே.''

''தலைவரெ, அப்படியெல்லாம் வாணாம் தலைவரே.''

''ஏண்டா, மாலை போட மாட்டியா?''

''ஐயோ—அதுக்குச் சொல்லலை, மாலைக்கு என்னா? கொண்டாந்து குமிச்சிடுவம்.''

''அடி சக்கை... எப்படா சாவான்னு பாத்துக்கிட்டிருங்க.''

''தலைவரே, வுட்டேன், வுட்டேன்,''—கூலியாள் வெகுளியாய்க் கை தூக்கினான்.

வடிவேலு சிரிப்பு, புது இன்ஜின் மாதிரி துள்ளலுடன் வெளி வந்தது. முகத்தில் சந்தோஷம் பொங்கிற்று.

நாணு ஐயர் அவன் சந்தோஷ பலஹீனத்தை எடை போட்டார். தாக்கலாம் என்று தீர்மானித்தார், ஆட்கள் கடையை விட்டு நகர்ந்தார்கள்.

''என்னங்க வாத்தியார் ஐயா...என்ன சேதி?''

''புரிஞ்சுண்டாயா. நீ மகா கெட்டிக்காரன் வடிவேலு.''

''இல்லேன்னா, இங்க குப்பை கொட்ட முடியுமா சொல்லுங்க.''

''இங்கிலீஷ கம்பெனி அவாளுக்கு மௌபரீஸ் ரோட்ல ஒரு கோடவுன் இருக்கு.''

''காந்திலால் ஓட்டறான் அவுங்களுக்கு.''

''காந்திலால் கடை மூடியிருக்கு. என்னை வந்து கேட்டான், வண்டி ஓடாதுன்னு. கிட்டக்கவே வராதேடான்னுட்டேன்.''

''அடடே.''

''வாடகை மேற்கொண்டு தர்றேன்னான். வண்டிக்கு ஆயிரம் கொடுத்தாக்கூட எடுக்கமாட்டாங்க. போயிட்டு வானுட்டேன்.''

''மேலேன்னா?''

''மொத்தமாய்ப் பத்தாயிரம்னான்.''

''பத்தாயிரமா?''

''கேஷா தரேன்னான்.''

''என்னா சொன்னீங்க?''

''எனக்கும் ஒண்ணும் புரியல்லே. உன்னைச் சுத்தி எப்பவும் கூட்டம்.''

''வுட்டுட்டீங்களா?''— வடிவேலு வேகமாய்த் திரும்பினான்.

''வுடுவேனா, இங்க பேச முடியாது. நீ ஏதாவது ஒரு ஓட்டல்ல போய் இரு. எங்கே இருக்கேன்னு போன் பண்ணுன்னேன். நாம அங்கே போகலாம். போன் வரும். போன்ல என் பொண்ணு பேசுவா.''

''உங்க பொண்ணா?''

''அவளையும் அந்த ஆள்கூட அனுப்பியிருக்கேன்.''

''உங்க பொண்ணையா...அவரு கூடவா? என்னாத்துக்கு?''

''அந்தப் பையன் இங்கிலீஷ் கம்பெனி ஆள். பேரு விஸ்வநாதன். எனக்குத் தூரத்து உறவு. வேலை போய்டும்னு வந்து அழுதான்.''



''பெரிய ஆளு ஐயரே நீ.''

''இப்பச் சொல்லு, ஒண்ணும் முடியாது, நீ வேற எங்கேயாவது பாருப்பான்னு அனுப்பிச்சிடலாம்.''

''வேணாம். போன் வரட்டும்.''

''செய்யலாங்கறயா?''

''யோசிப்போம்.''

''காசுக்கு நான் ஜவாப்தாரி.''

''காசு கிடக்கட்டும். எங்ஙனயாவது பேச்சு விட்டீங்க. குடலு உருவிடுவாங்க.''

''நான் கொத்துப் பன்னீர்ப் புகையிலையைத் திணிச்சிண்டுடுவேன். பேசுன்னாலும் முடியாது.''

''ஐயரே, பப்ளிக் லாரி, வாடகை லாரிதான் ஓடக் கூடாது. ப்ரைவேட் லாரி, கம்பெனி லாரிங்க ஓடறதை யாரும் தடுக்க முடியாது. லோடு ஹார்பர்ல, ஹார்பர் கூலிதான் லோடு ஏத்தப்போறான்.''

''இறக்க கம்பெனில க்ரேன் உண்டு.''

''கரெக்ட். நான் என் மச்சானை அனுப்பிச்சு நாலு நாளு கம்பெனி லாரி மடக்கிடறேன்; அந்த லாரி லோடு அடிக்கட்டும். ராவோட ராவா நகர்த்திடலாம். பில்லு கிடையாது. செக்கில பணம் தரக்கூடாது.''

''பேசுவோம்.''

''புடி அந்த ஆளை.''

போன் மணி அடித்தது.

கடற்கரை ஹோட்டல் படி ஏறினார்கள்.

''ஐயரே, நீங்க பொண்ணை கூட்டிக்கிட்டு அந்தாண்ட உக்காருங்க. நான் பேசிக்கிறேன்.''

விஸ்வநாதனும் வடிவேலுவும் குசுகுசுவென்று பேசினார்கள். நாலாயிரம் ரூபாய் அட்வான்ஸ் தாராளமாய்த் தரப்பட்டது.

''சகலத்துக்கும் நான் பொறுப்புங்க. வண்டி எப்ப வரும்னு சொல்ல முடியாது. ஹார்பராண்ட இருங்க. நான் வரமாட்டேன். ஐயரும் வரமாட்டாரு. உங்க கார் நெம்பர் சொல்லுங்க. அங்க வந்து ஆளு ரப்பர் லோடுன்னு கேக்கும். சரின்னு கூட்டிக்கிட்டுப் போங்க. நாலு வண்டிதான் தருவேன். பத்து மணிக்கு ஆரம்பிச்சு விடிய விடிய முடிச்சுரலாம். நான் ஹைகோர்ட் வாசல்லேர்ந்து கவனிச்சிக்கிட்டிருப்பேன். கவலைப்படாத போய்ட்டு வாங்க.''

''ஏதாவது கலாட்டா ஆச்சுன்னா?''

''அதுக்கு ஆள் படை வச்சிருக்கேன், தொலைவா உக்காந்து நம்ம கட்சி பேப்பர் ரா முழுக்க படிச்சிட்டிருப்பான். வணடி மறிக்காத பாத்துக்குவான். எனக்குத் தெரியும். ஐயரும் நானும் கௌம்பறோம். நீங்க பின்னால வாங்க.''

வெளியே திட்டுத் திட்டாய் மேகங்கள் நகர்ந்தன. கூவம் நதி மெல்ல நிதானமாய் நடந்து கடலுள் சின்ன நுரைச்சிரிப்புடன் கலந்தது. யாரோ படகு ஓட்டிக் கொண்டிருந்தார்கள். ஹோட்டல் மாடி திறந்த வெளியில் காயத்ரி காதோரம் குழல் பறக்க உட்கார்ந்திருந்தாள். மெர்க்குரி விளக்குகள் பளிச்சென்று எரிந்தன.

விஸ்வநாதன் காயத்ரியை நோக்கி, ''தேங்க் யூ'' என்றான்.

காயத்ரி சிரித்தாள். மெல்லக் கணைத்துவிட்டுப் பேசினாள்.

''வைரமுத்துவோட அந்தப் பாட்டு...''

''வேண்டாம். நான் அதை மறந்துட்டேன்.''



''பாட்டையா...?''

''இல்லை. பேச்சை.''

காயத்ரி சிரித்தாள். ''இல்லை. நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது.''—காயத்ரி ஆங்கிலத்தில் பேசினாள்.

''தவறு என் மீதும் உண்டு. என்னை மீறிப் பாட்டு வந்து விட்டது. பெண்ணருகே காதல் பாட்டுப் பாடுவதும் அபிப்ராயம் கேட்பதும் தரக்குறைவானதுதான்; எல்லை மீறுவதுதான்!''

''நோ. எல்லை மீறியதாய் நான் நினைக்கவில்லை. அந்தப் பாட்டு கோபத்தை உண்டு பண்ணியது.''

''உங்களைச் சந்தோஷப்படுத்துவது எது?''

''கவிதை.''

''பிறகு?''

''ஓவியம்.''

''பிறகு?''

''தெளிவான சிந்தனை.''

''குட், அப்பாவின் வீரியம் அப்படியே இறங்கியிருக்கிறது உங்களிடம்.''

''வாஸ்தவம். அப்பாதான் என் குரு. எனக்குள்ள ஒரே சிநேகிதம்,''

''ஈஸிட்? அப்படியானால் என்னையும் ஒரு ஸ்நேகிதனாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.''—விஸ்வநாதன் வலக்கையை அவள் முன் நீட்டினான்.

காயத்ரி வியந்தாள். உன்னால் எப்படி என் குரூரத்தை மறக்க முடிந்தது? சட்டென்று சகலமும் துடைத்துவிட்டு மறுபடி எப்படிப் பனியாய்ச் சிரிக்க முடிகிறது?

''நான் சற்று மூர்க்கம், சட்டென்று காயப்படுத்துவேன்! இது என் சுபாவம்.''—காயத்ரி மெல்லிய குரலில் பேசினாள்.

''குழந்தை கீறிய காயத்தை எந்தத் தகப்பன் பொருட்படுத்துவான்! எப்படிக் கோபிப்பான் காயத்ரி?.'

காயத்திரி ஒரு நிமிடம் உள்ளே தடுமாறினாள்' தகப்பன் மாதிரி ஒரு ஸ்நேகிதன். நண்பன் மாதிரி அப்பா. மெல்லத் தன் வலக்கை நீட்டி அவன் வலக் கைக்குள் பொதித்தாள். ''நன்றி'' என்றாள்.

''இந்த உதவியை மறக்க முடியாது காயத்ரி.''

''ப்ளீஸ், மறந்துவிடுங்கள்!''

''எதை?''

''உதவி என்கிற வார்த்தையை.''

''மறந்தேன். கிளம்பலாமா?''

''சரி, உங்களுக்குப் பிடித்த விஷயம் எது?''

''சொன்னால் கோபம்...ஸாரி...மூர்க்கம் வரும்!''

காயத்ரி மறுபடி சிரித்தாள். ''சொல்லுங்கள்.''

''பாட்டுப் பிடிக்கும்.''

''பிறகு?''

''கொஞ்சம் கவிதை.''

''பிறகு?''

''சினிமா.''

''பிறகு?''

''சகலவிதமான மனிதர்களோடு சந்தித்துப் பேசுவது பிடிக்கும்.''

''உங்களின் ஒரு கவிதை சொல்லுங்களேன்.''

''உங்களை முதலில் சந்தித்தபோது தோன்றிய வரிகளைச் சொல்லட்டுமா?''

''ம்ம்ம், டெல் மி.''



''சவுக்கடி பட்ட இடத்தை
நீவிடத்தெரியா குதிரை
கண்மூடி வலியை வாங்கும்
இதுவுமோர் சுகம்தா னென்று
கதறிட மறுக்கும் குதிரை
கல்லென்று நினைக்க வேண்டாம்
கதறிட மேலும் நகைக்கும்
உலகத்தை குதிரை அறியும்.''

காயத்ரி நின்றாள். கண்களை மூடினாள். நெஞ்சு ரணமாய் வலித்தது.

## 31

கடற்கரை முதல் சாலையில் வாகன நடமாட்டம் குறைந்த பிறகு, இரவு பத்து மணி பத்து நிமிடத்துக்கு முதல் லாரி விஸ்வநாதன் கார் அருகே நின்றது.

''ரப்பர் லோடா சார்.''

தன் கம்பெனி குமாஸ்தா ஒருவனை அந்த லாரியில் ஏற்றி விசு ஹார்பருக்குள்ளே அனுப்பினான். இன்னொரு லாரி வந்தது. மறு ஆளை அனுப்பினான். இன்னொரு லாரி வந்தது. இன்னொருவனை அனுப்பினான். பத்து நாற்பதுக்கு மோட்டார் சைக்கிளில் வடிவேலு கடந்து ஹைகோர்ட் பக்கம் போக நாலாவது லாரி வந்தது. கடைசிக் குமாஸ்தா லாரியில் ஏறினான். அரை மணியில் முதல் லோடு வெளியேறிற்று. இரண்டாவது லோடு பத்தாவது நிமிடம் தொடர்ந்தது.

நாலைந்து பேர் கும்பலாக வந்து விஸ்வநாதன் காருக்கு அப்பால் நடைபாதையில் உட்கார்ந்துகொண்டார்கள், ஓர் அரசியல் கட்சிப் பேப்பரை விரித்துப்

படிக்கிற பாவனையை மேற்கொண்டார்கள். மோட்டார் சைக்கிள் இப்போது எதிர்ப்பக்கம் கடந்து போயிற்று. வடிவேலு திரும்பிப் பார்த்துக்கொண்டே போனான்.

நாணு ஐயர் மாடியிலிருந்து வடிவேலு கடையைப் பார்த்துக் கொண்டிருந்தார். காயத்ரி அருகில் இருந்தாள்.

''ஏதாவது கலாட்டா ஆயிடுமாப்பா?''

''வடிவேலு மகாகெட்டிக்காரன்மா. காசு அவனைக் கெட்டிக்காரனாக்கியிருக்கு. மேலே காசு வர வர அவன் இன்னும் சூட்சுமமா வேலை செய்வான்.''

''அடிச்சுகிடுச்சுப் பண்ணிடப் போறாங்கப்பா...''

''வடிவேலு பத்து ஆளை அடிப்பான்.''

''நான் வடிவேலுவைச் சொல்லலைப்பா, விஸ்வநாதன் ஹார்பர் வாசல்லே நிப்பார், இல்லையா?''

''அட அவனைச் சொல்றயா? என்ன பண்றது? ரிஸ்க்தான்.''

''வடிவேலு மோட்டார் சைக்கிள் வெளிச்சம் போட்டபடி தெருவுக்குள் நுழைந்தது.

''தலைவரே, தலைவரே—'' யாரோ சிலர் கூவிக் கொண்டு வந்தார்கள்.

''ஹார்பர்ல இங்கிலீஷ் கம்பெனி லோடு அடிக்கறாங்க.''

''யார்றா அது இங்கிலீஷ் கம்பெனி?''

''ரப்பர் பால் லோடு.''

''யார் காண்ட்ராக்ட்டு?''

''காந்திலால் டிரான்ஸ்போர்ட்''

''அவன் வண்டி ஒண்ணும் ஓடலியேடா.''

''மாவுக் கம்பெனி லாரில அடிக்கிறாங்க.''

''மாவு லோடா இருக்கும்.''



''இல்ல தலைவரே. கண்ணால பாத்தோம். ரப்பர் பாலு. ஆளுங்கள இட்டாந்து மடக்கிடலாமா.''

''சும்மா இருங்கடா. காந்தி வண்டியானா மடக்கலாம். கூலி ஆளுங்க யாரு.''

''ஹார்பர் ஆளுங்க.''

''வண்டி ஓட்டறது?''

''மாவு கம்பெனி டிரைவருங்க.''

''என்னடா பண்ணமுடியும்? அது பிரைவேட் வண்டியாச்சே?''

''ரப்பர் லோடு எப்படி ஏத்தலாம்?''

''கம்பெனிக்குக் கம்பெனி பேசியிருப்பான், மாவுக் கம்பெனில வண்டி கேட்டிருப்பான் காந்திலால் இல்லாட்டி மூடிட முடியுமா?''

''எப்படினா மடக்கிடணும் தலைவரே.''

''மடக்கறது என்னா? சர்சர்னு கல்லு வுட்டா தானா நிக்குது, என்ன தலைவரே.''

''சும்மா இரு மாட்டிக்காதே. கம்பெனி வண்டில கல்லு அடிச்சா உள்ற தள்ளிடுவானுங்க.''

''ஆயிரம் பேரலு தலைவரே, பொழப்புப் போச்சே... லோடு ஏத்தறது வழக்கமா நாங்கதானே.''

''காந்திலால் கிட்டப் பேசுங்க தலைவரே.''

''அவன் கதவைத் தொறக்கமாட்டான்.''

''வாசல்ல நின்னு கூச்சல் போடுவோம். இருபது ரூபா கூலி போச்சே.''

''ரூபா ரூபான்னு கூவாதடா. சாயந்திரம் துட்டு வாங்கினல்ல எங்கிட்டே.''

''அதுக்கில்ல தலைவரே.''

"இந்தா போய் எனக்குப் பிராந்தி வாங்கியா. அப்படியே உனக்கும் எதுனா வாங்கிக்க."

"அப்ப மடக்க வேணாங்கறியா?"

"எப்படிடா மடக்கறது, யோசிப்போம்."

"தலைவரே தலைவரே..."—மேலும் நாலு பேர் ஓடி வந்தார்கள். 'நம்ம குப்பன் ஹார்பர்ல வண்டியை மடக்கிக் கேள்வி கேட்டா மாதிரி. வண்டிக்காரன் பதில் சொல்லாத போயிட்டமாதிரி. நடுவுல எவனோ பூந்து நீ என்னடா கேள்வு கேட்கிறேன்னு குப்பன் பொடரிலயே போட்டு அனுப்பிச்சமாதிரி."—மூச்சிரைக்க பேசினார்கள்.

விஸ்வநாதன் தவிப்புடன் நின்றுகொண்டிருந்தான்.

பேசிக் கொண்டிருக்கும் போதே தபதபவென்று அடித்து விட்டார்கள்.

கட்சிப் பத்திரிகை படித்தவர்கள் வண்டி மடக்கினவனைச் சூழ்ந்து நொறுக்கி விட்டார்கள். இரண்டு நிமிடத்தில் அவனை அப்புறப்படுத்திவிட்டார்கள். அடிபட்டவன் இரைந்து கொண்டே ஓடி விட்டான். இது முடிந்த மாதிரியா? இல்லை, தொடருமா? மேலும் ஆட்கள் வண்டியை மடக்க வருவார்களா? கட்சிப் பத்திரிகை படித்தவர்கள் இப்போது கும்பலாய் இல்லை. மூலைக்கு ஒருவராய்ப் பிரிந்து அடுத்த மடக்கலுக்குக் காத்திருந்தார்கள். எல்லோரும் பளபளக்கிற பேனாக்கத்தி வைத்திருந்தார்கள்.

"மறுபடி வந்தா குடலை உருவிபுடுவேன்..." வண்டி மடக்கினவனிடம் உயர்த்தி காட்டினார்கள். "நீ கண்டுக்காத வாத்யாரே."—விஸ்வநாதனை நோக்கிக் கண் சிமிட்டினார்கள். கத்தியின் பளபளப்பு சில்லென்று பயத்தைக் கொடுத்தது விஸ்வநாதனுக்கு.

மறுபடி கலாட்டா நடந்தால் தான் ஓடித் தப்பித்து விடலாம். ஆனால் உள்ளே இருக்கும்கம்பெனி ஆட்கள். பதினோரு லோடு முடிந்திருக்கிறது. இன்னும் பத்தொன்பது லோடு போகவேண்டும். இதோ பன்னிரண்டு. பின்னால் பதின்மூன்று ச்சே...என்ன வேலை, சரக்கென்று ஒரு கத்திக் குத்து விழுந்தால்...தாரிணி என்ன செய்வாள்? நல்லவேளை, அவளுக்கும் போன் பண்ணிச் சொல்லியாயிற்று.



கடற்கரை ஹோட்டலிலிருந்து காயத்ரி வடிவேலுவுக்கு போன் செய்தவுடன் தாரிணிக்கு அங்கிருந்து பேசியாயிற்று. இரவு முழுக்க வேலை என்று தெரிவித்தாயிற்று. ஆனால் இந்த வேலை எப்போது முடியும்? கவிதை கிறுக்காதே என்று ஆபீஸ் கட்டளையிட்டிருக்கிறது. இங்கே வந்து நான் இருக்கிற லட்சணத்தை ஆபீசில் யாரும் பார்க்கவில்லை. உயிரைப் பணயம் வைத்துத் தெருவில் நின்று கொண்டிருக்கும் அவலம் எவருக்கும் தெரிய நியாயமில்லை. ஒருவேளை காயத்ரிக்குத் தெரியுமோ?

காயத்ரி இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள். தூங்கியிருப்பாளோ? மணி என்ன... பதினொன்று நாற்பது. தூங்கியிருப்பாள். கவிதை சொன்னதும் அந்த முகம் சுண்டிப்போயிற்று. விழி முழுவதும் சோகம் கனத்துப் படர்ந்தது.

"வருத்தப்படுவதை நீங்கள் அதிகம் விரும்புகிறீர்களா விஸ்வநாதன்?" —எவ்வளவு சூட்சுமமான கேள்வி கேட்டாள்.

"வருத்தம் வாழ்க்கையின் ஒரு பகுதியான பிறகு மறுதலிப்பு முடியுமோ காயத்ரி?"

"முடியாதுதான். அமைதியாய் ஏற்கலாமில்லையா?"

"ஏற்பது பற்றிய கவிதைதானே இது?"

"சரி."

"ஏன், கவிதை சரியில்லையா?"

"வருடிக்கொள்ளக் குதிரைக்கு வசதியில்லை என்பது என்ன?"

''எந்த ஆறுதலாலும், வருத்தம் கொடுத்துவிட்டு மன்னிப்புக் கேட்பதாலும் வருத்தம் போகாது என்பதைச் சொல்கிறேன்.''

''அடித்தவனே வருடிக் கொடுத்தால்?''

''வாட் டு யூ மீன் காயத்ரி.''

''ஒன்றுமில்லை.''

''பரவாயில்லை. சொல்லுங்கள்.''

''சொல்ல ஏதும் இல்லை. என் வார்த்தைகள் நீங்கள் சொல்வதுபோல் வருத்தம் தீர்க்காது. மறுபடி இதமாய் நடந்து கொள்ள வேண்டும். சவுக்கே எடுக்காது எறிந்து விடவேண்டும். உங்கள் எல்லாக் கவிதைகளும் எனக்கு வேண்டுமே விஸ்வநாதன்.''

''ஒன்று செய்கிறேன். இரவு நீண்ட கவிதை ஒன்று எழுத முயற்சி செய்கிறேன். நாளை காட்டுகிறேன்.''

''நிச்சயமாய்?''

''நிச்சயம்.''

''ஆல் த பெஸ்ட் விஸ்வநாதன்.''

இதோ பதினாலு... பதினைந்து... இன்னும் பதினைந்து ட்ரிப்தான். விடியும்முன் முடிந்துவிடும். கவிதை எழுத ஆரம்பிக்கலாமா? என்ன எழுதுவது... விஸ்வநாதன் மூளைக்குள்ளிருந்த டைப்ரைட்டரை நகர்த்தினான்.

கல்தோன்றி மண்தோன்றி கடவுள் தோன்றி
கைவழியே மொழி வளரும் காலம் தோன்றி
கால்நடையைச் செல்வமெனக் கொண்ட நாளில்
ஆண்டிருந்த ஓரரசன் பறையறிவித்தான்.
விட்டிற்கொரு குதிரை வளர்க்க வேண்டும்.
வேண்டுகின்ற உதவிகள் அரசு செய்யும்.
குதிரைகளே தேசத்தின் செல்வமாகும்



போர் வந்தால் புரவிகளை அரசே வாங்கும்
போர்க்காலம் காணாத அரசே இல்லை
போராட்டம் இல்லாத காலம் இல்லை
போர்க்காலம் முன் கருதி புரவி வளர்ப்பீர்
பின்வரும் சந்ததிக்கு உறுதி கொடுப்பீர்.
மீறுபவர் தேசத்தின் முதல் எதிரிகள்
மறுப்பவர்கள் வெளியேற்றப்படுவார் உறுதி.
பறையடித்தும் ஊர் முழுதும் சேதி சொல்ல
ஜனம் கூடி தெரு நடுவே புலம்பலாச்சு.
இவனென்ன பேயரசன் குதிரை வெறியன்.

சட்டென்று டைப்ரைட்டர் நின்றது. எதிர்ப்பக்கம் ஒரு வெளிச்சம் போட்டபடி வண்டி நிற்க விஸ்வநாதன் கவிதையைக் கலைத்தான். இது பாஸ்—முதலாளி. இவர் எதற்கு இங்கே?

''விஸ்வநாதன்,''—கூப்பிடும் குரல் கேட்டு விஸ்வநாதன் எதிர்ப்பக்கம் ஓடினான்.

''சரக்கு அனுப்ப ஆரம்பித்துவிட்டாய் போலிருக்கே''—எம்.டி, வண்டியை விட்டுக் கீழிறங்கினார்.

''எஸ் ஸார். குட் ஈவினிங் சார்.''

''ஸே குட்மார்னிங் விஸ்வநாதன், மணி இப்போ பன்னிரண்டு நாற்பது, முடித்து விடுவாயா?''

''முடிஞ்சிடும் ஸார். நீங்க ஏன் சார் இங்கே...''

''ஜஸ்ட் வாண்ட்டு டு ஹேவ் ஏ லுக் ப்ராப்ளம் ஒண்ணுமில்லையே''

பிரிந்த அடியாள் கும்பல் காரைச் சூழ்ந்தது. ''என் வாத்தியாரே. என்னாச்சும் ட்ரபுளா?''

''ஒண்ணுமில்லேப்பா, இது எங்க முதலாளி.''

''கும்புடறேங்க.''

''யார் இவர்கள்?''—எம்.டி. புருவம் தூக்கினார். விஸ்வநாதன் சகலமும் ஒப்புவித்தான்.

''காட்... அடிதடியா...? எதற்கு இவ்வளவு ரிஸ்க்...?''

''வேற வழியில்லை சார்.''

''போலீஸைக் கூப்பிடலாமா?''

''வேண்டாம் அது இன்னும் பிரகாசமாய் போய் விடும் சார்.''

''மைகாட். இத்தனை ரிஸ்கில் இங்கு நின்று என்ன செய்கிறாய்!''

விஸ்வநாதன் நிமிர்ந்தான். ''ஒரு கவிதை பாதியில் நிற்கிறது சார்.''

''டாமிட், உனக்குக் கவிதை எழுத இடமே இல்லியா?''

விஸ்வநாதன் சிரித்தான்.

''எவ்வளவு போயிற்று?''

''பாதிக்கு மேல் போய்விட்டது. இதோ பதினாறு''—லாரிகடந்து பின்னால் இன்னொரு வண்டி வெளிச்சம் போட்டது. ''இது பதினேழு.''

''போதும் விட்டுவிடு. இவ்வளவு ரிஸ்க் இருப்பது எனக்குத் தெரியவில்லை. மீதிக்கு அபராதப் பணம் செலுத்துவோம்''

''லாரி வாடகை பத்தாயிரம் ஒப்புக் கொண்டிருக்கிறேன் ஸார். நீங்கள் இங்கிருப்பது நல்லதில்லை. மறுபடி இன்னொரு சண்டை எதிர்பார்க்கிறேன். நகர்ந்து விடுங்கள்.''

''எனக்கு நீ செய்வது சரியென்று தோன்றவில்லை விஸ்வநாதன். சரக்கு சேதமானால்...உள்ளே இருப்பவர்கள்... நீ இவ்வளவு ஆபத்தில் நிற்பது சரியல்ல. வா என்னோடு''



''இருக்கட்டும் சார். கிளம்புங்கள்.''—வண்டியில் அவரை மெல்லத் திணித்துக் கதவைச் சாத்தினான்.

''ஒன்று செய்கிறேன் விஸ்வநாதன் நான் கடற்கரைப் பாலத்தருகே நிற்கிறேன். கடைசி லாரி கூடவே உன் வண்டி வருமில்லையா. என்னோடு அங்கே சேர்ந்து கொள்ளுங்கள். மைண்ட் யூ விஸ்வநாதன். உன் கவிதை இருக்கட்டும். கவனமாய் இரு.'' கார் திரும்பிக் கடற்கரை பக்கம் போயிற்று.

அடியாட்கள் சற்று அசந்து நின்றிருந்தார்கள். பெரிய கல் ஒன்று விஸ்வநாதன் கார் மீது விழுந்தது. யாரோ 'டாய்' என்று கூவினார்கள். சரமாரியாய்க் கல் எறிந்தார்கள். அடியாட்கள் பளிச்சென்று சிதறிப் பதிலுக்குக் கல்லும் தயாராய் வைத்திருந்த சோடாப் பாட்டிலும் எறிந்தார்கள். கோர்ட் பக்கமிருந்து இரண்டு பேர் நடந்து விஸ்வநாதனைக் கடந்து போனார்கள். நின்றார்கள். திரும்பினார்கள். வினாடி நேரத்தில் அவன் மீது பாய்ந்தார்கள். மூட்டை தூக்குகிற குத்தூசியை ஒருவன் பலம் கொண்ட மட்டும் விஸ்வநாதன் தோளில் பாய்ச்சினான். இழுத்தான். கோணி மாதிரி சட்டையோடு விஸ்வநாதன் தோளும் கிழிந்தது.

## 32

அடியாட்கள் பழக்கப்பட்டவர்கள். அசந்து கிடந்த தங்கள் வியூகத்தைப் பலப்படுத்திக் கல்லெறிந்தவர்களை ஓட ஓட விரட்டினார்கள். சைக்கிள் செயினும் மீன் வாலும் சகல திக்கும் பாய்ந்தன. விஸ்வநாதனைத் தாக்கியவர்கள் கோர்ட்பக்கம் ஓடினார்கள். மோட்டார் சைக்கிள் ஒன்று சட்டென்று கிளம்பி ரிஸர்வ் பாங்க் சரிவுப் பாலத்தில் இறங்கிற்று. பதுங்கிற்று.

விஸ்வநாதன் துவண்டான். துடித்தான். கார் துடைக்கும் துணியை எடுத்துத் தோளைப் பொத்திக் கொண்டான். உதடு விளிம்பில்சூடாய் ரத்தம் பொங்கிக் கசிந்தது.

''இவனென்ன பேயரசன் குதிரை வெறியன்''— கவிதை சம்பந்தமில்லாமல் மனசில் ஓடிற்று. அடியாள் ஒருவன் ஓடி வந்தான். தோளைச் சோதித்து லுங்கியைக் கிழித்து ஒற்றினான். கார் உள்ளேயிருந்து தண்ணீர் பாட்டில் எடுத்துக் காயத்தில் ஊற்றினான். ''தோல் கிழிஞ்சிடுச்சு துரை. நேரா ஜெனரல் ஆஸ்பத்திரி போ.''

''வேண்டாம். டாஷ்போர்ட்ல ஒரு சிலுவைப் பெட்டி இருக்கும். அதை எடு.''

''டிஞ்சரா? இது பகபகன்னு எரியுமே சார்.''

''பரவாயில்லை. காயத்திலே ஊத்து. திருப்பியும் வருவானுங்களா?''

''தெரியலை. எத்தினி வண்டி போயிருக்கு?''

''இருபது வண்டி.''

''வுட்றுலாம் தொரை. போலீசு வந்தா நாங்க மாட்டிக்குவம்.''

''சரி. உள்ளே போய் எங்காளுங்களைக் கூப்பிடு. லாரி உள்ளே போகாம மடக்கித் திருப்பிடு.''

''டிஞ்சரு ஊத்தினா எரியும். தாக்குப் புடிப்பியா?''

''ஊத்துய்யா.''

விஸ்வநாதன் உடலில் நெருப்பு இறங்கியது. பச்சை மரம் எரிகிற வாசனை கிளம்பிற்று. விஸ்வநாதன் பேயாய் அலறினான். பலம் கொண்ட மட்டும் கார் பானெட்டை அறைந்தான். இடக்கையால் முகத்தைப் பொத்திக் கொண்டு துடித்தான்.



குறுக்கும் நெடுக்குமாய் அலைந்தான்.

உள்ளே இருந்து குமாஸ்தாக்கள் ஓடி வந்தார்கள். ''அடிச்சுட்டானா... அடிச்சுட்டானா?''—காரில் அனைவரும் திணித்துக்கொள்ள, ஒரு குமாஸ்தா வண்டியை கிளப்ப, கார் விருட்டென்று கிளம்பிற்று. ரிஸர்வ் பாங்க் வாசலில் வடிவேலு கையசைத்தான்.

''என்னங்க போறுமா? கிளம்பிட்டீங்க?''

''போறாது. எங்க நாலு பேர் முதுகிலேயும் நீயே போடு. என்னய்யா வேலை இது, கத்தியால் கிழிச்சுட்டான். இங்க உக்காந்து வேடிக்கை பாக்கறியே...''

''விசு சார்... விசு சார்... அடிச்சுட்டாங்களா?''

விசு பேச்சின்றித் துவண்டு கிடந்தான்.

''சார், பிரைவேட் டாக்டர்ட்ட போங்க, கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி வேண்டாம்.''

குமாஸ்தா கோபத்துடன் வண்டியைக் கிளப்ப வடிவேலு அவசரமாய் ஒதுங்கினான்.

கார் அண்ணா சமாதியருகே கடந்தபோது அவர்களுக்குப் பழக்கப்பட்ட ஹார்ன் சப்தம் கேட்க சட்டென்று நிறுத்தப்பட்டது.

''என்ன ஆச்சு விஸ்வநாதன்?''

''எம். டி... எம். டி''—குமாஸ்தாக்கள் பரபரப்பகா இறங்கினார்கள். ''வணக்கம் சார். அவரை அடிச்சுட்டாங்க சார்.''

''விசு... விஸ்வநாதன்...'' எம். டி. விஸ்வநாதனை உலுக்கினார்.

விஸ்வநாதன் சரிந்தான்.

''யார் நீ... பாச்சேஸ் ரகுதானே... நேரே என் வீட்டுக்கு ஓட்டு. வேண்டாம். பிரபா நர்ஸிங்ஹோம் போ. நான் பின்னாடி வரேன்.''

விடியல் நேரத்தில் நர்ஸிங்ஹோமிலிருந்து பல போன்கள் பேசப்பட்டன. கம்பெனி அதிகாரிகள் எழுப்பப்பட்டனர். நாலா பக்கமும் கார்கள் பறந்தன.

விஸ்வநாதன் தோளில் தையல் போடப்பட்டது. இடது முழங்கை வரை கட்டுப்போடப்பட்டது. முக வாயில், நெற்றியில், கண்விளிம்பில் பிளாஸ்டர் ஒட்டப்பட்டன. இடது கையைத் தூக்கிக் கட்டி முதுகைத் தூக்கிச் சாத்திப் படுக்கையில் கிடத்தப்பட்டான். தூக்கம்வர, வலிமறக்க, ஊசி போடப்பட்டது. உடைகளை உருவி எடுத்துவிட்டு மார்புவரை வெள்ளைத் துணி போர்த்தப்பட்டது.

''அவுட் ஆஃப் டேன்ஜர். பயப்பட ஒன்றுமில்லை. நிம்மதியாய்த் தூங்கட்டும். தொந்தரவு செய்ய வேண்டாம். அசங்கக் கூடாது.''

விடிந்து குருவிகள் புலம்புகிறபோது தாரிணியைக் கார் அனுப்பி அழைத்து வந்தார்கள். சப்தம் போடாது இருக்கச் சொன்னார்கள்.

தாரிணி புடவைத் தலைப்பைச் சுருட்டி வாயைப் பொத்தி விம்மினாள்.

''ராஜா... என் ராஜய்யா...'' என்று தேம்பியபடி கட்டில் விளிம்பில் சரிந்தாள்.

குமாஸ்தாக்கள் வேதனையுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டனர்.

எம்.டி. அதிகம் புகைபிடித்தார். வேதனை தாளாது சுருட்டை நெரித்து அணைத்தார்.



கூலிகளுக்கு இரவே சந்தேகம் வந்துவிட்டது. வடிவேலு தவிர வேறு யாருக்கும் இப்படி வண்டி ஓட்டும் தைரியம் கிடையாது என்று தோன்றிற்று. நேரடியாய் இதுபற்றிப் பேசவும் பயமாய் இருந்தது.

காந்திலால் தண்ணித் தொட்டித் தெருவில் சப்தம் போடுவது பார்த்துக் கூலி ஆட்கள் தெருவில் கூடினார்கள். காந்திலால் கூச்சலுக்கு எதிர்கூச்சல் வருமா என்று காத்திருந்தார்கள்.

''பெட்டிஷன் கொணாந்தீங்களேடா துட்டு கேட்டு. கைநாட்டுப் பசங்களா ஒங்க வயத்துல அடிச்சுப் போட்டு வண்டி ஓட்டியிருக்கான் வடிவேலு... என்னடா செய்யப் போறீங்க?''

''த்தா பாரு சேட்டு. தெரியாத பேசாத மாவுக் கம்பெனி வண்டிதான் லோடு எடுத்தது.''

''மாவுக் கம்பெனி வண்டி ரௌடிக் கூட்டம் கூட்டியாந்துதா... குப்பனைத் தலைல அடிச்சுத் தொரத்திச்சா? டேய்... நான் பரம்பரைப் பணக்காரன்டா. லாரி ஓடாத போச்சுன்னா அடகு வியாபாரம் பண்ணுவேன். அது இல்லேன்னா துணி எடுத்தாந்து விப்பேன். பொறுக்கிப் பசங்களைக் கூப்பிட்டு வச்சு சோடா பாட்டில் ஒடைக்க மாட்டேன். பகல்ல வியாபாரம் பண்ணுவேண்டா. கூட்டிக் குடுக்கறவன், திருடறவன் தான் ராத்திரி மப்ளர் கட்டிக்கினு பதுங்கிப் போவான்.''

''தலைவர் வண்டின்னு எப்டீ சொல்றே?''

''தொடப்பக்கட்டை... ஒன்னத் தொரத்தித் தொரத்தி அடிச்சானே, அவன்கிட்டக் கேளு. காசிமேடுல போய் ராத்திரி யார் ஹார்பராண்டே சோடா பாட்டில் வுட்டதுன்னு கேளு. எவ்ளோ அட்வான்ஸ் வாங்கினான்னு கேளு, போ.''

''அடிச்சவன் ஒம் பேரு சொன்னா?''

''துணி போட்டுத் தாண்டறேன். ஒம் பேர்ல லாரி எழுதி வக்கிறேன். எல்லாத்தியும் வுட்டுட்டு ஊத்தி மூடிக்கினு போய்டறேன். நம்ம பேர் சொல்வானா எவனாச்சும்?

''தலைவர்ட்டே கேக்கலாம்பா.''

''கடையே தொறக்கலியே.''

''மேலே ஐயர் இருப்பாரே, போய்க் கேளு, எப்ப தலைவர் வருவாருன்னு.''

தன் பெயர் பேசப்படுவது கேட்டு நாணு ஐயர் கீழிறங்கினார்.

''என்ன குப்பா... வடிவேலு எங்க... இன்னும் கடை தெறக்கல மணி பத்தாறது''

''அதான் ஒங்களைக் கேக்கலாம்னு நெனைச்சோம் ஐயரே.''

''நாணு ஐயர், ஒரு விஷயம் பேசணும், உள்ற வாங்கோ.''—காந்திலால் அவரை உள்ளே அழைத்தான்.

''தேத்திக்கு நம்ம இங்கிலீஷ் கம்பெனி லோடு வடிவேலு எடுத்தாரா, தெரியுமா?''

''இங்கிலீஷ் கம்பெனி உன்னுதாச்சே... எப்படி எடுப்பான்... வடிவேலுகிட்ட லாரி ஏது காந்திலால்?''

''எடுத்துருக்கான்.''

''தவறாப் பேசக்கூடாது.''

''இல்லை ஐயர். தெரிஞ்சுதான் பேசறேன். ராத்திரி ஹார்பர்கிட்ட பெரிய கலாட்டா, அடிதடி.''

''அப்புறம்?''

''விசு சாரை அடிச்சு நொறுக்கிட்டாங்க. ஆஸ்பத்திரில கெடக்கார்.''



''என்னது...என்ன...விசுவநாதனையா? காயத்ரி... அம்மா காயத்ரி...''

காந்திலால் வீட்டு வராந்தாவை விட்டு ஐயர் படி இறங்கினார். மேலே ஓடினார் மூச்சிரைக்க. நாணு ஐயர் பதற்றத்தைக் காந்திலால் குறித்துக் கொண்டான். வடிவேலுவை முற்றிலுமாய் ஒழிக்க இதுதான் சந்தர்ப்பம் என்று நினைத்துக் கொண்டான். கார் ஏறிக் காசிமேடு பக்கம் போனான்.

காயத்ரி வாயைப் பொத்திக்கொண்டாள். பொத்தினதையும் மீறி 'ஐயோ' என்றாள்.

''காயத்ரி, இந்த விஷயத்துல நாம அதிகமாப் பதற்றப் படக்கூடாதுன்னு தோன்றது. சட்டென்று உன்னைத் தேடி விஷயம் சொல்ல மேலே வந்ததுகூடத் தப்போன்னு படறது.''

''எனக்குப் பார்க்கணுமேப்பா''

''எனக்கும்தாம்மா. ஆனா நாம ரெண்டு பேரும் போய்ப் பார்த்தா நல்லதா? நாம இந்தக் காரியத்துக்கு உடந்தைன்னு தெரிஞ்சா சும்மா விடுவாளா?''

''எனக்கு வேலை போகும். பரவாயில்லப்பா.''

''நானும் இங்க இருக்க முடியாது. கடையோ தொறக்கப் போறதில்லை. இங்க வெறுமனே உட்கார்ந்திருக்கறதுக்கு அங்கே போய்ப் பார்த்தா என்ன? தூரத்து உறவுன்னு சொல்லியிருக்கோமே.''

தந்தையும் மகளும் புறப்பட்டார்கள். பஸ் பிடித்து விஸ்வநாதன் ஆபீஸ் வாசலில் ஆஸ்பத்திரி விசாரித்து மறுபடி பஸ் பிடித்து வியர்த்துத் தெருவில் வெகுதூரம் நடந்து கண்டுபிடித்தார்கள்.

தாரிணி கவலையுடன் விஸ்வநாதன் அருகில் உட்கார்ந்திருந்தாள். நாணு ஐயரைக் கண்டதும் எழுந்து வந்தாள்.

''மாமா...'' என்று கேவினாள்.

நாணு ஐயர் அவளை அணைத்துக் கொண்டார். கையோடு கொண்டுவந்த விபூதி குங்குமப் பொட்டலம் பிரித்து அவள் நெற்றியில் இட்டார்.

நகர்ந்து உள்ளே போய் கைக்குள் விபூதியை வைத்து நமச்சிவாய வாழ்க...என்று மெல்லப் பாடினார். ''மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு, சுந்தரமாவது நீறு, துதிக்கப்படுவதும் நீறு'' என்று அவன் உச்சந்தலையில் தடவினார்.

காயத்ரி வாசலிலேயே நின்றாள். ''ஹலோ விஸ்வநாதன்'' என்று மனசுக்குள்ளேயே முனகினாள். 'எழுந்திரு நண்பனே...எழுந்திரு...உனக்கு ஒன்றுமில்லை எழுந்திரு. ஆயிரம் குதிரை வலுவுள்ளவன் நீ. உலகத்தின் வலியனைத்தும் உன்னால் தாங்க முடியும். எழுந்திரு. கண்விழி. மயக்கம் விடு. மலரச் சிரி. என் குரல் கேட்கிறதா 'விஸ்வநாதன். நான் காயத்ரி. உன் சிநேகிதி பேசுவது கேட்கிறதா? உன் வலியை எனக்குக்கொடு. எழுந்திரு. மெல்ல எழுந்திரு.'—தன் பார்வையைக் கூர்மையாக்கி அவன் நெற்றியில் பதித்தாள். அவன் புருவமத்தியில் மனத்தைப் பதித்து வலியைப் பிரித்து எடுக்க முயற்சி செய்தாள். விஸ்வநாதன் முனகினான்.

''நீங்கதான் காயத்ரியா?''—பின்னால் தாரிணியின் குரல் கேட்டது. ''உங்களைப் பத்திச் சொல்லியிருக்கார். நான் தாரிணி. அவர் ஒய்ஃப்.''

''ஞாலத்துப் புத்திரனைப் பெற்றது நங்கைமீர்
நானே மற்றோருமில்லை.''

கண்ணன் பற்றி யசோதை கர்வத்துடன் சொன்னது போல், தாரிணியின் பேச்சு, காயத்ரிக்குப்பட்டது.

''நீ விஸ்வநாதன் மனைவி...ஸோ வாட்?'' மனம் கத்தியது.



''ஆபீஸ் ஆபீஸ்னு அலைஞ்சது எங்க கொண்டு விட்டிருக்கு பாருங்கோ. ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆச்சுன்னா என் கதி என்ன?''

''கவலைப்பட வேண்டாம் அவருக்கு ஒன்றும் ஆகாது.''

''ஆகலை, சரி ஆயிருந்தா என் கதி என்ன?'' முதுகுல விழுந்த கத்திக் குத்து மார்ல விழுந்திருந்தா...''

''விழாது.''

''அதெப்படிச் சொல்ல முடியும், ஏதோ பகவான் செயல்.''

''சொல்ல முடியும். எத்தனை ஹிம்ஸைப் பட்டாலும் தாண்டி வர சக்தி சில பேருக்கு உண்டு. இருக்கட்டும். உங்களுக்கு நான் என்ன ஹெல்ப் பண்ண முடியும் இப்போ?''

''ஒண்ணுமில்லை. வந்ததே பெரிசு. மனசுக்கு ஆறுதல்.''

''உபசாரமே வேண்டாம். என்ன உதவி வேணும்? நான் என்ன செய்யணும்?''

''குழந்தைகளைத் தனியே விட்டுட்டு வந்திருக்கேன்...''

''நான் போய்க் கூட்டிண்டு வரவா?''

''பக்கத்து வீட்டுக்குப் போன் பண்ணிச் சொல்றேன். நீங்களும் உங்கப்பாவும் போய்...''

காயத்ரி குழந்தைகளை அணைத்துக்கொண்டாள். ஹாய் என்றாள். இரண்டுமே கொஞ்சம் மலங்க விழித்தன. பிறகு சிரித்தன.

# 33

காயத்ரி குழந்தைகளை அணைத்துக் கொண்ட நேரத்தில் கோர்ட் வாசலில் செல்லத்தம்பி தவிப்புடன் உட்கார்ந்துகொண்டிருந்தான். ராவுத்தர் கார் தொலை

வில் இருந்தது. ராவுத்தரும் அவரது வக்கீலும் தத்துவம் பேசிக் கொண்டிருந்தார்கள். கௌசல்யா அவர்களைக் கடக்கும்போது அதீத வெட்கப்பட்டு செல்லத்தம்பிக் காக டீயும் பீடியும் வாங்கி வந்தாள்.

போக்குவரத்து இன்ஸ்பெக்டர் நடராசன் வராந்தா வில் வர, செல்லத்தம்பி டீ கிளாஸுடன் எழுந்தான்.

''என்னடா...ஜாமீன்ல வெளிய வந்துட்டாஎன்னா... மரியாதையில்லாம எதிர்க்க நின்னு டீ குடிக்கச் சொல்லுதா?''

''அதெல்லாம் இல்லீங்க. தலை சுத்தலா கேரா இருந்துச்சு. அதான் இதுகிட்டச் சொல்லி டீ வாங்கி யாந்தேன்.''

''வக்கீல் வச்சு ஆட்டினா போலீஸ்காரரைப் புடுங்கிப் போட்டுறலாம்னு நெனைக்கிறாரா ராவுத்தரு?''

''அதெல்லாம் இல்லீங்க, ஏதோ ரெண்டு மாசம் கொறையாதான்னு பேசத்தான்.''

''பேசட்டும் பாத்துடறேன். புத்தியில்லைடா ராவுத்தருக்கு. போலீஸ்காரனை மொறைச்சுக்கிறாரே முடியுமா?''

''டீ சாப்டிறீங்களா?...கௌசல்யா, டீ வாங்கினு வா...''

''ஒனக்குக் கொஞ்சம் புத்தி இருக்கு.''

''இன்னிக்கு வுட்டாக்கூட நான் நாளைக்கு தெருவுல வண்டி ஓட்டணுமே. வண்டி ஓட்டறவன் யாரை மொறைச்சுக்க முடியும்? அதுவும் லாரி ஓட்டறவன் சண்டை போட்டா முடியுமா? நேத்திக்குப் பூந்தமல்லி யாண்ட ஸ்பிரிட்டு லாரி கவுந்துபோச்சாம். பாம்பே டிரைவரு. லாரியாண்ட பப்ளிக் வரவேணாம்னு கெஞ்சி கால்ல விழுந்து கத்தியிருக்கான். அவனைத் தள்ளி



வுட்டுட்டுத் தவலை, ட்ரம், கொடம் எடுத்துக்கினு ஊர் ஜனம் ஸ்பிரிட்டு பெட்ரோல்னு புடிச்சிருக்கு. டமால்னு வெடிச்சதும் புடிச்சவன் பத்துப்பேரும் பொசுங்கிப் பூட்டான். ஏண்டா தடுக்கலைன்னு அந்த டிரைவரைப் பொதுஜனம் போட்டு மிதிச்சிருக்கு. அடிபட்டுச்சுருண்ட டிரைவருக்கு ஜாமீன்கூட இல்லேன்னுட்டாங்களாம். அந்த டிரைவர் கதி என்னாவும்? அடி, உதை, அவமானம், ஜெயில், துட்டுநஷ்டம், வேலை போன கஷ்டம் எல்லாம் அவன் தலைலதானே...''

''அப்ப ஏண்டா வண்டி ஓட்ட வர... போய் மல்லாக் கொட்டை பயிர் பண்றதுதானே துட்டு ஆசை... மாடு புடிக்கிறது கேவலம்னு நெனச்சு வண்டி ஓட்டவரிங்க.''

''அப்படிப் பேசாதே சார். பொறக்கறப்பவே போலீசு இன்ஸ்பெக்டர்னா பொறக்கறோம். இதைவிட பெரிசுன்னுதான் ஓடிவரோம். வந்தாதான் தெரியுது அதுல இருக்கிற புடுங்கல் வாணாம்னு போவ முடியலையே. நாலுமாசம் ஜெயில்ல போட்டா வெளில வந்து பீடி வியாபாரம் பண்ணவா முடியும்? திரும்பியும் வண்டிதான் ஓட்டணும்.''

''டிரைவர் ஆவணும்னு தீர்மானம் பண்ணிட்டே..''

''ஒங்க மாதிரிப் பெரியவங்க மனம் வச்சா டிரைவர் என்ன சார்... ஓனராகவே ஆயிடலாம்!''

''அட்றா சக்கை...மடில துட்டு கனந்தாம்போல.''

''துட்டா இல்ல சார். மல்லாக்கொட்டைப் பயிர் நெலம்தான், ஒத்திக்கு வுட்ருக்குது. வித்துட்டு வரணும். டீ சாப்டு சார்! கௌசல்யா ஐயாகிட்ட குடு.''

''இத எங்க புடிச்ச? கெட்ட பொம்பளையாச்சே''

''யாரு கெட்டவங்க? யாரு நல்லவங்க? பதந் தெரிஞ்சு ஓட்டினா எல்லா வண்டியும் நல்ல வண்டி தான். எனக்கு கிளட்சு ஒரு மாதிரி சாஃப்டா இருக்கணும்.

இன்னொருத்தருக்கு டக்குன்னு கேக்கணும். கிளட்சு சரியில்லன்னு ஓட்டத் தெரிஞ்சவன் எவனும் சொல்ல மாட்டான். அவன் வாட்டத்துக்கு அட்ஜஸ் பண்ணிக்கு வான்.''

''ஸைலன்ஸ்.'' —கோர்ட் கூடிற்று. கூண்டில் செல்லத்தம்பி கை கட்டி நின்றான்.

''ஹிட் அண்ட் ரன்னா? விட்னஸ் எப்படி, யாரு? ஐ விட்னஸ் உண்டா? கூப்பிடுங்க முதல்ல. பாதிப்பாதியா கேஸ் கொண்டாராதீங்க நடராசன். ஐ விட்னஸ் உண்டா இல்லையா? டென்ட் வளைசல் ஓட்டையெல் லாம் விட்னஸ் கிடையாது. விபத்தைப் பார்த்தது யார்? எப்போது? லாரி நம்பர் தெரியுமா? ரிப்போர்ட் செய்த ஆள் லாரி நம்பர் சொன்னானா? ஹைவேல ஆயிரம் லாரி போகுது. சரியா எஸ்டாபிளிஷ் பண்ணுங்க உம் பேர் என்னாப்பா?''

''செல்லத்தம்பிங்க...''

''செல்லத்தம்பி, இவங்க சொல்ற நபரை நீ அடிச்சுப் போட்டுட்டு ஓட்டினீங்களா?''

''தெரியலீங்க தொரை.''

''பம்பர் ஏன் உடைஞ்சது?''

''வளைஞ்சு கெடந்தது. நிமித்தினோம் ஒடைஞ்சு போச்சுங்க.''

''எப்போ வளைஞ்சது?''

''தெரியல்லீங்க. நானூறு மைல் போற லாரிங்க. எங்ககினா ராவேளைல தட்டிட்ருக்கும்.''

''நீங்க ஆள் அடிச்சுப் போட்டுதா எழுதிக் குடுத்தி ருக்கீங்க. எப்படி?''

''நீதான் இடிச்சேன்னாரு. இல்லேன்னு எப்படிச் சொல்றது? சொல்லிட்டு எப்படி மறுபடி ரோட்ல நடக்கறது?''



''அடிச்சாங்களா உன்னை...? வலுக்கட்டாயமாக கையெழுத்துப் போடச் சொன்னாங்களா?''

''அதெல்லாம் இல்லீங்க. ராவுல காட்டுப்பக்கம் ஓட்டச்சொல்ல நாய் நரி குறுக்கே உளும். தட்டுன்னு முட்டி எகிறும், அந்த மாதிரி ஆகியிருக்கலாம்.''

''அது காட்டுப்பகுதியா, நடராசன்?''

''வயல் பகுதி சார்.''

''மக்கள் வசிக்கும் இடம், இல்லையா?''

''ஊர்க்குள்ளாறப் போச்சொல்ல அப்படிச் சத்தம் போட்டா நிறுத்திடுவோம் தொரை.''

''அந்தத் தட் சத்தம் கேட்டபிறகு உன்னை யாரும் நிறுத்தல... இல்லையா?''

''ஆள் இடிச்சதாத் தெரியாதுங்க.''

''அப்பறம் ஹிட் அண்ட் ரன் எப்படி ஆகும். நடராஜன்.''

''வண்டியின் நெளிசலும், அடிபட்டவரின் காயமும் மண் தரை ஓரம் டயர் தடமும், லாரி டயர் வடிவமும் பம்பரில் ஒட்டியுள்ள சுண்டு விரல், இறந்த நபரின் கை சேதமும், கடந்த செக்போஸ்ட் நேரமும், இறந்த நபரின் மரண நேரமும்...'' நடராசன் விளக்கிப் பேசினார்.

''என்ன செல்லத்தம்பி... இதுக்கு என்ன சொல்றே''

''இடிச்சுருக்கலாம் சாமி. ஆனா குரலே கேக்கலே. யாரும் கூச்சல் போட்டு நிறுத்தல. ஆனா இடிச்சது எனக்குத் தெரியவே இல்ல சாமி.''

''இவங்க சுண்டுவிரல் பம்பர்ல பார்த்த பிறகு போலீஸ்ல ரிப்போர்ட் பண்ணல சார்.''

''ஏம்பா... பதில் சொல்லு.''

''வேற யாருனா ஏத்தி தெருவுல கிடந்து நம்ப டயர்ல பட்டு ஒட்டிக்கிட்டிருந்திருக்கலாம்னு நெனைச்சோம் சாமி குழம்பிட்டோம்.''

''இந்த லாரியை நீங்க கண்டுபிடிச்ச விதம் என்ன நடராஜன்?''

மொட்டை போன்கால் என்று நடராசன் எழுத வில்லை. தானே தேடிக் கண்டுபிடித்ததாய் விவரித் திருந்தார்.

''எதேச்சையா இந்த லாரி கண்ல பட்டு விசாரிச் சீங்க. விசாரிச்சப்போ இருக்கலாம்னு சொன்னாங்க. அப்படித்தானே?''—கோர்ட் கேள்வி கேட்டது.

நடராசனால் மறுக்க முடியவில்லை.

''இது ஹட் அண்ட் ரன் இல்லை. விட்னஸ் போறாது'' அஜாக்கிரதையாய் வண்டி ஓட்டிய குற்றம். ஆறு வாரம் வெறும் சிறைத்தண்டனை. கூடவே அபராதம் ஆயிரம் ரூபாய். வண்டி ஓட்டிய செல்லத்தம்பி ஏற்கனவே பதினைந்து நாட்கள் சிறையில் இருந்து விட்டபடியால்...''

கௌசல்யா துள்ளிக் குதித்தாள்.

''காலு பிடிச்ச முதலை துணி உருவித் துன்னுடுச் சாம். போட்டும் போ. உசிரு முக்கியமா, முண்டக்கட் டையா நிக்கறது முக்கியமா? பொத்திக்கினு ஓடிறலாம் போ. நாலு வாரம் ஜெயிலு. வர அம்மாசிக்கு அடுத்த அம்மாசி தண்ணித் தொட்டித் தெருவுக்கு வந்துரலாம், மாலை போட்டு நான் இட்டாரேன்! ஏன் அளுவுற. அளுவாதே போ!'' —கௌசல்யா செல்லத்தம்பியின் கண்களைத் துடைத்துவிட்டு அழுதாள்.

செல்லத்தம்பி சந்தோஷம் தாங்காமல் அழுதான். ஆறு மாசமோ ஒரு வருடமோ என்று பயந்த பயம் கரைந்து அழுதான்.

''நீயே பேசி உடைச்சிட்டியேடா கேஸை, வக்கீலே வாண்டாம் ஒனக்கு.''—ராவுத்தர் வக்கீல் தட்டிக் கொடுக்கத் தலையைக் குனிந்து ஏற்றான்.



ராவுத்தர் ஐயாவும் கௌசல்யாவும் கோர்ட் வரை தனக்காகவே வந்த தைரியம்தான் பேச வைத்தது என்றான். தன் சார்பில் அபராதம் கட்டின ராவுத்த ரைத் தரையில் விழுந்து கும்பிட்டான்.

''கடவுளுக்குத் தெரியும் வண்டி ஓட்டினது நீயில் லைன்னு; உம் பேர்ல குத்தம் இல்லைன்னு. குத்தம் இல்லாத மனசுதான் சத்தியத்தை சத்தமா பேசும்!''- ராவுத்தர் ஆதரவாய்ப் பேசினார். கௌசல்யா வாரம் தவறாது சிறைக்கு வந்து பார்ப்பதாய்ச் சொன்னாள். கோர்ட் கலைந்து போலீஸ் வண்டி ஏறுகிறவரை பேசிக் கொண்டிருந்தாள்.

யார் அது என்று வேறு வழக்குக்கு வந்திருந்த பெண்கள் கேட்டபோது, 'எங்க ஆம்பிள்ளை' என்றாள்.

உறவு என்பது சடங்கால் வருவதில்லை. அது ஒரு உணர்வு. உணர்வு வரவேண்டும் என்பதற்கான கருவி தான் சடங்கே ஒழிய, கருவியே உணர்வாகாது. புருஷன் என்பவன் யார்? நம்பிக்கை தருபவன். புருஷனின் கடமை என்ன? தீங்கிலிருந்து பெண்களைக் காப்பாற் றுதல். பெண்ணின் கடமை என்ன? புருஷனின் பெரு மையை வளர்ப்பது. அவனுக்கு இடையறாது துணை நிற்பது. எனவேதான், கடவுள் பரம புருஷன் மனிதர் அனைவரும் பெண்கள் என்கிறதான பாவம் வேதத்தில் சொல்லப்படுகிறது.

வக்கீலும் ராவுத்தரும் கோர்ட் முடிந்தபிறகு பேசிக் கொண்டிருந்த தத்துவம் கௌசல்யாவுக்கும், செல்லத் தம்பிக்கும் புரியவில்லை.

புருஷனும் மனைவியும் முற்றிலும் கலத்தல் என்பது இல்லை. அதே நேரம் மனைவியல்லாது புருஷனுக் குப் பெருமை இல்லை. புருஷனில்லாது பெண்ணுக்குப் புகலிடம் இல்லை. பரமாத்மா புருஷன். ஜீவாத்மா

மனைவி. இதுவே த்வைதம். இரண்டாவது வெவ்வேறானது வெவ்வேறாயினும் விலக முடியாதது. விலகல் இல்லாதது. வக்கீல் ராவுத்தருக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

செல்லத்தம்பியும் கௌசல்யாவும் அந்த வேதனை நேரத்தில் மனத்தால் புருஷன் மனைவியானார்கள். சேர்ந்து நடக்க முடிவு செய்தார்கள். எத்தனை சோதனை வந்தாலும் விலகக்கூடாது என்றார்கள். விலக முடியாது என்று நினைத்தார்கள்.

தத்துவம் தெரிந்த வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுதல் என்பது எல்லோருக்கும் நியதியில்லை. சிலருக்குச் சட்டென்று வாழ்கையே தத்துவமாகிறது.

# 34

விஸ்வநாதன் முனகினான். முகத்தில் ஈரம்படுவதாய் உணர்ந்தான். கண்களை மெல்லத் திறந்தான். குழந்தைகளை அவன் முன்னே தூக்கிக் காட்டிக்கொண்டிருந்த காயத்ரி சந்தோஷமாய் 'ஹலோ' என்றாள். விஸ்வநாதனுக்குத் தன்னெதிரே இருப்பது யார் என்று தெரியவில்லை. ''தாரிணி தாரிணி எங்கே?''— முனகினான்.

கௌசல்யாவும் அவள் துணையும் பாம்பே கோடவுனில் பின்னிப் பின்னித் திளைத்தது ஞாபகம் வந்தது காயத்ரிக்கு. தன் தலையில் தானே பூக்கூடை கவிழ்த்துக் கொள்ளும் சந்தோஷம் தெரிந்தது அதில்.

இங்கே எதிரில் இது வேறு விதம்.

புருஷன் விழி திறந்து அசைந்ததும் மனைவி ஓடி வந்தாள். சிதிலமாய்க் கிடக்கிற புருஷன் முகத்தை ஏந்திக் கொண்டாள், இடம் மறந்தாள். வெட்கம் மறந்தாள்.



''ராஜா... ராஜப்பா... முழிச்சுண்டுடுத்தா... சமயபுரத்தாளே... வயத்துல பாலை வாத்தியேடி. உன் மண்ணிலே ஈரத் துணியோட உருள்றேன் தாயே...'' எங்கோ யாருக்கோ உறுதி சொன்னாள். வலியிலும் பயத்திலும் மனைவியின் அணைப்பில் நெகிழ்ந்து கண் கலங்குபவனை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

''ஒன்றுமில்லை. ச்சே... ச்சே... நான் இருக்கறச்சே எதுக்கு என் ராஜா கண் கலங்கணும். எல்லாம் சரியாய் போயிடுத்தே. எண்ணிப் பத்தே நாள். சிங்கம் மாதிரி எழுந்து நடக்காதா. போறாத வேளை. கண் திருஷ்டி. என்னை மாதிரி சந்தோஷப்பட்டவள் உண்டான்னு நானே கர்வப்பட்டத்துக்குப் பலன். என் சாமர்த்தியம தான் இந்தக் குடித்தனம்னு நான் பேசினதுக்கு விழுந்த அடி ராஜாவைப் படுத்தியிருக்கு. எங்கப்பா சொல்வா, ''எத்தனை சந்தோஷப்பட்டாலும் இது யாரோ போட்ட பிச்சைன்னு நெனைக்கணும்னு. அது தெரியாத போச்சு. ஒரு ஆட்டம் ஆட்டி வுட்டுடுத்து. என்ன குடிக்கறேள். ஹார்லிக்ஸ் கரைச்சுத் தரட்டுமா? ஜூஸ் வேணுமா.''

கவனமாக அடிபடாத இடம் முழுவதும் தடவித் தடவிப் பேச்சைப் பஞ்சுப் பொதியாய் ஒற்றி ஒற்றிக் கண் ஈரத்தில் குளிப்பாட்டி, புருஷனைக் குழந்தையாய் மாற்றி என்னால்தான் உனக்கு ஹிம்ஸை என்று அவன் கழிவிரக்கம் பகிர்ந்து மனசின் கனம் கரைத்து... காயத்ரி ஹா என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

''காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தரும்.''

நெஞ்சு நனையக் குழறிக் குழறி வருத்தத்தில் இப்படி ஆணும் பெண்ணும் பேசிக்கொள்வதே கவிதை தானோ? என்னவோ ஒன்று இவர்களைப் பிணைத்துத் தான் வைத்திருக்கிறதோ? இந்த ஸ்நேகம் எத்தனை நாள்? ஆயுசு பந்தம் வரையிலா? வலிக்கிற நேரம்

மட்டுமா? 'த்து' என்று தாரிணி இவனை ஏசமாட்டாளா? 'சரிதான் போடி எனக்குத் தெரியும் என்று விஸ்வநாதன் சொல்லியிருப்பானா? சார்ந்திருப்பது என்பது மிக அவசியமானது தானா? எதிர் செக்ஸை சார்ந்திருப்பது தவிர்க்க முடியாததோ? இந்த அழுகை, வேதனைகூட சந்தோஷம் தானோ?

'போன வருஷம் கத்திக் குத்துப்பட்டு ஆஸ்பத்திரியில் பதினைஞ்சு நாள் இவர் கெடந்தார். அப்ப நான் பட்டபாடு... பகவானுக்குத்தான் வெளிச்சம்' இன்னும் கர்வம் பொங்கத் தாரிணி பல வருடங்கள் சொல்லிக் கொள்ள வாய்ப்பா?

மனிதன் கூடி வாழும் இயல்பினன்—

உண்மையா? பிரமையா...? சொல்லிக் கொடுக்கப் பட்டதா...? மாயையா...? மாயை என தெரிந்து மீறத் தெரியாமல் மாயையை அங்கீகரித்துக் கொள்வதா...? உனக்கு நான் உதவ, எனக்கு நீ உதவ என்கிற பண்டமாற்றமா?...

என்னுள் யாரோடும் ஒட்டாத தன்மை இருக்கிறதே. அதே நேரம் கூடி வாழ வேண்டிய நிர்பந்தம் வருகிறதே. உணவுக்கும் உடைக்கும் வம்சாவளிக்கும் அடுத்தவரை எதிர்நோக்கும் தன்மை— எவ்வளவு பெரிய சிக்கல் இங்கே. அடுத்தவரை தன் தனிமையோடு அங்கீகரிக்க வேண்டிய நிலை. உறவே சுகம் உறவே சுமை.

மனிதன் எதைத் துறக்க வேண்டும்? தனிமையை மறக்கவா...? உறவை அறுக்கவா...? எது அமிர்தம்? எது நஞ்சு? இரண்டும் கலந்துண்டு இது என்ன வேதனை?

வெளியே நிழலாடிற்று.

நாராயணசுவாமி நின்றிருந்தார். தாரிணி நிழல் பட்டுத் திரும்பினாள். ''வாங்கோ'' என்று அழைத்தாள். ''கொஞ்சம் அவரைப் பார்த்துக்கோ காயத்ரி, நான் எதாவது குடிக்கக் கரைக்கிறேன்.''



விஸ்வநாதன் நாணு சாரை நோக்கிப் புன்முறுவல் செய்தான். காயத்ரியை நோக்கித் தலையசைத்தான்.

''அப்பா முழிச்சுண்டாயா... கலங்கிப் போயிட்டேண்டா குழந்தை...'' நாணு சார் உதடு நடுங்க அவர் அருகில் அமர்ந்தார்.

''தாரிணி, இந்தப் பொண்ணை உனக்குத் தெரியுமா? நாணு சாரோட டாட்டர்.''

''தெரிஞ்சுண்டேன். ரொம்ப உதவி! குழந்தைகளை அவதான் முழுக்கப் பார்த்துண்டா. மாமா நூறு தரம் மருந்துக்கும் ஆரஞ்சுப்பழத்துக்கும் அலைஞ்சார்.''

''மாமா இல்லேன்னா சரக்கு எடுத்திருக்கவே முடியாது தாரிணி.''

''போறுண்டாப்பா. என் ஜன்மத்துக்கும் போறும். உனக்கு நான் உதவின்னு நெனச்சுப் பண்ணிட்டு, நீ இப்படி நாரா கிழிஞ்சு கெடக்கறது போறும்.''

''கெடக்கு நாணு சார், எம்.டி. வந்தாரா?''

''வாசல்லே இருக்கார். வரச் சொல்லட்டுமா?''

காயத்ரி ஆபீஸ் ஆட்களை அழைத்து வந்தாள். கூட்டம் கூடிற்று. புகழ் மாலைகள் சூட்டப்பட்டன. வலித்த இடம் விழுப்புண்ணாயிற்று. வார்த்தைகள் பதக்கங்கள் ஆயின.

''லாரி வாடகை கொடுக்க வேண்டும் சார். நாணு சார் இல்லாது இந்த ட்ரான்ஸாக்ஷன் இல்லை. இது அவருடைய மகள். நமக்கு உதவி செய்ததில் பெரும் பங்கு காயத்ரிக்குத்தான். அவர்களிடம் பேசுங்கள்.''

''வடிவேலு அட்ரஸே காணோம். எங்க கொண்டு போய் வாடகை குடுக்கிறது. அதைல்லாம் அப்புறம், மொதல்ல, ஒன்னோட ஒடம்பு தேறட்டும்.''

எம். டி. யும் நாணு சாரும் தனியே பேசினார்கள்.

''தெருவுல ஒருமாதிரி விஷயம் தெரிஞ்சு போயிடுத்து. இன்னும் தெளிவாத் தெரிஞ்சா எம்பெண்ணுக்கு வேலை போயிடும் நானும் அந்தத் தெருவுல இருக்க முடியாது.''

''புரிகிறது. இங்கிலீஷ் கம்பெனி என்றைக்கும் நன்றிமறக்காது. நீங்கள் விஸ்வநாதனைக் கவனித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து எங்களுக்கு உதவி செய்யுங்கள். நாங்களும் செய்கிறோம்.''

ஆபீஸ் நகர்ந்துவிட்டது. மிச்சப்பேரல்களை எடுக்க வேண்டும். எடுத்த பேரலை உடைத்து ரப்பர் பால் எடுக்க வேண்டும், ஏகப்பட்ட வேலை கம்பெனிக்கு.

பதினேழு நாட்களுக்குப் பின் விஸ்வநாதன் எழுந்து நடக்கத் தொடங்கினான்.

நன்னடத்தையும், சுதந்திர தின விழாவும், சிறைத் தண்டனையைக் குறைத்துக் கொடுக்க, செல்லத்தம்பி வெளியே வந்தான்.

காந்திலால், டிரான்ஸ்போர்ட் நஷ்டம் என்பதால் ஆள் குறைப்புச் செய்தான். காயத்ரி வேலை இழந்தாள். வடிவேலு தலைமறைவான மூன்றாம் நாளே கூலியாட்கள் வேலைக்குத் திரும்பி விட்டார்கள்.

எப்போது காந்திலால் சிநேகம் இல்லையென்றாகி விட்டதோ, அவன் குடிசையும் ஸ்நேகம் இல்லைதான். வயசுப்பொண்ணை வைத்துக்கொண்டு பட்டணத்தில் எங்கே போவது?

''எங்காத்துக்கு வாங்கோ''—தாரிணி நாணு சாரையும் காயத்ரியையும் வரவேற்றாள்.

''வரமாட்டேன்னு சொல்லிடுவேளோனு பயந்தேன் சார். நீங்க வந்தது எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?'' விஸ்வநாதன் தந்தையையும் மகளையும் வரவேற்றான்.



''நான் மட்டும் இருந்திருந்தா வந்திருக்க மாட்டேன் விஸ்வநாதன். நான் பாஷாண்டி. காயத்ரிக்கு ஒரு எடம் வேணுமே.''

''ரொம்ப சூடிகையான பொண் சார், தேடலும் கோபமுமா இருக்கிற பொண்.''

''அதான் என் கவலை. சிரிச்சு வெட்கப்பட்டு தலையைக் குனிஞ்சு நிக்கறதா இருந்தா, சரி பொழைச்சுப் போன்னு விட்டுடலாம். தெரிஞ்சாகணும்னு பறக்கறது. அதான் பட்டணத்துக்குக் கூடவே கூட்டிண்டு வந்தேன். அவளுக்குச் சொல்லிக்குடு விஸ்வநாதா.''

''எனக்கே ஒண்ணும் தெரியாது சார்.''

''இல்ல விஸ்வநாதா. உனக்கு உலகம் தெரிஞ்சிருக்கு. கவிதை எழுதறவன், வார்த்தையிலேயே காணாமல் போறவனில்ல. நீ எடுத்த காரியம் முடிக்கணும்னு கவலைப் படறவன், எல்லோரும் கவிஞன்தான். அடுத்தவா மனசு நோகுமோன்னு யோசிக்கறவன்தான் கலைஞன். மனசு ஒன்றி முனைப்போட செய்யற காரியம் எல்லாம் ஒசத்திதான். யோகம்தான். வயத்துப் பாட்டுக்கு ஏதாவது தொழில் பண்ணிண்டே மனசும் வளர்த்துக்கிற வித்தை சொல்லிக் குடு.''

''எனக்கே அப்படி ஆசை இல்லையே நாணு சார், சினிமா எடுக்கணும்னு ஆசை நெஞ்சு நெறைய உண்டு. நல்ல படம் பார்த்துட்டு வரச்சேயெல்லாம் புத்தி பேயாய்ப் பறக்கும். உத்தியோகத்தை விட்டுறலாமான்னு தோணும்.''

''நடிப்புக்குப் போக வேண்டாம்.''

''நடிக்கிற ஆசை இல்ல சார், டைரக்ட் பண்ணணும்.''

''ரெண்டும் ஒண்ணுதான். சூத்ரதாரியும் நடிச்சுக் காட்டணுமே.''

''ஏன், நடிக்கறதுல என்ன தப்பு?''

''நடிப்பு அவஸ்தை. நடிகனாவது பாபம்.''

''புரியலை சார். கூத்து ஒரு கலை இல்லையோ?''

''ரொம்ப ஆபத்தான கலை அது. அசந்தா ஆளை விழுங்கிடும். நடிச்சு நடிச்சு சுயம் மறந்து போயிடும். தான் எது. நடிப்பு எதுன்னு தனக்கே தெரியாது போகும்.''

''நாம அப்பப்ப வாழ்க்கையில 'நடிக்கறதில்லையா?''

''அந்த அவஸ்தையே மீள முடியலை. அதையே தொழிலா வச்சுக்கறது எவ்ளோ கஷ்டம்.''

''நீங்க பேசறது புதுசா இருக்கு.''

''உனக்குக் கவிதை வர்றது விஸ்வநாதன். எண்ணத்தை,மனசை வாக்கியமாக மாற்றுவது கவிதை. எண்ணம் உயர உயர, மனசு விசாலமாக, வார்த்தையும் வரும். கை தட்டலுக்குக் கவிதை பண்ணாம இருந்தாப் போறும்.''

''கவிதை இப்ப யாருக்கும் புரியலையே. சினிமா, நாடகம் நெருக்கமானதுமாதிரி, கவிதை புரியலையே.''

''ஒரு தத்துவத்தைக் கலையா மாத்தற போது ஏற்படற நீர்த்த வடிவம் நாடகம். தத்துவத்துக்கு நெருங்கின வடிவம் கவிதை.''

''நீங்க சொல்றது சரியாப் படல சார்.''

''வாஸ்தவம். வெளிய சொன்னா இன்னிக்கு சண்டைக்கு வருவா. என் அபிப்ராயம் இது. மேற்கொண்டு நீ யோசனை பண்ணிப் பாரு. ஒரு விஷயத்தைக் கவிதை எழுதற போது உண்டாற அமைதி, நடிக்கிற போது வருமா? யோசனை பண்ணு. உன் இயல்பு எதுவோ அதையே கவிதை செய்யறதும், உன் இயல்பே மறந்து போய் வேறு இயல்புகளில் இருப்பதும் வெவ்வேறானது. புரியலையா?''



''அப்பாவும் பொண்ணும் ஒரு அச்சா இருக்கீங்க சார்.''

''அதாம்பா கவலை. நான் பட்ட மன வேதனை இதுக்கும் வருமோன்னு கவலை. பொண் குழந்தையா வேற இருக்கே.''

''வந்து ஒண்ணுமே பேசலையே.''

''வேலை போயிடுத்துன்னு வருத்தம்''

''எங்க எம். டி.க்குப் போன் பண்ணிச் சொல்றேன் சார்.''

''ஒனக்குப் பெரிய சுமையா இருக்கோம்.''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லே. வாஸ்தவமா சந்தோஷமா இருக்கு சார்!''

ஒரு வாரத்தில் காயத்ரிக்கு இங்கிலீஷ் கம்பெனியில் ட்ரெயினிக்ளார்க் வேலை கிடைத்தது.

காயத்ரி இரவில் தாரிணிக்கு உதவி செய்தாள். குழந்தைகளைக் கொஞ்சித் தூங்க வைத்தாள். நாணுஐயர் ஒட்டடை அடித்தார். காய்கறி வாங்கி வந்தார். பின் கட்டணம் கட்டினார். தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றினார். பழவந்தாங்கலில் எண்பது ரூபாய்க்கு வீடு கிடைக்குமா என்று அலைந்தார்.

''எனக்கு உடம்பு முடியலை மாமா. ரொம்பக் குமட்டறது. தலை சுத்தல் ஜாஸ்தி இருக்கு. நீங்க வேற வீடு பார்க்க வேண்டாமே. குழந்தை பொறக்கறவரை நீங்களும் காயத்ரியும் என்கூட இருங்களேன்.''—தாரிணி மூச்சிரைக்கக் கேட்ட போது திரும்பிக் காயத்ரியைப் பார்த்தார்.

காயத்ரி, ''நீயே முடிவு பண்ணுப்பா'' என்றபோது வேதனைப்பட்டார். இந்தப் பெண்ணுக்குள் ஏதோ பெரிய மாற்றம் நடந்து கொண்டிருக்கிறது என்று தீர்மானம் செய்தார்.

# 35

முகம் சொல்லிற்று. இழுத்துப் போர்த்திக் கொண்டு கோர்ட் வாசலுக்கு வந்தாலும் வசந்தா யாரென்று அநேகம் பேருக்குத் தெரிந்து போயிற்று. முகத்திலிருந்த ஏதோ ஒன்று வசந்தாவை இனம் காட்டிற்று. கண் மையோ, கருவளையமோ, கண்ணாடிக்கல் மூக்குத்தியோ, பவுடர் பூசிய விதமோ, பரக்க பரக்க அலைகிற கண்களோ, கட்டு லேசாய்க் குலைந்த உடம்போ, உதடோ, அல்லது இவை எல்லாமே சேர்ந்து முகத்தில் அப்படியொரு விலாசம் எழுதி விட்டதோ தெரியவில்லை.

மோட்டார் ஆக்ஸிடெண்ட் க்ளெய்ம்ஸ் டிரிப்யூனல் வசந்தாவின் மனுவை ஏற்றுக்கொண்டது. ஒரு பிரதி ராவுத்தருக்கும், ஒரு பிரதி இன்ஸ்யூரன்ஸ் கம்பெனிக்கும் சம்மனோடு அனுப்பப்பட்டது.

வசந்தா மனுவில் சொந்தத் தங்கையான மல்லிகா லாரி விபத்தில் இறந்து போனதற்கு ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் நஷ்ட ஈடு கேட்டிருந்தாள். அக்காவும் தங்கையும் கூட்டு சேர்ந்து வியாபாரம் செய்திருந்தார்கள். தங்கை இறந்து போனதால் வியாபாரம் முற்றிலும் நசிந்து குடும்பத்துக்குப் பெருத்த நஷ்டமும், மனக் கஷ்டமும் ஏற்பட்டு...என்ன வியாபாரம்...காய்கறி மொத்த வியாபாரம் என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் வசந்தாவிற்கு தாய் தந்தை காலமாகித் தங்கை மட்டுமே துணையாய் இருந்தபடியால் மனுதாரருக்கு ஏற்பட்ட பிரிவு வேதனை சொல்லத் தரமன்று. எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் கருணை கூர்ந்து ரூபாய் எழுபத்தைந்தாயிரம் நஷ்ட ஈடாய்...



மனு வந்தவுடன் ராவுத்தர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குப் போனார். மனுதாரர் வசந்தாவும் அவர் வக்கீலும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு வரவழைக்கப் பட்டார்கள். கிரிமினல் கேஸ் மனுதாரருக்குச்சாதகமாக இருக்கிறபடியால் நஷ்டஈடு அறுபதுக்குக் குறையாது என்று வக்கீல் வாதாடினார். முப்பதுக்கு ஒத்துக் கொண்டார். முழுவதும் முற்றிலுமான செட்டில்மெண்டாக வசந்தா முப்பதாயிரத்துக்குக் கையெழுத்துப் போட்டாள்.

ராவுத்தருக்கும் அவள் முகம் அவளை யாரென்று காட்டிக் கொடுத்தது. "இது பாவப்பட்ட பொம்பளை. அதுகிட்ட பாதி காசு யாரும் முழுங்கிடக் கூடாது. ஐயா, இந்தத் துட்டுலனாச்சும் அது நல்லபடி இருக்கட்டும். அதும் பேர்லயே செக்குப் போட்டு அதுக்கு விவரம் சொல்லிடுங்க.'

வசந்தாவிடம் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மொத்த விவரமும் கிளிக்கு சொல்வது போல் சொல்லி, பக்கத்து பாங்கில் அக்கௌண்ட் எடுத்துக் கொடுத்தார்கள். அவள் வக்கீலுக்கு அவர்கள் எதிரிலேயே நாலாயிரம் ரூபாய் செக் எழுதிக் கொடுக்கச் செய்தார்கள். மூன்று நாட்கள் கழித்து இருபத்து ஐயாயிரம் ரூபாயும் எடுக்கப் பட்டிருந்தது. வசந்தா சகலமும் புரிந்துகொண்டு காசோடு காணாமல் போனாள்.

ராவுத்தர் கிணற்றில் விழுந்த லாரிக்கும் ஒரு க்ளெய்ம் ரிஜிஸ்டர் செய்ய வந்தபோது அவரிடம் வசந்தா இருபத்து ஐயாயிரத்தையும் மூன்றாம் நாளே எடுத்துவிட்டதைச் சொன்னார்கள்.

''இந்த மாதிரியான பொம்பளைங்களை ஏமாத்தறது ரொம்ப சுலபங்க. ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசினா அதுலேயே சரிஞ்சிடும். எவன் ஏமாத்தி எங்க கூட்டிக்கிட்டுப் போனானோ... ஒரு ஃபோன் போட்டு சட்டுங்களா...?''

இங்கிலீஷ் கம்பெனிக்கு போன் செய்து விஸ்வநாதனைக் கேட்டார். தொடர்ந்து லீவில் இருப்பதைச் சொன்னார்கள். வீட்டு விலாசம் கேட்டார். கொஞ்சம் இருக்கச் சொல்லி வேறு யாரையோ அழைத்தார்கள்.

''காயத்ரி ஹியர்''—மறுமுனை அழைத்தார்கள்.

''விஸ்வநாதன் விலாசமா? எப்பப் பார்க்கப் போறீங்க? நீங்க யாரு? ராவுத்தரா...? தண்ணித் தொட்டித் தெரு ராவுத்தரா? ராவுத்தர், நான் காயத்ரி, காந்திலால் கம்பெனில வேலை செய்யல...அந்தக் காயத்ரி''- விஸ்வநாதன் அன்னிக்கு சாயங்காலம் ஆஸ்பத்திரிக்கு செக்கப்புக்கு வருவதைச் சொன்னாள். தானும் அங்கு போகப் போவதைக் கூறினாள்.

தோள்பட்டைக் காயம் முற்றிலும் குணம் என்று தெரிந்தபிறகு, விஸ்வநாதன் நர்ஸிங்ஹோம் வாசலில் ராவுத்தரையும், காயத்ரியையும் சந்தித்தான். ராவுத்தர் ஆறுதலாய் அவன் சிரசில் தன் கையைப் பதித்தார்.

''என்ன ராவுத்தர் ஐயா, எப்படி இருக்கீங்க?''

''இருக்கேன் தம்பி. தோள் குணமாயிடுச்சுங்களா? லாரிக்கார பசங்களை விளையாட்டா நெனைச்சுட்டீங்களே. தப்பு தம்பி அது. ரொம்பப் போட்டியிருக்கிற தொழிலு. வெட்டுக்குத்து ரொம்பசாதாரணம். ஜாஸ்தி துட்டுப் பொழங்கற எடம். எல்லாம் அப்படித்தான் இருக்கும். உசிருக்கு எதுனாச்சும் ஆயிருந்தா? நல்லதா இந்த விளையாட்டு. சரக்கு நாலு நாள் ஹார்பர்ல இருந்துட்டுப் போவுது. அதுக்காகத் தானே லாரி புடிச்சு லோடு ஏத்தணுமா? அதும் வடிவேலு மாதிரி புரோக்கரை நம்பலாமா?''

''வடிவேலு என்ன ஆனான் ராவத்தர்?''

''இனி தண்ணித் தொட்டித் தெருப்பக்கம் தலை வச்சுப் படுக்க முடியாது. ஆனா அவனுக்கென்ன எங்கியாவது திருச்சி, சேலம், மதுரைல மறுபடி புரோக்கர் கடை தொறந்துடுவான்.''



''தொறந்தா மாதிரியும் தெரியலியே அவருக்குக் கொடுக்க வேண்டிய காசு இன்னும் குடுக்கல.''

''கவலைப்படாதீங்க தம்பி. காசு வாங்காத வடிவேலு சாகமாட்டான். எப்படியும் திரும்பி வருவான். நம்ம மாதிரி நேர்மையா நிக்கறவங்கதான் அடி தாளாம உக்காந்துடுவோம்... வாங்க. போய்கிட்டே பேசுவோம்.''

''என்ன காயத்ரி, சீக்கிரமா வந்துட்டே?''

''பர்மிஷன்.''

''எதுக்கு?''

''உங்களைப் பார்த்துப் பேசத்தான்...''

''வீட்ல பேசலாமே?''

''அப்புறம் சொல்றேன்.''

''என்ன ராவுத்தர், கைல ஒரே பேப்பர்கட்டு... வக்கீல் நோட்டீஸா?''

''இன்ஷ்யூரன்ஸ் க்ளெய்ம் தொரை. ஒரு வண்டி ஆளு அடிச்சிடலை...? அது செட்டில் ஆச்சு.''

''வண்டி கெணத்துல விழுந்தது தெரியும்.''

''அது வேற வண்டி. அது சுத்தமா க்ளோஸ். இது வேற வண்டி. ஆளு அடிச்சுட்டு வந்துட்டான். போலீஸ் கேஸ் முடிஞ்சு. செத்துப்போன பார்ட்டிக்குச் சொந்தக்காரங்கபோட்ட க்ளெய்மும் செட்டிலாச்சு, முப்பதாயிரம் ரூபா.''

''செத்துப் போனதுக்கு முப்பதாயிரம்தானா?''

''ரோட்டோரத்து ஜனங்க. சரின்னு ஒத்துக்கிடுச்சிங்க. முடிச்சுட்டோம். ஒரு மாதிரியான பொம்பளை, செத்துப்போனதுக்கு க்ளெய்ம் வாங்கினது.''

''எங்க அது?''

''புத்தூர்ப் பக்கம்''

''அட, பேப்பர் கொண்டாங்க. வசந்தா... வசந்தாவா?''

''தெரியுமா உங்களுக்கு?''

''ஒரே ஒரு தடவை பேசியிருக்கேன். கொஞ்சம் தடிமனா... உதடு பெரிசா. ஒரு மாதிரித்தான். மாதிரியென்ன... அதுதான் தொழில்.''

''தம்பி ஏங்க அங்கெல்லாம் போய்...''

''சே, சேச்...'' வெறுமென செக்போஸ்ட் கிட்டப் பேசிக்கிட்டிருந்தேன் ராவுத்தர். அன்னிக்கு மறுநாள் தான் ஒங்களைப் பார்த்தேன். அதுகூட நான் பேசிக்கிட்டு இருந்தப்போ மல்லிகான்னு ஒரு பொண்ணு அடிப்பட்டுச் செத்ததா அதைக் கூட்டிக்கிட்டுப் போனாங்க. அது தங்கையில்லை, வெறும் ஸ்நேகிதம்னுதானே சொன்னா?''

''அது என்னவோ தெரியலை. க்ளெய்ம் பண்ண வேறு ஆளு வரலை. இது வக்கீல் கூட்டியாந்துட இதை முடிச்சுட்டோம். தம்பி எங்கே எறங்கணும் ''

''மாம்பலத்துல எறக்கி விட்டுடுங்க, போதும். ஸ்டேஷன் வரைக்கும் வாண்டாம். டெர்மினஸ்கிட்ட எறக்கி விட்ருங்க. இரண்டு லாரியும் அடிபட்டுப் போச்சா ஒங்களுக்கு, கஷ்டம்தான்.''

''கஷ்டம் முடிஞ்சு போச்சு தம்பி. லாரி ஓட்றதை நிறுத்திடப் போறேன். போதும் ஆட்டுத் தோல் வியாபாரம் துணிக்கடையோ ஆரம்பிக்கப் போறேன்.''

''நல்ல வருமானம் இது ராவுத்தர்.''

''வாஸ்தவம். ஆனா ராத்திரி பூரா வண்டியை அனுப்பிச்சிட்டு வயத்தை பிசைஞ்சுகிட்டு உக்காந்திருக்க வேணாம்.''

''வண்டி வித்துட்டீங்களா?''

''விக்கணும். விலை படியலியே?''



''படிமான ஒரு விலை சொல்லு நாய்க்கரே!''

''இதோ பாரு, நான் துண்டு இரும்பு விக்கிறவன். எனக்கு முழு வண்டி வேணாம்.''

''அப்ப ஏன் சுத்திச் சுத்தி வர்ற?''

''எவனா வாங்கினா கழிச்சுக் கட்றதை எடுக்கலாம்னு பாக்கறேன் ''

''அப்ப எடத்தக் காலி பண்ணு.''

''முழுசு என்ன வேலை?''

''ரெண்டரை.''

''போய்யா. ஓடற வண்டியே அந்த வெலை போவலை. குப்பமேடு மாதிரி கெடக்கிற வண்டிய ரெண்டரைங்கிறியே ''

''மொதல்ல நீ வெளியே போ நாயக்கரே.''

கரீம்பாய் எழுந்து நின்று வாசலுக்குக் கைகாட்டினான்.

''ராவுத்தர்கிட்ட வேலை செய்றவனா நீ...? என்னவோ அடிச்சுத் தொறத்தறியே?'' நடேச நாயக்கர் எழுந்திருக்காமல் பதில் சொன்னார்.

''குப்பமேடு அது இதுங்கறியே...''

''அப்படித்தான்யா பேசுவோம். எங்க பாஷைல குப்பமோடுன்னா பிரிச்சுப் போட வேண்டிய லாரின்னு அர்த்தம். உனக்குக் குப்பமோடுன்னா வேற அர்த்தம். வெளியே போ, வெளியே போன்னா...வெவரம் தெரியாத புள்ளைங்களை வெச்சிக்கினு எப்டீத்தான் அந்த ராவுத்தர் கம்பெனி ஓட்றானோ?''

''அத்தா வந்துட்டாங்க. எந்திரி மொதல்ல.''— ராவுத்தர் உள்ளே நுழைய நடேச நாயக்கர் மேல் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார்.

''கும்புடறேங்க மொதலாளி.''

''வாங்க நாயக்கரே, சௌக்கியமா? வியாபாரமெல்லாம் எப்படி?''

''ஏதோ கஞ்சி குடிக்கிறாப்ல வருது மொதலாளி தொட்டுக்கறதுக்கு ஒண்ணுமில்லாம சாப்பிடுறோம்.''

''அடேடே, அப்படியா?''

''ஏதோ வெலை படிஞ்சதுன்னா மொதலாளி தயவுல ஒரு துண்டு ஊறுகா தொட்டுக்கலாம்.''

''ரெண்டரை ரூபாய்க்குக் கொறையாதுன்னு சொல்லிட்டியா கரீம்?''

''வவுத்துல அடிக்காத ராவுத்தரே.''

''என் வயிறு கிழிஞ்சு தொங்குது நாயக்கரே. கம்பெனி மூடிடப் போறோம். தெரியுமில்லே?''

''தெருவுல சொன்னாங்க. இந்த லாரி இல்லேன்னா மூடிடப்போற...இது போனா இன்னொன்னு.சாதாரண குடும்பமா ஒன்னது?''

''போறும் நாயக்கரே. வெலை சொல்லு.''

''ஒரு ரூபா போட்டுக்கங்க.''

''கட்டாது.''

''ஒண்ணு பத்து வச்சுக்குவோம். மூடப்போறேங்கிறியே.''

''கட்டாது.''

''என்னதான் கடைசி வெலை.''

''ரெண்டு ''

''ஒண்ணு மூணு வச்சுக்க, மொதலாளி.''

''இதுக்கு யாருன்னா கேட்டா சும்மாக் குடுத்துடுவேன்.''

கௌசல்யா ராவுத்தர் கடை வாலில் நின்றிருந்தாள். அவர் கடைசி வார்த்தை கேட்டதும் கண்ணீர் சுடர் மின்னிற்று.



''வெலை எறக்க மாட்டே...?''

''நாளைக்கு வா, நாயக்கர்.''

''போடாங்கிறியா?''

''நாளைக்கு வா.''

''இன்னிக்கு முடிச்சுட்டேன்.''

''நாளைக்கு வா.''

''யோவ் கரீம்பாய்! வெளியே போ. வெளியே போன்னியே, ராவுத்தர் பேசறதைக் கேட்டியா. வெளியே போன்னு என்னிக்கும் பேசக்கூடாதுய்யா, நாளைக்குவான்னு சொல்லு; நகந்துடுவேன்.வெளியே போன்னு சொல்றது ஒனக்கும் அசிங்கம், எனக்கும் அசிங்கம்.''— நாயக்கர் வெளியேற கௌசல்யா உள்ளே நுழைந்தாள்.

''என்ன கௌசல்யா?''

''எங்க ஆம்பளை உன்னியப் பார்க்கணும்னிச்சு, இட்டாந்துருக்கேன்,''

''என்ன சமாச்சாரம்...?''

''பிச்சை கேக்க வந்திருக்கோம்.''

''விஷயத்தைச் சொல்லு.''

''வண்டி வேணும்.''

''யாருக்கு?''

செல்லத்தம்பி உள்ளே நுழைந்தான். மேல்துண்டில் உள்ள நாற்பதாயிரம் ரூபாயை மேசைமீது வைத்தான்.

# 36

ராவுத்தர் மலைத்துப் போனார்.

பதினாறு வயசில் வியாபாரம் என்று இறங்கின போது யாரிடம் காசு இருக்கும் என்று கண்டுகொள்வதே முதல் படிப்பினையாய் இருந்தது. ஆள் பார்த்து

எடை போடுவது என்று ஒரு வழக்கம் வியாபாரிகளிடம் இருந்தது. பணம் இருப்பவர்—இல்லாதவர்களிடையே வேற்றுமை வெளிப்படையாய்த் தெரிந்தன. அந்த வேற்றுமை உருவத்திலோ அன்றி பேச்சிலோ இல்லை. பணம், வசதி முகத்தில் தனிக் களையாய்த் தெரிந்தது.

தன்னிடம் வேலை செய்த க்ளீனரே இன்று லாரி வாங்க வந்திருக்கிறான். தன்னிடம் உள்ள லாரியையே பேரம் பேச வருகிறான். நானும் இப்படித்தான் துவங்கினேன். மிலிட்ரி வண்டியை ஏலத்தில் எடுத்து மிலிட்ரி ஆளுக்கே கோட்டைக்கும் பரங்கிமலைக்கும் லோடு அடித்தேன். மிலிட்ரிக்காரன் சனிக்கிழமை தவறாது கணக்குத் தீர்ப்பான். யுத்த காலத்தில் துறைமுகம் பெரிதாக ஹார்பர் லோடுக்கே வண்டிகள் தேவைப்பட்டன. பர்மா அரிசி இறக்கியே பணம் பார்க்க முடிந்தது.

ஆனால் இந்த உடைந்த வண்டியை வைத்துக் கொண்டு இந்த நேரம் இந்த க்ளீனர் என்ன வியாபாரம் செய்ய முடியும்?

எஞ்சின் வெலையே பல ஆயிரம் ரூபாய் இழுக்கும். வெறும் நாற்பதாயிரம் வைத்துக் கொண்டு என்ன விதமாய் வண்டி ஓட்டச் செய்யப் போகிறான்?

''இந்தா கௌசல்யா, இதை எடு.''

''அப்படிப் பேசாத மொதலாளி.''

''ஒனக்கு இது சரிப்படாது. அதுனால சொல்றேன். வேறு எங்கினா பொட்டிக்கடை போடு.''

''நான் அப்பன் ஆயி இல்லாதவ மொதலாளி. உன் கடை வாசல்ல ஒதுங்கினவ மொதலாளி. மாட்டேன்னு சொல்லிடாதே.''

''நா இடம் பார்த்துத் தரேன், கடை போடு லாரி வேணாம்.''



''நடேச மொதலியக் கேட்டுப் பாரு. நான் பொம்பளையாப் பொறந்து பட்ட கஷ்டம் எல்லாம் எச்சச் சோறு கொண்ணாந்து சாப்டுவேன் மொதலாளி.''

''நாப்பது ரூபா கொண்ணாந்து குடுத்தா''—நடேச முதலி அரிசி மூட்டையில் சாய்ந்து உட்கார்ந்தபடி கேட்டார்.

''வண்டி ஓடட்டும் மொதலியாரே, மாசா மாசம் துட்டு கட்டிர்றேன்.''

''வண்டி ஓடணும்னா மேல இருவது ரூபா செலவாகுமே.''

''அதுக்கு மார்வாடிகிட்டக் கடன் வாங்கறம் மொதலாளி.''

''யாரு ஒனக்கு இருவது ரூபா கடங் குடுக்கறது.''

''காந்திலால் தரேங்கிறாரு. மூணு பைசா வட்டி.''

''எத நம்பித் தரான்?''

''வண்டி வாங்கி அவராண்ட அடமானம் வச்சிடப் போறோம்.''

''ரெண்டு லட்ச ரூபா வண்டி வெலை கௌசல்யா.''

''மாசம் நாலாயிரம் ரூபா குடுத்துர்றோம்.''

''பேர் பாதி காசாவது கொடுக்கணுமில்லை. நாப்பதாயிரம் எந்த மூலைக்கு?''—நடேச முதலி மறுபடி முனகினார்.

''மிச்ச துட்டுக்கு வேற பார்ட்டி பார்க்கிறோம மொதலாளி.''

''அவன் உம்முன்னு நிக்கிறான். நீயே வியாபாரம் பேசறியே''—ராவுத்தர் செல்லத் தம்பியைக் கைகாட்டினார்.

''அதுக்குப் பேசத் தெரியலை. உன்னாண்ட வந்து நிக்கவே பயப்படுது.''

''பயம் என்னத்துக்கு?''

''வேல பாக்கற எடத்துலயே வண்டி வாங்குற கூச்சம்தான்.''

''கூச்சம் என்ன...துட்டு குடுத்தா வண்டி.''

''நடேச முதலி...நீ நடுவுல கடிச்சுப் போட்றாத நானும் பொம்பளையா நிக்கணும்னுதான் மல்லாடறேன். எத்தினி நாளைக்குப் பாம்பே கோடவுன்ல ஆள் மாத்தி ஆள் ஒதுங்கறது.''

''அடடே... கௌசல்யா பத்தினியாய்ட்டாப்லியா?''

''இல்லாத கொறைதான் மொதலியாரே, அவுசாரியாப்போனது. எனக்கும் ராவுத்தர் வூட்டுச் சாப்பாடும் டுப்புல ராவுத்தர் கோடவுனு சாவியும்னா நானும் பத்தினிதான். பொம்பள உடம்பு நோவு ஆம்பிளைக்கு எப்படித் தெரியும்? தெரிஞ்சாத்தான் என்னா...ஐயோ, பாவம்னு உட்ருவீங்களா.''

''ஒங் கதைய இங்க யார் கேட்டா? துட்டுக்கு வழி சொல்லு. பெரியவரு கடை பூட்டிட்டு மசூதிக்குப்போவணும்.''—நடேச முதலி உரத்த குரலில் விரட்டினார்.

''நான் சொல்றேன் மொதலியார் ஒங்க காசு என்கிட்ட இருக்கு. நான் கம்பெனி மூடப்போறேன். நஷ்டஈடாக கொஞ்சம் போட்டு நாப்பது ரூபா தரேன். நீங்களும் இந்த வண்டில பங்கு போடுங்க...'' ராவுத்தர் பளிச்சென்று தன் சிநேகிதரிடம் திரும்பினார்.

''மொதலாளி...'' மேல் துண்டு நழுவ நடேச முதலி எழுந்தார்.

''உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா இதுக்கு ஒத்துக்கலாம்.''



''அதுக்கோசரம் இந்தப் பொம்பளையோட...''

''ஏன்? கௌசல்யா பேரில என்ன கோவம்?''

''ஒண்ணுமில்ல. கொஞ்சம் அடாவடி. ஆனா செல்லத்தம்பிய நம்பறேன். ஆனா மொதலாளி, கடை மூடிட்டா உங்களை விடடுப் போயிடணுமா?''

''எங்க போப்போறோம் மொதலியாரே. எதிரும் புதிருமாத்தானே நடமாடப் போறோம். நீங்களும் முன்னுக்கு வரணும் மொதலியாரே!''

''புரியலீங்க மொதலாளி. நான் இப்படி கூலி ஆளா பொழுதை ஓட்டிடலாம்னு பார்த்தேன்.''

''எனக்கு அதுல சம்மதமில்ல. நாளைக்கு ஊர் ஒரு மாதிரியா என்னைப் பேசும் ராவுத்தருக்கு ஒழைச்சே மொதலி கெட்டுப்போய்ட்டான்னு சொல்லும். செல்லத்தம்பி, முன்னாடி வா.''

செல்லத்தம்பி வெளிச்சம் படுகிற இடத்தில் வந்து நின்றான்.

''எனக்கு ஒன்னைத் தெரியாது. ரெண்டு லட்ச ரூபா வண்டி வியாபாரம் பண்ற அளவு ஒன்னோட விவரம் தெரியாது. நடேச முதலியார் பங்குதாரராச் சேர்ந்தா வண்டி தாரேன். நாப்பதும் நாப்பதும் எண்பது. இன்னும் இருவது புரட்டி எடுத்துக்கிட்டு வா. எழுதி முடிச்சுடலாம். மிச்ச துட்டுக்கு எனக்கு கேரண்டி வேணும்னா நடேச முதலியைத்தான் நம்ப முடியும். என்ன கௌசல்யா?''

''மொதலியாரு என்னை நம்பலியே. கெட்ட பொம்பளை உக்காந்த எடம்னு பெருக்கிட்டுப் போற ஆளாச்சே.''

''மொதலாளி சொல்றாங்க - அதுக்குப் பதில் சொல்லு. உனக்கும் எனக்கும் உண்டானதை ஏன் பேசறே?''

''நான் கட்டுப்படறேங்க. வண்டி ஓடுச்சினா லாபத்தை மூணாப்பிரிச்சு, கடனை மூணு பங்காவகுத்து மிச்ச துட்டு சேத்துக்க நான் ஜவாப்தாரி.''—முதன் முதலாய்ச் செல்லத்தம்பி பேசினான்.

''மூணா ஏன் பிரிக்கறே? கௌசல்யா பங்கு என்ன...'' கரீம்பாய் வெட்டினான்.

''இருபது ரூபா—அது பங்கு வண்டி ஓடறதுக்கு இருபது ரூபா. அதும் செலவு ஆக நாப்பது ரூபா அது துட்டு ஆச்சுங்க.''

''சரி போ. காலைல துட்டோட வா.''—ராவுத்தர் பேச்சை முடித்தார்.

''இருபது ரூபா எப்படிப் பொரட்டப் போவுது கௌசல்யா?''—நடேச முதலி செல்லத் தம்பியைக் கேட்டார்.

''நீதான் என்னைப் பத்தினியாய்ட்டியான்னு கேட்டியே. நாளைக் காலைலேர்ந்து பத்தினியாயிட்டாப் போவுது.''

கௌசல்யா பரபரப்பாய் இறங்கி இருளில் மறைந்தாள். காந்திலால் வீட்டு வாசலில் நின்று கடன் கேட்டாள். அவள் பெருக்குகிற கோடவுன் அத்தனையும் தேடிப்போனாள். பல பேர் கடையில் ஏறி இறங்கினாள். சிரித்தாள். இழைந்தாள். காலில் விழுந்து கெஞ்சினாள். சீட்டுப் பிடிக்கிறவனிடம் மன்றாடினாள்.

விடிகிறபொழுதில் பாம்பே கோடவுனில் யோசனையுடன் உட்கார்ந்திருந்த செல்லத்தம்பியின் மடியில் சுருண்டு விழுந்தாள்.

''இன்னிக்கு நான் வாங்கியகடனுக்கு மரியாதையா இருக்கணும்னா, இன்னும் பத்து வருஷத்துக்கு நான் பத்தினியா இருக்க முடியாதுய்யா'' என்று அழுதாள்.

''போனால் போவுது போ.''



''போனால் போவுதா இன்னிக்குப் பேசற, நாளைக்கு வண்டி ஓடிச்சின்னா முழுக்கை சட்டை, போட்டுக்கினு எச்சக்கலைன்னு என்னை அடிப்பே.''

''அப்புறம் என்னை யார் அடிக்கிறது?''

''ஏன்...என்னா...?''

''நான் எங்காத்தாள ஏமாத்தி வெத்துப் பேப்பர்லை கை நாட்டு வாங்கி அது நெலமும் வித்து துட்டு எடுத்தாந்திருக்கேன். அதுக்கும் யாராவது அடிப்பாங்கல்ல. ஆள் அடிக்காட்டியும் கடவுள்னு ஒருத்தன் அடிப்பானில்லை?''

''என்னாய்யா சொல்றே?

''எப்படியும் தண்ணித் தொட்டித் தெருவுல நீயும் நானும் பெரியாளா நின்னுடணும்.''

''ஐயோ...அதை நெனைக்கிறப்பவே வவுத்தைக் கலக்கிக்கினு வருது.''

''ஏன் கௌசல்யா?''

''இந்த எச்சக்கலைய மடில வச்சிக்கினு அலையறியே...எனக்கு என்னான்னே புரியலியே.''

''நாளைக்கு மறுபடி ஒரு கேடு வந்து நான் ஜெயிலுக்குப் போனா இந்த எச்சக்கலைதானே டீத் தண்ணியோட கோர்ட்டுக்கு வரும்?''

''வாணாம்... வாணாம்... அது மட்டும் பேசாதே...'' கௌசல்யா அவன் வாயைப் பொத்தினாள். செல்லத்தம்பி அவளைப் பேயாய் இறுக்கிக் கொண்டான்.

அன்பு காட்டுவதில் பத்தினிக்கும் பரத்தைக்கும் வித்தியாசம் என்ன? சுமை தாங்காமல் தள்ளாடுகிற ஆணின் பாரத்தைத் தூக்கி நிறுத்துகிறவளுக்கு என்ன பெயர்? ஆணின் சுயாலம்தான் பெண்ணின் ஒழுக்கமென்றால் செல்லத்தம்பியின், 'போனாப் போவுது'க்கு என்ன அர்த்தம்? கற்பு சிலருக்கு நிர்பந்தம். சிலருக்குக்

கிடைத்த வசதி. சிலருக்குக் கௌரவம். கௌசல்யாவுக்கு இவையெல்லாம் எதிர் மறையாயிருப்பின் நீந்திக் கரையேறுவது எங்ஙனம்?

பரஸ்பர இரக்கம் மட்டுமே போதும் என்று ஆணும் பெண்ணும் முடிவு செய்த பிறகு, மற்றவை வெறும் சடங்குகளே. மனிதரைத் தெரிந்து சடங்கை உதறத் தெரிந்தவர் வெகு சிலரே. செல்லத்தம்பிக்குக் கௌசல்யாவைத் தெரிந்து போயிற்று. அவள் இரக்கம் போதுமாய் இருந்தது.

''என்மீது அதீத இரக்கமா உனக்கு? நான் உள்ளே புழுங்குவது தெரிந்து கொண்டு நீயும் வேதனைப்படுகிறாயா? இரக்கம் காதலாகுமா? அப்படியே காதல் என்கிற நினைப்பு தோன்றினாலும் வெளியே சொல்ல முடியுமா? சட்டென்று அந்த வார்த்தையை எப்படிச் சொன்னாய் காயத்ரி.''

''ஸிட்டிலே காலார நடக்கத் தோட்டமே இல்லையா?'' என்று காயத்ரி கேட்க, ஆட்டோ பிடித்து கிண்டி சாந்தி பார்க் காட்ட...

''ஒரு பெரிய கவிதை எழுதிக் காட்டறதா சொன்னேளே...''

''ம்ம்...எழுதிட்டேன்.''

''காட்டவேயில்லையே...''

''பேப்பர்ல இல்லை. மனசிலே இருக்கு.''

''சட்டுன்னு எழுதிட வேண்டியதுதானே?''

''பாதிக் கவிதை மனசுலேதான் இருக்கு. எழுதி நோட்புக்கா வச்சுக்கத் தோணலை.''

''ஏன்?''

''என்ன மறுபடி கவிதையான்னு தாரிணி அலுத்துக்கலாம். அவ அலுத்துப்பாளேங்கற பயமே என்னை எழுத விடாம வச்சிருக்குன்னு நெனைக்கிறேன்.''



''எல்லார் வாழ்க்கையும் இப்படித்தானா? இல்லை உங்களது மட்டும்தானா?''

''ஏன் கேக்கற காயத்ரி?''

''நான் உங்க வீட்டுக்கு வந்தப்புறம் எனக்கு எல்லாம் குழப்பமா இருக்கு மூச்சு முட்டறமாதிரி இறுக்கப் புடிச்சுக்கிறதுதான் புருஷன் பெண்டாட்டி உறவான்னு பயமா இருக்கு.''

''தாரிணியைச் சொல்றியா? அவ குழந்தை.''

''இல்லை. குழந்தை மாதிரி வேஷம் போடறா.''

''வாட் டு யூ மீன்...''

''ஐ மீன்...அநேகப் பெண்கள் தாங்கள் மன வளர்ச்சி பெறுவதை விரும்பவில்லை. விவேகம் பெறுவதை விரும்பவில்லை அடலெஸண்டாவே சாகற வரையில் இருக்கிறது சௌகர்யம்னு நெனைக்கிறா. 'எனக்கு என்ன தெரியும், புருஷனைத் தவிர, குழந்தைகளைத் தவிர'ன்னு வேஷம் போடறதே நல்லதுன்னு நெனைக்கிறா. அது ரொம்ப வசதியா இருக்கு:''

''வேஷம் போடாத பெண்கள்...''

''என்னை மாதிரி அவஸ்தைப்படறது.''

''உனக்கு என்ன அவஸ்தை காயத்ரி?''

''யாரோடையும் ஒட்டாத ஒரு குணம். தனிமையில் கரைஞ்சு போற குணம். தனி உலகம்.''

''எது பெட்டர்?''

''இனி அந்தக் கேள்வியே இல்லை. கேள்வி கேட்கத் தெரிஞ்ச பிறகு அடங்கிப் போறதுங்கறது இல்லை. சகலத்துக்கும் பணிய முடியாது. கொப்பு தவறவிட்ட குரங்கா வெறிக்க வெறிக்க உக்காந்துக்க வேண்டியதுதான்.''

''கொப்பு தவறவிட்ட குரங்குன்னா...''

''மரத்துக்கு மரம் தாவறச்சே குட்டி கொப்பு தவற விட்டதுன்னா குரங்குக் கூட்டம் அதை சேர்த்துக்காது. அடிச்சு விரட்டிடும். அப்படித் துரத்தப்பட்ட குரங்கு அந்தக் கூட்டம் போற இடத்துக்கெல்லாம் போகும். தூர உக்காந்து வேடிக்கை பாக்கும். ஆயுசு பரியந்தமும் வேடிக்கைதான்.''

''ப்பா...கொடுமையில்லை இது?''

''தாங்க் யூ.''

''எதுக்கு?''

''என்னைப் புரிஞ்சதுண்டதுக்கு.''

''வெல். மனுஷா அவ்வளவு மோசமா? உனக்கும் யார் துணையாவது கிடைக்கும். கல்யாணம் ஆகும்.''

''கவிதை சொல்றேன்னேளே?''

# 37

''எது பத்தி கவிதை...மறுபடி குதிரைதானா...'' காயத்ரி புல்தரையில் உட்கார்ந்தபடி கேட்டாள்:

''ஆமா... குதிரைதான்... அலுப்பா நெனைச்சா சொல்லலை.''

''ச்சேச்சே...அப்படி நெனைக்கலை. ஏன் குதிரை இவ்ளோ நெருக்கமா போயிடுத்து உங்களுக்கு?''

''குதிரைன்னா வெறும் மிருகத்தைக் குறிப்பிடற குதிரை இல்லை. ரொம்ப உரிமையோட இருக்கிற ஏதும் குதிரையோட சம்மதமாயிடும் எனக்கு. உதாரணமா காற்று சுழட்டி சுழட்டி அடிச்சா குதிரை தாண்டி போறதுன்னு தோணும். போரிங் பம்ப் டைட்டா அடிச்சு ஜலம் வந்தா பம்புக்குள்ள குதிரை ஜலம் இழுக்கறதாப் படும்.''



''அதாவது சக்தி—இயங்கு சக்தி ரொம்ப பிடிச்சிருக்கு இல்லியா.''

''யெஸ் அதப்பத்தி நெனைக்க, நெனைக்க அதிசயமா இருக்கு. இந்தக் கவிதை அந்தச் சக்தியைப் பத்தித்தான் ஒரு கதை மாதிரி பூடகமா சொல்ல ட்ரை பண்ணியிருக்கிறேன்.''

''நான் ரெடி. உட்காருங்களேன்.''

''இல்லை. நின்னுண்டே சொல்றேன்.''

''அடிசக்கை. கவிதைக்கு உசந்த இடம் வேணுமா மேடை மாதிரி.''

''நோ. ஒரு இடமா நிக்காம கொஞ்சம் மோனோ ஆக்டிங்கோட சொல்லலாம்னு பட்டுது.''

''அது ரைட். குதிரை பத்தி கவிதை உக்காந்து சொன்னா தப்புதான். மௌனம் பத்தி சத்தம்போட்டுக் கவிதை படிக்கிற மாதிரியாயிடும்.''

''கேலி பண்றியா காயத்ரி...''

''இலலை, விஸ்வநாதன். உங்க ஸின்ஸியாரிட்டி நெனைச்சு சந்தோஷப் படறேன். கவிதை சொல்லுங்கோ.''

விஸ்வநாதன் தொண்டையைச் செருமிக் கொண்டான். காயத்திரியை விட்டுத் தொலைவில் நின்றான். ஒரு கட்டியக்காரன் அறிவிப்புப் போல் உரத்த குரலில் கவிதையை ஆரம்பித்தான்.

கல்தோன்றி மண்தோன்றி கடவுள் தோன்றி
கைவழியே மொழி வளரும் காலம் தோன்றி
கால்நடையே செல்வமெனக் கொண்ட நாளில்
ஆண்டிருந்த ஓர் அரசன் பறையறிவித்தான்
வீட்டிற்கு ஒரு குதிரை வளர்க்க வேண்டும்
வேண்டுகிற உதவிகள் அரசு செய்யும்
குதிரைகள் தேசத்தின் பொக்கிஷங்கள்

போர் வந்தால் புரவிகளை அரசே வாங்கும்
போர்க்காலம் காணாத அரசு இல்லை
போராட்டம் இல்லாத காலம் இல்லை.
போர்க்காலம் முன்கருதி புரவி வளர்ப்பீர்
பின்வரும் சந்ததிக்கு உறுதி கொடுப்பீர்.
மீறுபவர் தேசத்தின் முதல் எதிரிகள்
மறுப்பவர்கள் வெளியேற்றப்படுவார் உறுதி.
பறையடித்து ஊர் முழுதும் சேதி சொல்ல
ஜனம்கூடி தெரு நடுவே புலம்பலாச்சு.
இவன் என்ன பேயரசன் குதிரை வெறியன்
திடுமென்று குதிரைக்கு எங்கே போக...
குதிரைதான் செல்வமெனில் செந்நெல் என்ன
கொள்ளுமட்டும் பயிரிடவா வயலும் நீரும்
ஆடுகளோ உணவாகும் மாடுகளோ பயிர்வளர்க்கும்
மேய்ப்பதொன்றும் கடினமில்லை. கோல் அசையக்
கூடவரும்!

குடும்பத்து பெண்மணிக்கு குதிரைகளா
கட்டுப்படும்?

குரல் கொடுத்தால் நாய்போல புரவிகளா
துணையாகும்?

இவன் என்ன பேயரசன் குதிரை வெறியன்...
பார்ப்பனர்கள் சிலர்கூடி தமக்குள் பேசி
முடிவாக திடமாக சபைக்குள் சென்று
தமக்கு மட்டும் கட்டளையைத் தளர்த்துமாறு
பணிவாக அறிவித்தார் காரணம் சொன்னார்.

வேதங்கள் சொல்லுகையில் குதிரை கனைக்கும்
பாடத்தில் முழுமுனைப்பு சிதறிப் போகும்
தோல்பொருளை பார்ப்பனர்கள் தொடக்கூடாது-
வாரின்றி குதிரைகள் வசப்படாது.
போருக்கும் பார்ப்பனருக்கும் பொருத்தமில்லை.
போரில்லா வாழ்க்கையிதே எங்கள் கொள்கை



பேரரசன் யோசித்தான் தலையசைத்தான்
பார்ப்பனர்கள் குதிரைக்கு விலக்கு என்றான்.

பார்ப்பனர்கள் சபைநீங்க வணிகர் வந்தார்
வைத்தியரும் கொல்லரோடு சேர்ந்து கொண்டார்.
எங்களுக்கும் விலக்களிப்பாய் தேரா மன்னா
வணிகத்தில் எருதுகளே உதவியாகும்
பொதி சுமக்கும் கழுதைகளே போதும் எமக்கு.
ஊர் சுற்றும் வேலையிலே நாங்கள் இருக்க
பெண்டுகளே பிறவேலை செய்தல் வேண்டும்;
புரவிகளைப் பெண்டுகளால் ஆளமுடியுமா?
பேரரசே தயைசெய்யும் இது தாங்க முடியுமா?
மன்னவனும் மனு ஏற்றான். விலக்கு என்றான்.

வந்தவர்கள் சபை மீள கூட்டமாக
தொழில் தெரிந்த சூத்திரர்கள் முன்னே சென்றார்.
குதிரைகள் பேணுதற்கு வசதியில்லை.
முன் பின்னே இது குறித்துப் பழக்கமில்லை.
கைகாலே துணையாக உழைப்போர் நாங்கள்
போரென்றால் கால்படையின் அங்கம் நாங்கள்
குதிரைகள் சுமை எமக்கு உதவிதராது.
உழவுக்கோ கவலைக்கோ துணையாகாது
மன்னவனும் தலையசைத்தான் சரியே என்றான்.
படைவீரர் மேற்கொள்வார் போகச் சொன்னான்.

படைவீரர் பெருமறவர் கூட்டம் போட்டார்
முடிவாக அரசனிடம் வணக்கம் சொன்னார்.
போர்க்காலம் குதிரைகள் தேவையெனினும்
போர் எதிரி யானையுடன் வந்துநின்றால்
குதிரைகள் என் செய்யும் கலைந்து போகும்
படைவீரர் தெருவுக்கு ஒரு யானை வளர்ப்பார்
முறைபோட்டு அனுதினமும் பேணிக் காப்பார்

வீட்டுக்கொரு குதிரையென்ற விதியின்று
பேரரசே விலக்களிப்பீர், யானை தருவீர்.

பேரரசன் யோசித்தான் கவலை சூழ
கையசைத்தான் மறவர்கள் கலைந்து போக
மறுநாளே சபைகூட்டி எழுந்து நின்று
பெருமன்னன் குரல் செருமி பேசலானான்
குதிரையெனச் சொன்னது விலங்கா மக்காள்
புரவியதன் மகிமையதைத் தெரியா ஜனமே
வீட்டுக்கொரு வலிமையுள்ள மனிதர் என்று
நான் சொன்ன செய்தியது தவறோ சொல்வீர்
குதிரையதை சபைநடுவே நிறுத்திப்பாரும்.
உடல் முழுதும் கைதடவி உணர்ந்து பாரும்
எவ்வளவு தின்றாலும் குழிந்த வயிறு
எப்போதும் எப்போதும் துடித்த உணர்வு
கண்மூடி நின்றாலும் காதுகேட்கும்
காதுகளே நாலுபக்கம் சுற்றிப் பார்க்கும்
உடல் வலிமைஇருந்தாலும் மூர்க்கம் காட்டா
குதிரைகுணம் கொண்டவர்கள் உயர்ந்தோர்
ஆவார்

போர் என்றால் குத்தீட்டி யுத்தம் அல்ல
மனிதரோடு மனிதர் வெட்டி சாய்தல் அல்ல
பெருவாழ்க்கை தனைநோக்கிக் காலம்போகும்
தன்மையினைப்போரென்றேன் வேறொன்றில்லை
புரியாத என்மக்காள் மந்தை ஆடே
உமக்கிங்கே அரசனாக வெட்கம் கொண்டேன்
வெறும் பதரைக்கோல்பிடித்து காப்பார் உண்டோ?
உணர்வில்லாத ஜனத்துக்கு அரசன் கேடோ
ஒருகாலம் இவ்வுலகம் கொள்ளும் கண்டீர்
குதிரைகளே உலகத்தின் பெருமூச்சாகும்
குதிரைகளே இப்புவியில் செங்கோல் ஓச்சும்
விரல் நுனியால் விசையறிந்து வேகம் காட்டும்
உழவுக்கும் தொழிலுக்கும் உதவியாகி



ஊர்விட்டு ஊர்போகக் கருவியாகி
விண்முட்டிக் கீழிறங்கி அனைத்துச் செயலும்
குதிரையே முன் நின்று நடத்தும் கண்டீர்.

கலியென்ற காலமுண்டு இத்தரை மீதில்
கடவுளெனக் குதிரைவரும் ஆட்சிசெய்யும்
புல்வேறு ரூபத்தில் மனிதர் முன்னே
குதிரையெனும் பெருவுணர்வே கைகொடுக்கும்
வளமான வாழ்வுண்டு மனிதர் அன்று
தேவரென வலம் வருவார் சொல்வேன் கண்டீர்
கால் நடையில் ஆடுகளே செல்வம் என்ற
மக்களிடம் மன்னனென இருத்தல் வேண்டா
பசுக்களெனும் பார்ப்பனர்கள் காலம் முடிந்து
குதிரையிது வீணையிலே வேதம் பேசும்
காலத்தை என்னுள்ளே இன்றே கண்டேன்
போய் வருவேன் என்மக்காள் விடை கொடுப்பீர்
உம்மோடு இருத்தல் இனி இயலாதென்றான்
பெருமன்னன் வாள்வீசி தன் தலை துணித்தான்.
கலியென்னும் குதிரையதன் ஆட்சியின்று
கண்திறக்கத் துவங்கிவிட்ட நேரம் கண்டோம்
தலைதுணித்த பெருமன்னன் வருவான் மீண்டும்
முகம்மட்டும் குதிரையாகக் கொண்ட வாறு
குரங்குகளை மூத்தோரமாய் கொண்ட மனிதர்
குணம் மாறி குதிரைக்கு வணக்கம் சொல்வார்
கலியென்ற குதிரை தன் ஆட்சி துவங்கும்

மனிதருக்குள் மறுபடியும் நேசம் துளிர்க்கும்
யாகங்கள் பூஜைகள் பூர்த்திசெய்யா
ஸ்நேகத்தை குதிரைகள் வளர்த்துக் கொடுக்கும்.
குழப்பங்கள் முற்பரப்பில் தோன்றினாலும்
குதிரைகள் விஞ்ஞானம் உலகம் வளைக்கும்
குதிரைகள் ஞானத்தை என்னுள் கண்டேன்
கலியென்னும் யுகத்துக்கு வரவு சொன்னேன்

''அபாரம் விஸ்வநாதன், அபாரம்,''—காயத்ரி கை தட்டிப் பாராட்டினாள். ''எவ்வளவு தீர்மானமான பொயட்ரி. எவ்வளவு நம்பிக்கை. நாளைக்கு சுபிட்சம் வரும்னு நம்பிக்கை. எல்லாரும் கலியுகம் மோசமானதுன்னு சொல்வா. நீங்க அற்புதமான காலம்னு நம்ப வைக்கறீங்க. ஸோ... விஞ்ஞானம்தான்— ஐ மீன் குதிரை ஞானம்தான் — மனுஷாளுக்குள்ள ஸ்நேகம் வளர்க்கப் போறது. பரஸ்பரம் புரிஞ்சுக்க முடியும்.''

''கரெக்ட் காயத்ரி. நமக்குள்ள ஸ்நேகம் விஞ்ஞானம்தான் கொண்டுவந்து கொடுக்கணும். இனிமே வேற வழியில்லை.''

''எப்படி விஸ்வநாதன்? சயின்ஸ்னால யுத்தம் குறைஞ்சிருக்கா. கும்பல் கும்பலாப் போறோம். ஒரு நாளைக்கு யார் கொன்னான்னுகூட தெரியாம சாகப் போறோம்.''

''நோ. அந்த ஸ்டேஜ் வராது காயத்ரி. என் அபிப்பிராயம் சாவினுடைய குரூரம் மனுஷனைக் கடுமையாக தாக்கியிருக்கு. ஒரே ஒரு ஹிரோஷிமா அணுகுண்டு போடறதை ரொம்ப ஒத்திப்போட்டிருக்கு. சேர சோழ பாண்டியர் காலத்தைவிட இன்னிக்கு யுத்தம் குறைவு. எங்க சண்டை நடந்தாலும் முதலில் உலகத்துல அது நிக்கறதுக்கு எல்லாரும் கவலைப்படறாங்க. சண்டை வளரட்டும்னு யாரும் விரும்பலை. ஆரம்பக் குழப்பம் இப்ப இருக்கு. இது சரியாப் போகும். மனுஷன் கைல இருக்கிற சக்தி அவனைப் பயமுறுத்தும் அந்த சக்தி எதிரேதான் ஒண்ணுமில்லைன்னு புரிஞ்சு போகும்''

''தினசரி வாழ்க்கைக்கு எப்படி இது உதவியாகும் விசு? பாத்ரூம், லைட், டி.வி.சரி. சினிமான்னா...?''

''சினிமா அல்பமா காயத்ரி. என்ன அற்புதம் அது. ஒரு மனுஷனை எவ்வளவு க்ளோஸா காட்டறது. பதினாறு அடிக்குப் பதினாறு அடி, ஒரு முகம் ஸ்கிரீன்ல தெரியறது எவ்வளவு உதவி.''



''புரியலை விஸ்வநாதன்.''

''நீ சரியான சினிமா பார்க்கலை காயத்ரி! நான் ஜீஸஸ் க்ரைஸ்ட்டுன்னு ஒரு படம் வீடியோல பார்த்தேன். அப்பா...பத்து தடவை பைபிள் முழுக்கப் படிச்சாக் கூட எனக்கு கிறிஸ்துவைப்பத்தி புரிஞ்சிருக்காது. அந்த மனுஷனுடைய வேதனை, கவலை, ஜனங்களைப்பத்திய கருணை க்ளோசப்ல காமிக்கறபோது, அந்தக் கவலை எனக்குள்ளே ஒட்டிக்கறது. வெட்கமில்லாம சொல்றேன். குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள்னு யேசு சொல்றபோது, குழந்தைகளை அணைச்சுக்கறபோது என் குழந்தைகளை முதன் முதலா நான் ரொம்ப நேசிச்சேன். அந்த ஒரு ஸீன் மனசுல பதிஞ்சு போயிடுத்து. எல்லா ஜனங்களையும், குழந்தையா அணைச்சுக்கற யேசு மனசு எனக்கு வந்துடுத்து. சினிமா அற்புதமான கண்டுபிடிப்பு காயத்ரி. அதைத் தப்பா உபயோகப் படுத்தறோம். அணுவைச் சோதிச்சு நியூட்ரான் குண்டா மாத்தி தலைல போட்டுக்கற மாதிரி, பண்றோம். எனக்கு சினிமா ஆசை வந்ததுக்குக் காரணம் அதுல வர ஹீரோவோ ஹீரோயினோ இல்லை, அந்த காமிரா பண்ற விந்தை. மனுஷனை மனுஷனுக்கு நெருக்கமா காட்டற யுக்தி. கண்ணாடில மூஞ்சியைப் பாத்துக்கறதை விட நூறு மடங்கு உசத்தி இது. நல்ல சினிமா வேணும்னு ஆசை இருக்கு காயத்ரி.''

''புரியறது விஸ்வநாதன். இதுல ஒரு சிக்கல். நீங்க தெரிஞ்சுக்கலே. மனுஷனுடைய குணம் இந்தக் கண்டு பிடிப்பால் மாறும்னு நெனைக்கறது பெரிய தப்பு. கத்திக்குப் பதிலா துப்பாக்கி, தெருக்கூத்து—தாசி டான்ஸுக்குப் பதிலா சினிமா. எவ்வளவு பெரிய சக்தி கெடைச்சாலும் மனுஷனுடைய அடிப்படைக் குணம் வன்முறைதான். அதை வெளிப்படுத்துறது தான். எல்லோருக்கும் மோட்டார் சைக்கிள் கெடைச்சா

யாரு ஸ்பீடாப் போறதுங்கற போட்டிதான் வரும். குதிரை ரேஸ், இல்லேன்னா கார் ரேஸ். இல்லேன்னா ஏரோப்ளேன் ரேஸ். இந்தப் போட்டில ஒருத்தரை ஒருத்தர் முந்தணும். முந்திப் போறதுக்கு அடுத்தவனை இடிச்சு அழிக்கணும். மரமும் செடியும் கொடுக்கற டெம்பரரி அமைதிகூட அவனுக்கு வராம போயிடும். பனிமலையும் சந்திரனும் குளிர் காற்றும் கொடுக்கிற கொஞ்சம் நிதானமும் காணாமப் போகும். விஞ்ஞானம் அமைதியைக் கொடுக்காது விஸ்வநாதன். நாம் பூண்டோட அழியப் போறோம். நெறைய கார்பன்டை ஆக்ஸைட் உற்பத்தி பண்ணி இயற்கையைப் பகைச்சுக்கப் போறோம்.''

''நாம இனிக்கு வந்திருக்கிற இடம் இயல்பான வளர்ச்சி இல்லையா காயத்ரி?''

''இல்லே விஸ்வநாதன் தப்பா காலடி எடுத்து வச்சாச்சு!''

# 38

''என்ன தப்பு காயத்ரி...

''அடுத்தாப்பல இருக்கிற மனுஷனைப் புரிஞ்சுக்காம ஆகாயத்தைப் புரிஞ்சுக்க வேணும்னு நினைச்சதே தப்பு, நமக்கு நெருக்கமா இருக்கிற பறவைகளையும் மிருகங்களையும் புரிஞ்சுக்காம பறக்கறதுக்கும் சக்கரத்துல ஓடறதுக்கும் கத்துண்டது தப்பு. இந்த மரம் எவ்வளவு சிநேகம் நமக்கு எவ்வளவு அவசியம் நமக்கு. அதைத் தெரிஞ்சுக்கப் பஸ்தகம் படிக்க வேண்டிய நிலை. அப்படிப் படிக்கிற புஸ்தகமே, மரத்தை அழிச்சுப் பண்ற விஷயம்தான். புஸ்தகம். சினிமா, கார் ஏரோப்ளேன் எதுவும் அவசியமே இல்லை விஸ்வநாதன்.''



''கற்கால வாழ்க்கைதான் சரியா?''

''மனசு கற்கால மனுஷன் மாதிரி. இன்னும் ஆசையும் ஆங்காரமும் இருக்கிறபோது வாழ்க்கை அப்படி இருக்கிறதே சரி இல்லையா? நம்முடைய மனசும் அடிப்படை குணமும் மாறாமல் கம்ப்யூட்டர் வச்சிண்டு என்ன செய்யலாம்? அதே ஆங்காரம், ஆசை எத்தனை கிலோ வெயிட்னு ஒரு வேளை கணக்குப் போடலாம். போட்டு என்ன பலன்?''

''உன் பேச்சுப்படி பார்த்தா, தலைக்கு மேலே வெள்ளம் போயிடுத்து காயத்ரி.''

''யொஸ் அதனாலேதான் பல சமயம் பிரமிச்சுப் போய் நிக்கறேன்.''

''நம்மை இப்போ எது காப்பாத்தும்?''

''இந்தக் கவிதை, கதை, பெயிண்டிங் மாதிரி சமாசாரம்தான் கொஞ்சம் நம் உசிரைத் தக்க வைக்கும், நம் கவிதையைவிட கம்ப்யூட்டர் கவிதைதான் உசத்தின்னு ஒரு காலம் வரபோது நம்ம ஆட்டம் குளோஸ். கம்ப்யூட்டரைப்பத்திப் படிக்கப் படிக்க நடுங்கறது உடம்பு. விளிம்புக்கு வந்துட்டமோன்னு பதறிப்போறது. டினோசார்ஸ் மாதிரி மிருகங்கள் பெரிசாகிப் பெரிசாகி நகர முடியாம, அது வம்சமே அழிஞ்சா மாதிரி நம்ம புத்தி வளர வளர நமக்கு அழிவு நிச்சயம். நம்ம கண்டுபிடிப்பு வளர வளர, முடிவு நெருக்கம்.''

''யோசனை பண்ணிப் பார்த்தாக்கூட எனக்கு அவ்வளவு பயம் வரலை காயத்ரி.''

''படித்ததனுடைய பலன், பயங்கரம் தெரியலை.''

''அப்ப இந்தக் கவிதையை ஏன் பாராட்டினே—?''

''வீட்டுக்கொரு குதிரைன்னா, வீட்டுக்கொரு வலிமையுள்ள ஆள். காலத்தோடு செய்ய வேண்டிய போர்னு சொன்னது சரி. அந்த அரசனுடைய ஆசை—

குதிரையினுடைய வேகம், சக்தி நமக்குள் அன்பை
நட்பைக் கொடுக்கணும்னு ஆசைப்பட்ட கவிதை சரி,
ஆரம்பத்துல குழப்பம் இருக்கும். பின்னாடி எல்லாம்
சரியாப்போகும்னு சொன்ன இடம்தான் நெருடறது.
நிஜமாகவே எல்லாம் சரியாப் போகுமா?''

''நீ போலியா, நிஜமான்னே தெரியலை காயத்ரி
புடவை நகைன்னு பேசாம இப்படி ஒரு கவலையைப்
பத்திப் பேசறியே ..''

''உங்களைத் தாண்டி நான் யோசனை பண்றது
உங்களுக்கு அவமானமா, ஈகோ ப்ராப்ளமா இருக்கா?''

''நோ. நோ.''

''புடவை நகைன்னு சாதாரணமா பேசற பெண்
களைத்தான் ஆண்களுக்குப் பிடிக்கும். ஃபிலாஸஃபி
பேசினா 'போர்' பைத்தியம்னு நகர்ந்துட தோணும்.
நிறையப் பேர் நகர்ந்திருக்கா.''

''எனக்கு உன்னைப் புரியறது காயத்ரி. ஏன்னா
இந்தக் கவலை, பயம் எனக்கும் உண்டு.''

''தேங்க்யூ... விஸ்வநாதன். எங்கப்பாவுக்கப்புறம்
நான் அதிகமாப் பேசின ஆண் நீங்கதான்.''

''ஒரு சந்தேகம் காயத்ரி. உன் கல்யாணம் பத்தி நீ
யோசிச்சது உண்டா. இவ்வளவு பேசற பெண், குடித்
தனம் பண்ண முடியுமா?''

''சிரமம்தான்.''

''ஸோ...மெள்ள நீ நார்மலுக்கு வந்தா என்ன?''

காயத்ரி வாய்விட்டுச் சிரித்தாள். அவன் கைகளை
பற்றிக்கொண்டாள். ''ஸோ என்னை அப்நார்மல்னு
முடிவு பண்ணியாச்சா? அடி பைத்தியமேன்னு நெனைக்
கிறேளா?''



''இல்லை காயத்ரி. இந்த மென்மையான கவலை
நிறைஞ்ச மனசோட நீ ஜாக்கிரதையா வளரணுமேன்னு
வேதனைப்படறேன். இதெல்லாம் புரியற புருஷன்
உனக்குக் கிடைக்கணுமேன்னு கவலைப்படறேன்.''

''எனக்குக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசை
இல்லை விஸ்வநாதன்.''

''ச்சு...எல்லாப் பெண்களும் சொல்ற டயலாக்தான்
இது.''

''ஆனா குழந்தை பெத்துக்கணும்னு... ஆசை
உண்டு. கல்யாணம் பண்ணிக்காம குழந்தை பெத்
துண்டா என்ன தப்பு?''

''காயத்ரீ...''

''ஒரு ஆளுக்கு என்னையும் பங்குபோட்டு எனக்குப்
பொறக்கற குழந்தையும் பங்கு போட்டு என்னுடைய
புத்தி கொஞ்சம் அந்த ஆள் புத்தி கொஞ்சம் அப்பா ஒரு
பக்கம் அம்மா ஒரு பக்கம்னு அழைக்கழியறதுக்குப்
பதிலா மொத்தமா என் புத்தியை ஆரம்பத்திலேர்ந்து
என் இஷ்டமாக் குழந்தைக்கு ஊட்டி வளர்க்கலா
மில்லையா?''

''நான்சென்ஸ்.''

''இல்லே சென்ஸோடதான் பேசறேன். ஒரு
பிள்ளைக்குக் காது குத்தி பூணூல் போட்டு என்.ஸி.ஸி.
காக்கிச் சட்டை மாட்டி ஹிந்தி சினிமா, டிஸ்கோ
டான்ஸ் பாக்க அனுப்பி உருவமே இல்லாத குழப்பமா
வளர்க்கறதுக்குப் பதிலா என் குழந்தையைப் புருஷன்
ஆக்கிரமிப்பு இல்லாம நானே வளர்த்தா தப்பா?''

''ஒரு குழந்தைக்கு அப்பா வேண்டாமா?''

''பெரியாழ்வார் ஆண்டாளை வளர்த்தாரே அம்மா
எங்கேன்னு கேட்டாளா ஆண்டாள்?''

''என் அப்பா எங்கேன்னு உன் குழந்தைகேட்டா?''

''உன்னைக் கிண்டி பார்க்குல வெண் தேக்கு மரத்தடியிலேருந்து எடுத்துண்டு வந்தேன்னு சொல்றது.''

''க்ருயல்.''

''அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடுவே சிக்கிச் சீரழியறதைவிடவா? இரண்டு வெவ்வேறு துருவங்களுக்கிடையே அமுந்தி வேதனைப்படறதை விடவா?''

''உனக்கு அவிட்ட நட்சத்திரம் மகர ராசி, சனி கிரகத்துப் பாதிப்பு நிறையன்னு உங்கப்பா சொல்லியிருக்கார். அதான் பர்வர்டட் இன்டலிஜென்ஸோட தவிக்கிறே.''

''ஸ்டுப்பிட்.''

''சரி, வெறும் குழந்தை மட்டும் கொடு. வேறே உறவு வேண்டாம்னு யார்க்கிட்ட கேட்கப்போறே... யார் புரிஞ்சுப்பா இதை? அசிங்கப்படுத்திட மாட்டாங்களா?''

''உங்ககிட்டக் கேக்கப் போறேன். உங்களுக்கு என்னைப் புரியலையா?''

''காயத்ரி...'' விஸ்வநாதன் வேகமாக எழுந்தான்.

''ஏன் இவ்வளவு பதற்றம்...?''

''தாரிணியை மட்டமாய் பேசினது இதுக்குத் தானா?''

''நோ. அது வேற விஷயம், இது வேற விஷயம். நீங்க முடியாதுன்னாலோ சரின்னாலோ என் அபிப்ராயம் மாறாது.''

''நானும் மாறமாட்டேன் காயத்ரி. தாரிணி நல்லவளோ கெட்டவளோ...உசத்தியோ மட்டமோ, நான் மாறமாட்டேன். ஐ லவ் ஹெர் டீப்லி.''

''நீங்க தாரிணியை நேசிக்கிறதுக்கும் நான் கேட்டதுக்கும் சம்பந்தமில்லை.''



''உண்டு காயத்ரி. என்னால் ஏமாத்த முடியாது. அவகிட்ட பொய் சொல்ல முடியாது. அவளைத் தவிர வேற எந்தப் பெண்ணோடும் உறவு கிடையாது.''

''இவ்வளவு முரட்டுத்தனம் ஏன் உங்க காதல்ல...?''

''நாளைக்கு தாரிணிக்கு யார்கிட்டயாவது போகத் தோணித்துன்னா 'நீ போனியே காயத்ரிகிட்ட, நான் போறேன்'னா...''

''ஸோ உங்க காதல், கடமை, நெறியெல்லாம் மனைவி கற்போட இருக்கணும்னுதான். அவயார்கிட்டயும் போய்டுவாளோங்கற பயம்தான் உங்களைக் கட்டிப் போட்டிருக்கு. இங்கு நிறையபேர் கற்போட இருக்கற காரணம் பொண்டாட்டிதான்.''

''ச்சீ... குடும்பம் பத்தி உனக்குத் தெரிஞ்சது இவ்வளவுதான்.''

''நாளைக்கு உன் புள்ளை பெரியவனா ஆனா?''

''எனக்குக் குடும்பத்துல நம்பிக்கையில்ல.''

''சும்மா நிக்கத் தெரிஞ்சபோது வெளியே போன்னு அனுப்பிச்சிடுவேன். சாகிற வரைக்கும் தனியா இருப்பேன்.''

''வெல்... இது உன் வழி, என் வழி வேறே... எழுந்திரு போகலாம்.''

''வெவ்வேற வழின்னு தெரிஞ்ச பிறகு நான் ஏன்? குட்டை.''

''இங்கே சீக்கிரம் இருட்டிப்போயிடும் காயத்ரி. இருட்ல ஒண்ணு கிடக்க ஒண்ணு நடந்துதுன்னா.... கெட்அப்...''

''நோ. உங்க அக்கறை தேவையில்லை.''

''அடம் புடிக்கிறயா சனியனே... என்ன திமிரு ஒரு பொட்டச்சிக்கு?''

''காலம் காலமாச் சொல்லிண்டு வர வார்த்தை. இனிமே வேகாது. நீங்க சொன்ன திமிர் என்னைக் காப்பாத்தும்... யூ கேன் கோ.''

''வரப்போறியா இல்லையா?''

காயத்ரி மௌனமாய் உட்கார்ந்திருந்தாள்.

விஸ்வநாதன் அவள் தோளைப் பிடித்து முரட்டுத் தனமாக உலுக்கினான். ''நான் கிளம்பிப்போய்டுவேன் காயத்ரி.''

''போங்களேன் உங்க காலைப் பிடிச்சு தமிழ் சினிமா மாதிரி என்னைக் கைவிட்டுடாதீங்கன்னு கதற ணுமா? கோ கெட் லாஸ்ட்.''

'நீ போற வழி தப்பு காயத்ரி. சொன்னா ஏன் புரிஞ் சிக்க மாட்டேங்கறே?''

''உங்களுக்குப் புரியலை விஸ்வநாதன். மரபும் விஞ்ஞானமும் எதிர் எதிரா நிக்கறது தெரியலை? பரஸ் பரம் டாமினேட் பண்ணத்தான் இத்தனை வளர்ச்சி யும்னு புரியலை? பயமுறுத்தல்தான் இத்தனை கண்டு பிடிப்பும்னு தெரியலை? காடோ மிருகமோ மின்னலோ இடியோ என்னைப் பயமுறுத்தலை. மனுஷன்தான் ரொம்ப பயமுறுத்தறான். லீவ் மி அலோன்.''

விஸ்வநாதன் சட்டென்று வெளியேறினான். பின்னால் நடந்து வருகிறாளோ என்று திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

காயத்ரி வரவேயில்லை. ஆட்டோ பிடித்து அடையாறு போய்த் தன் வீட்டுக்குப் போன் செய்தான் ''நாணு சார் இருக்காரா கூப்பிடு தாரிணி.''

நாணு ஐயரிடம் சுருக்கமாய் விஷயம் சொன்னான்.

இருட்டத் துவங்கிவிட்ட நேரத்தில்கிண்டி பார்க்கில் நுழைந்த நாராயணசாமி ஐயர் தம் மகளின் தலையைத் தடவி, ''எழுந்து வா, காயத்ரி'' என்றழைத்தார். அவள் தோள் பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டதும் ,பெண்ணின் விரலை மெல்லப் பிடித்துக்கொண்டு நடந்தார்.

# 39

''இதெல்லாம் யாரும் தாங்கமாட்டா காயத்ரி. உன் பேச்சு எடுபடற நேரம் இல்லை இது. நிஜமான கவலை இல்லா யாருக்கும் கிடையாது. எதிர்காலம் பற்றியெல்லாம் யோசிக்கத் தெரியாது. வாழைப்பழம் தின்னுட்டுத் தெருவுல தோல போட்டுப் போறவன்தாம்மா. இவாள்ளாம் அடுத்த தலைமுறைக்கு ஒரு மரம்கூட நடாத மனுஷர்கள். ஒரு புஸ்தகம் கூடப் போடாத ஜனங்கள். உன் கவலை சிரிப்பாயிடும் காயத்ரி.''

மாம்பலம் ஸ்டேஷன்—அப்பாவும் பெண்ணும் உட்கார்ந்திருந்தார்கள்.

''இதோ பார், நான் நெறையபட்டிருக்கேன். ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்திரண்டோ, முப்பத்தி மூணுலயோ 'இப்ப வேண்டாம். இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்துச் சுதந்திரம் வாங்கலாம்'னு ஒரு காங்கிரஸ் மீட்டிங்கில பேசினேன். கழுத்தப் பிடிச்சு மேடைலேர்ந்து தள்ளிட்டான். ஜனமெல்லாம் சிரிச்சுது. பன்னாடைன்னு திட்டித்து, வெத்தலை பாக்குகூட வாங்காம ஊர் ஜனம் ஒதுக்கி வச்சுது. ரொம்ப குழம்பினேன். பேசினது தப்போன்னு நெனைச்சேன். சுதந்திரம் கெடைச்ச ரெண்டே வருஷத்துல, அடடா சரியாத்தான் பேசியிருக்கோம்னு தோணித்து.

''விஸ்வநாதன் மாதிரி சிலர் உன்னைப் புரிஞ்சுப்பான்னு நெனைச்சதுகூட தப்பு, கவிதை எழுதறது கதை எழுதறது எல்லாம் உலக அக்கறையினால் வர்றதில்லலம்மா. நெறைய பேருக்குத் தன் பேருக்கு

முன்னாடி வெறும் இனிஷியல் போறலை, ஒரு டைட்டில் வேணும். அதோ பார்ன்னு அடையாளம் காட்டணும். கவிஞர், கலைஞர்னு போட்டுக்கணும். நடிகனைப் பார்த்துக் கிராப்பு, மீசை வச்சுக்கற மாதிரி யாராவது எழுதினதைப் படிச்சுட்டுத் தானும் எழுத ஆசைப்படறா.

''ஒரு தமாஷ் தெரியுமா காயத்ரி. வாலிபமா இருக்கறச்சே ஒழுக்கம் பத்திதான் ரொம்பப் பேசுவோம். கடைசி வரை பிரும்மச்சாரியா இருக்கணும்னு நெனைச்சுப்போம். சாமியாராப் போறதுக்கு ஆசைப்படுவோம். எங்க ஊர் பையன் ஒருத்தன் ஹிமாச்சலம் ஓடிட்டான். அந்த ஊர் பையன் பத்ராசலம் ஓடிட்டான்னும் பெருமையா பேசுவோம். ஓடிப்போனவனை நெனைச்சுப் பொறாமைப் படுவோம். நமக்கு ஓடறதுக்கு தைர்யம் இல்லையேன்னு வேதனைப்படுவோம். அப்ப ஓடினவனெல்லாம் இப்ப கை நெறைய சம்பாதிச்சுப் பேரன் பேத்தியோட இருக்கான். எதுக்கு சொல்றேன் ஒவ்வொரு கால கட்டத்துல ஒவ்வொரு சிந்தனை—இளமையா இருக்கிறவாளை அலைக்கழிக்கிறது. கல்லோ மண்ணோ எனக்குப் புருஷன்னு ஒருத்தன் கிடைக்க மாட்டானான்னு பொண் குழந்தைகள் ஏங்கின காலம் ஒன்று உண்டு. இன்னிக்குப் புருஷனே வேண்டாம்னு நெனைக்கிற காலம். குளிர் விட்டிருக்கு.''

''விஸ்வநாதன்கிட்ட நீ கேட்டது தப்பேயில்லை காயத்ரி.'—நாணு ஐயர் மெல்லத் திரும்பித் தம் பெண்ணைப் பார்த்தார்,

காயத்ரி முகம் கல்லாயிருந்தது.

''என்னம்மா, இன்னும் வருத்தமா இருக்கா தோத்துப் போய்ட்ட மனநிலை ஜாஸ்தியாறதா? என்ன குழப்பம் உனக்குள்ள, சொல்லு? நான் உதவி பண்ண முடியுமா, சொல்லு?''



காயத்ரி மெல்லத் திருமபினாள். ''உன்னுடைய வாழ்க்கைகூட சிரமமா இருக்குப்பா. உன்னையும் விட்டு நகர்ந்துடணும்னு தோன்றது உன் நிழல்கூட இல்லாம தனியா இருக்கணும்னு தோண்றது. என்னைத் தேடிண்டு இருட்ல கிண்டிக்கு நீ ஓடி வந்தது சிரமமா இருக்குப்பா.''

நாணு ஐயர் ஒரு கணம் உள்ளே துவண்டார். பெரியாழ்வாரின் வேதனை மனசுள் புரண்டது.

ஒருமகள் தன்னை உடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல் வளர்த்தேன்
செங்கண் மால்தான் கொண்டு போனான்.

ஆண்டாள் சூரத்தனம் செய்தாளா? குழந்தைகள் பெற்றாளா? சோறு ஊட்டி வளர்த்துப் பள்ளிக்கு அனுப்பினாளா? இந்த வருஷம் கார்த்திகைக்குக் கூடப் பத்துரூபாய் சீர் அனுப்பு என்று கடுதாசி எழுதினாளா? ஸ்ரீரங்கம் போனதும் காணாமல் போய் விட்டாள். எங்கேயோ ஓர் ஒளிப்பிழம்பில் ஐக்கியமாகிவிட்டாள். சட்டென்று பெரியாழ்வார் வாழ்க்கையிலிருந்து உயிரோடு உடலோடு மறைந்துவிட்டாள். எத்தனை தவிப்பு தவித்திருக்கும் அந்தப் பெரியாழ்வார் நெஞ்சு? பெத்த நெஞ்சு? எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும்? அப்படிச் சட்டென்று என் பெண்ணும் என்னை விட்டு நகர்ந்து விடப் போகிறதா? ஆனால் இது நெற்றிக்குள் சுடர் விடுகிறதோ, எதோடு கலக்க இப்படி முரட்டுதனம் காட்டுகிறதோ, எந்த வேள்வியில் குதிக்க இப்படி மறுகித் தவிக்கிறதோ? இழுத்து அதட்டி அடக்கலாம். என்ன பயன்? அடக்கி அடக்கி வளர்க்கப்பட்ட நான் என்ன சாதித்து விட்டேன்? சகலமும் இந்தக் குழந்தைக்குப் போதித்தது தவறோ? இணையாய் உட்கார்ந்து என் அறிவை ஊட்டியது பிசகோ? உன் தேடலை நான்

ஏன் வழிமறித்து மடக்க வேண்டும்? உன் செய்கை எனக்கு அவமானம் என்று என் சுயநலத்துக்காக உன்னை ஏன் நசுக்க வேண்டும்? உன் வாழ்க்கை உன்னுடையது காயத்ரி. உனக்குப் பறக்க நம்பிக்கை இருப்பின், வலுவு இருப்பின், பறபற மேலே மேலே. அப்படி முடியாது சிறகு முறிந்து விழுந்தால் தெரியப் படுத்து, காயத்ரி. நான் வருவேன். இதம் சொல்லு வேன். நான் வளர்ந்த விதம் எனக்குப் பிடிக்கவில்லை. அப்படியிருக்க அவ்விதமே நீ வளர வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. போய்வா காயத்ரி, போய் வா.

நாணு ஐயர் மெல்ல எழுந்து நின்றார். காயத்ரி புரிந்து கொண்டாள்.

''என் பெட்டிய நாளைக்கு ஆபீஸுக்குக் கொண்டு வந்து குடுத்துடுப்பா. ஹாஸ்டல்லே எங்கியாவது தங்கிக்கிறேன். இன்னி ராத்திரிக்கு எங்க ஆபீஸ் டெலி போன் ஆப்ரேட்டர்கூட தங்கிடுவேன். நீ மன்னார்குடி போயிடு. நான் மாசா மாசம் பணம் அனுப்பறேன். நா அங்க வரலப்பா. நீயே எனக்கும் சேர்த்து சொல் லிண்டு வந்துடு. நிச்சயம் வேற கம்பெனியில வேலை கிடைக்கும்.''

''என்ன நாணு சார். காயத்ரி கெடைக்கலையா?''— தோட்டக் கதவு திறந்த சப்தம் கேட்டதும் விஸ்வநாதன் ஓடி வந்தான். தாழ்ந்த குரலில் பேசினான்.

நாணு ஐயர் விஷயம் சொன்னார்.

''அவதான் மடத்தனமா பேசறான்னா நீங்களும்... என்ன சார் இது—?'' பதறினான்.

''விஸ்வநாதா. இந்தத் தேசத்துப் பெண்களுக்கு ஆண்கள் மேல் நம்பிக்கை கொறைஞ்சுண்டு வரது. அவளுக்கு உன் மேல கோபம் இல்லை விஸ்வநாதா. அதுவெறும் பொம்மனாட்டி கோபம் இல்லை. இன்னிய



சகல நடவடிக்கையையும் எதிர்க்கிற கோபம். இன் னிக்கு இது அதிசயமா இருக்கலாம். பின்னால் இப்படி நடக்கத்தான் போறது. உன் பொண்ணும் உன் பேத்தி யும் இப்படித்தான் இருக்கப் போறா. முன்னோடியா இருக்கிறதால காயத்ரிக்குச் சிரமம் அதிகம். பின்னால இதுவே வாழ்க்கையாவும் போயிடும்.''

''இப்படித் தனிச்சுப் போறது தப்பில்லையா?''

''தப்போ, சரியோ. பயமுறுத்தலை எந்த உயிரின மும் விரும்பாது. கல்யாண உறவு பயமுறுத்தலா இருக் கிற இன்னிய நிலை இப்படித்தான் மாத்தும். இந்த மாதிரி போக வைக்கும். கூட்டுக் குடும்பம் எப்படி உடைஞ்சுது, நம்ம கண் முன்னாடி? அதுமாதிரி குடும் பங்கற இடமும் மெல்லச் சிதையும்.''

''நானும் தாரிணியும் சந்தோஷமா இல்லையா சார்.''

''உன்னாலே இதைக்கூடத் தாழ்ந்த குரல்லதான் கேட்க முடியறது விஸ்வநாதா ''

''நீங்க அவளுக்கு அப்பா இல்லையா?அவள் மேலே அக்கறையில்லையா?''

''வெறும் அப்பனாயிருந்தா அலைஞ்சு இழுத் துண்டு வந்திருக்கேன். நா அவளுக்கு நல்ல ஸ்நேகி தன். ரொம்ப அக்கறைன்னு சொல்லி என் வாழ்க் கையே அவளுக்கும் விதிக்கணும்னு அழுத்திச் சொல் றதைவிட அவளா புரிஞ்சுக்கட்டும்னு விட்டுட்டேன்.''

''நாளைக்கு ஒரு குழந்தையோட வந்து நின்னா ''

''குழந்தை குழந்தைதானே விஸ்வநாதா. அது காயத்ரி பெத்த குழந்தையானா என்ன? வேறு யார் கிட்டேயாவது வாங்கிண்டு வந்தா என்ன? பொறந்த பிறகு இழிவு என்ன இருக்கு?''

''அப்பா இல்லாமல் குழந்தை பெத்தா நல்லதா? என்ன சார் சொல்றீங்க நீங்க?''

''ஒரு அம்மாவே அப்பாவோட வலிவோட இருக்கறச்சே குறை என்ன வந்துடும்? நான் கார்த்தாலே உள்ளே வந்து பெட்டியை எடுத்துக்கட்டுமா?''

''சரி. அதுக்கு நீங்க ஏன் மறுக்கறேள். அப்பாவும் பொண்ணும் சரியான பைத்தியம். இதுக்கு நீங்க போட்டு ஒழட்டிப்பானேன். இன்னிக்கு ஆபீஸ் போலையா? லீவா? நிம்மதியாப் போச்சு. பரபரன்னு ஆடவேண்டாம்...'' தாரிணி அவன் தலையை கோதிவிட்டு உள்ளே போனாள். பிற்பகலில் சாப்பிட்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த தாரிணியிடம் விஸ்வநாதன் சகலமும் சொன்னான்.

''அடி குடிகேடி இதென்ன கிரகச்சாரம். பார்க்குல உட்கார்ந்து குழந்தை கேக்கற கூத்து. பார்க்குக் கூட்டிண்டு போனது உங்க தப்பும் எனக்குப் புரியறதுன்னா படிக்கறதுனால வந்த வினை. நான் எதுக்கு சமைக்கணும், நான் எதுக்குப் பாத்திரம் தேய்க்கணும்னு ஆரம்பிச்சு, ஆம்பிளை எதுக்கு குடித்தனம் பண்ணன்னு முடிஞ்சிருக்கு. பத்து தேய்க்கறது இழிவு தோணி, குடும்பம் நடத்தறதுக்கும் சோம்பல் வந்துடுத்து. வீடுன்னா சாக்கடை இருக்கும். யாராவது ஒருத்தர் அலம்பத்தான் வேணும். எல்லாரும் சாக்கடை அலம்ப உக்காரவும் முடியாது. அலம்பாம இருக்கவும் கூடாது. வாழ்க்கையில் சந்தோஷம் மட்டுமே வேணும்னு யார் கேக்க முடியும்? ச்சே... ஒரு கெட்ட நேரம் நெகிழ்ந்திருந்தா என்ன ஆயிருக்கும் ஈஸ்வரா... பெரிய விலங்கா மாட்டிண்டு வீடே தவிச்சிருக்கும்.''

''இந்த மாதிரி விலங்குல நான் மாட்டிக்கமாட்டேன் தாரிணி.''

''எனக்குத் தெரியுமே.''

''ஆனால் எனக்கு ஆபீஸ்தான் விலங்கா இருக்கு.''



''ஏன்? இதைவிட நல்ல உத்தியோகம் எங்க கிடைக்கும்?''

''எனக்குப் பிடிக்கலை தாரிணி. சினிமாவில் நுழையணும்னு சின்ன வயசிலேர்ந்தே ஆசை.''

''சின்ன வயசிலேயே ஆரம்பிச்சிருக்கணும். இப்ப ஆசைப்பட்டா எப்படி...?''

''இப்ப நம்பகிட்ட இருக்கிற ஸேவிங்ஸ் போதும் மூணு நாலு வருஷங்கள் கஷ்டப்பட்டா ஓஹோன்னு வந்துட முடியும்.''

''ஒண்ணும் வேண்டாம். மேலே ப்ரமோஷன் வராதாப் பாருங்கோ.''

''ப்ரமோஷன் வரும் காயத்ரி. ஆனால் எனக்குப் பிடிக்கல.''

'சுதந்திர உணர்ச்சியா? ஏத்திவிட்டுட்டுப் போயிருக்காளா மகராசி. இதோ பாருங்கோ சினிமால்லாம் நமக்குச் சரிப்படாது. நேரம் காலம் இல்லாம... வேளா வேளைக்குச் சோறு தண்ணியில்லாத வேலை...பத்து மணிக்குப் போய்ட்டு ஆறு மணிக்கு வந்த சௌகர்யம் கெடையாது.''

''எனக்கு அந்தச் சௌகர்யம் வேண்டாம்.''

''எனக்கு வேணும். சாயங்காலம் ஆறு மணிக்கு புருஷன் வீட்டுக்கு வந்துடணும்.''

''என்னைக் கட்டிக் கட்டியே கருக்கிப் போட்டியோன்னு பயமா இருக்கு.''

''செய்வேன். நிச்சயம் செய்வேன். என்னோட சுயநலத்துக்கு இல்லை. இந்தக் குழந்தைகள் எதிர்காலத்துக்கு நிச்சயம் உங்களைக் கட்டிப் போடுவேன். என்னை எது கட்டிப்போட்டிருக்கு? இந்தக் கயிறா? இல்லை, என் குழந்தைகள். உங்களைப் பிடிக்கலேன்னு நான் நகர்ந்துட்டா இதுகள் கதி என்ன?''

''எத்தனை நாட்கள் இப்படி யாருக்கோ வேலை செஞ்சு அல்லாடறது?''

''ம்...உடம்புல தெம்பு இருக்கிறவரைக்கும். இந்த மாதிரி ஆபீஸ்தான். இந்த மாதிரி குடித்தனம்தான். இந்த மாதிரி வாழ்க்கைதான். நமக்கெல்லாம் இது தான் சரி, இதான் மதிப்பு.''

விஸ்வநாதான் அயர்ந்தான். கண்கள் மூடிக் கொண்டான். டெலிபோன் ஒலித்தது.

'என்னா துரை ஆளைக் காணோம். தலை வலியா? இங்கு திருகுலி வந்திருக்குப்பா. பாய்லர் ஒண்ணு புடிங்கிக்கிச்சு. திருச்சி பாய்லர் கம்பெனிக்குப் போய் ஸ்பேர்ஸ் வாங்கிகினு வரணும். ஒரு தூக்கம் போட்டு எழுந்திரு—சாயங்காலம் கார் அனுப்பறேன். அப்படியே ஃபாக்டரிக்குப் போய் விவரம் கேட்டுத் தெரிஞ்சுக்க. நேரா திருச்சி போக நாளைக்கே வந்துடணும் என்ன...''

இந்த மாதிரிதான் வாழ்க்கை. இதுதான் சரி. இது தான் மதிப்பு.

இரவு நேரம் விஸ்வநாதன் பின் சீட்டில் சரிந்திருக்கத் தொழுப்பேடு தாண்டி ட்யூப் லைட் தொங்கும் சாலையோர சாப்பாட்டுக் கடையில் நின்றது. டிரைவர் பரோட்டாவுக்கு ஆர்டர் சொன்னான்.

''வசந்தாக்கா, அங்க கார் நிக்கிது. போய் பாக்கட்டா?''— மெல்லியதாய்ப் பெண் குரல் கேட்டது. பின் பக்கம் ஒரு புளியமரத்தடியில் நிறையப் பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

# 40

''அதென்னமோ இன்னிக்கு மத்தியானத்திலேர்ந்து நெஞ்சு கமறுலு எடுத்துகினே இருந்திச்சு... என்னா இது தெரியலியே... புத்தூர் அக்கா வருமா? வரப்போற பார்ட்டி நெனைச்சுக்குதான்னு ஒரே யோசனை. தடால்னு நீ வந்து நிக்கிறே. கார்லேந்து எறங்கினவுடனே தெரிஞ்சு போச்சு. என்னைத் தெரில ஒனக்கு? புத்தூர் கேட்டாண்ட?''

''தெரியுது வசந்தா...''

''ஐயோ... எம்பேருகூட நெனைப்பு வச்சிக்கினுருக்கியே. எனக்குத்தான் உம் பேரு மறந்துபோச்சு. அன்னிக்கு மல்லிகான்னு ஒரு பொண்ணு அடிபட்டுப் போச்சுன்னு ஓடினேனே, நெனைப்பு இருக்கா...அது செத்துப் போச்சு. அது செத்ததுக்குத் துட்டுக் குடுத்தாங்க கோர்ட்ல.''

''தெரியும் வசந்தா.''

''அட தெரியுமா? எப்டி எப்டி? ஏய் வெங்குலச்சுமி போய் அந்த டிரைவரை மடக்கி இட்டாந்துரு. தேவரு கிட்ட நம்ம கணக்குல முட்டப் பரோட்டா போடச் சொல்லு. முட்ட சாப்டுவியா... வெங்குலச்சுமி முட்ட வாணாம், வெறும் பரோட்டா சொல்லு. எப்டீ தெரியும் ஒனக்கு? இன்னொரு தபா வந்து தேடினியா?''

''இல்லை வசந்தா அது ராவுத்தர் வண்டி. ராவுத்தர் எனக்கு ஸ்நேகிதம்தான்.''

''பாய் வண்டிதான். பாய்தான் முன்ன நின்னு கம்பெனில பேசித் துட்டு வாங்கிக் குடுத்தாரு.''

''நல்லா இருக்கியா வசந்தா?''

''ஐயோ... நல்லா இருக்கேன் தொரை .. உம்பேரு தான் மறந்து போச்சு... ஒம் புண்ணியத்துல. நீ தொட்டுத் தலை தடவி நல்லா இருன்னு சொன்னியே. அன்னிலேர்ந்து நல்லா இருக்கேன் தொரை. கொஞ்சம் இரு. யாருடி அடி மரத்துக்குப் பின்னாடி? வூட்டுக்குப் போய் பெட்சீட் எடுத்தா போ...''

''வூட்டுக்குப் பார்ட்டி போயிருக்குக்கா.''

''கதவைத் தொறந்து எடுத்தாடீ.''

''ச்சு .. யாரையும் தொந்தரவு பண்ணாத வசந்தா... புல் தரைதான்... இதுலயே உக்காரலாம்.''

''ஐயோ... தரைல வாணாம்... இவளே பெரிய லச்சுமி. மாங்கா மரத்துல ஒரு பாவாடை சுருட்டி வச்சிருக்கு பாரு அத எடுத்தா... கொண்டா இப்டி, இந்தா இதுல உக்காரு தொரை.''—சிவப்புச் சாயம் போன பாவாடை தரையில் விரிந்தது.

''வேணாம் வசந்தா. இன்னொருத்தர் துணியைப் பாழ் பண்ணுவானேன். புல் தரை பரவாயில்லை...'' விரல்நுனியில் துணியை அப்புறப்படுத்திவிட்டுத் தரையில் உட்கார்ந்தான்.

''என்னுதுதான். தொவச்சுக் காயப்போட்டது தான்.''

''இருக்கட்டும். அத்தினி துட்டு வாங்கியும் இதே கதைதானா. ஒரு பொட்டிக்கடை வச்சுக்கக்கூடாதா? டீக்கடை திறக்கக் கூடாதா? என்ன பண்ணின அத்தினி துட்டையும்?''

''வூடு வாங்கினேன். கல்லு வூடு. பொம்பளை, கடை போட்டா பொறுக்கிக் கூட்டம்தான் சுத்தும். கடனுக்குத் துண்ணுட்டுப் போயிடும்.''

''இங்க மட்டும் கடன் சொல்லமாட்டானா?''



''நூத்துக்குத் தொண்ணூருபேரு கடன் சொல்ல மாட்டான். ஐயோ வயிறு நோவுதேன்னு சொன்னா, கூட ரெண்டுருபா குடுத்துட்டுப் போய்டுவான்.''

''இது சிரமம் இல்லையா? போலீஸ், குடிகாரன் ..''

''டீக்கடை தொறந்தாலும் இதே தொந்தரவுதான். எனக்கு நெளிவு சுளிவு தெரிஞ்ச தொழிலு. கூட பத்துப் பொண்ணுங்களைக் கூட்டிட்டு எறங்கிட்டேன். அத்தனைக்கும் நம்ம வூட்லதான் சாப்பாடு, துணிமணி எல்லாம். வூட்டுக்கு வர்றியா?''

''இருக்கட்டும். நீ மாறியிருப்பேன்னு நினைச்சேன்.''

''எதை நம்பி மாறிட முடியும்?''

''கல்யாணம் பண்ணிக்க வேணாமா... குழந்தை பெத்துக்க வேணாமா?''

''வேணாம் சாமி, வேணாம். கல்யாணம் கட்டி இருக்கிற துட்டை அவன் கலைச்சு அழிக்கிறதுக்கா ? கெட்டுப்போன பொம்பளை ஒரு ஆம்பளையை நம்பி, இருக்கிற தொழிலை வுட முடியுமா?''

''ஒரு நல்ல ஆம்பளை கூடவா இல்லை உன்னைச் சுத்தி?''

''யாரு நல்ல ஆம்பிளைன்னு யாரு கண்டு பிடிக்கிறது? எப்ப நல்ல ஆம்பிளைன்னு எதச் சொல்றது? நான் ஆம்பளைய நம்பறது இருக்கட்டும், அவன் என்னை நம்ப வேணாமா?''

''அதனால...''

''வூடு, கொஞ்சம் நிலம், தொழிலு—அதுபோதும். கூட உதவிக்குப் பொம்பளைங்க உண்டு. நல்லாத்தான் இருக்கேன் தொரை. ஒரு கொறையும் இல்ல.''

''வேதனையா இருக்கு வசந்தா?''

''இதுல ஒனக்கு ஏன் வேதனை?''

''யாருக்கோ அடங்கி இருக்கணுமேன்னு தோணுதா? அப்படி இருக்க புடிக்கலையா உனக்கு?''

''ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொண்ணு புடிக்கும். ஒனக்கு வூட்டுக்கு அடங்கி இருக்கப் புடிக்கும். உங்க வூட்டு அம்மாவுக்கு உனக்கு அடங்கியிருக்கப் புடிக்கும். ஆமா சினிமா புடிக்கப் போவணும்னு சொன்னியே... இன்னமும் ஆபீஸ் வேலைதானா.''

''ப்ச்சு... முடியலை. போகத் தைரியம் இல்லை''

''எனக்குத் தெரியும். ஒன்னால முடியாதுன்னு. ஒனக்கு ஆபீஸ் வேலையைவிட முடியாது. எனக்கு என் தொழிலைவிட முடியாது.''

''ஆனா சினிமாவுக்குள்ள நுழையணும்னு ஆசை இன்னும் இருக்கு வசந்தா.''

''எனக்கில்லை. கல்யாணம் கட்டிக்கிற ஆசை இல்லை. ஒன்னிய மாதிரி ஆள் கெடைச்சாக்கூடச் சேர்ந்து கொஞ்சநாள் இருப்பேனேகண்டி, சொந்தம் கொண்டாட மாட்டேன்.''

''ஏன் அப்படி?''

''மனசுல அப்படி விழுந்து போச்சு தொரை. நீ என்னா மெறிச்சாலும் உங்க வீட்டு அம்மா என்னிய மாதிரி ஆவாது. என்னை எத்தினி வளைச்சாலும் ஒங்க எடத்துக்கு நிமிர முடியாது.''

''ஆம்பிளை மேலே அத்தனை வெறுப்பு? சின்ன வயசுலேயே வந்துடுச்சா?''

''வெறுப்பு யார் பேர்லேயும் இல்லை... ஆம்பளை வேற ஜனம். பொம்பளை வேற ஜனம். அதும் புத்தி இதுக்கு இல்லை. இதும் புத்தி அதுக்குத் தெரியலை. அப்புறம் கட்டிப்போட்டுக் குடித்தனம் பண்ணினா எப்படி? ஒண்ணு கவுறு நஞ்சுபோவும். இல்லே... கட்ன எடத்துல காப்புக் காய்ச்சிப் போகும்.''



''ஊர்ல இத்தினி பேர் குடித்தனம் நடத்துறாங்களே எப்படி...''

''கவுறு அறுமா கை அறுமான்னுதான்.''

''எல்லாருமேவா?''

''எனக்குத் தெரிஞ்சவரை அப்படித்தான். பரோட்டா எடுத்துக்க. இந்தாடி, தண்ணி டம்ளரைக் கொண்டா இப்படி. தூசி விழுந்துடப் போவுது.''— தண்ணீர்க் குவளையை வாங்கிச் சேலைத் தலைப்பால் போர்த்திக் கைக்குள் வைத்துக் கொண்டாள். விக்கிய போது எடுத்து நீட்டினாள்.

''அன்னிக்கு ஒரு பாட்டுப் பாடினியே சினிமாப் பாட்டு...என்னாது...அப்பால அந்தப் படம்பார்த்தேன். அன்னிக்கு முழுக்க ஒன் நெனைப்புத்தான். என்னா பாட்டு அது?''

''பனி விழும் மலர் வனம்...''

''பாடு...பாடு...''

''இப்பவா... நான் பாடற மாதிரி இல்லம்மா.''

''ஏன்? என்ன சமாச்சாரம்?''

''சுத்தி ஒரே முள்ளுச் செடியா இருக்கு. எப்படி பனி விழும் மலர்வனம்னு பாடறது?''

''என்னைச் சொல்றயா?''

''எல்லாரையும்தான்?''

''எல்லாரையும்னா?''

''எல்லாப் பொம்பளைங்களையும்தான்.''

''அட்றா சக்கை... இடிஞ்சு போயிட்டாப்ல இருக்கு.''

''உள்ளுக்குள்ள மெள்ள மெள்ள இடிஞ்சுதான் போறேன். ஒவ்வொரு ஆளா பார்க்கப் பார்க்க இடிஞ்சுதான் போறேன்.''

''எனக்கு இப்ப ஒன்னைத் தோள்ல சாச்சுக்கிட்டுப்
பாட்டுப் பாடணும் போல இருக்கு. நான் ஒண்ணு சொல்
லட்டுமா? கஷ்டம், சந்தோஷம் கைபோடற வட்டம்
வரைக்கும்தான். கண்ணு பாக்கறவரைதான். எந்திரிச்சு
நின்னு தொலைவுல பார்த்தா அங்க இருளோன்னு
இருக்கும். அங்கேர்ந்து இங்க பார்த்தா இங்க
இருளோன்னு இருக்கும். எல்லா எடத்துலயும் இருட்டும்
இருக்கும்; வெளிச்சமும் இருக்கும். வெளிச்சத்துக்குத்
தகுந்தாப்பல கண்ணைக் கசக்கிக்கிறதும், இருட்டுக்குத்
தகுந்தாப்பல பழகிப் பாக்கறதும்தான் நல்லது. நான்
கஷ்டப்படறதா நான் நெனைச்சுக்கறதும் நீ கஷ்டப்
படறதா நான் நெனைச்சுக்கறதும் தொலைவா பாத்து
தான். எல்லாரும் இங்க நல்லாத்தான் இருக்காங்க.
அவங்க அவங்க கஷ்டம், அவங்கவங்க சந்தோஷம்னு
இருக்காங்க. நீ எல்லாத்திலியும் போட்டுப் பொராட்
டிக்கிற. புரியாத முழிக்கிற. ஒனக்கு ஒன்னோட கஷ்ட
மும் தெரியல. ஊரார் சுகமும் புரியல. போவட்டும்
வுடு. இன்னிக்கு என்கூட இருந்துட்டுப் போ.''

''சேச்சே... என்னால இப்படியெல்லாம் இருக்க
முடியாது.''

''எனக்கோசரம் இரேன்.''

''உனக்கோசரம்னா?''

''எனக்கோசரம் பாட்டுப் பாடேன். அப்பப்
பாடினியே அந்தப் பாட்டுப் பாடு. நாள் தவறாததான்
டிரைவரும் கிளீனரும் போதை வர ஆளுமாப் போவுது.
பாட்டுப் பாடுற ஆளா நீ ஒருத்தனாவது என்கூட இருந்
துட்டுப் போயேன்.''

''எனக்கு வாடகை உண்டா?''

''அசிங்கம். வாயைக் கழுவு. வாடகைக்குப் பாடற
ஆளுன்னா எட்டி நின்னு துட்டு வாங்கறேன்னுதானே
துப்புற மாதிரி கேட்டுட்டே? ஆம்பளை புத்தி அசிங்க



புத்தி. கண்ணுல முள்ள வச்சிக்கினுதான் குடித்தனம்
பண்றியா? இதுல உன் குடித்தனம் பத்திப் பெருமை
வேறயா? ஒன்னிய மாதிரி ஆளே பொம்பளையைப்
புரிஞ்சுக்கலையே. போதைல வரவனா புரிஞ்சிக்கிடு
வான்? ஆனா ஒரு விதத்தில் அவன் தேவலாம்.
வந்தமா போனமான்னு கிளம்பிடுவான். நீங்க நின்னு
நெஞ்சுல மெறிச்சிட்டு நடுகாட்ல தனியா வுட்டுட்டுப்
போய்டுவீங்க.''

சுளீரென்று விஸ்வநாதனின் முதுகு, வலியில்
செருகி நிமிர்ந்தது. கிண்டி பார்க்கில் தனியே விட்டுப்
போன காயத்ரி நினைவு பொங்கிற்று. இந்த இடத்தை
விட்டு எழுந்து ஓடிவிட வேண்டும் என்று தோன்றியது.
எங்கே ஓடுவது? எவ்வளவு தூரம் ஓடுவது? 'எனக்
கோசரம் பாடு' என்று கேட்பவளை விட்டு எப்படி
ஓடுவது?...

எனக்கோசரம் ஒரு பாட்டுப் பாடு. எனக்கோசரம்
ஒரு குழந்தை கொடு. பிறருக்காக இதுவரை ஏதாவ
தொரு காரியம் நான் செய்திருக்கிறேனா? எல்லாம்
என்னைக் கொண்டுதானே. எனக்கோசரம்... என்
பயம், என் விருப்புதானே என் வெறுப்பு முன் வைத்து
தானே என் நடவடிக்கைகள்...

தாரிணியைக் கொண்டாடியதும், தாரிணியோடு
சண்டையிட்டதும், காயத்ரியை வியந்ததும், காயத்ரி
யைத் தனியேவிட்டு வந்ததும் என் நியாயங்களில் ஈடு
பட்டுத்தானே... என் கற்பிதங்களை முன் வைத்துத்
தானே... சரி, எது?... புருஷனில்லாமல் தானும் தன்
குழந்தையும் என்று ஆசைப்படுகிற காயத்ரியா?...
இழைந்து இழைந்து இறுகுகின்ற நானும் தாரிணி
யுமா?...கைக்கு எட்டிய வட்டம் வரை பார்த்தால்
போதும் என்று அன்றைக்கு வாழ்ந்து விடுகிற
வசந்தாவா?... இன்னும் எவர் வாழ்க்கை தெரியும்
நமக்கு? இன்னும் எத்தனை வகை வாழ்க்கை உண்டு

இங்கே?... ஹாங், அந்தப் புத்தூர் செக்போஸ்டில் பார்த்தோமே ஒரு டிரைவரை, எல்லாக் கேலிக்கும் நடுவே அப்பாவி மாதிரி நின்று தன் காரியம் சாதித்துக் கொண்டு போனவனை, வெளியே ஒரு முகமும் உள்ளே ஒரு முகமாய்ப் பார்த்தோமே, அவனைப் போலவா இருக்க வேண்டும். வாசல் கதவருகில் நின்றபடி மகளுக்குப் பரிந்து பேசினாரே நாணு சார்—இங்கே வாழ்க்கை முறைகள் மாறும், கூட்டுக் குடும்பம் உடைந்ததுபோல் குடும்பம் என்பதும் உடையும் என்றாரே குடும்பம் உடைய மரபு என்பதும் உடையும். மரபு என்பது எவருக்கோ எப்போதோ சிறப்பாய்த் தோன்றின ஒன்று. அன்றைய சிறப்பு இன்றைக்கு இழிவு. இன்றைய இழிவு, பின்னொரு நாள் சிறப்பு. இதற்குள், இதனிடையில் நிறைவு என்பது எங்ஙனம்? எதை முன்னிட்டு? என்ன அளவுகோல்?

இத்தனை குழப்பத்தில் எது கவிதை...எது கலை வடிவம்... எது சினிமா? நான் குமாஸ்தாவாக இல்லாமல் வேறு விதமாக மாறி என்ன செய்யப் போகிறேன்? எத எழுதப் போகிறேன்? நாற்பது வருடம் கழித்து என் கதையில், கவிதையில், வெட்கத்தில் அந்தப் பெண் முகம் சிவந்தாள் என்பதை எப்படிப் புரிந்து கொள்வார்கள்?

பசலை படர்ந்து வெட்கத்தில் வளை கழன்றது என்று என்றோ எழுதியதை யார் இன்று நம்பத் தயாராய் இருக்கிறார்கள். நான் ஒரு குழப்பமான கால கட்டத்தில் ஜனித்திருக்கிறேனா? இல்லை இப்படி ஒரு மரபுக் குழப்பம் தொடர்ந்து நிலவும் விஷயமா?

இன்று அதிகம் சிறப்பாய்ப் பேசப்படுகிற கொலை களவு கதைகள்தான் நானும் எழுத வேண்டிய விஷயமா? ஒரு வேளை கொலையும் களவும்தான் கடைசிவரை மனிதனுடைய குணமாக இருக்குமோ? இந்தச் சூட்சுமம் சிலருக்குப் புரிந்து விட்டதோ? மென்மை, நெகிழ்ச்சி, குழைவு, காதல் இவை இல்லாது



போகும் நேரம் உண்டோ?... இவை காணாமல் போய் விடும் என்றுதான் காயத்ரி கவலைப்பட்டாளோ? அந்தக் கவலையில் கனிந்து கனிந்து தனித்துப் போக நினைத்தாளோ... யாசகம் கேட்டாளோ?

விஸ்வநாதன் புல்மேட்டில் மல்லாந்து சரிந்தான். மேலே திட்டுத் திட்டாய் மேகங்கள் நகர்ந்தன. நிலவு தோன்றித் தோன்றி மறைந்தது. வலப்புறம் திரும்ப அவனையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிற வசந்தா முகம் தெரிந்தது. ஒரு வேதனையுடன் சோர்வும் கண்களை அழுத்தின. பாடினால் தேவலாம். யாராவது என்னை மடியில் எடுத்துப்போட்டு இறுக்கிக் கொண்டு தாலாட்டாய்ப் பாடினால் தேவலாம். ஆனால் எனக்கு வேண்டிய தாலாட்டை நான்தான் பாடிக் கொள்ள வேண்டும். பாடுவோம்.

'கனாக் காணும் கண்கள் மெல்ல
உறங்காதோ பாடல் சொல்ல
நிலாக் கால மேகம் எல்லாம்
உலாப் போகும் நேரம் கண்ணே'

என் வாழ்க்கை முழுதும் மேகம் சூழ்ந்த நிலாக்காலமாய்ப் போய்விட்டது, விடியுமா?

## 41

சகலமும் குழப்பமாக இருந்தது. எல்லா நடவடிக்கைகளும் சாங்கியமாய் சடங்காய் நடந்தன. எது சடங்கு, எது சாதாரணம் என்று தெரியாமல் விழிக்க நேர்ந்தது. எல்லாச் சடங்கும் குறைவறச் செய்துவிட வேண்டும் என்கிற பயமும் தொற்றிக் கொண்டது.

''புது லாரியாவே மாத்திட்டியேப்பா ஆக்ஸில் ஷாப்ட் புதுசா பழசா? எதுல வேணா குறை வை. ஆக்ஸில் ஷாப்ட்ல மட்டும் வெளையாடாதே. துட்டு பால் மாறாதே... புதுசு போட்ரு, ஆமா...''

''டயர்தான் தம்பி முக்கியம். முன்னாலே வழுக்கை பின்னால பொத்தல்னு போட்டுக்கிட்டு ஊர்தாண்டிப் போறாங்க. கல்லு தட்டுனாப் போறும். வண்டி நிலை கொள்ளாத ஆடும். அப்புறம் இடிச்சுத்தான் நிறுத்தணும். இடிக்கிறஇடம் மரம் இருந்தா போச்சுது. பாலமா இருந்தா... இடிக்க எடமே இல்லாத பள்ளமாய்ப் போய்ட்டா...''

''அப்படித்தான் போன மாசம் கேரளாக்காரன் லாரி ஒண்ணு மதகிலே சொருகி...''

வயிறு கலங்கும்,இனம் தெரியாத பயம் ஒன்று ஓசையின்றி வயிறு பிசையும். சோறு உருட்டித் தின்கிற போதும் டீ குடிக்கிற போதும் தூக்கம் வராமல் புரளுகிற போதும் யார் யார் பேச்சோ காதில் குடைந்து கலவரம் எழுப்பும். வண்டி சிறிது சிறிதாய்ப் பட்டறையில் சுய உருவம் பெற்றுக் கொண்டிருந்தது. செல்லத்தம்பி கவலையுடன் வண்டியருகே சதா நேரமும் இருந்தான். நாலைந்து நாள் அவனை ஊன்றிக் கவனித்துவிட்டு அவன் கவலையைப் புரிந்து கொண்டு முதலியாரிடம் கௌசல்யா விஷயம் சொன்னாள்.

''முன்னுக்கு வரணும்னு ஆசைப்படறவன் பதற்றமாத்தான் இருப்பான் கௌசல்யா, அவன் பதற்றப்படறது இருக்கட்டும். நாலு இடம் பெருக்கினமா, போனமான்னு நீயும் இனிமே இருக்கக்கூடாது. ஒனக்கும் லாரி பத்திக் கவலைவரணும். நீயும் துட்டு எண்ணக் கத்துக்கணும். தொழிலு லாபமா நஷ்டமான்னு தினம் கேட்டுக்கணும். பொறுப்பு இருக்கிற பொம்பளை தூக்கி



யெறிஞ்சு எவரையும் பேச முடியாது, எல்லாத்துக்கும் தலையாட்ட முடியாது. என் கவலையெல்லாம் செல்லத்தம்பி பத்தியில்லை ஒன்னை மாத்தணுமேன்னுதான் கவலை.''

''ஏன் இப்படிச் சொல்ற... நான் யாரண்டையும் சண்டைக்குப் போறதில்லையே...''

''சண்டை போடக் கூடாதுங்கறது மட்டுமில்ல, சாமர்த்தியமும் வரணும். நீயும் நாலு பக்கம் சுத்திலோடு புடிச்சாகணும். நானும் சுத்திலோடு புடிப்பேன். சுகறா லோடு அடக்கிக் கவுறு கட்டுவேன். லாரி தவிர வேற புத்தியே நமக்கு இருக்கக் கூடாது.''

நாலு அடித் தொலைவில் குத்துக்காலிட்டு முதலியார் சொல்கிற சூட்சுமம் எல்லாம் கௌசல்யா கேட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த லாரி கடவுள் துணை என்கிற முன்பக்கத்து கேபின் போர்டைத் தாங்கி நின்றது. ஒரு அமாவாசை அன்று தண்ணித் தொட்டித் தெரு விளிம்பில் செல்லத்தம்பியின் கடவுள் துணை நின்றிருக்க, முதலியார் பூசை ஆரம்பித்தார். லாரி ரிப்பேர் செய்த பட்டறைகளுக்கு மரியாதை செய்தார். காந்திலாலுக்கு மேல் துண்டு போர்த்தினார். கௌசல்யா இடப்பக்கமும், முதலியார் வலப்பக்கமும் நிற்க, செல்லத்தம்பி லாரி முன்னே நின்று போட்டோ பிடித்துக் கொண்டான். காந்திலால் ஹார்பரிலிருந்து திருச்சிக்கு முதல் லோடு கொடுத்தான். அட்வான்ஸ் ஐநூற்று ஒன்று ஹல்வா டப்பியில் வைத்து மூன்று பேரிடமும் நீட்டினான்.

முதலியார் பெரிய சூடக்கட்டியை வெற்றிலையில் வைத்து லாரி முன்னே பரப்பினார், குங்குமப் பொட்டலத்தை எடுத்துச் செல்லத்தம்பியிடம் நீட்டினார்.

செல்லத்தம்பி நடுங்கும் விரலில் குங்குமம் எடுத்து லாரி முகப்புக்குப் போனான்.

''எலேய், அந்தப் பொம்பளை நெத்தியில வைடா. லாரி வாங்கினாலும் வாங்கினான்...லாரியத் தவிர வேற நெனைப்பே இல்லடா இவனுக்கு.''

''மொதலியாரே, கௌசல்யா நெத்திலயா எடச் சொல்ற...''

''ஏன் வெறும் சேர்மானமா இருந்துடலாம்னு பாக்கிறியா. உம்மேல அட உசிரை வச்சிக்கினுருக்கு. இதைவிட ஒனக்கு பொம்பளை கெடைக்கமாட்டா. மன சுல குல தெய்வத்தை நெனைச்சுக்கினு பொட்டு வை.''

கௌசல்யா கை இரண்டையும் வயிற்றின் குறுக்கே கட்டிக் கொண்டு நெற்றியில் செல்லத்தம்பி இட்ட குங் குமம் ஏற்றாள். உடம்பெல்லாம் சூடு பரவியது. உதறி உதறிப்போட்டது. வயிறு குமைந்து நெகிழ்ந்து என் னென்னவோ செய்தது. குனிந்து செல்லத்தம்பியைப் பணிந்தாள். ஓடிப்போய் முதலியார் காலைக் கட்டிக் கொண்டாள். ''யப்பா...யப்பா...'' என்று கதறினாள். அப்பாவைத் தெரியாமல், அம்மாவையும் புரியாமல் அநாதையாய் வளர்ந்த பெண், அட்டகாசம் செய்த பெண், யாருக்கும் அடங்காத அரசி அழுது துவண்டது வேடிக்கையாய் இருந்தது.

''எழுந்துரு புள்ள... தெருவுல கிடந்து பொறளாதே. இப்ப நீ லாரி ஒனரு. மெதப்பா நட. மொள்ளப் பேசு. எழுந்திரு மொதல்ல.''

கௌசல்யா எழுந்தபோது அவளுக்குள் உலகம் மாறிப் போயிற்று.

''சூடகட்டி ஏத்தறேன். இரண்டு பேரும் ஏறி வண்டில குந்துங்க. சூடம் மலையேறினதும் சாவி போட்டு ஒரே டேக்குல எஞ்சின் எடுத்து அத்தினி



எலுமிச்சம் பழமும் நசுங்கறாப்பல வண்டி ஓட்டணும். எங்கியும் நிறுத்தாத நேரா ஹார்பர் வாசலில் போய் நிறுத்தணும்! நான் ஹார்பராண்ட வரேன். லோடு ஏத்தினதும் எங்கனா கோவில்ல நிக்க வச்சு கழிப்பு கழிச்சிடலாம்!''

செல்லத்தம்பி ஸ்டியரிங்கைக் கெட்டியாகப் பிடித் துக் கொண்டான். இடப்பக்கம் கௌசல்யா போர்த்திய படி உட்கார்ந்திருந்தாள். ஒரு தீக்குச்சியில் சூடம் சட்டென்று பற்றியது. ஒரு அடி உயரம் தகதகவென எரிந்தது. தீயினூடே முதலியாருக்கும் நடராஜ தரிசனம் தெரிந்தது.

''என்னடா பொம்பளை ஏத்திக்கினு போற வண்டில.''—செக்போஸ்டில் கேட்டார்கள்.

''அது லாரி ஒனருங்க... முதல் தடவையா வண்டி எடுக்கிறாங்க...அதான் ஓட்டம் பார்க்கக் கூட்டிக் கிட்டுப் போறேன்.''

''பொம்பளை வரக்கூடாதா லாரில...''

''ஓட்டறவனுக்குக் கவனமில்லாத பூடும்னு ஏத்த மாட்டாங்க.''

''அப்ப மொதலியார் ஏன் உங்கூட போகச் சொல் லுச்சி...''

''ஒனக்கும் சிரமம் தெரியணும்னுதான். செக் போஸ்ட்டு மடக்கறது, திருட்டு பயம், வண்டிமொடங்கி நடுகாட்ல மாட்டறது எல்லாம் தெரியணும்னுதான்.''

''வண்டி எப்படி இருக்குது கைக்கு...''

''இதுவரைக்கும் சுத்தமா ஓடுது.''

''எங்கே சோறு துண்ணணும்?''

''தொழுப்பேடு.''

''ஐய...பொம்பளைங்க சுத்தி சுத்தி நிமிண்டற எடமாமே. அங்க ஏன் நிறுத்தற...?''

''நிமின்டற பொம்பளை எங்கதான் இல்ல...நாம பாட்டுக்குக் காதுல வாங்காத சாப்டமா கிளம்பின மான்னு போய்டணும்''

''ஐய்யோ...நாற்பது ஐம்பது பொம்பளைங்க இருக்காப்ல தெரியுதே...அங்கப் பாரேன்... அட...ஐயரு படுத்துக்கினுக்கீராரு, காந்திலால் கடைக்கு வருமே கம்பெனி ஐயரு.''

''அடேடே... விஸ்வநாதன். இங்கிலீஷ் கம்பெனி நான் போயிருக்கேன் அவரோட ஆபீஸுக்கு. கௌசல்யா போய்க் கும்புட்டு லோடு கேளு அவரு கிட்ட.''

''இருட்ல போயா பேசறது... நா மாட்டேம்பா.''

''அடச்சீ... நமக்கு வியாபாரம் முக்கியம். எம்.டி யாவா திரும்பறது? போய்க் கும்புட்டுக் கேளு. கிடைச்சா புண்ணியம். எறங்கிப் போ. அட...நானும் கூட வரேன் போ...''

''யாரோ பொம்பளைகூட இருக்காரே...''

''இரு, இப்ப வேணாம். ஐயரு ஏன் இந்தப் பொம்பளைக் கிட்டலாம் போறாரு. கருமாந்திரம்...''

''ச்சு, நானும், நீயும் ரொம்ப யோக்கியம். எதுக்கு பெரிய வார்த்தையெல்லாம் சொல்ற?''

புல்மேட்டிலிருந்து விஸ்வநாதன் எழுந்தான். அழுத்தி உட்கார வைத்த வசந்தாவை விலக்கினான். தோளில் கை வைத்து, ''வரேன் வசந்தா, நல்லா இரு'' என்றான்.

''அப்ப தங்க மாட்ட...''

''நீதான் சொல்லிப்பிட்டியே தகிரியம் இல்லாதவன்னு...''

''என்னா இப்பிடி...சொல்லுக்குப் போய் கோச்சுக்கிற...நல்லா தெரிஞ்சாவாட்டிதான் மனசு தொறந்து பேசறம்...''



''பேசினா போதும் எனக்கு, வரட்டுமா... பரோட்டாவுக்கு எவ்ளோ ஆச்சு...''

''லட்ச ரூபா. குடுத்துட்டுப் போ''

''லட்சம் குடுத்தா என்ன பண்ணுவே? அப்பவும் இதே வியாபாரம்தானே.''

''ஒனக்கும் எனக்கும் ஒரே வியாபாரம்தான் என்னிக்கு மீறினோம்!''

''குத்திக்காட்றதுல அத்தினி சுகம்''

''நாம குத்துப் படறப்பதான் நோவுது, அடுத்தவங்களை மிதிக்கறப்போ தெரியலை.''

''அது வாஸ்தவம்!''

''என்ன அது வாஸ்தவம்?''

''இது நேத்து வரைக்கும் தெரியலை. இன்னிக்குப் புரிஞ்சு போச்சு. அடுத்தவன் புத்தி பத்தி, வாழ்க்கை பத்தி அசிங்கமாப் பேச யாருக்கும் யோக்கியதை இல்லை. அப்படிப் பேசினா—அது அலட்டிக்கறது தவிர வேறொண்ணும் இல்லை...''

''யம்மா...நெஞ்சு மொத்தமும் கொட்ற. நீயும் நல்லாத்தான் இருப்ப தொரை. உன்னவுடவே மனசில்ல'' துண்டப் போட்டு தரதரன்னு வூட்டுக்கு இழுத்துட்டுப் போய்டணும்னு தோணுது.''

விஸ்வநாதன் சிரித்தான். ''நான் வரேன் வசந்தா அப்புறம் எப்பவாச்சும் பார்ப்பம்.''

மேடு இறங்கிப் பாதையோரம் நடந்து காருக்குப் போனான். ஆணும் பெண்ணுமாய் யாரோ அரை இருளில் கும்பிட்டார்கள்.

''எனக்கு வேணாம்பா.''

"இல்லிங்க, நான் செல்லத்தம்பி, தண்ணித் தொட்டித் தெரு."

"அடடே. மன்னிச்சுக்கப்பா. வெளிச்சம் தெரியலை. தப்பா நெனைச்சுக்காதே..."

நகர்ந்து ஓட்டல் வெளிச்சத்திற்குப் போனார்கள்.

"நான் செல்லத்தம்பிங்க, இது கௌசல்யா. இரண்டு பேரும் கூட்டு சேர்ந்து லாரி வாங்கியிருக்கோம். ராவுத்தர் மேஸ்திரி நடேசமுதலி, அவரும் பங்கு போட்டிருக்காரு. மொத மொதல்ல வண்டி எடுத்தோம். திருச்சி லோடு திரும்பறப்போ ஒங்க லோடு எதுனாச்சும் இருந்தா உதவி பண்ணவேணும்."

"இந்த அம்மா காந்திலால் கடை பொம்பள. இல்லை கடை பெருக்குமே அதானே இது..."

"ஆமாங்க. குருவி சேக்கற மாதிரி துட்டு சேர்த்து லாரி வாங்கினோம். ஒங்க மாதிரி பெரிய மனுஷங்க தயவு வேணும் சாமி!"

"வெரிகுட். ரொம்ப சந்தோஷம். எங்க வண்டி?"

விஸ்வநாதனுக்கு வண்டியைச் சுற்றிக் காட்டினார்கள். "டயரு புதுசா என்ன விலை?"—விசாரிப்பது நாகரிகம் என்று விஸ்வநாதன் கேட்டான்.

"அஞ்சாயிரத்து நூறு ரூபா. ரெண்டு செட்டு டயரு ட்யூப்" —கௌசல்யா பதில் சொன்னாள்.

"எப். சி. சரியா இருக்கா?"

"வர பங்குனி மட்டும் இருக்குதுங்க"— மறுபடி பதில் சொன்னாள்.

"இந்தம்மா, ஒன்னோட சம்சாரமா?"



"சாயந்திரம் தாங்க பொட்டு வச்சேன். இனிமே தான் வூடு பாத்து வைக்கணும். அதுவும் மூணுல ஒன்னா லாரி மேல துட்டுப் போட்டிருக்குங்க."

"அதாவது சம்சாரம் மாதிரி. அதேசமயம் வியாபாரத்திலேயும் பங்கு உண்டு."

"அப்படித்தாங்க. அதான் நெளிவு களிவு காட்டக் கூட்டியாந்தேன்."

"பொம்பளை ஓனருன்னு தப்பா நெனைச்சுக்கக் கூடாதுங்க. ரொம்பக்கஷ்டப்பட்ட ஜீவனுங்க என்னுது, எப்பிடியாச்சும் நாலு காசு சேர்க்கணும். நிமிந்து நிக்கணும்னு குறியா இருக்கறோம். எப்படியாச்சும் கை தூக்கிவுடணும் சாமி" —கௌசல்யா போர்த்திய தலைப்புப் பிரியாது கைகூப்பினாள்.

இதோ... இதோ இன்னொரு வாழ்க்கை வேறு ஒரு வழி. என்ன ஆயிற்று எனக்கு... ஞானம் கிடைக்கும் நாளா... பதில் தரப்படும் நாளா... தீர்ப்பு நாளா?

இங்கிலீஷ் கம்பெனியின் பன்னிரண்டு அடி உயர புது பாய்லரும், ஏகப்பட்ட குழாய் இணைப்புகளும், மோட்டாரும் திருச்சியில் செல்லத்தம்பியின் கடவுள் துணையில் ஏறின. "மேல வாழத்தாரு. வாழ இலைன்னு எத்தினா தொலைச்சுடுவேன் செல்லத்தம்பி... வாடகை மெட்ராஸ்ல வந்து வாங்கிக்க..." விஸ்வநாதன் கை காட்டினான்.

"சத்தியமா செய்ய மாட்டேங்க."—செல்லத்தம்பி நிலம் தொட்டான்.

செல்லத்தம்பி சிந்தாமணியில் வெள்ளைக் கதர் சட்டை வாங்கினான். கௌசல்யாவுக்கு நைலக்ஸ்

புடைவை எடுத்தான். முதலியாருக்கு சேலம் வேட்டியும் மேல் துண்டும் விலை பேசினான்.

கொள்ளிடம் பாலத்தில் நாட்டு சர்க்கரை பதினைந்து மூட்டைக்கு இடம் கேட்டார்கள். செல்லத் தம்பி திரும்பிக் கௌசல்யாவைப்பார்க்க சரியென்றாள். மூட்டைக்கு இருபது வீதம் முந்நூறு ரூபாய் தனியே கவரில் மடித்துக் கொண்டாள்.

''மேல் துட்ட அப்படியே மொதலியார்கிட்ட குடுத்துருவம். அது வட்டிக்கு வுட்டுப் பெரிசு பண்ணட்டும். பின்னாடி வேற வண்டி ஏதாவது உடைஞ்சதுன்னா அதுவும் பேசுவம் ''

''ஏன் இப்படிப் பறக்கிற?''

''இங்க தாண்டிடலாம். தாம்பரத்துல விடிஞ்சு போச்சின்னா ஓவர் லோடுன்னு போலீஸ்ல மடக்கிடுவான்.''

''போலீஸ்தானே. எறங்கி நான் பேசறேன் விடு.'' கௌசல்யா ஓடும் லாரியில் சாய்ந்து கொண்டாள்.

''அடி செருப்பால...''

''ஏன் வெள்ளைச் சட்டை போட்ட புத்தியா?''

''அதுக்கில்ல... ஒரு நா என்னிய எறக்கிவிட்டு நீ ஸ்டீரிங் புடிக்கப் போற... தண்ணித்தொட்டித் தெருவே அசந்துபோய் நின்னுடப் போவுது.''

''ஏன் ஒனக்கு அதுல இஷ்டமில்லையா?''

''இஷ்டமில்லாதயா பொட்டு வச்சேன்?''

''எப்படினாச்சும் எப்படினாச்சும் கஷ்டப்பட்டுப் பத்து லாரி வாங்கிடணும். என்ன சொல்ற நீ?''

''வாங்கிடலாம் கவலையை வுடு.''

# 42

அன்புள்ள அப்பா,

எனக்கு அலிடோலியாவில் வேலை கிடைத்திருக்கிறது. இத்தாலிய ஏர்லைன்ஸின் இந்தியப் பிரிவு. சென்னையிலேயே இண்டர்வ்யூ நடந்தது. வேலை டெல்லியில் ஏற்கும்படி இருக்கும். இரண்டொரு நாளில் தெரிந்துவிடும்.

அப்பா, உன்னைவிட்டு நான் வெகுதூரம் போவதாய் உனக்குப் படுகிறதா? எனக்கு அப்படி இல்லை. என் புத்தியில், உணர்வில் முழுமையாய் நீ இருக்கிறபோது உன்னிடமிருந்து பிரிந்திருப்பதாகவே எனக்குப் படவில்லை. என்னைப் புரிந்து, என்னை என்னிடமே ஒப்படைத்த உன்னை நான் பிரிவது என்றும் இல்லை.

அப்பா, இங்குள்ள பெண்கள் நல்ல புருஷனைத் தேடி ஏன் கடவுளிடம் போகிறார்கள் தெரியுமா? அவர்களுக்கு நல்ல தகப்பன் கிடைக்கவில்லை. தன்னை உணர்ந்து, தன் குழந்தைகளையும் இன்பமுறச் செய்யும் தந்திரம் இங்குள்ள தகப்பனார்களுக்குத் தெரியவில்லை. அப்பாவின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் முயற்சியாகவே அகமுடையான் தேடலும் இருக்கிறது. இந்தத் தேடலும் சொல்லிக் கொடுக்கப் பட்டது. இன்வால்ட்மெண்ட் என்பதே மிகக்குறைவு. சகல உணர்வும் சொல்லிக் கொடுக்கப்பட்ட விகிதத்திலேயே இருக்கிறது. இழவு வீட்டுக்குப் போனால் அழுகையும், கல்யாணமெனில் கும்மாளமும் எனச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தன்னுள் தான் உணர்ந்து அனுபவிப்பது என்பதே இல்லை. விஸ்வ

நாதன் என்னைப் பயந்து மறுதலித்ததும் சொல்லிக் கொடுக்கப்பட்ட மரபு காரணம்தானே ஒழிய என் பேச்சில், என் வேலையில் இன்வால்வ் ஆகவேயில்லை.

ஆனால் சட்டென்று என் கவலையை என் சோகத்தை இத்தனை வயது வாழ்க்கைக்குப் பிறகும் புரிந்துகொண்டு நகர்ந்துவிட உன்னால் முடிந்திருக்கிறது. ஒருவேளை அடக்கி என்னை மன்னார்குடிக்கு அழைத்துப் போயிருந்தால் நானும் நல்ல புருஷனுக்குக் கோவிலை சுற்றுவேனோ என்னவோ... ஒரு உறவு புளித்து இன்னொரு உறவுக்கு ஏங்கும் நபர் எப்படிப் பயமின்றி இவ்வுறவைப் புரிந்துகொள்ள முடியும். தகப்பன் ஏற்படுத்திய பயத்துடன் ஒரு பெண் தன் துணையை அங்கீகரிப்பது எத்தனை வேதனை. வேதனையான விஷயம்.

உனக்கு நன்றி சொல்கிறேன் அப்பா... நீ எனக்கு அளித்த சுதந்திரத்துக்கு நன்றி சொல்கிறேன். கடைசி வரை இதை தக்க வைத்துக்கொள்ள முயற்சி செய்வேன். இந்தத் தேசத்து ஜனங்களுக்குச் சுதந்திரம் வாங்கவும் தெரியாது. வாங்கிக் கொடுத்தால் வாழவும் தெரியாது.

அங்கே அம்மாவுக்கும் என் சகோதரிகளுக்கும் என் அன்பைச் சொல். வேண்டும்போது தயங்காமல் காசு கேள். நிச்சயம் அனுப்புவேன்.

அங்கே மன்னார்குடியில் பொழுது எப்படிப் போகிறது. இன்னும் உன்னைத் தேடி விஸிட்டர்ஸ் வருகிறார்களா... நீ மறுபடி எழுதத் துவங்கேன். சிறுகதைகள் எழுத ஆரம்பியேன். அகத்துறைக் கவிதைகளின் இடத்தை வாட்டமாய் சிறுகதை பிடித்துக் கொண்டு ஒரு மாமாங்கம் ஆகிவிட்டது. உணர்வையும் செய்தியையும் ஒருங்கே சேர்த்துச் சொல்லத் தமிழ்க் கவிதை முன்வரவில்லை, தமிழ்க் கவிதை தத்தகாரம்



தேடிப்போய் விட்டது. தத்தகாரத்துக்குத் தமிழ் தேடி அதைக் கவிதை என்கிறார்கள். இங்கே சினிமா சீரழித்த முதல் கலை கவிதை. சினிமாவின் தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொள்ள ஓவியம் செய்த க்யூபிஸம் முயற்சியைக்கூட கவிதை செய்யவில்லை. புதுக்கவிதை கவியரங்கத்தில் கைவிலங்கு மாட்டிக்கொண்டு பிறகு சினிமா முன் மண்டியிட்டு ஜீவனற்றுப் போயிற்று. இங்கே இனி காவியம் என்பது கதை ரூபம்தான். இன்று கவிதை எழுதுவதைவிட கதை எழுதுதல்தான் உத்தமம். என் விவாதம் சரியா அப்பா. எழுதேன் எனக்கு.

வேறென்ன... டெல்லி போனதும் தொடர்கிறேன்.

அன்புடன், காயத்ரி.

காயத்ரி கடிதம் வந்த அன்று அந்த தஞ்சாவூர் இளைஞர்கள் வந்தார்கள். நாராயணசுவாமி ஐயர் கை நீட்டி அவர்களை வரவேற்றார். அணைத்துக் கொண்டார். இந்த முறையும் கையுறையாய் வெற்றிலைக் கவுளியும் பன்னீர்ப் புகையிலையும் வாழைப்பழச் சீப்பும் பரப்பப்பட்டபோது ராஜகோபாலா என்று பரிதவித்தார்.

''நம்மாத்திலேயே சாப்பிடலாம்'' என்று வேண்டிக் கொண்டார்.

''சாப்பிடலாம் சார், ஆனா சன்மானமா காசு கொடுத்தாக்கூட வாங்க மாட்டேங்கறேளே...''

''காசா... சாப்பாட்டுக்கா... பேஷா வாங்கிக்கறேன். வாசல்லே மன்னார்குடி கிளப்னு சாக்கட்டிலே எழுதிட்டு கை நெறைய வாங்கிக்கறேன் எச்ச இலையைச் சாப்பிட்டவனே எடுத்துப் போடணும்னு வாசல் சேர்த்து கத்தறேன். இரண்டாந் தரம் ஊறுகாய் போட்டதுக்கு எக்ஸ்ட்ரா இருபது பைசான்னு கணக்குப்

போடறேன். போதுமா... உங்களுக்குச் சாதம் போட றது எனக்கு ஒரு சந்தோஷம்ப்பா. அதைக் காசால டிச்சு கலைக்கணும்னாச் சரி. நான் தாங்கிக்கறேன்.''

இளைஞர்கள் சிரிப்புடன் தலை குனிந்தார்கள்.

''மனிதனுக்குச் சந்தோஷம் என்பது என்ன? தன் னைப் பிறரிடமிருந்து உயர்த்திக் காட்டிக்கொள்ளு தலா... நாலு பேருக்குச் சாப்பாடு போட்டு விஷயமும் சொல்லிக் கொடுக்கிற பெருமையா...'' இளைஞர்களில் ஒருவன் திடுமெனக் கோபமுற்றுக் கேட்டான்.

''தவறு. என் சாப்பாடோ, நான் சொல்லித் தரும் காவிய விஷயமோ உயர்வானதாய் நினைத்து நான் செய்யவில்லை. இது பகிர்ந்து கொள்ளல். பகிர்ந்து கொள்ளுதல் என்பது சந்தோஷம்தான். உணவோ, ஞானமோ தானும் பிறருமாய் ஏற்பது மகிழ்ச்சிதான். இந்தப் பகிர்தலின் பொருட்டே உறவும் உறவுக்கான சடங்கும்.''

''எவைகளைப் பகிர்ந்துகொள்ள முடியும்? எவ் வளவு காலம் பகிர்ந்துகொள்ள முடியும்?''

''சகலமும் பகிர்ந்துகொள்ள முடியும். சாகிறவரை பகிர்ந்துகொள்ள முடியும்.

''பகிர்ந்துகொள்ள மறுப்பவன்?''

''பயமுள்ளவன்.''

''அப்போது தனிமை, பயத்தின் அடிப்படையா?''

''தேவையில்லை. பகிர்ந்துகொள்ள சக மனிதர் இல்லா அடிப்படையிலும் இருக்கலாம்.''

''தனிமையில் சாரமிருப்பதாய்ச் சொல்லியிருக்கி றானே ஒரு கவிஞன்... தவறா?''





''இல்லை அதையும் சொல்லிப் பகிர்ந்து கொண் டிருக்கிறானே... தெரியவில்லையா? 'தனிமை கண்ட துண்டு அதிலே சாரமிருக்குதம்மா' என்கிற த்வனி யிலேயே ரகஸ்யம் பரிமாறும் உணர்வு வரவில்லையா?''

''தனிமையும் உயர்வு என்கிறீர்கள். பகிர்ந்து கொள்ளுதலும் முடியும் என்கிறீர்கள். முரண்பாடு இல்லையா இது?''

''இல்லை. அதுவே விசேஷம். இங்கு உடலால், உணர்வால் நீங்கள் தனி உலகமாய் இருப்பினும், நீங்கள் மட்டுமே உலகமல்ல.''

''புரியவில்லை.''

வெல்லப் பிள்ளையாரை எந்தப் பக்கம் கிள்ளி னாலும் *தித்திப்பு* என்கிற மாதிரி.''

''புரியலை.''

''நீங்கள் தனி உலகமாய் இருப்பினும் இவ்வுலகத் தின் விஷயமான பஞ்சபூதங்களின் தாக்கம்தான் நீங்கள். அவனும் வாயு. இவனும் வாயு. அவனுள்ளும் நீர், நிலம்; இவனுள்ளும் நீர் நிலம். நீரும் நீரும் காற்றும் காற்றும் கலக்கத் தடையென்ன? மண்ணில் மண் பிசைய மாத்திரம் என்ன...?''

''அதாவது...?''

''சகல உயிர்களுக்குள்ளும் உணர்வு ஒன்றே, வலி பொது. பசி பொது. காமம் பொது. உயிர் வாழும் விழைவு பொது. மரணம் பொது.''

''அப்படியானால் இங்கே இத்தனை முரண்பாடுகள் ஏன்? என்னை அவனும் அவனை நானும் புரிந்து கொள்ளாத வேதனை ஏன்? கொலையும் களவும் ஏன்?''

''தன் உணர்வைத் தானே புரிந்துகொள்ளாத பரி தாபம்; தன்னை மதிக்காதபோது ஏற்படும் சிக்கல்.''

''மனிதன் தன்னை ஏன் மதிக்காது போனான்?''

''மாறுதல் ஏற்படுவதை மறுதலிக்க முற்பட்ட போது. அமைதியும் பிறகு புயலும் புயலைத் தொடர்ந்து அமைதியும் என்ற இடையறாத சக்தியை மறுதலிக்கத் துவங்கிய போது. புயல் வரவே வேண்டாம் என்று ஆசைப்பட்டபோது. ஆசையே துன்பத்துக்குக்காரணம் என்பது மிகுந்த சூட்சுமம் உள்ள வார்த்தை'' யோசிக்க யோசிக்கத் தெளிவு தரும் மந்திரம்.''

''இன்று மனிதன் என்ன செய்ய வேண்டும்?

''மாறுதல்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்த மாறுதலும் இவனை அழிக்காது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அத்தனை மாறுதலிலும் புகுந்து மீறும் திடம் இவனுள் உண்டு என்று தெரிந்து கொள்ள வேண்டும்.''

''இன்றைய [அணு விஞ்ஞானம்கூட மனிதனை அழிக்காது என்று கருதுகிறீர்களா?''

''இதைக்காட்டிலும் பெரிய பிரளயங்களை இந்த மனிதகுலம் சந்தித்திருக்கிறது.''

''இன்றைய மனிதனை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?''

''சும்மா இருங்கள்.''

''அதாவது முயற்சியற்று இருக்கச் சொல்கிறீர்களா?''

''இல்லை, புயல் வந்தபோது புயலோடு வாழுங்கள். புயலற்றபோது அமைதியே அனுபவியுங்கள். புயலோடு உண்டான போராட்டமே வாழ்க்கை என்றோ, அமைதியே உலகமென்றோ கனவு காணாதீர்கள். அமைதியான நேரத்தில் புயல் கவலையும் புயல் நேரத்தில் அமைதி பற்றிய கனவும் உங்களை சிக்கலாக்கிவிடுகிறது. அந்தந்த நேரத்தின் இயல்பே உலகத்து இயல்பு. உங்கள் இயல்பு. இயல்பாய் இருத்தலே சும்மா இருத்தல்.''



இளைஞர்கள் அதிர்ந்தார்கள். நெற்றிக்குள் பொறி பறக்க, சுடர் துடித்து ஆட, விஷயம் கொடுத்தவியப்போடு அமைதியாய் இருந்தார்கள். நாராயணசுவாமி சிரித்தார்.

''என்ன பேச்சை காணோம். சாப்பிடப் போலாமா''

''நீங்கள் அவ்விதம்தான் வாழ்கிறீர்களா நாராயணசுவாமி?''—ஒரு இளைஞன் அவர் கண்களை ஊடுருவிக் கேட்டான்.

நாணுசார் கண்களை மூடிக்கொண்டு மெல்லத் தலையாட்டினார். அவர் நெஞ்சுக்குள் காயத்ரி சிரித்தாள். 'அப்பா'என்று கூப்பிட்டாள். கூப்பிட்ட குழந்தையின் தலையை நாராயணசுாமி, வாஞ்சையுடன் கோதிவிட்டார். அதே வாஞ்சையுடன் எதிரே இருக்கும் இளைஞர்களை நேசித்தார். இவ்வுலகம் அழியுமோ... என் குழந்தைகளே...அழியும் சக்தியோ மனிதன் உயிரினம் அழியுமோ, இங்கு.

''அட, எங்கெங்கு காணினும் சக்தியடா...'' கரகரத்த குரலில் பாடத் துவங்கினார். இளைஞர்கள் சந்தோஷமாய் அவர் பாட்டில் கலந்து கொண்டார்கள்.

விஸ்வநாதன் பல நூறு லாரிகளைத் தாண்டிச் சென்னைக்குக் காரில் திரும்பினான். வீட்டுக்குள் நுழைந்து குளித்து, சாப்பிட்டுச் சாய்வு நாற்காலியில் கண்மூடி உட்கார்ந்தபோதும்கூட நீண்ட தார்சாலையும் வேகமாய் எதிர்ப்புறம் ஓடும் மரங்களும் லாரி சப்தமும் மண் புழுதி மணமும் உணர்ந்தான். சக்கரம் கொடுத்த உபயம் சாலை, சாலையளித்த உபயம் சக்கரம். எது முதலில்? எது எதற்கு உந்துதல்? பூமி முழுக்க கிளை கிளையாய் சாலைகள். சகல திக்கும் சாலைகள். சாலை முழுவதும் சக்கரங்கள். தேர் தேராய் வாகனங்கள். பூமியே ஒரு வாகனம். அந்த வாகனமே சக்கரம். சூரியப்பாதையில் சுற்றும் சக்கரம்.

வடதுருவம் தென்துருவம் அச்சாய் வைத்து
புவி உருளைச் சூரியனைச் சுற்றும் என்றார்
பூமியது தேரென்றால் புரவியெங்கே
எங்கிழுத்துப் போகிறது எத்தனை காலம்
யாரிதற்கு தேர்ப்பாகன் எங்கே வார்த்தோல்.
ஏன் ஓட்டிப் போகின்றான் எதனைத் தேடி
நர நரத்துப் பூமித்தேர் போகும் சத்தம்
இரவெல்லாம் என்னுள்ளே தினமும் கேட்கும்
இழுக்கின்ற குதிரையதை இருட்டில் தேடும்.
காணாமல் வாய் பொத்தித் தவிக்க செய்யும்
தெருவெல்லாம் தேரோடும் இரும்பில் மடித்து
இரும்புத்தேர் ஓடுவதோ குதிரையின்று
நுகத்தடியில் பூட்டாது பரியை உருக்கி
தேருக்குள் அடைத்துவிட்டு செல்லுதல் போல
பூமிக்குள் ஏதேனும் குதிரை உண்டோ;
யார் உருக்கி அடைத்தார்கள் உருளைப் புவியில்
பூமியது தேர்தானா குதிரை உடலா
தெரு முழுதும் ஓடுவது தேரா பரியா
உயிர் போல ஓர் பொறியை உள்ளே பொதித்து
இரும்பான குதிரைகள் ஓடக்கண்டேன்
பூமியெனும் குதிரைகள் சக்தியூட்டி
பொழுதெல்லாம் ஓட்டுவது எந்த ஞானி
ஏன் ஓட்டிப் போகின்றான் எத்தனை காலம்

''அம்மாடி...வந்தவுடன் கவிதையா... முடிச்சுட்டேளா...இது எத்தனாவது. ஐம்பத்தியொன்பதாஎன்ன பாக்கறேள்... நேத்திக்கு ஒரு காரியம் பண்ணினேன் பொழுதே போகலை. நீங்கள் எழுதின எல்லாக்கவிதையும் எடுத்து நோட்டு புஸ்தகம் தச்சு நம்பர் போட்டு எழுதினேன். இத யார்கிட்டயானா கொடுத்து புஸ்தகமா போட்டா என்ன.. ராத்திரி முழுக்க எழுதினதுல இடுப்பு புடிச்சுண்டு ஒரே வலி. இடுப்பு புடிச்ச வலியா வேறெதானுமான்னு தெரியலை. பகவானேன்னு



நாலைஞ்சு நாள்ல ஆயிட்டாச் சரியா இருக்கும். ஏன்னா...கார் நம்மாத்திலேயே ரெண்டு நாள் இருக்கட்டுமே... கூடாதும்பாளோ உங்க ஆபீஸ்ல...இந்தப் புஸ்தகத்துக்கு என்ன தலைப்பு வைக்கலாம்.''

விஸ்வநாதன் தாரிணி நீட்டின புஸ்தகத்தை வாங்கி அவள் தலையைக் கோதி அணைத்துக் கொண்டான்.

''உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கோன்னா? என் மேலே கோபமில்லையே சினிமா ஃபீல்ட் கூடாதுன்னு சண்டைபோட்டு அனுப்பினமேன்னு ரொம்ப வேதனையா இருந்தது. அதுக்குத் தண்டனை மாதிரி நெனைச்சுண்டு விடாப்பிடியா எழுதினேன். நன்னா இருக்கா என் கையெழுத்து? தாரிணிக்குச் சமர்ப்பணம் போடுவேளா? என்ன தலைப்பு வைக்கலாம் சொல்லுங்கோ...''

விஸ்வநாதன் மெல்லிய குரலில் 'இரும்பு குதிரைகள்' என்றான்.

''ஹும்... இரும்புக் குதிரைகள்...நன்னா இருக்கு''— தாரிணி பேனாவைப் பிரித்தாள். 'ஏன்னா இரும்பு குதிரைக்கு 'க்' உண்டா?''

விஸ்வநாதன் யோசித்தான். பல முறை சொல்லிப் பார்த்தான். ''இல்லை தாரிணி. 'க்' இல்லை.''

''உண்டு போலிருக்கே. ஒற்று வருமே.''

''நம்ம தலைப்பில இல்லை. வேண்டாம்.''

''ஏன் வேண்டாம்?''

''க்'போட்டா நடுவுல குதிரை நிக்கிற மாதிரி பட்டது. வழுக்கிண்டு பூமி மாதிரி போகலை. வார்த்தைல வேகம் இல்லை.

''யாரும் தப்புச் சொல்லமாட்டாளா.''

''சொல்லிண்டு போகட்டும், சொல்லும் அதன் பொருளும் பிரியாமல் இருக்கணும்.''

"எது மாதிரி?"

"நம்ம மாதிரி."

"ம்மா... வலிக்கிறது. மறுபடி நர்ஸிங்ஹோம் போயிடலாமா? வண்டி எடுங்கோ."

கார் ரயில்வே லைனைத் தாண்டிக் குலுங்கிக் குலுங்கி பெரிய கதவுகளைக் கடந்தபோது நழுவியது போல தாரிணி ஒரு குழந்தை பெற்றாள். கோவிந்தா என்று வேதனையோடு புடவையில், ஈரத்தோடு குழந்தையை வாரிக் கொண்டாள். விஸ்வநாதன் காரை நிமிண்டி முழுவேகத்தில் ஓட்டி ஐந்து நிமிடத்தில் நர்ஸிங்ஹோம் வாசலில் நிறுத்தினான்.

"பையன் பொறந்திருக்கான் உங்களுக்கு, பையன் பொறந்திருக்கான் உங்களுக்கு."

இரும்பு வண்டிக்குள் இரும்பு குதிரைகள் பிறந்த குழந்தை. இரும்பு குதிரை... இரும்பு குதிரை... இரும்பு குதிரை...கார் பின் கதவைத் திறந்த விஸ்வநாதன், துணி சுருணைக்குள் குழந்தையைத் தேடினான். நாசி நுனியில் மெல்லியதாய் ஒரு பெட்ரோல் வாசனை, மற்றெல்லாவற்றையும் விட தூக்கலாய்த் தெரிந்தது.

முற்றும்